
# பூந்துணர்

## நறவம் - 12



வெளியீடு
பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்,
பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர்

## நறவம் - 12

வெளியீடு:

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை,

பிரதேச செயலகம், பூநகரி.

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : பூந்துணர், நறவம் - 12 |
| நூல் வகை | : ஆண்டிதழ் |
| பதிப்புரிமை | : பூநகரி பிரதேச கலாசாரப்பேரவை<br>பிரதேச செயலகம், பூநகரி. |
| முதலாவது பதிப்பு | : 2011 |
| தாள் வகை | : 100 gsm artpaper |
| பிரதிகள் | : 150 |
| அளவு | : B5 |
| பக்கங்கள் | : 212 |
| அட்டை வடிவமைப்பு | : திருமதி. அமிதாயன் சர்மலா |
| வெளியீடு | : பூநகரி பிரதேச கலாசாரப்பேரவை<br>பிரதேச செயலகம், பூநகரி. |
| அச்சுப்பதிப்பு | : கரிகணன் பதிப்பகம்<br>இல. 682B கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச இலச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராடும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையாமல்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

**- பேராசிரியர் மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச கீதம் - பூநகரி

சந்தம் : தனனதன தனனதன தனன தான
தானதன தானதன தானா!

### பல்லவி

பசுமை பொங்கி பசிதுரத்தும் வயலும் - தெங்கு
பனைகள் அரண் அமைக்க நீளும் கடலும்
சிந்துநடை கலை மலியும் தலமும் - கொண்ட
சந்ததமும் பூநகரியில் புகழ் ஒளிரும்

### அனுபல்லவி

வாழிய பூநகரி வளமுடன் வாழிய
வையகம் போற்ற வளர்த்தெம்மை ஆளுக!

### சரணங்கள்

சோழர்குலக் குறுநிலமாம் அன்று எங்கள்
தொல்பெருமை சொல்லும் கோட்டை இன்று!
வாழும் கல்வி ... கேள்வி ஞானம் வென்று தமிழ்
வாசல் வயல் கடலெழில் இன்றும் உண்டு

[வாழிய]

பரம்பரை மரபும் வழிபாடும் - பார்வை
பார்த்தல், கைமருந்து கிராம வாழ்வும்
இறங்குதுறை கேந்திர முக்கியம் - கொண்ட
இயற்கையோடு இணைந்தெம் வாழ்வும் நிமிரும்!

[வாழிய]

பூநகரி மொட்டைக் கறுப்பன் என்றால் - இன்று
பொன்மலையாய்க் குவியும் மணல்கண்டால்
ஊரின் புகழ்...... உலகறியும் தன்னால் - நாங்கள்
உயர முயன்றுழைத்திடுவோம் இன்நாள்

[வாழிய]

ஆக்கம்
த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**திரு. தனபாலசிங்கம் அகிலன்**

கலாசாரப் பேரவையின் தலைவரும்
பிரதேச செயலாளரும்
பிரதேச செயலகம், பூநகரி.

**திரு. பொன். தில்லைநாதன்**

உபதலைவர், பிரதேச கலாசாரப்பேரவை, பூநகரி.

**திருமதி. காசிநாதன் நிருபா**

கலாசார உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், பூநகரி.

**திரு. செ. றஜிந்தன்**

இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு. கு. அகிலன்**

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு. கா.குலசேகரம்**

**திரு. த. இரவீந்திரன்**

**திரு. இ. செல்வராசா**

**திரு. ப. சனோஜன்**

**செல்வி. மேரி அஞ்சலா**

**திருமதி. அ. பிரசாந்தினி**

**திரு. ப. ஸ்ரீவனஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர் நறவம் 12 – மலர்க்குழு



இருப்பவர்கள் [இடமிருந்து வலம்] – திரு. ப. ஸ்ரீவனஜன், திரு. த. இரவீந்திரன், திரு. பொன். தில்லைநாதன்,திரு.த. அகிலன், திரு. கா. குலசேகரம், திரு. பு. சனோஜன், திருமதி. கா. நிருபா

நிற்பவர்கள் [இடமிருந்து வலம்] – திரு. இ. செல்வராசா, திருமதி. அ. பிரசாந்தினி, திரு. கு. அகிலன், செல்வி. மேரி அஞ்சலா, திரு. செ. றஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர் வாசகர்களோடு......

அன்பான பூந்துணர் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம் பூந்துணர் நறவம் -12 இதழினை நீண்டகால இடைவெளிக்கு பின் உங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமையடைகின்றோம். இப்பூந்துணர் சஞ்சிகை காலத்தின் தேவை அறிந்து தன் கருத்துடனான பயணத்தை பன்னிரண்டு ஆண்டுகளாக நிகழ்த்தி வருகிறது. இந்நூல் சமூகத்திற்கு ஏதோ ஒரு வகையில் அதன் மாற்றத்திற்கு பயன்பாடுடையதாக அமையுமென இம்முயற்சியாளர்களாகிய நாம் பெருமை கொள்ளும் சந்தர்ப்பம் இதுவாகும்.

இச்சஞ்சிகை எட்டு பகுதிகளாக வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அதாவது வாழ்த்தியல், வாழ்வியல், அறிவியல், கல்வியியல், ஆய்வியல், வரலாற்றியல், ஆக்கவியல், மறைந்தார் மாண்பியல் என அவை அமைகின்றன. இம்மலரின் அட்டைப்படம் பூநகரியின் கிறிஸ்தவ பாரம்பரியத்தின் ஆரம்பநிலைப்பாட்டை காட்டும் போர்த்துக்கீசர் காலத் தேவாலயத்தை குறித்து நிற்கின்றது.

பூநகரிப்பிரதேசத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் சிறப்புக்களையும் பதிவுசெய்து வெளிப்படுத்துகின்ற ஒரு முயற்சியின் அடையாளமே இந்தப் பூந்துணர் என்னும் வாடா மலர். இம்மலர் மொட்டவிழ்வதற்கு உரமும் உணர்வும் ஊட்டிய பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், மலர்க்குழு உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இந் நூலிற்கு ஆக்கங்களை நல்கியோர் இந்நூலை அழகாக அச்சிட்டுத்தந்த கரிகணன் பதிப்பகத்தார் அனைவருக்கும் மலர்க்குழுவின் இதயம் கனிந்த நன்றிகள்.

**- மலர்க்குழு -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை – 2024
# நிர்வாக உறுப்பினர்கள் விபரம்

| | |
|---|---|
| 01. திரு.த. அகிலன் | - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பூநகரி. |
| 02. திருமதி. பா. கிரிஜா | - உதவிப்பிரதேச செயலாளர் |
| 03. திரு.சி. அருட்செல்வன் | - உதவித்திட்டமிடல் பணிப்பாளர் |
| 04. திருமதி. ஐ.சுஜேஸ்கா | - கணக்காளர் |
| 05. திரு. க. லிங்கராசா | - நிர்வாக உத்தியோகத்தர் |
| 06. திரு. ம. சந்திரபாலன் | - நிர்வாக கிராம அலுவலர் |
| 07. திரு. பொ. தில்லைநாதன் | - உபதலைவர் |
| 08. திரு. இ. செல்வராசா | - உபசெயலாளர் |
| 09. திரு. ம. சுகின் | - பொருளாளர் |
| 10. திருமதி. கா. நிருபா | - செயலாளர் |
| 11. திரு. கா. குலசேகரம் | - நிர்வாக உறுப்பினர் |
| 12. திரு. கு. அகிலன் | - நிர்வாக உறுப்பினர் |
| 13. திரு. செ. றஜிந்தன் | - நிர்வாக உறுப்பினர் |
| 14. திரு. ச. இரத்தினேஸ்வரன் | - நிர்வாக உறுப்பினர் |
| 15. திரு. ச. அகஸ்ரின் | - நிர்வாக உறுப்பினர் |
| 16. திருமதி. அ. இமெல்டா | - நிர்வாக உறுப்பினர் |
| 17. திருமதி. அ. பிரசாந்தினி | - நிர்வாக உறுப்பினர் |
| 18. திரு. த. இரவீந்திரன் | - நிர்வாக உறுப்பினர் |
| 19. திருமதி. க. மஞ்சுளாதேவி | - நிர்வாக உறுப்பினர் |
| 20. திரு. சி. இராயப்பு | - நிர்வாக உறுப்பினர் |
| 21. திரு. கு. தேவதாஸ் | - நிர்வாக உறுப்பினர் |
| 22. திருமதி. த. வள்ளிநாயகி | - நிர்வாக உறுப்பினர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் – 2024



முதலாவது வரிசையில் இருப்பவர்கள் [இடமிருந்த வலம்] – திரு. செ. றஜிந்தன், திரு. பொ. தில்லைநாதன், திரு. க. லிங்கராசா, திருமதி. பா. கிரிஜா, திரு. த. அகிலன், திரு. சி. அருட்செல்வன், திருமதி. ஐ. சுஜேஸ்கா, திரு. ம. சந்திரபாலன், திருமதி. கா. நிருபா, திரு. கா. குலசேகரம்

இரண்டாவது வரிசையில் இருப்பவர்கள் [இடமிருந்து வலம்] – திருமதி க. மஞ்சுளாதேவி, திரு. இ. செல்வராசா, திரு. ம. சுகின், திரு. த இரவீந்திரன், திரு. ப. சனோஜன், திரு. ப. ஸ்ரீவனஸன்

நிற்பவர்கள் [இடமிருந்து வலம்] – திருமதி. தோ. மரியகன்னி, திருமதி. த. வள்ளிநாயகி, திரு. சி. இராயப்பு, திரு. செ. சந்தியா, திரு. ச. இரத்தினேஸ்வரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. திரு. செ. குழந்தைவேல் - நிர்வாக உறுப்பினர்
24. திரு. அ. தவரட்ணம் - நிர்வாக உறுப்பினர்
25. திரு. சே. ஸ்ரீகாந்தசீலன் - நிர்வாக உறுப்பினர்
26. திரு. தா. றொபின்சன் - நிர்வாக உறுப்பினர்
27. திரு. இராமையா இராஜரட்ணம் - நிர்வாக உறுப்பினர்
28. திரு. பெ. பொலிகாப்பியர் - நிர்வாக உறுப்பினர்
29. திருமதி. தோமஸ் மரியகன்னி - நிர்வாக உறுப்பினர்
30. செல்வி. மேரி அஞ்சலா - நிர்வாக உறுப்பினர்
31. திரு. செவஸ்தி சந்தியா - நிர்வாக உறுப்பினர்
32. திரு. அ.ஞானசீலன் - நிர்வாக உறுப்பினர்
33. திரு. ப. சனோஜன் - நிர்வாக உறுப்பினர்
34. திரு. ப. ஸ்ரீவனஜன் - நிர்வாக உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மலரின் இதழ்களாக ............


**வாழ்த்தியல்** **பக்கம்**

1. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி 1
2. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி 2
3. பூநகரி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி 3
4. பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி 4
5. கிளிநொச்சி மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச்செய்தி 6

**வாழ்வியல்**

1. உடல்நலத்திற்கு உரிய உணவு முறைகள் 7
2. நீரிழிவு நோயும் மருத்துவ ஆலோசனையும் 10
3. பூநகரிப் பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் மதுப்பாவனையும் 19
4. பூநகரிப் பிரதேசத்தில் கால்நடைத் தீவனத்தை உற்பத்தி செய்தலும் ஊட்டம் பெறலும் 23
5. மீண்டும் மீண்டும் சோரியாசிஸ் 25
6. பாரம்பரிய உணவுகளும் பயன்பாடும் 32

**அறிவியல்**

1. அரசகாணி தொடர்பான சட்டங்களும் பிரதேச செயலக நிர்வாக நடைமுறைகளும் 37
2. முகில் நீர்த்தாரையும் [Water spout] மீன் மழையும் 42




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியல்


1. 21ம் நூற்றாண்டில் ஆசிரியரின் வாண்மை விருத்தி 47
2. வகுப்பறைச்சூழலும் மாணவர் உளநலனும் 56
3. பூநகரி கோட்டக்கல்வி நிர்வாக வரலாறு 60
4. ஆசிரியராக ஆசைப்படு மனமே... 63


## ஆய்வியல்


1. அறிவின் வழி மேம்பாட்டு சமூகவியல் விசாரணை 65
2. ஔவையாரின் கல்வி ஒழுக்கம் – பதிப்பும் உரையும் 71
3. ஈழத்தில் தமிழ் உரை உருவாக்க மரபு 75
4. மொழி புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு 82
5. ஔவை யார்? 87
6. அழகியற் கல்வியில் பரதநாட்டியத்தின் முக்கியத்துவம் 94


## வரலாற்றியல்


1. பூநகரி சமுத்திரவியல் நாகரிகமும் வாணிபத் தொடர்புகளும் 98
2. பூநகரியின் கிராமிய வழிபாடுகளும் கறுக்காய்த்தீவு வாய்க்காலடி வைரவர் ஆலயமும் 113
3. பூநகரி ஒர் பழந்தமிழ் நகர் 116
4. பொன்னாவெளிக்கிராமத்தின் பூர்வீகமும் இன்றைய நிலையும் 120


## ஆக்கவியல்


1. நன்றிக்கு வித்தாகும் நல்வாழ்வு 125
2. பூநகர் வளம்பெற புதுப்பானை பொங்கட்டும் 130
3. இடமாற்றம் 132
4. எங்கள் பாரம்பரியம் 138
5. கோலம் 140




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பெண்மையின் குரல்.... 147
7. கிராமிய வாழ்க்கை முறையை மதிப்போம் 150
8. பெற்றோர்களே நில்லுங்கள் ஒரு நிமிடம் 152
9. எங்கள் தமிழ் 154
10. மண்ணிலே மருவிடும் மனித உயிர்கள் 155
11. மீனவர் வாழ்வு 156
12. அவளுக்கு வலிகளும் வலிமையே 158
13. பேதமை அகற்றிடுவோம் 162


**நீத்தார் மாண்பியல்**


1. அஞ்ஞான வானில் விழவெள்ளியாய் துலங்கிய குருமணி அருட்பணி
பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி 163
2. "அறிவுத்திருக்கோயிலில் ஒர் அகல் விளக்கு"
(அமரர் திருமதி இராக்கினியம்மா பாக்கியநாதன் நினைவாக) 169
3. வன்னி மண்ணின் புகழ்பாடும் கவிஞர் வன்னியூர்க் கவிராயர் 175


**அட்டைப்படவிளக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் "பூந்துணர்" மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்தினாலும் கடற்றொழிலினாலும் பொருளாதாரத் தன்னிறைவு காணும் பிரதேசமாகும். நீண்ட கால வரலாற்று வாழ்வியல் தடயங்கள், அவற்றின் எச்சங்கள் நிறைந்தளவில் பொதிந்த தொல்லியல் பூமியாக விளங்கி வரும் இப்பூநகரியின் பண்பாட்டு மலரான "பூந்துணர் நறுவம் - 12" மலர் வருடாந்தம் வெளியிடுவதற்கு வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நிதி அனுசரணை நல்குவது மிகவும் பாராட்டத்தக்கது.

இப் பூநகரிப் பிரதேச வாழ் மக்களில் அனேகர் தொழில் நிமித்தம் புலம்பெயர்ந்தும், நாட்டின் வேறு இடங்களில் வாழ்ந்து வந்தாலும் நமது ஊரின் அருமை பெருமைகள் மற்றும் பிரதேசத்தின் தொன்மையினை "பூந்துணர்" ஊடாக பதிவுக்கு உட்படுத்தல் என்பது காலத்தின் கட்டாயமாகக் கருதி செயற்றிட்டத்தினை முன்னெடுப்பது சாலச்சிறந்தது. இம்மலரில் அடங்கியுள்ள ஆக்கங்கள் எதிர்கால சந்ததியினருக்கு பயனுள்ள வகையில் பேணப்பட வேண்டிய ஒரு வரலாற்று பொக்கிஷமாகும்.

இம்மலர் வெளியீட்டிற்கு அயராது உழைத்த பிரதேச செயலாளர், மலர்க் குழுவினர், பிரதேச கலாசார பேரவையினர், கலைஞர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய கட்டுரையாளர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் 'பூந்துணர்" சிறந்த ஒரு ஆவணமாக மிளிரவும் இப்பணி தொடரவும் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சு. முரளிதரன்**
**அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் (பதில்)/**
**மாவட்ட பண்பாட்டு பேரவைத் தலைவர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் வளம் மிகுந்த பிரதேசங்களில் பூநகரி பிரதேசமும் ஒன்றாகும். இங்கு வரலாற்று எச்சங்களும், தொல்லியல் அடையாளங்களும் சிறப்பு மிக்கவை. கடலும் கடல் சார்ந்த நெய்தல் வளத்தினையும், வயலும் வயல் சார்ந்த மருதநில வளத்தினையும், கொண்டமைந்த வளம்கொழிக்கும் பூமியான பூநகரின் பிரதேச கலாசார பேரவையினால் வெளியிடப்படும் பூந்துணர் - 12 ஆவது மலரின் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன்.

ஒரு பிரதேச வரலாறு, தொல்லியல், கலை, பண்பாட்டம்சங்களை அழியவிடாது பாதுகாத்து அடுத்த சந்ததியினரிற்கு கையளிப்பது என்பது ஒரு ஆக்க பூர்வமான செயற்பாடாகும். அந்த வகையில் இப்பிரதேசத்தின் வளங்களையும், தொல்லியல் எச்சங்களையும், ஆன்மீகம், கலை, பண்பாடு, வரலாறு, பொருளாதார வளம் மற்றும் பூநகரி பிரதேச மக்களின் வாழ்வியல் போன்ற ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கியதான ஆக்கங்களைத்தாங்கி சிறந்த வெளியீடாக பூந்துணர் - 12 மலரானது அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். இவ்வெளியீட்டு முயற்சியானது பூநகரி பிரதேச கலைஞர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாது பிரதேச அபிவிருத்தியின் ஒரு முக்கிய பதிவாக காணப்படுகிறது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகானது வடக்கு மாகாணத்தினுடைய பண்பாட்டு மேம்பாட்டிலும் அதன் பாரம்பரியத்தின் பாதுகாப்பினையும் நோக்கமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தி வரும் செயற்திட்டங்களில் ஒன்றான கலாசார அபிவிருத்தி செயற்திட்டத்தினூடாக பூநகரி பிரதேச செயலகத்தினால் பிரதேசத்தின் வளங்களையும், வரலாற்றையும் ஆவணப்படுத்தும் வகையில் வருடந்தோறும் வெளியிட்டு வருகின்ற பூந்துணர் என்னும் பிரதேச மலரின் 12 ஆவது இதழை வெளியிடுகின்ற அரிய முயற்சியினைப் பாராட்டி ஊக்குவிப்பதோடு, பிரதேசகலை, இலக்கிய முயற்சியாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் பிரதேச செயலாளருக்கும், கலாசார உத்தியோகத்தர் மற்றும் இந்நூல் வெளியீட்டில் அயராது உழைத்த மலர்க்குழுவினர் என அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்தினையும் ஆசியினையும் தெரிவித்துக்கொள்வதுடன் வருடந்தோறும் இப்பூந்துணர் இதழ் மலர்ந்து மணம் வீச வாழ்த்துகின்றேன்.

**திரு. ம. பற்றிக் டிறஞ்சன்**


**செயலாளர்,**

**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும்**

**இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பூநகரிப் பிரதேசமானது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே தொல்குடி மக்களையும், தனக்கே உரித்தான பல பண்பாட்டு அம்சங்களையும் கொண்டிருந்ததாகப் பல தொல்லியல் ஆய்வுகள், அறிவியல் ரீதியாக நிரூபித்துள்ளன.

இலங்கை வரலாற்றை பதிவு செய்துள்ளதாக நம்பப்படும் மகாவம்சத்தில் அநுராதபுரத்தை 44 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த தமிழ் மன்னனாக அறியப்படும் எல்லாளனின் (ஈழராஜா) பூர்வீகமும் இப் பூநகரியின் ஈழவூர் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

யாழ்ப்பான இராச்சியத்தின் தமிழ் மன்னர்களது இராசதானியாக சில காலகட்டங்களில் இப் பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள நல்லூரே விளங்கியதனையும் கருத்திற் கொள்ளும்போது, இவை மூலம் ஈழதேச வரலாற்றில் பூநகரி, தனது காத்திரமான பாத்திரத்தையும் முத்திரையையும் பதித்து நிற்கின்றது.

இத்தனை சிறப்பும் புகழும் வாய்ந்த பூநகரி பிரதேசத்தின் வரலாற்றினை நினைவு கொள்ளும் வகையிலும், வெளிக்கொணரும் வகையிலும் இப்பிரதேச கலை கலாசார பண்பாடுகளையும் அவை பற்றிய தேடல்களையும் ஆய்வுகளையும் உள்ளடக்கிய 'பூந்துணர்' எனும் மலரானது ஆண்டுக்கு ஒரு தடவை இதழாக, முகை அவிழ்கின்றது.

இவ் ஆண்டும் எமது பிரதேச கலாசாரப் பேரவையின் அயராத முயற்சியால் 'பூந்துணர், நறவம் பன்னிரண்டாக முகை அவிழ்த்து, மணம் பரப்பும் இனிய வேளையில், சுகந்தம் வீசும் மகரந்த மணிகளாகத் தமது ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கும், மலர் இதழ்விரிய அயராதுழைத்த கலாசாரப் பேரவையினர், மலர்க் குழுவினர் யாவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன், எமது பிரதே கலாசார பண்பாட்டு விழா சிறப்புற இதய பூர்வமாக வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு. த. அகிலன்**

**பிரதேச செயலாளரும், கலாசாரப்பேரவைத் தலைவரும்,**

**பிரதேச செயலகம்,**

**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

மருதம், நெய்தல், முல்லை எனும் மூவகை நிலங்களும் இணைந்து வளம் கொழிக்கும் பூமியாகக் காட்சி தரும் பூநகரிப் பிரதேசத்தின் பிரதேச கலாசாரப் பேரவையால் வெளிப்படுத்தப்படும் பூந்துணர் மலரின் 12 ஆவது இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு வடக்கு மாகாணத்தினுடைய அனைத்துப் பிரதேசத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களதும் இப்பிரதேசத்தினுடைய கலைகளினதும் மேம்பாட்டிற்கான செயற்திட்டங்களையும் உபாயங்களையும் வகுத்து செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் பிரதேசப் பண்பாட்டின் அடையாளமாய் அவற்றின் மேம்பாடான வெளிப்பாட்டினை ஏனையவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றதே பிரதேச மலர் வெளியீடாகும்.

மேலைநாட்டு நாகரிகங்கள் எமது கலை மற்றும் பண்பாட்டு வாழ்வில் பாரிய மாற்றங்களை உருவாகியுள்ளது. இவ்வாறு மாற்றமடைந்து செல்கின்ற பண்பாட்டினைப் பேணிப்பாதுகாப்பதற்கு பண்பாட்டின் தொன்மையினையும் தனித்துவத் தன்மையினையும் வெளிப்படுத்துகின்ற படைப்புக்களை மக்கள் மத்தியில் ஆழமாகவும், நுணுக்கமாகவும் இத்தகைய செயற்பாடுகளினூடாக முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதனடிப்படையில் பூநகரிப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் வெளியிடவுள்ள பூந்துணர் - 12வது மலர் இப்பிரதேசத்தின் வளங்களையும் தொல்லியல் எச்சங்களையும், ஆன்மீகம், கலை, பண்பாடு, வரலாறு, பொருளாதார வளம் மற்றும் பூநகரிப் பிரதேச மக்களின் வாழ்வியல் போன்ற ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கியதான ஆக்கங்களைத் தாங்கி சிறந்த வெளியீடாக அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையதொரு சிறப்புப் பணியில் தங்கள் வேலைப்பழுவின் மத்தியிலும் தகுந்த ஆலோசனைகளையும் சிறந்த வழிப்படுத்தல்களையும் வழங்கி மலர் சிறப்பாக அமைய வழிகாட்டிய பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினர் ஆகியோரைப் பாராட்டி மகிழ்வதோடு தொடர்ந்தும் இப்பூந்துணர் நறவமானது வருடாந்தம் வெளிவந்து பிரதேச மக்களின் வாழ்வியல் அறிவியல் ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி.லாகினி நிருபராஷ்**

**பிரதிப் பணிப்பாளர்,**

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**

**வட மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டம், வடக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். பண்டைக் காலத்தில் யாழ் குடாவுக்கான தரை வழி, நீர் வழிப் போக்குவரத்தில் முக்கியத்துவம் பெற்ற இடமாகப் பூநகரி திகழ்ந்தது. மேலும் பூநகரிப் பிரதேசம், வட இலங்கையின் தொல் குடிகளைக் கொண்டிருப்பதோடு, முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருட் சின்னங்களும், தமிழர் பண்பாட்டை உணர்த்தும் பல எச்சங்களும் காணப்படுகின்றன.

யாழ் குடாநாட்டின் வாழ்முறையிலிருந்து, முற்றிலும் வேறுபட்ட கடினமான சவால்களை எதிர்கொண்டே அன்றும் இன்றும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கிராமியக் கலை வடிவங்கள் பல காணப்படுகின்றன. இத்தகைய கலைகளின் சொந்தக்காரரான கலைஞர்கள் பல சவால்களை எதிர்கொண்டவாறே தமது கலைப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

பூநகரிப் பிரதேசத்தின் கலைகளையும், கலைஞர்களையும் போற்றிப் பாதுகாப்பதுடன் ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் ஆக்கங்களையும், மக்களின் பண்பாடு, கலாசாரத்தினை வெளிக்கொணரும் வகையிலான ஆக்கங்களையும் தாங்கிய 'பூந்துணர், சஞ்சிகை தனது பன்னிரண்டாவது இதழை விரிக்கும் இத்தருணத்தில், பூநகரி கலாசார பேரவைக்கும், "பூந்துணர்" ஆசிரியர் குழுவுக்கும், பூநகரி கலாசார உத்தியோகத்தருக்கும், இவ்வரிய முயற்சிக்கு ஒத்துழைக்கும் அனைவரையும் பாராட்டுவதோடு, பூநகரி பிரதேச கலாசார பண்பாட்டு விழா சிறப்புற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. கி. மாலினி**
**மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடல் நலத்திற்கு உரிய உணவு முறைகள்

**வைத்தியர். பிறேமராகவன் மதியரசி**
ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்,
பூநகரி.

**"நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்புச்செயல்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நோயானது நம்மைத் தேடி வரும் காரணங்களையும் அவ்வாறு நோய் வராமல் நாம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவு முறைகளையும் தெரிந்து தான் வாழ வேண்டும்.

நாம் உண்ணும் உணவின் மூலம் கிடைக்கும் சக்தியானது பல தொழில்களுக்கும், அசைவுகளுக்கும் தேவையான உஷ்ணத்தைத் தருகின்றன. உடலின் எல்லா பகுதிகளும் எப்பொழுதும் ஓயாமல் இயங்கிக் கொண்டு இருப்பதற்கு நாம் உண்ணும் உணவுகள் காரணமாக அமைகின்றன.

நாம் வேலை செய்யும் போதும், உறங்கும் போதும் நமது இருதயம் துடிக்கின்றது. சுவாச இயக்கம் நடைபெறுகின்றது. ஜீரண உறுப்புகளும் தினமும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு உடல் உறுப்புகள் இயங்குவதற்கு நாம் உண்ணும் உணவுகள் தான் காரணமாக அமைகின்றது.

உணவுப் பொருட்களிலுள்ள காபோவைதரேற்றுகள் அல்லது மாச்சத்துக்கள், கொழுப்புக்கள், புரதங்கள் என்ற சத்துப்பொருட்கள் சக்தியை நமக்கு வழங்குகின்றன. இதுபோல உடல் உறுதி பெறவும், நோயின்றி வாழவும் நல்லுணவு உண்ண வேண்டும்.

உணவுகளில் சக்தியை தானிய வகைகள் தருகின்றன. அரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், திணை போன்றவைகளும், மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் சக்தியைத் தருகின்றன.

ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு கல், மண், சீமெந்து, இரும்பு, தண்ணீர் முதலிய பல்வேறு பொருட்கள் தேவைப்படுகின்றன. இதே போல் உடம்பு உருவாவதற்கு இருதயம், ஈரல், கண், காது, வாய், எலும்பு, நரம்புகள், மூளை போன்ற அங்கங்கள் நாம் உண்ணுகின்ற உணவிலிருந்து பல்வேறு விற்றமின்களாலும் உண்டாக்கப்படுகின்றன. இவைகளில் ஏதாவது ஒன்று பழுதுபட்டால் உடம்பின் இயக்கம் தடைப்பட்டு உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. உடம்பினை வளர்த்து பாதிக்கப்பட்ட உறுப்பினைச் சரிசெய்யும் நாம் உட்கொள்ளும் உணவின் மூலம் நோய்களே வராமல் தடுக்கலாம்.

நமது உடம்பினை நோயில்லாமல் வளர்க்க புரதச்சத்துத் தான் முதன்மையானது. புரதம் உடம்பு வளர்வதற்கு மிகவும் முக்கியமானது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமா? நமது உடம்பிலுள்ள இயங்கிக் கொண்டே இருக்கின்ற இரத்தக்குழாய்கள் மூலம் ஓடும் இரத்தத்திற்கும் உடம்பிலுள்ள மற்ற அணுக்களுக்கும் நமக்கு வருகின்ற நோய்களை எதிர்க்கும் Antibiotics என்கின்ற தடுப்பு அணுக்களை உண்டாக்குவதற்கும் புரதச்சத்து மிகவும் முக்கியமானது. உடம்பில் பல வேலைகளை இயக்கி வைக்கின்ற இயக்கிகளான Hormones புரதச்சத்துகளின் சரியான உருவமாகும்.

நமது குழந்தைகட்கும், உடல் நலத்துக்கும், வளர்ச்சிக்கும், கர்ப்பிணிகளுக்கும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் புரதமானது அதிக அளவில் தேவைப்படுகின்றது.

புரதம் நிறைந்த பால் மற்றும் பாலினால் செய்த பொருட்கள், துவரம்பருப்பு, பாசிப்பயறு போன்ற பயறு வகைகள், வேர்க்கடலை, மாமிசம், முட்டை போன்றவை புரதம் நிறைந்த பொருட்களாக உள்ளன.

மிகச்சிறிய அளவில் உடம்பின் பெரிய வேலைகளைச் செய்வதற்கும், சேதமுறாமல் காப்பதற்கும், நோய்கள் வராமல் தடுப்பதற்கும், தேவையான பாதுகாப்பு பொருட்களை உலோகச்சத்து, விற்றமின்கள் என்ற உயிர்ச்சத்துகள் நீர் மூலமாகவே கிடைக்கின்றன. உணவு இல்லாமல் எம்மால் இந்த உடம்பானது இயங்க முடியுமா என கேட்டால் இல்லை. ஆரோக்கியமான உடம்பாகவும் இருக்க முடியாது. நாம் உண்ணும் உணவுகள் ஜீரணிப்பதற்கும், கழிவு, உஷ்ணக்கட்டுப்பாடு ஆகிய முக்கிய தொழில்கள் சரியாக நடப்பதற்கும் நீர் தான் காரணமாகின்றது. கல்சியம் ஆனது இரத்தம் கட்டுவதற்கும், இருதயம் துடிப்பதற்கும், தசைகள் இயங்குவதற்கும், எலும்புகள் உறுதிப்படுவதற்கும் காரணமாக அமைகின்றன.

Iodine என்ற உலோகத்தை Thyroid என்ற Thyroid gland மூலமாக உடம்பின் இயக்கங்களை கட்டுப்படுத்த உதவுகின்றன. Iron இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு மிகவும் அவசியமாகின்றது.

தக்காளிப்பழத்தில் விற்றமின் C உம், அவரைக்காய், கொத்தவரை, பீன்ஸ், முட்டைகோஸ், பட்டாணி, இவைகளில் விற்றமின் A, B, D காணப்படுகின்றது. பால் ஒரு சிறந்த கலப்பு உணவு ஆகவும் உள்ளது.

பால், தயிர், வெண்ணெய், பருப்புகள், அவரைகள், வேர்க்கடலைப்பருப்பு, பாலும் பால் சார்ந்த பொருட்கள், புரதச்சத்தும், சில உயிர்ச்சத்துக்களும் தாது, உப்புக்களும் இந்த உணவுப்பொருளில் அடங்கியுள்ளன.

உடம்பு வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் பழங்கள், காய்கறிகள், உயிர்ச்சத்துக்கள் உதவுகின்றன. Apple, Orange போன்ற பழங்கள் கொய்யா, பப்பாளி, இலந்தைப்பழம், மணத்தக்காளி போன்ற பழங்கள் அதிகமான உணவுச்சத்துக்களை கொண்டுள்ளன. பழவகைகளைப் போன்றே காய்கறிகளும் அதாவது கத்தரிக்காய், அவரைக்காய், பாகற்காய் இது போன்ற பயிரிடப்படும் காய்கள், அவரைகள், பூசணி, வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் தாது உப்புக்களையும், உயிர்ச்சத்துகளையும் அதிகமாக கிடைக்கச் செய்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு போன்றவற்றில் தேவையான அளவு காபோவைதரேற்று, கொழுப்பு, புரதச்சத்து, உயிர்ச்சத்து B கிடைக்கின்றன.

தாவர எண்ணெய், வெண்ணெய், கரும்பு, சர்க்கரை, தயிர், வெல்லம் போன்றவைகளிலிருந்து சக்தியும், உயிர்ச்சத்து A யும் கிடைக்கின்றன.

நாம் உட்கொள்ளும் உணவுகளில் சக்தியைத் தரும் உணவுகள், உடலை வளர்க்கும் உணவுகள், உடம்பை பாதுகாக்கும் உணவுகள் என பிரித்து சொல்லலாம்.

உணவில் காபோவைதரேற், கொழுப்பு, புரதச்சத்து, தாது உப்புகள், உயிர்சச்சத்துக்கள், நீர் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. நமக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் முக்கிய சத்து காபோவைதரேற் ஆகும். இதில் கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸஜன் ஆகிய மூன்றும் அடங்கியுள்ளன. இதிலிருந்து கிடைக்கும் சக்தியைத் தான் உணவு முறையில் கலோரி என்ற அளவில் கூறுகின்றோம். காபோவைதரேற்றின் முக்கிய தொழில் உடலுக்கு தேவையான அளவு சக்தியை வழங்குவதாகும். ஒரு கிலோ காபோவைதரேற்றுக்கள் நான்கு கலோரி சக்தியை தருகின்றன. மாச்சத்து நன்றாக செரிப்பு நீர்களால் செரிக்கப்பட்டு குளுக்கோஸ் என்ற பொருளானது Tissue களுக்கு தேவையானது போக அதிகமாக உள்ள Glucose கல்லீரல் Glycogen ஆக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. Glucose குறைவாக உள்ள நேரங்களில் Glycogen Glucose ஆக மாறி நம் உடம்புக்கு தேவையான அளவு சக்தியை தருகின்றது. மாச்சத்து, புரதம் குறையும் போது உடலில் களைப்பு போன்ற நோய்கள் உண்டாகின்றது.

சாதாரண புரதம் முட்டையிலுள்ளது. காட்டுப்புரதமானது கொழுப்பு, அமினோ அமிலங்களாகும். Haem என்ற அயன்சத்து, குளோபின் (Globin) என்னும் புரதத்துடன் சேரும் போது Haem அணு 4 Oxygen அணுக்களுடன் சேர்ந்து Tissue களுக்கு தேவையான Oxygen அளிக்கிறது. புரதங்கள் அனைத்தும் அமினோஅமிலங்கள் என்ற சத்துக்களால் ஆனவை. உயிர் வாழ்வதற்கு அமிலங்களும் முக்கியமான ஒன்றாக காணப்படுகிறது. 1Kg எடைக்கும் 1g புரதம் தேவைப்படுகின்றது. கர்ப்பிணிமார்களுக்கு 1kg எடைக்கும் 2g புரதம் அவசியமாக காணப்படும். குழந்தைகளுக்கும், குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களுக்கும் அதிக அளவு புரதம் தேவைப்படுகின்றது. இவைகள் பருப்பு வகைகள், தானியங்கள், பயறுவகைகள், விதைகள், கீரைகள் போன்ற தாவர வகைகளிலும், பால், முட்டை, மாமிசம், மீன் போன்ற உணவுகளிலும் கிடைக்கிறது.

நலமான உடல்நிலைக்கு உறுதியான பற்கள் அவசியமாக காணப்படுகிறது. உறுதியான பற்களுக்கு சரியான சத்துணவு அவசியம். எலும்புகள் வளமாக இருக்க Vitamin D, Calcium போன்றவை அவசியம். ஆகவே நமக்குத் தேவையான Calcium, phosporus, Vitamin D இவைகள் உடம்பில் போதியளவு இல்லாவிடின் பல் கெட்டு விடும். அத்துடன் பல் வெடிப்பு, சிதறல், சிதைவு ஏற்படும். எனவே எமது ஆரோக்கியமான உடலிற்கு தேவையான உரிய உணவுமுறைகளை மேற்கூறியவாறு பின்பற்றுவோமானால் நோயில்லா வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீரிழிவு நோயும் மருத்துவ ஆலோசனையும்

**வைத்தியர். சிறிகந்தராசா ஆனந்தசிறி**
மருத்துவமனை பொறுப்பதிகாரி,
பிரதேச வைத்தியசாலை,
பூநகரி

**நீரிழிவு என்றால் என்ன?**

ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் குறிப்பிட்ட அளவு குளுக்கோஸ் உள்ளது. குளுக்கோஸின் அளவு வழமைக்கு மாறாக உயர்வடைகின்ற நிலமையே நீரிழிவு என்று கூறப்படும்.

சாதாரண அளவு FBS = 60-110mg/dl (பத்து மணித்தியாலங்களுக்கு உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோசின் அளவு)

PPBS=80-140mg/dl (உணவு உட்கொண்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோசின் அளவு)

**குருதி குளுக்கோசின் மட்டம் அதிகரிப்பது ஏன்?**

இந்த குளுக்கோசானது குருதியினூடாக செல்களுக்குள் நுழைவதற்கு இன்சுலின் தேவைப்படுகிறது. நுண்செல்களில் காணப்படுகின்ற நுழைவாயில்கள் ஊடாகவே குளுக்கோஸ் அதனுள் சென்றடைகின்றது. ஆகவே அந்த நுழைவாயில்களைத் திறப்பதற்கான திறவுகோலாக இன்சுலின் தொழிற்படுகிறது. அந்த செயற்பாட்டிற்குத் தேவையான இன்சுலின் இல்லாவிட்டால் செல்களுக்குள் குளுக்கோஸ் சென்றடையமாட்டாது என்பதுடன் குருதியில் குளுக்கோஸின் மட்டம் உயர்வடைகின்றது.

**நீரிழிவு நோயின் அறிகுறிகள் எவை?**

குருதியில் குளுக்கோசின் மட்டம் உயர்வடைகின்றமையால்

1. பகல், இரவு இரண்டு வேளைகளிலும் வெளியேறும் சிறுநீரின் அளவு அதிகரிக்கும்.
2. அதிக தூக்கம்

செல்களுக்கு குளுக்கோஸ் கிடைக்காமையால் சோர்வு, உடல் வலுவின்மை, அடிக்கடி பசி ஏற்படுதல். நித்திரை, உடல் மெலிவடைதல் ஆகிய அறிகுறிகள் ஏற்படும்.

சில சந்தர்ப்பங்களில் இத்தகைய நோய் அறிகுறிகள் இல்லாவிட்டாலும் நீரிழிவு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் இருப்பின் குருதியில் குளுக்கோசின் மட்டத்தை பரிசோதிப்பது சிறந்ததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவு நோயின் வகைகள் உள்ளனவா?**

ஆம், மூன்று வகைகள் உள்ளன.

**முதலாவது வகை**(Type - 01)

இதன்போது இன்சுலின் சுரக்கும் தன்மையில் குறைவு அல்லது சுரக்காத நிலை காணப்படும். பெரும்பாலும் சிறுவர்களுக்கு அல்லது இளையோருக்கே இந்த நிலை ஏற்படும். இதற்காக வெளியேறும் இன்சுலினைப் புகுத்தவேண்டியுள்ளது.

**இரண்டாவது வகை** (Type - 02)

இன்சுலின் காணப்பட்ட போதிலும் செல்கள் அவற்றைப் பயன்படுத்தாத தன்மையாகும். உணவுக்கட்டுப்பாடு அல்லது மருந்துகள் மூலம் இதற்கு சிகிச்சை பெற முடியும் என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் வெளிப்புறமாக இன்சுலினை புகுத்த வேண்டியது அவசியமாகின்றது.

**கர்ப்பகாலத்தில் ஏற்படுகின்ற நீரிழிவு**

கர்ப்பகாலத்தில் குருதியிலுள்ள குளுக்கோஸின் மட்டம் அதிகரிக்கக்கூடும்.(Gestational Diabetes) பிரசவத்தின் பின்னரும் குருதியின் குளுக்கோஸின் மட்டம் அதிகரிக்கலாம். இதனால் எதிர்காலத்தில் நீரிழிவு ஏற்படுவதற்கு அது காரணமாக அமையும்.

**குறுங்காலப் பாதிப்புக்கள் எவை?**

ஞாபக மாற்றங்கள் உலர் தன்மை உட்பட பல்வேறு பாதிப்புகளும் இலக்காகக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

**குறை குளுக்கோஸ் மட்டம் காணப்படுவதால் ஏற்படும் நீண்டகாலத் தாக்கங்கள் எவை?**

**இருதயம் :-** நெஞ்சுவலி பாதங்களுக்கு வலுவற்ற குருதிப் பாய்ச்சப்படுதல்

**நரம்புக்கட்டமைப்பு :-** கால்கள் மரத்துப் போதல், காயங்கள் ஏற்பட்டால் அது குறித்து கவனம் குறைவாக இருப்பின் கடைசியில் கால்களை வெட்டி நீக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.

**கண் :-** வெண்படலம் தோன்றுதல் பார்வையிழத்தல்

**சிறுநீரகம் :-** சிறுநீர்க் கடுப்பு, சிறு நீரகங்கள் செயலிழத்தல்

**குருதிக் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

இன்சுலின் அல்லது நீரிழிவுக்கான மாத்திரைகளை உரிய அளவை விட கூடுதலாக உட்கொள்ளல்

இன்சுலின் அல்லது நீரிழிவுக்கான வில்லைகளை உட்கொண்ட உடனேயே அதிக உடற்பயிற்சியில் ஈடுபடுதல். அல்லது அதிக வேலைகளைச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய அளவிற்கு உணவு உட்கொள்ளாமை.

பிரதான உணவு வேளைகளைத் தவிர்த்தல் அல்லது உணவு வேளைகளுக்கு இடையேயான முறையான நேர வித்தியாசத்தைப் பேணாமை.

இன்சுலின் பெற்றுக்கொண்ட பின்னர் உணவு உட்கொள்ளாமல் இருத்தல். அல்லது உணவு உட்கொள்வதில் தாமதம்

உணவு உட்கொள்ளாமல் வில்லைகள் அல்லது இன்சுலின் உட்கொள்ளல்.

நோய் வாய்ப்பட்டு உணவை உட்கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்படுதல்.
உதாரணம் :- காய்ச்சல்

**குருதி குளுக்கோஸ் குறைபாடு** (Hypoglycemia) **ஏற்படுவதை தடுப்பது எவ்வாறு?**

பட்டினியுடன் நீண்ட நேரம் இருக்கக் கூடாது.
நீரிழிவுக்கு உகந்த உணவு வகைகள் (சர்க்கரை குறைந்த நார்) உரிய அளவில் உட்கொள்ளவும்.
பிரதான உணவு வேளைகளிடையே உரிய நேர வித்தியாசத்தைக் கடைப்பிடிக்கவும்
பிரதான உணவு வேளைகளை எவ்விதத்திலும் தவிர்க்கக் கூடாது.
பட்டினியுடன் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டாம்.
இன்சுலின் அல்லது நீரிழிவுக்கான வில்லைகளை மருத்துவரின் ஆலோசனைக்கு அமைய உரிய அலகுகளில் மட்டும் உட்கொள்ளவும். ஏதேனும் காரணத்தினால் நோய்க்கான இன்சுலின் ஊசி ஏற்றுதல் அல்லது வில்லைகளை உரிய வேளைக்கு உட்கொள்ள மறந்து விடும் சந்தர்ப்பங்களில் மீண்டும் கூடுதலாக உட்கொள்ளக் கூடாது. நீங்கள் வேளைக்கான மாத்திரை அளவை மட்டும் உரிய நேரத்தில் உட்கொள்ளுங்கள்.
பிரதான இரண்டு உணவு வேளைகளுக்கு இடையில் சிற்றுண்டி ஏதேனும் ஒன்றை (snake) உட்கொள்ள முடியும்.
உதாரணம் :- ஏதேனும் பழவகை அல்லது போசாக்குள்ள பானம்

நீங்கள் நோய்வாய்ப்படும் போது நீரிழிவுக்குரிய மருந்துகளை தொடர்ந்து உட்கொள்வதுடன் உடனடியாக உங்கள் வைத்தியரை நாடி அவசியம் ஏற்பட்டால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட முடியும்.

இன்சுலின் சிகிச்சை பெறுவதாயின் எப்பொழுதும் உணவு உண்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னதாக இன்சுலின் மருந்தை உட்கொள்ளவும். இன்சுலின் மருந்தின் பின்னர் பட்டினியுடன் இருக்கக் கூடாது என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பட்டினியுடன் நீரிழிவுக்கான வில்லைகளை உட்கொள்ளக் கூடாது. நீங்கள் மெட் போர்மின் எனும் நீரிழிவுக்கான வில்லையை பயன்படுத்துகின்றவர் எனின் உணவுண்டவுடன் அல்லது உணவு உண்பதற்கு சற்று முன்னர் அதனை உட்கொள்ள வேண்டும்.

**குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுமாயின் செய்ய வேண்டியது என்ன?**

குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதால் குருதியிலுள்ள சர்க்கரையின் மட்டம் குறையும். எனினும் சாதாரண பசி உணரப்பட்ட உடனேயே சர்க்கரையுடன் கூடிய உணவு உட்கொள்வதைத் தவிர்க்கவும்.

அதிக பசி எடுக்கும் போது குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான ஏதேனும் அறிகுறி காணப்படுமாயின் அல்லது நீங்கள் மயக்க நிலைமையை உணர்வீர்களாயின் உடனடியாக சிறு குளுக்கோஸ் அல்லது சர்க்கரை கலந்த பானம் அல்லது சிறிது சர்க்கரையை உட்கொள்ளவும்.

உ +ம் :- பழச்சாறு, சிறிது குளுக்கோஸ் சர்க்கரை கலந்த பானம் இரண்டு தேக்கரண்டி சீனி அல்லது சர்க்கரையினால் தயாரிக்கப்பட்ட இலகு உணவு

**குறிப்பு:-** குருதிக்குளுக்கோஸ் அதிகரித்தல் (Hypergly cemia) ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் சோர்வு, மூச்சையாதல் என்பன ஏற்படக்கூடும். என்பதால் நோயாளருக்கு சர்க்கரை அடங்கிய எவற்றையேனும் வழங்குவதற்கு முன்னர் குருதியின் குளுக்கோஸ் மட்டத்தை உறுதிசெய்து கொள்வது மிகச்சிறந்தது.

**நீரிழிவு நோயாளர்களுக்கு உணவு தொடர்பில் ஆலோசனைகள்**

பின்வரும் உணவுவகைகளை கூடுமானவரை தவிர்க்கவும்.

அனைத்து வகையான இனிப்பு உணவுகள் :- சர்க்கரை, கருப்பட்டி, தேன், பாணி, சிரப் வகைகள், பேரிச்சம்பழம், டொபி, கேக்,இனிப்புப் பண்டங்கள், எள்ளுருண்டை, மஸ்கட்,புடிங்வகைகள், வட்டிலாப்பம், சொக்லேட், சுயிங்கம், பழப்பாகு வகைகள், மாஸ்மெலோஸ், ஜெலி வகைகள், குளிர்பானங்கள், இனிப்பு சேர்க்கப்பட்ட பழச்சாறுகள், இனிப்பு பிஸ்கற்கள், ஐஸ்கறீம், றின்பால், மோல்ட் பால்மா

**பின்வரும் உணவு வகைகளை வெகுவாக உட்கொள்ள முடியும்.**

1. அனைத்து கீரை வகைகள் :- பொன்னாங்காணி, வல்லாரை, அவரை, பசளி, கங்குன், அகத்தி

2. மாப்பொருள் குறைந்த மரக்கறி வகைகள்:- போஞ்சி, பயற்றங்காய்,சிறகவரை, கத்தரி, வெண்டிக்காய், தக்காளி,கோவா, லீக்ஸ், முள்ளங்கி,நோக்கோள், பாகற்காய், வெள்ளரி, வட்டக்காய், முருங்கை, சிவப்பு வெங்காயம், பயறு, கௌபி, சோயா, அவரை மற்றும் தானிய வகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.** பின்வரும் உணவு வகைகளை நடுத்தர அளவில் உட்கொள்ள முடியும். தானிய வகை :- தவிடு நீக்கப்படாத அரிசி, அரிசி மா இடியப்பம் மற்றும் பிட்டு என்பன ஆட்டாமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள், ரொட்டி, இடியப்பம், குரக்கன் பிட்டு போன்றவை

**4.** கிழங்கு வகைகள் :- உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளி, சேனைக்கிழங்கு, கரட், இராசவள்ளிக்கிழங்கு

**5.** மாப்பொருள் அடங்கிய மரக்கறி மற்றும் பழவகைகள்:- வாழைக்காய்,பலாக்காய், பலாவிதை, ஈரப்பலா

**6.** இறைச்சி உணவுகள் :- கோழியிறைச்சி, முட்டை வெள்ளைக்கரு, மீன்

**7.** இனிப்பு சுவை கலக்காத பழரசம் :- தோடை, கொடித்தோடை, தேசிக்காய் பழங்கள் :- பப்பாளி, வாழைப்பழம், தர்ப்பூசணி(அரைப்பழம்) மிகவும் உகந்தது.

**வழமையான ஆலோசனைகள்**

நார்த்தன்மை அதிகமுள்ள உணவுகள் உகந்ததாகும். கோதுமை மா, பாணை விட, குரக்கன் பாண் சிறந்தது. கோதுமை மாவினால் தயாரிக்கப்படும். பாண் மற்றும் உணவுகளை கூடியவரை மட்டுப்படுத்தவும்.

குரக்கன் மற்றும் கீரை வகைகள் அதிக நார்த்தன்மை கொண்ட உணவுகளாகும்.

தவிடு நீக்கப்படாத அரிசி மற்றும் அதனால் தயாரிக்கப்படும் இடியப்பம், அப்பம் போன்ற உணவுகள். தவிடு நீக்கப்பட்ட அரிசி மற்றும் அதனால் தயாரிக்கப்படும் உணவுகளை விடவும் சிறந்ததாகும். சர்க்கரை, சீனி என்பவற்றைப் போன்றே ஒவ்வாதவையாகும். குறிப்பாக மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி என்பன மட்டுப்படுத்தப்பட வேண்டும். பழச்சாறு அருந்துவதை விட பழத்தை உண்பது உகந்தது.

மிகைக் கொழுப்பை விடவும் மரக்கறி எண்ணெய் உகந்ததாகும்.

நீரிழிவு சிறந்த முறையில் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதை உறுதி செய்து கொள்ள முடியும்.

RBS - Random Blood Glucose
FBS - Fasting Blood Glucose (மாதம் ஒரு முறை)
Hb A/C - இரத்தப் பரிசோதனை ( 03 மாதங்களுக்கு ஒரு முறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நோயாளர்களுக்கு உகந்த உணவு அட்டவணை

நீங்கள் உடற்பருமன் அல்லது வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள நீரிழிவு நோயாளர் எனின் பின்வரும் உணவு அட்டவணையைப் பின்பற்றுவதற்கு முன்னர் போசாக்குணவு நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

**காலை 6.00 மணி**

*ஒரு கோப்பை பால் தேநீர் (சர்க்கரை) சேர்க்காத) நீரிழிவுக்காக தயாரிக்கப்பட்ட போசாக்கு பானம்*

**காலை உணவு மு.ப 07.00 - 07.30**

*ஒன்று அல்லது ஒன்றரை கோப்பை சோறு அல்லது பயறு/ கடலை/ கௌபி அல்லது இடியப்பம் 6- 7*

*பப்பாசி ஒரு கீறு (2" X 4") சிறிய புளி வாழை - 1*

**காலை 10.00 மணி**

*பால் தேனீர் அல்லது ஒரு கோப்பை பழச்சாறு (சர்க்கரை சேர்க்காத) மற்றும் கிரக்கர் போன்ற இனிப்பு குறைந்த பிஸ்கட் - 1 நீரிழிவுக்காக தயாரிக்கப்பட்ட போசாக்கு பானம்*

**பகலுணவு பி.ப 12.00 - 1.00 மணி**

*ஒன்று அல்லது ஒன்றரைக் கோப்பை சோறு அரைக் கோப்பை மாப்பொருள் குறைந்த மரக்கறி (லீக்ஸ் / கத்தரி / அவரை)*
*கீரை வகை அல்லது சலட் (வெள்ளரி / புடலங்காய்) போன்றவை 3/4 கோப்பை*
*இறைச்சி / மீன்/ முட்டை /கருவாடு /நெத்தலி/ 1-2 மேசைக்கரண்டி*
*இறைச்சி உணவுகளை உட்கொள்ளாத பட்சத்தில் பருப்பு, பயறு, கௌபி, கடலை, சோயா போன்ற கறிகளை உணவுடன் சேர்த்துக் கொள்ள முடியும்.*

**மாலை 4.00மணி**

*பால் தேனீர் அல்லது பழச்சாறு ஒரு கோப்பை (சர்க்கரை சேர்க்காத) நீரிழிவுக்காக தயாரிக்கப்பட்ட போசாக்குணவு*

*ஓரளவு பழுத்த பழம் அல்லது இனிப்பு குறைந்த பிஸ்கட் 1- 2*

**இரவு உணவு**

*பகலுணவைப் போன்றே மரக்கறியுடன் ஒன்றரைக் கோப்பை சோறு அல்லது இடியப்பம் 6 - 7*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடற்பயிற்சி**

1. நோயினால் பீடிக்கப்பட்டவர்களும் நோயற்றவர்களும் சிறந்த உடல் நலனைப் பேணுவதற்கு உடற்பயிற்சி இன்றியமையாத ஒன்றாகும்.

2. உடற்பயிற்சியின் மூலம் உடற்பருமனைக் குறைத்துக் கொள்ள முடியும். அத்துடன் நீரிழிவு ஏற்படுவதையும் தடுக்க முடியும்.

3. இது தவிர நீரிழிவு நோயாளருக்கு உடற்பயிற்சியின் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன. குருதியிலுள்ள குளுக்கோஸை செல்களுக்கு உட்செலுத்தும் வேகம் அதிகரிப்பதுடன் குருதியிலுள்ள குளுக்கோஸின் மட்டமும் பேணப்படுகிறது. அதேவேளை இன்சுலின் செயற்பாட்டுத் திறனை விருத்தியடையச் செய்கிறது. மேலும் குருதியிலுள்ள கொலஸ் ரோலின் மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் உடற்பயிற்சியில் ஈடுபடுவது உதவியாக அமையும்.

4. தனக்குப் பொருந்தக் கூடிய விருப்பமான உடற்பயிற்சியை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

உதாரணம் :- வேகமான நடைப்பயிற்சி, ஓடுதல், நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் என்பனவாகும். பொழுதுபோக்காகக் கருதி இவற்றில் ஈடுபடவும்.

5. நாளொன்றிற்கு குறைந்த பட்சம் 20 நிமிடங்கள் வீதம் வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

**நீரிழிவு மற்றும் இன்சுலின்**

**1. நீண்ட காலத்திற்கு இன்சுலின் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் யாவர்?**

முதலாவது வகையான நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இன்சுலின் தேவைப்படுகின்றது. இந்த நோயாளர்களின் உடலில் இன்சுலின் குறைபாடு காணப்படும்.

நீரிழிவுக்கான வில்லைகளை உட்கொள்ளும் நோயாளர்களின் நீரிழிவு உரியவாறு கட்டுப்பாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில்

**2. இன்சுலின் வகைகள் எவை?**

செயற்திறன் வகையில் மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

**துரித செயல்திறன் இன்சுலின்**

இந்த இன்சுலின் வகை 1/2 மணித்தியாலத்தில் செயற்பட ஆரம்பிக்கப்படும். அத்துடன் 4 மணித்தியாலங்களில் அதன் செயற்திறன் முடிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீண்டநேரம் செயற்திறன் இன்சுலின்**

இதன் செயற்திறன் 2 மணித்தியாலங்களில் மெதுவாக ஆரம்பிப்பதுடன் 18 முதல் 24 மணித்தியாலங்களுக்கு அதன் தாக்கம் காணப்படும்.

**நடுத்தர செயற்திறன் இன்சுலின்**

இது மேற்குறிப்பிட்ட துரித மாற்றமும் நீண்ட நேர இரண்டு வகைகளினதும் கலப்பாகும்.

**இன்சுலின் களஞ்சியப்படுத்தி வைப்பது எவ்வாறு?**

குளிர்சாதனமே இன்சுலினைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு உகந்த இடமாகும். மூடப்பட்டுள்ள பிளாஸ்ரிக் பாத்திரம் ஒன்றினுள் இட்டு குளிர்சாதனப் பெட்டியின் கீழ்ப்பாக தட்டுகளில் களஞ்சியப்படுத்த வேண்டும்.(அதிக குளிரூட்டல் பிரிவில்(Freezer) வைக்கக் கூடாது.

உங்களிடம் குளிர்சாதன வசதி இல்லாவிட்டால் மட்பானை ஒன்றினுள் பின்வருமாறு களஞ்சியப்படுத்தி வைக்க முடியும்.

**நீரிழிவு நோயாளர்களுக்கான பாத பராமரிப்பு**

**1. நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட பாத பராமரிப்பு தேவைப்படுவது ஏன்?**

நீரிழிவு நோயாளர்களின் பாதங்களுக்கான குருதியோட்டம் குறைவாக இடம்பெறுவதால் சிறு காயம் ஏற்பட்டால் கூட அவை ஆறாத நிலமை ஏற்படலாம். நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதால் பாதங்கள் மரத்துப் போகின்ற காரணமாக பாதங்களில் ஏற்படும் காயங்கள் குறித்து பெரும்பாலும் உணரப்படுவதில்லை.

**2. பாதங்களில் உணரப்படுதல் குறைவடைவதால் தம்மை அறியாமலேயே ஏற்படுகின்ற பாதிப்புக்கள் எவை?**

1. காலில் ஆணி உண்டாதல்.
2. காலணி வெட்டுதல் / கீறல் ஏற்படுதல்
3. கொப்புளம்
4. சேற்றுப்புண்
5. அரிகாயம் பாதங்களில் அநாவசிய இடங்களில் காயங்கள் ஏற்படுதல்.
6. நகம் வெட்டும் போது தோலில் வெட்டுக்காயம் கீறல் ஏற்படல்.

**3. நீரிழிவு நோயாளர்கள் ஒருவரின் பாதங்களில் காயம் ஏற்படின் என்ன நேர்கின்றது?**

காயம் ஏற்பட்ட பகுதிகளுக்கான குருதி விநியோகம் முற்றாக இடம்பெறாமையினால் காயம் ஏற்பட்டுள்ள பகுதியில் திசுக்கள் உயிரிழக்க ஆரம்பிக்கும் உயிரிழந்த திசுக்கள் மீள செயற்பட வைக்க முடியாது. என்பதால் அவை ஆறுவதற்கு தாமதமாகும். இறுதியில் உயிரிழந்த திசுக்கள் காணப்படும் பகுதியை வெட்டி நீக்க நேரிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. நீரிழிவு நோயாளர்களின் பாதங்களைப் பாதுகாப்பது எவ்வாறு?**

நாளாந்தம் இரு பாதங்களையும் நன்றாகப் பரிசோதிக்கவும். விரல் இடைவெளிகள், பாதங்களின் அடிப்பகுதி ஆகியவற்றைப் பரிசோதிக்கவும்.

சருமத்தின் நிறமாற்றம், வீக்கம், பாதங்களில் ஆணி உண்டாதல். கொப்புளம், தழும்பு, காயம் அல்லது காயம் ஏற்படும் அறிகுறி (சிவந்து காணப்படல்) காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடவும்.

சிறு காயமாயினும் நன்றாகக் கழுவி துப்பரவு செய்து வைத்தியரிடம் காட்டும் வரை சுத்தமான கோஸ் துணியால் அல்லது துணியால் மூடி விடவும். ஒரு போதும் இறுக்கமாக துணியை சுற்றவோ அல்லது பண்டேஜ் செய்யவோ கூடாது. அத்துடன் இறுக்கமாக பிளாஸ்டர் ஒட்டுவதைத் தவிர்க்கவும்.

நாளாந்தம் பாதங்களை துப்பரவான இளஞ்சுடு நீரினால் கழுவவும். அதன் பின்னர் உலர விடவும். விரல் இடைவெளிகளில் நீர் தங்கியிருக்க இடமளிக்காதீர்கள்

பாதங்கள் காய்ந்து விடுவதைத் தடுப்பதற்காக தடவும் ஈரப்பதத்திலான தைலங்களை விரல் இடைவெளிகளில் தடவக்கூடாது. வெளிப்புறமாக மாத்திரம் தடவவும்.

நகங்களை நீளமாக வளர விடக் கூடாது. நகங்களை குறுக்காக விரல்களுக்குப் பாதுகாப்பாக வெட்டி நீக்கவும். நகங்களின் இரு முனைகளிலும் சதை உட்புறமாக அழுத்தப்படும் வகையில் நகம் வெட்டாதீர்கள்.

காலணிகள் அல்லது செருப்பு இன்றி திறந்த வெளியில் நடப்பதைத் தவிர்க்கவும்.

நீங்கள் காலுறைகள் அணிகின்றவர் எனின் துப்புரவான பருத்தியினாலான காலுறைகள் அணிவதை பழக்கமாகக் கொள்ளவும்.


நீங்கள் நளாந்தம் காலணி, காலுறை அணிகின்றவராக இருப்பின் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையேனும் அவற்றைக் கழற்றி பாதங்களை வெறுமனே வைத்திருப்பதற்கும் பழகிக் கொள்ளுங்கள்.
அதிக சூடான மற்றும் அதிக குளிரான திறந்த வெளிகளில் காலணிகளின்றி நடப்பதைத் தவிர்க்கவும்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் உங்களின் இரண்டு பாதங்களை முகத்தைப் போன்று பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**கவனத்திற்கு :-**

**நீங்கள் புகைப்பிடிப்பவராயின் கட்டாயமாக புகைத்தலை நிறுத்த வேண்டும். உங்கள் இரு கால்களிலும் ஏற்படும் சிறு காயங்கள் குறித்து கவனத்தில் கொள்ளாமல் இருப்பின் கால்களை வெட்டி அகற்ற நேரிடலாம். என்பதையும் நினைவில் வைத்திருக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரிப் பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் மதுப்பாவனையும்

திரு. காசிப்பிள்ளை குலசேகரம்
ஓய்வுநிலை கொத்தணி அதிபர்
நெற்புலவு
பூநகரி.

மது என்பது ஒரு போதையூட்டும் பானம். எமது நாட்டின் பல வடிவங்களில் மது கிடைக்கின்றது. எமது கிராமங்களில் மது பானம் சட்டபூர்வ உற்பத்தியாக பனையின் கள்ளாகவும், தென்னையின் கள்ளாகவும் கிடைக்கின்றது. இலங்கையின் தென்பகுதிக் கிராமங்களில் கள், கித்துள் மரத்திலிருந்தும் தென்னையிலிருந்தும் இறக்கப்படுகிறது. இதனை விட சாராயம் பல வகைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. அத்துடன் பியர் பானமும் உற்பத்தி செய்யப்படுகிறது. கள், சாராயம், பியர் என்பவற்றில் மதுசாரத்தின் அளவுகளும் வித்தியாசப்படுகிறது. இவற்றிற்கான சில மூலப்பொருட்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

சாராயம், கள், பியர் தவிர்நத போதையூட்டும் கஞ்சா எனும் செடியை வளர்த்து எடுத்து அதன் பாகங்களை நுகர்ந்து போதை ஏற்றுகின்றார்கள். இதைத்தவிர ஐஸ் போதைப்பொருள், கொக்கொயின், கெரோயின், மஞ்சுவான் போன்ற போதையூட்டும் பல வகைகள் உலகில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் உலகின் அரசாங்கங்களினால் தடை செய்யப்பட்டவையாகும். இதனைப் பாவிப்பவர், வியாபாரம் செய்பவர், கடத்துபவர் ஆகியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உச்ச பட்ச தட்டணையாக மரண தண்டணையும் விதிக்கப்படுகிறது. இலங்கையில் இவ்வாறு தண்டிக்கப்பட்ட நடைமுறை உண்டு.

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கள், சாராயம் என்பன தவறான முறைகளில் விநியோகிக்கப்படுகிறது. கள் வியாபாரம் தெங்கு, பனம்பொருள் உற்பத்திச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட தவறணையில் விற்கப்படுகிறது. சாராயம் பிராந்தியங்களில் அமைக்கப்பட்டுள்ள சாராயத் தவறணை மூலம் விற்பனையாகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் அரசினால் அனுமதிக்கப்பட்ட தவறணைகள் இல்லை. கிளிநொச்சியில் மட்டும் சில்லறை வியாபாரத்திற்கு மது விற்பனைக்கு அனுமதியுள்ளது. இதன் காரணமாக சட்டரீதியற்ற மது (சாராயம்) விற்பனை பல கிராமங்களில் நடைபெறுகிறது. இவை சீல் செய்யப்பட்ட விற்பனை விலையிலும் அதிகளவான விலையில் விற்கப்படுகிறது. சாராயம் தென்னங்கள், பனம்கள் கறுப்பஞ்சாறு என்பவற்றைப் பயன்படுத்தி வேறுசில மூலப்பொருட்களும் கலந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. இதுவும் மனித உடலுக்கு கேடு விளைவிக்கும் என்ற வாசகங்கள் அச்சிடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிப்பு என்னும் சாராயம் உள்ளூர் மக்களால் தயாரிக்கப்படுகிறது. இதற்கு அழுகிய பழங்கள், பழைய சீனி, இரும்பு, செப்பு பெயர் குறிப்பிட முடியாத மூலப்பொருட்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இவை அனைத்தும் மனித உடலுக்கு கேடு விளைவிப்பன. கசிப்பு தயாரிப்பது, கொண்டு செல்வது, விற்பனை செய்வது, அருந்துவது சட்ட விரோதமானது. இலங்கை முழுவதும் கசிப்பு உற்பத்தியின் அளவு பன்மடங்கு பெருகியுள்ளது.

உற்பத்தி செய்பவர் சட்டத்திலிருந்து தப்பிக்க மறைவான, பாதுகாப்பான இடங்களையும், காடுகளையும் தயாரிப்பதற்குப் பயன்படுத்துகின்றார்கள். சில இடங்களில் பெண்களையும் ஈடுபடுத்துகின்றார்கள். கசிப்பைக் கொண்டு செல்பவர் பல இரகசிய முறைகளைக் கையாண்டு மறைத்து எடுத்துச் செல்கின்றனர். வியாபாரம் செய்பவரும் பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றனர். எனினும் பொலிசாரும், கலால் பிரிவினரும் தேடி அலைந்து கசிப்பை அழித்து வருகின்றனராயினும் உற்பத்தி அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

பூநகரிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக குறிப்பிடக்கூடிய சில கிராமங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. முன்னாள் கிராம சேவையாளர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் என அறியப்பட்ட நண்பர்கள் மூலமே இக்கிராமங்களை அடையாளப்படுத்த முடிந்தது. பத்திரிகையில் வந்த செய்திப்படி முட்கொம்பன் கிராமம் உற்பத்தியில் ஈடுபடுவதாக அறியமுடிகிறது. மற்றும் ஜெயபுரம், அரசபுரம், பல்லாய், நாகபடுவான், முழங்காவில் போன்ற கிராமங்களைக் குறிப்பிட முடியும். பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகருடன் உரையாடிய போது நீதிமன்றத்தில் வழக்குகள் பதியப்பட்ட இடங்களையே தங்களால் அடையாளப்படுத்த முடியுமென்று கூறினார்.

பூநகரிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியும் பாவனையும் அதிகரிப்பதற்கு நியாய விலையில் சாராயம் கிடைக்காதது ஒரு காரணமாகலாம். அதாவது பூநகரியில் ஓர் சாராய விற்பனை நிலையம் தவறணை ஒன்று இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் மக்களிடம் உள்ளது. தவறணை முறை இங்கு அமுல்படுத்தப்பட்டால் கசிப்பு உற்பத்தியை குறைக்கலாமென தாம் கருதுவதாக பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். இது தனது அபிப்பிராயமே தவிர கட்டாயமல்ல என்ற கருத்தையும் கூறினார்.

மேலும் சாராயத்தின் விலை அதிகரிப்பும் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பதற்கு காரணமாகலாம். அரசு வரி வருமான நோக்கிலும் மக்களின் சௌக்கியத்திற்காகவும் சாராய விலையை அதிகரிக்கிறது என உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் குறிப்பிட்டதோடு சிகரட்டின் விலை அதிகரிக்கப்பட்டதால் புகைப்பவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். ஆனால் இதில் எனக்கு அபிப்பிராய பேதமுள்ளது. பூநகரிப் பிரதேசம் கடும் உழைப்பாளிகள் உள்ள பிரதேசம், வயல் வேலை, தோட்ட வேலை, மீன்பிடி என கடுமையாக உழைக்க வேண்டிய தொழில்களைச் செய்வதால் தமது களைப்பைப் போக்க சாராய போதையை ஏற்றுகிறார்கள். எனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த விலையில் பங்கீட்டு முறை என பல நடைமுறைகளை அரசு கையாண்டால் கசிப்பு உற்பத்தியைக் குறைக்கலாமென்பது எனது அபிப்பிராயமாகும்.

கசிப்பானது 100 ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்டு 1000.00 ரூபா வரை ஒரு போத்தல் விற்பனையாகிறது. இது சாரயத்தை விட மலிவானது. ஆனால் உடலுக்கு கடும் கேடு விளைவிக்கக்கூடியது. கசிப்பு குறிப்பிட்டளவு சாராயத்தை விட அதிகளவு போதை தருவதால் கசிப்பை போதைப்பிரியர்கள் நாடுகின்றார்கள் என பேசப்படுகிறது.

பூநகரிப் பிரதேசத்தில் கள் இறக்கும் தொழிலாளர்கள் அதிகம். இதனால் அவர்கள் பாதிக்கப்படலாம் என்ற கோணத்தில் சாராய தவறணை விற்பனை நிலைய அனுமதி வழங்குவது தவிர்க்கப்பட்டதாக கருத்து நிலவுகிறது. கள் ஒரு போதையூட்டும் பானம். எமது இளமைக்காலத்தில் கள் அருந்துபவர்களே அதிகம். சாராயம், கசிப்பு, பாவனை மிகவும் குறைவு. தற்போது சாராயம், கசிப்பு அருந்துபவர்கள் அதிகரிக்கிறார்கள். இதற்கு கள் இறக்கும் தொழிலாளர்களின் நேர்மையற்ற செயல்களால் அருந்துபவர்கள் கசிப்பை நாடுகின்றார்கள். கள்ளுக்குள் சேர்க்கின்ற சீனி, தண்ணீர் என்பன கலந்து அளவைப் பெருக்குவதால் போதை குறைவதோடு உடலுக்கு அசௌகரியம் ஏற்படுவதால் கள் அருந்துவதைத் தவிர்க்கின்றார்கள். கள் இறக்கும் தொழிலாளர்கள் இவ்வாறு செயற்படுவது மரம் ஏறாமலே உற்பத்தியைப் பெருக்கலாம். அவர்களுக்கு இலாபம் தரலாம். முன்னைய காலங்களில் கள் விற்பனை கொட்டில் முறை இருந்தது. கள் இறக்குபவர் தரமான கள்ளை இறக்கினாலேயே விற்பனை செய்ய முடியுமென்ற நிலையில் கள்ளின் தரம் பேணப்பட கசிப்பு உற்பத்தி நடைபெறவில்லை. திரும்பவும் தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமும் தரமான கள்ளை வழங்குவதையும், அளவுப் பிரமாணத்தை சரியான முறையிலும் பின்பற்ற அறிவுறுத்தினாலும் கசிப்பு உற்பத்தி பாவனையைக் குறைக்கலாம்.

கசிப்பு உற்பத்தி விற்பனை ஆகியவற்றைக் குறைப்பது அவற்றைத் தடுப்பதற்கு அரச திணைக்களங்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமென பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிடுகிறார். குறிப்பாக தங்களால் 37,38 ஆகிய சட்டப்பிரிவுகள் மூலம் தான் நடவடிக்கை எடுக்கமுடியுமென்றும் அத்துடன் வனபரிபாலனத் திணைக்களம் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன காடுகளில் கசிப்பு உற்பத்தி செய்வதை பொலிஸ் உதவியுடன் தடுக்க முடியுமென அபிப்பிராயப்படுகின்றார். அத்துடன் சூழல் பாதுகாப்பு பிரிவினரும் அதில் அக்கறை செலுத்தலாமென்கிறார்.

மதுப்பிரியர்கள் கசிப்பு நாட்டத்தைக் குறைப்பதற்கு பிரசார உத்திகளைப் பயன்படுத்துவது நடைமுறைச் சாத்தியமாக்கலாம். மேலும் கசிப்பு உற்பத்தி பாவனையைக் குறைப்பதற்கு சட்ட நடவடிக்கையும் சிறந்தது. நீதிமன்றம் மூலம் கடும் தண்டனையை வழங்கினால் கசிப்பை ஒழிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார சேவைகள் திணைக்களம் கசிப்பு அருந்துவதால் ஏற்பட்ட மரணங்களை காட்சி ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துவதாலும் பாவனையைக் குறைக்கலாம்.

தற்போது ஒரு சாராய தவறணையும் சில்லறை விற்பனை நிலையமும் அடைக்கப்பட்டுள்ளன. இதனால் அரசு அனுமதித்த விலையில் மதுவை பெற்றுக்கொள்ளலாம். மதுப்பிரியர்கள் தற்போது தவறணையை நாடுவதால் கசிப்பைத் தவிர்க்கின்றனர்.

**தகவல் வழி**

**பொதுமக்கள்**
**ஓய்வு பெற்ற கிராமசேவகர்கள்,**
**பத்திரிகையாளர்கள்**
**முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேசத்தில் கால் நடைத் தீவனத்தை உற்பத்தி செய்தலும் ஊட்டம் பெறலும்

**வைத்தியர் V. நிருபனா**
கால்நடை வைத்தியர்,
பூநகரி.

தற்போதைய பால் உற்பத்தி செலவின் பெரும்பாலான பகுதி விலங்குணவிற்காகவே செலவிடப்படுகின்றது. என்பது யாவரும் அறிந்த உண்மையே. அத்துடன் அடர்வுத் தீனின் விலையேற்றமும் வேகமாக அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆகையால் தாவர உணவைப் பயன்படுத்த முடியுமாயின் இச் செலவின் பெரும்பகுதியை குறைத்துக் கொள்ளமுடியும் எனினும் பூநகரிப் பிரதேசத்திற்குப் பொருத்தமான கால்நடை உணவாக பாவிக்கக் கூடிய தாவர இனங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

ஒரு பிரதேசத்திற்குரிய புல்லையும் அவரை இனங்களையும் சிபாரிசு செய்தல் அல்லது தெரிவு செய்தல், மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டிய ஒரு செயலாகும். இதன்போது அப்பிரதேசத்தின் காலநிலை மாற்றங்கள், நிலத்தின் அமைப்பு, மண்ணின் தன்மை மற்றும் பண்ணையாளர்களின் சமூக, பொருளாதாரப் பின்னணி போன்றவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் கீழ்க்குறிப்பிட்ட முறைகளைக் கையாண்டு தரமுயர்த்தப்பட்ட புல்லையும் அவரை இனங்களையும் பயிரிட்டு அவற்றைக் கால்நடை உணவாகப் பாவிக்க முடியும்.

1. வீட்டுத்தோட்டத்தில், பண்ணை நிலத்தில் நிரந்தர வேலியாக அவரை இன சிறிய மரங்களை நடுதல்
2. இடையிடையே சிறிய அவரை இனத்தில் தாவரப்பாத்திகளை அமைத்தல்
3. தொழுவத்தைச் சுற்றியுள்ள பகுதியில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய புல்லினங்களை நடுதல்.
4. ஆங்காங்கு கிடைக்கும் சிறிய சிறிய வெற்று நிலப்பகுதிகளில் புல் வளர்த்தல்

பொதுவாக பிரதான வேலிகளில் கிளிசறீயா, முள்முருங்கு, இப்பில் இப்பில் போன்றவற்றையும் திறந்த வெளியில் கினி புல்லினம், பிளங்கேரியா,பிறிசாந்தா போன்ற புல் இனங்களையும் பயிரிடுவது சிறந்தது.

பூநகரிப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மழைகாலங்களில் பொதுவாக செப்ரெம்பர் தொடக்கம் ஜனவரி மாதம் வரையில் பசுந்தீவனத்திற்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதில்லை. அதனைத் தொடர்ந்து வரும் கோடைகாலங்களில் கால்நடைகளுக்கு போதியளவு உணவு இல்லாதமையினால் மிகவும் நலிவடைந்து சில வேளைகளில் இறக்கும் தன்மையும் ஏற்படுகின்றது.இதனைத் தடுப்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவனத்தைச் சேமித்து வைப்பது அவசியமானதாகும். இதற்கான முறையே சைலேற்று உற்பத்தியாகும். அதாவது தீவனங்கள் சிலவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் அவற்றின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதுடன் சேமிப்புக் காலத்தை நீடிக்கலாம். மற்றும் வைக்கோலைச் சேமித்துப் பயன்படுத்தலாம். பொதுவாக பாற்பண்ணையாளர்கள் மிகவும் இலாபகரமான உணவுப் பொருட்களாக வைக்கோலைப் பயன்படுத்துகின்றனர். துரதிஷ்டவசமாக அதன் போசணைப் பெறுமானம் மிகவும் குறைவு. ஆகவே அதனை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமாயின் யூரியாவைச் சேர்த்து பயன்படுத்த முடியும். ஏனெனில் பதனிடப்பட்ட வைக்கோல் சமிபாட்டு வீதத்தை அதிகரிக்கும். அத்தோடு உணவின் புரத வீதத்தை அதிகரிக்கும். வைக்கோலைப் பயன்படுத்தும் முறையினைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

| வைக்கோல் அளவு | நீரின் அளவு | யூரியாவின் அளவு |
|---|---|---|
| 1 Kg | 1 *l* | 20g |
| 5 Kg | 5 *l* | 100g |
| 10 Kg | 10 *l* | 200g |
| 20 Kg | 20*l* | 400g |
| 50 Kg | 50*l* | 1Kg |
| 100 Kg | 100*l* | 2Kg |

நன்கு உலர்ந்த வைக்கோலை நீரூற்றி யூரியாவுடன் கலந்து ஊறவைக்கலாம். தீவனமாவதற்கு முன்பு 30-60 நிமிடம் பாதுகாப்பாக வைக்கவேண்டும். தீவனம் தயாரிக்கும் முறையை கால்நடை வைத்திய அலுவலகத்தை நாடி நன்கு விளக்கம் பெற்றுக்கொள்ளுங்கள்.

மற்றுமொரு மிகைப் பசுந்தீவனமாக "அசோலா" உற்பத்தி முக்கியமானது. "அசோலா" என்பது வேகமாக வளரும் மிதக்கும் சிறிய நீர்வாழ் தாவரமாகும். தீவனவகைகளுடன் ஒப்பிடும் போது குறைந்த செலவில் உயர் ஊட்டச்சத்துமிக்க மேலதிக உணவாகவும் காணப்படுகிறது. அசோலா தாவரத்தை வீடுகளில் வளர்க்கலாம். 50% நிழலான இடத்தில் தொட்டி ஒன்றைத் தயாரிக்கலாம். தொட்டியின் அளவு 2 X 1 x 0.3 மீற்றர் நீளம் x அகலம் x ஆழம் கொண்டதாக அமைத்தல் வேண்டும். 10*l* தண்ணீர்த் தொட்டியினுள் 2-3kg மாட்டெருவை இட்டு தூய நீரால் தொட்டியை நிரப்பலாம். சுப்ப பொசுப்பேற்று தூள் அல்லது பாறைப் பொசுபேற்று தூள் 10-15g ஐ தொட்டியினுள் தண்ணீரில் சேர்க்க வேண்டும். 12 - 15 cm ஆழ நீரில் அசொலா தாவரத்தை இடவேண்டும். 15 நாளைக்குப் பின் 1 - 1.5 Kg அசோலாவை அறுவடை செய்யலாம். அசோலாவை தவிடு, வணிக உணவுகளுடன் கலந்து வழங்க வேண்டும். கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் அசோலா பயிரிடப்படுகிறது. பார்வையிட்டுப் பலன்பெறலாம். அசோலாத்தொட்டி இலை தழை விழாமலும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வலையால் (நுளம்பு) மூடப்பட வேண்டும். மாட்டுத் தீவனமாக கச்சான் குழை மற்றும் கோழி அவரை என்பவற்றை மற்றைய தீவனங்களுடன் கலந்து வழங்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டும் சோரியாசிஸ்



**வைத்தியர் கணபதிப்பிள்ளை பிறேமராகவன்**
சமூக வைத்திய அதிகாரி,
பிரதேச வைத்தியசாலை,
பூநகரி.

### 1. சோறியாசிஸ் நோய் எப்படி உருவாகிறது?

*28 நாட்களுக்கு ஒரு முறை இயல்பான முறையில் புதிதாகத் தோன்றி மறையும். நமது தோல் செல்கள் இயற்கைக்கு மாறாக 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு முறை தோன்றுவதால் பழைய தோல் செதிலாக உரியத் தொடங்குகிறது.பாதிக்கப்பட்ட இடத்தின் மேற்தோலில் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, நுண்ணிய இரத்தக்குழாய்கள் தளர்ந்து, விரிவடைந்து, வீங்க ஆரம்பிக்கின்றது. இதனால் கடினமான, நிறமற்ற, பெரிய, நெய்ப்புத்தன்மையுடைய, வித்தியாசமான தோல் செல்கள் சொரியாசிஸ் நோயில் உண்டாகின்றன. உடலின் வளர்ச்சித்தன்மை* (Metabolism) *வேறுபாட்டினால் மாச்சத்து மற்றும் புரதச்சத்து அதிகரிக்கவோ அல்லது சிதைவடையவோ செய்கின்றன. இதனால் சோரியாசிஸ் உள்ளவர்களுக்கு உயிரிழந்த தோல் செல்கள் அதிகரித்து செதில்களாக மாறுகின்றன.*

### 2. சோறியாசிஸ் நோயின் அறிகுறிகள் என்ன?

*பெரும்பாலும் சோரியாசிஸ் முழங்கை மற்றும் முழங்காலுக்கு கீழும், தலையிலும் அதிகம் தோன்றும்.*

*சோரியாசிஸ் உள்ள தோல்பகுதி வரட்சியாகக் காணப்படும்.*

*பெரிய வட்டவடிவான செதில்களே பெருமளவு காணப்படும்.*

*சாதாரண நிலையில் சோரியாசிஸ் நோயில் அரிப்பு இருப்பதில்லை. ஆனால் நோய் தீவிரமடையும் போதோ அல்லது குணமடையத் தொடங்கும் பொழுதோ அல்லது கிருமிகளால் பாதிக்கப்படும் போதோ கடினமான அரிப்பு ஏற்படத் தொடங்குகிறது.*

*சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்ட வட்டவடிவத் தோல் பகுதிகளின் உட்புறம் ஆறி, இயற்கையான தோல் உண்டாகிறது. ஆனால் அதேநேரம் வட்டத்தின் புறப்பகுதிகளில் செதில்கள் அதிகமாகி, நோயின் தீவிரம் அதிகரிக்கிறது.*

*சோரியாசிஸ் உள்ள இடங்களில் வெடிப்புக்களும், அவற்றில் வலியும் எரிச்சலும் உண்டாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. சோரியாசிஸ் நோய் கூடுதலாக யாரைப் பாதிக்கிறது?**

நூறு பேருக்கு இரண்டுபேர் சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விகிதம் தற்சமயம் நூறு பேருக்கு ஆறு பேர் என அதிகரித்துள்ளது.

பெரும்பாலும் 15 முதல் 30 வயது உள்ளவர்களை அதிகம் தாக்கிறது. 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் திடீரென நோயின் தாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள்.

ஆண்கள் 60%, பெண்கள் 40% இவ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**4. சோரியாசிஸ் நோயை அறிந்து கொள்வது எப்படி?**

பழுப்பு மற்றும் இளம் சிவப்பு நிறப் பருக்கள் சிறிய மற்றும் பெரிய தடிப்புகள் வெளிர் நிற மெழுகு போன்ற செதில்கள் சோரியாசிஸ் நோயில் தோன்றி உதிரத் தொடங்குகின்றன.

செதில்களை சொறிந்து, பிய்த்து எறியும் போது செதில்கள் இருந்த இடத்தில் ஊசித்துளையளவு இரத்தக்கசிவு ஏற்படுகிறது.

தோலில் திடீர் திடீரென அரிப்பு, தடிப்பு மற்றும் சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றலாம்.

அதிகம் அழுத்தம் ஏற்படக் கூடிய இடங்கள் இறுக்கமான பகுதிகளில் சோரியாசிஸ் அதிகமாகலாம்.

சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 25 சதவீதம் பேருக்கு கை மற்றும் கால் நகங்கள் சொத்தியாகத் தொடங்குகின்றன.

சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 2 சதவீதம் பேருக்கு மூட்டுகளில் வீக்கம் மற்றும் கடுமையான வலி ஏற்பட்டு நடக்க மற்றும் கடுமையான வலி ஏற்பட்டு நடக்க மற்றும் வேலை செய்ய இயலாமை ஏற்படுகிறது.

**5. எந்த இடங்களில் சோரியாசிஸ் அதிகமாக காணப்படுகிறது.**

தலை, காதின் பின்பகுதி, மேல்முதுகு, கீழ்முதுகு, முழங்கை மற்றும் முழங்கால் மூட்டு மடிப்புகளின் கனத்த தோல்ப்பகுதி போன்றவை சோரியாசிஸ் நோயால் அதிகளவு பாதிக்கப்படுகின்றன.

சிறுமூட்டு மடிப்புகளின் கனத்த தோல்பகுதி, உள்ளங்கை மற்றும் உள்ளங்கால், பிறப்புறுப்புக்களின் மென்மையான பகுதிகள் மற்றும் அதன் தோல் பகுதி தொப்புள் ஆகியன குறைந்தளவு பாதிப்படைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. சோறியாசிஸ் நோயினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?**

தாழ்வு மனப்பான்மை, மன அழுத்தம் உண்டாகலாம்.

மூட்டுவலி மற்றும் வீக்கம் ஏற்படலாம்.
நகங்கள் சொத்தையாகலாம்

கிருமிகளால் பாதிக்கப்பட்ட சோரியாசிஸ் நோயால் தோலில் முடி உதிர்தல், தொண்டை, முகப்பரு, கழுத்து தோல்பட்டை, மேற்கை மற்றும் முதுகுப் பகுதிகளில் கரும்புள்ளிகள் மற்றும் தடிப்பு உண்டாகலாம்.

அடிக்கடி சிறுநீரகக் கற்கள் உண்டாகலாம்.

மலட்டுத்தன்மை ஏற்படலாம்.

குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து தம்பதியர் மற்றும் குடும்ப அங்கத்தினருக்குள் கருத்து வேறுபாடு தோன்றலாம்.

**7. காலநிலைக்கும் சோறியாசிஸ் நோய்க்கும் சம்பந்தம் என்ன?**

சிலருக்குக் கடும் குளிரிலும் சிலருக்கு கடும் வெயிலிலும் , சிலருக்கு இரண்டு பருவங்களிலும் உண்டாகலாம். சோரியாசிஸ் பெரும்பாலும் வருடத்திற்கு இருமுறை, வருடத்திற்கு ஒருமுறை, அல்லது 4 முறை என கால நிர்ணயப் படி வந்து செல்வதுண்டு. குளிர்காலத்திலேயே பெரும்பாலானோர் சோரியாசின் தாக்குதலிற்கு ஆளாகின்றனர். தமிழ் மாதங்களான ஆடி மற்றும் பங்குனி மாதங்களில் சோரியாசியின் நோயின் தாக்கம் தீவிரமாக அதிகரிக்கின்றது.

**8. எதனால் சோறியாஸிஸ் நோய் தீவிரமாகிறது?**

நாட்பட்ட சோரியாசிஸ் நோயில் கவனமற்ற பராமரிப்புக் காரணமாக பூஞ்சை, பக்ரியா மற்றும் பல நுண் கிருமிகளால் தோலில் இரண்டாம் நிலை தீவிர தொற்று ஏற்பட்டு சுரம், குளிர், நெறிகட்டுதல், ஆழ்ந்த தோல் வெடிப்பு, துர்நாற்ற நீர் கசிவு மற்றும் சீழ் பிடித்தல் ஆகியன ஏற்படுகின்றன.

**9. மனநிலைக்கும், சோறியாசிஸ் நோய்க்கும் சம்பந்தம் என்ன?**

வீட்டில் ஏதேனும் துயர சம்பவம் நிகழ்ந்தாலோ, கடன் தொல்லை, குடும்பப்பிரச்சனை, வேலைப்பளு போன்ற காரணங்களால் மன உழைச்சல் ஏற்பட்டாலோ சோரியாசிஸ் நோயின் தீவிரம் அதிகரிக்கப்படுகிறது. நன்கு குணமாகி வரும் நிலையில் திடீரென ஏற்படும் மன உழைச்சல் மற்றும் கவலையால் புதிதாக மீண்டும் சோரியாசிஸ் தோன்றலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. என்ன வகையான உணவுகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்?**

மீன், கருவாடு, கோழி, கத்தரிக்காய், காளான், காலிபிளவர், பீர்க்கங்காய், பூசனிக்காய், வாழைக்காய்,அன்னாசி, கொய்யா, போன்றவற்றை நோயின் தீவிர நிலையில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

நீண்ட நாட்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், சோரியாசிஸ் நிச்சயமாக குணமடையும்.

**14. சோரியாசிஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுமா?**

பரம்பரையாக வருவதற்கு வாய்ப்புண்டே தவிர, தொடுவதாலும், அருகில் இருப்பதாலும் பிறருக்கு நோய் பரவும் வாய்ப்பில்லை.

**15. சோரியாசிஸ் தீவிரமாகாமல் எப்படிக் கட்டுப்படுத்தலாம்?**

சோரியாசிஸ் நோய் உள்ளவர்கள் குளிர்நேரங்களில் நோயின் தீவிரம் அதிகமாகி விடாதபடி உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

அதிகாலை சூரிய வெளிச்சத்தில் புற ஊதாக்கதிர்கள் நிறைந்த சூழலில் (ulta violet Radiations) முழு உடலையும் அடிக்கடி காட்டுவது தோலுக்குப்பலத்தை உண்டாக்கும்.

அசைவ உணவுகள், கொழுப்பு சத்துள்ள உணவுகளை குறைத்துக் கொள்வது நல்லது.

கண்ணைப்பறிக்கும் நிறமுடைய ஆடைகள், வழுவழுப்பு உடை, செயற்கை நூலினால் செய்யப்பட்ட உடைகளைத் தவிர்த்து, வெண்ணிறப் பருத்தி ஆடைகளை அணிவது நல்லது.

**16. சித்த மருந்துகளை எப்படி பயன்படுத்த வேண்டும்**

காலையில் எழுந்ததும் உடைகளைக் களைந்து மெல்லிய பருத்தித் துணியை இடை மார்புப் பகுதிகளில் அணிந்து, உடல் முழுவதும் அல்லது பாதிப்புள்ள பகுதிகளில், தலைப்பகுதியில் தைலக்கலவையைத் தடவி குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் வீட்டு மாடியில் அல்லது வெட்ட வெளியில் நேரடியாக சூரிய ஒளியில் தோராயமாக காலை 7 மணிமுதல் 8.00 மணி வரையிலான நேரத்தில் நிற்பது நல்லது. நேரடியாக சூரிய ஒளியில் காட்டுவதற்கு வசதி இல்லாதவர்கள் தைலக்கலவையை உடலில் பூசி வீட்டு வாசல், கொல்லைப்புறம், திறந்த ஜன்னல் ஓரங்களில் குறைந்தது 45 நிமிடங்கள் உடலைக் காட்டுவது நல்லது. பெண்கள் மெல்லிய வெள்ளை நிற இரவு ஆடைகளை அணிந்து சன்னல் வெயில் படும்படி நிற்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிப்பதற்கு மூலிகை சோப்பு, கடலை மாவு, பாசிப்பயிறு மாவு, உசிலம் பொடி கலந்த கலவையை பயன்படுத்தலாம். தலைக்குத் தேய்த்துக் குளிக்க மூலிகை ஷம்பு, சீயாக்காய்த்தூள், செம்பரத்தை இலை மற்றும் கஞ்சி சேர்ந்த அரைப்பைப் பயன்படுத்தலாம். அல்லது மூலிகை சோப்பு பயன்படுத்தலாம்.

குளித்தபின் உடனடியாக உடல் மற்றும் தலையை ஈரம் போக நன்கு துவட்டி, தலை மற்றும் உடலில் தைலம் மற்றும் களிம்புக் கலவையை பூசி 15 முதல் 30 நிமிடங்கள் கழித்து உள்ளாடைகளை அணிந்து பணிக்குச் செல்லலாம்.

மாலையில் கொடுக்கப்பட்டுள்ள தைலம் மற்றும் களிம்பு சேர்ந்த வெளி மருந்துகளைப் பூசலாம். அல்லது இரவில் படுப்பதற்கு முன் உடலில் தடவி 30 நிமிடங்கள் கழித்துப் படுக்கலாம். நோயின் தீவிர நிலையில் மாலை மற்றும் இரவு என இருவேளைகள் வெளி மருந்துகளைத் தடவ வேண்டியது அவசியமாகும்.

இரவு படுப்பதற்கு கோரைப்பாயில் அல்லது மரத்தினாலான கட்டிலில் எதுவும் விரிக்காமல் படுக்கலாம். நோய் முக்கால் பங்கு குணமாகும் வரை இரவில் காலம்தவறி தூங்குதல் மற்றும் நீண்ட நேரம் கண்விழித்தலைத் தவிர்க்கவும்.

இரவில் உறங்கும் போது தைலம் மற்றும் களிம்புகளை உபயோகப்படுத்த விரும்பாதவர்கள் அதற்குப்பதிலாக மாலையில் அவற்றைப் பயன்படுத்தி இரவில் குளித்து ஈரம் போக துவட்டி, பின் உறங்கச் செல்லலாம்.

**17. நோய் குணமாக உதவும் ஆசனங்கள்**

1. சூரிய நமஸ்காரம்
2. பரிவர்த்த திரிகோணாசனம்
3. சர்வாங்காசனம்
4. விபரீதகரணி
5. ஹாலாசனம்
6. யோக முத்ரா

**வீட்டு மருத்துவம்**

வீட்டிலேயே செலவில்லாமல் சோரியாசிஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மூலிகை மருந்துகளை நாம் தயார் செய்து வைத்துக் கொள்ளலாம். இதனால் மருந்துச் செலவு மிச்சமாகும்.

உதாரணமாக வீட்டிலேயே தயார் செய்யக் கூடிய

1. மூலிகை குளியல் பொடி
2. மூலிகைத் தைலம்
3. மூலிகைக்குடிநீர்

ஆகியவற்றை இதில் குறிப்பிட்டுள்ளபடி தயார் செய்து அன்றாடம் பயன்படுத்தி வந்தால் விரைவில் குணமுண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 18.தோல் நோயைக் கட்டுப்படுத்தும் குளியல் பொடி

கடலைப்பருப்பு - 50g
பாசிப்பயறு - 50g
உசிலம்பொடி - 50g
இலுப்பைப் பிண்ணாக்கு - 50g
வசம்பு - 50g
ரோஜா மொக்கு - 50g
சிகைக்காய் - 50g
கரைப்புத்தூள் - 50g
வெட்டிவேர் - 50g
விளாமிச்சவேர் - 50g
பூலாங்கிழங்கு - 50g
நன்னாரிவேர் - 50g
ஆவாரம்பூ - 50g
வெந்தயம் - 50g

ஆகியவற்றைச் சுத்தம் செய்து வெயிலில் காயவைத்தும், இளவறுப்பாக வறுத்தும் நன்றாகப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். குளிக்கும் போது இந்த பொடியை சோறு வடித்த கஞ்சி அல்லது நீருடன் குழப்பி தலை, முகம் மற்றும் உடம்பில் தேய்த்துக் குளித்து வரலாம்

### 19. தோல் நோயைக் கட்டுப்படுத்தும் வெட்பாலைத் தைலம்

வெட்பாலை இலைகளை காம்பு, நடுநரம்பு நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு இவை மூழ்கும் அளவுக்கு தேங்காய் எண்ணெயை ஊற்றி 40 நாட்கள் சூரிய ஒளிபடும் படி நன்கு ஊறவைத்துக் கொள்ள வேண்டும்.

40 நாட்கள் கழித்துப்பார்த்தால் தேங்காய் எண்ணெய், கருஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். அந்த எண்ணெயை வடிகட்டி ஒரு குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனை தோலில் சொரியாசிஸ் உள்ள தலை மற்றும் உடல்பகுதிகளில் நன்கு தடவி, சூரிய ஒளி படும்படி 30 முதல் 60 நிமிடம் நின்று, பின்பு மூலிகைப் பொடி அல்லது மூலிகை சோப்பால் குளித்து வர வேண்டும்.

**குறிப்பு:-**


சோரியாசிஸ் வெறும் உடல் சார்ந்த நோய் என்று மட்டுமே கருதமுடியாது. இது மனம் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த நோய் என்பதால், சோரியாசிஸ் நோய் குணமாகவும், மீண்டும் வராமலிருக்கவும் கீழ்க்கண்டவை துணைபுரிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன்னம்பிக்கை
மருத்துவரின் மேல் நம்பிக்கை
மருந்துகளின் மேல் நம்பிக்கை
இறைவன் மேல் நம்பிக்கை

**துணை நூற்பட்டியல்:-**


*1. சித்த மருத்துவ சிறப்பு - தியாகராஜன் ஆர் - 1995*
*2. உங்கள் உணவுகளும் நீங்களும் - அச்சையா - கே.டி - 1991*
*3. குணபாடம் முதல் பாகம் - முருகேச முதலியார் க.ச - 2003*
*4. சரக ஸம்கிருதை - ஸ்ரீராமதேசிகன், எஸ்.என் -1987*
*5. ஆனந்த ரக்ஸ்யம் - யோகாச்சார்யா பெங்களூர் சுந்தரம் - 2003*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய உணவுகளும் பயன்பாடும்

**திரு. இரா. செல்வராசா**
அகில இலங்கை,
சமாதான நீதவான்.
ஞானிமடம்,
பூநகரி.

பூகோலப் பரப்பினில் மனித குலத்தின் வாழ்வியல் முறையில் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இன்றி அமையாதது. பாரம்பரிய முறைகள் என்பது. இனத்துக்கு இனம் வேறுபட்டு காணப்படுகிறது. இதில் தமிழர் பாரம்பரிய உணவு என்பது சிறந்ததாகவும், மருந்தாகவும் அவர்களுடைய ஆயுளை அதிகரித்து நோயின்றி வாழ்வதற்கு ஏற்றவாறும் காணப்படுகின்றது.உணவுப் பழக்கத்தில் பல விடயங்களை பாரம்பரியமாக பண்டைய காலமுதல் தமிழன் பின்பற்றி வருகிறான்.

அந்தவகையில் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்ற திருவள்ளுவன் கூற்று குறள் 942ல் அழகான முறையில் பாரம்பரிய உணவுப் பழக்கத்தை பற்றி கூறியுள்ளார். இதன் மூலம் நமது முன்னோரின் வாழ்வியலின் வெற்றியும் வாழ்க்கை முறை விழுமியங்களும் நன்கு புலப்படுகிறது. அதாவது மனிதனுக்கு மருந்து என்பதே தேவையில்லை அவன் உண்ணும் உணவினை ஆராய்ந்து பின்பற்றினால். இங்கே உணவு உண்பதற்கான நேரம், எந்த வகை உணவை எந்த நேரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும், எவ்வாறு எடுத்துக் கொள்வது, எந்த உணவு எந்த நோயை உடலில் சேராமல் தடுக்கும் சக்தி கொண்டது என்பது வரையும் பல்வேறு நுணுக்கத்துடனே பின்பற்றி வந்துள்ளனர். அதனை சரியானமுறையில் கடைப்பிடித்தும் வந்துள்ளனர்.

தமிழர் பாரம்பரியம் ஐந்து நிலங்கள் சார்ந்தும் வேறுபட்டுக் காணப்படுவது போலவே உணவிலும் அந்தந்த நிலங்களுக்கு ஏற்ப வேறுபாடு காணப்படுகின்றது. அவ்வடிப்படையில் நம் தமிழரின் உணவுப் பழக்கங்களை நோக்குவோமாயின் .மரக்கறி, தானியங்கள், மாமிச உணவுகளை அதிகம் பயன்படுத்தி வந்துள்ளார்கள். அதனை எவ்வாறு உட்கொள்வார்கள் என்பது பற்றியும் அதன் நன்மை பற்றியும் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு சங்ககாலத்தில் பொருணராற்றுப்படையில் வரும் பாடல்கள் அழகாக கூறுகின்றது. அதில் வரும் பாடல்களை உதாரணமாக நோக்குவோமானால் குறிஞ்சி நிலத்து மக்களின் உணவு பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது

" சுவல் விளை நெல்லின்
செவ்வவிழ்ச் சொன்றி
ஞாழலி தந்த மணவுச்சூ
லுடும்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறைகால் யாத்தது வயின்றொறும்
பெறுகுவீர்"

என்ற பாடலின் மூலம் கையினால் குத்தி எடுக்கப்பட்ட சிவப்புப் பச்சை அரிசி சோறும், நெருப்பில் வாட்டி பொரித்தெடுத்த உடும்புக் கறியும் உணவாக பரிமாறியது தெளிவாக புலப்படுகிறது. அதேபோன்று கூத்தராற்றுப்படையில் "வருவிசை தவிர்த்த

கடபான் கொலுங்குறை
முளவுமாத் தொலைச்சிய
பைந்திணைப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய
தடியோடு விரைஇ
வெண்புடைக் கொண்ட
துய்த்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து
மாமோ ராகக்
கழைவளர் நெல்லின்
அரியுலை ஊழ்த்து"

என்ற பாடலின் மூலம் அந்த மக்கள் கொழுப்பு நிறைந்த மானும், உடும்பும், பன்றியும் நெருப்பில் வேகவைத்து பொரித்த கறியும், புளியும், மோரும் சேர்த்து சமைத்த மூங்கிலரிசிச் சோறும் உணவாக பரிமாறியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

இதுபோன்று முல்லை நில மக்களின் பாரம்பரிய உணவுப் பழக்கங்களை நோக்குவோமாயின் அதுபற்றிய பாடலொன்றில் கூறும் விடயத்தினையும் நாம் ஆராய வேண்டும்.

" நெடுங்குரற் பூளைப்
பூவி னன்ன
குறுந்தாள் வரகின்
குறளவிழச் சொன்றிப்
புகரிணர் வேங்கை
வீகண் டன்ன
வவரை வாபுழுக்
கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரம் பெறுவீர் "

என்ற பாடலில் பூப்போன்ற வரகரிசிச்சோறு, அவரைக்காய் கறியும், பருப்புக் கூட்டும் சேர்த்து சுவைத்து உண்டனர் என்று புலவர் கூறுகிறார். இப்படி ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்றாற்போன்ற பாரம்பரிய உணவுகளை சுவைபட பரிமாறி உண்ட போதும். உடல் ஆரோக்கியத்தில் இவர்கள் ஆளமான கரிசனை கொண்டு. உண்ணும் உணவின் அளவு, நேரம், எவ்வாறான நிலையில் இருந்து உணவை உட்கொள்ள வேண்டும் என்ற விடயத்தில் கரிசனையோடு இருந்து, உடல் நோயைத் தடுத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றினார்கள் என்ற உண்மையை நோக்க முடிகிறது. இவர்கள் அதிகமாக தானியங்கள், மரக்கறி, காட்டிறைச்சி போன்றவற்றைப் பதப்படுத்துதல், நெல்லரிசி, வரகரிசி, திணையரிசி, புல்லரிசி, மூங்கிலரிசி, போன்றாவற்றை சோறாக சமைத்தும், இவற்றோடு குரக்கன் சாமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை மாவாக்கி களியாகவும் உட்கொண்டு வந்தனர். அரைவயிறு உணவு, கால் வயிறு பால் என முக்கால் வயிறு உண்பதன் மூலம் செரிமான செயற்பாடுகள் சீரானநிலையை பேணுவதற்கு உண்மையில் அளவுச் சாப்பாடே சிறந்தது என்பதுவும் புலவர்களால் குறிப்பிடுகிறார்கள்.

அதிலும் காட்டிறைச்சி முதல் தானியங்கள், மரக்கறி, அரிசி வகைகள் யாவுமே அக்காலத்தில் இயற்கையான மருத்துவ குணம் கொண்டது என்ற உண்மை இந்த பாடலின் மூலம் நாம் உணர முடிந்தது . தமிழர்கள் நிலத்தின் தட்ப வெப்ப சூழலை சார்ந்தும், அவர்கள் தங்கள் உடல் ஆரோக்கியம் கருதியுமே உணவுகளை எடுத்துக்கொண்டார்கள்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. அத்தகைய நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு 'உணவே மருந்து' என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது பாரம்பரிய மருத்துவ முறையான சித்த வைத்தியமும் அதைத்தான் அறிவுறுத்துகிறது. எமது முன்னோர் ஆரோக்கியமான சூழல், ஆரோக்கியமான உணவு, இயற்கையோடு ஒன்றிய வாழ்வினை வாழ்ந்தார்கள். இன்று நமக்கோ நமது குழந்தைகளுக்கோ அவ்வாறான நிலை காணப்படவில்லை. அவ்வாறான வாழ்வை வாழவும் முயற்சி செய்யவில்லை.

எனவே நாம் குழந்தைப் பருவம் முதலே சத்தான உணவினை ஊட்டச்சத்துடன் சேர்த்து கொடுத்துவர வேண்டும்.

அப்படி அளித்தால் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் நீரிழிவு, உடல் பருமனாதல், அதிக ரத்த அழுத்தம் போன்ற பல்வேறு தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். ஏன், புற்றுநோய்க்குக்கூட முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

சத்தான உணவு என்பது போதுமான அளவில் நுண்ணூட்டச்சத்துக்கள் அடங்கியது. கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட சத்துகள் நம் உடலுக்கு இன்றியமையாதவையாக உள்ளன.

அதில் கார்போஹைட்ரேட் எனும் சர்க்கரை சத்து, புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள் ஆகிய அனைத்தும் அடங்கியதுதான் ஊட்டச்சத்து மிக்க உணவு. இவற்றை குழந்தை பருவத்தில் இருந்தே கொடுப்பது அவசியம்.

நம்மில் பலரும் சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள அரிசி , இயந்திரத்தில் திரித்தெடுத்த அரிசிகளையே உணவில் தினந்தோறும் உண்டு வருகிறோம். இது நம் உடலில் உள்ள ரத்த சர்க்கரை அளவை அதிகப்படுத்தும். இந்த உணவை தொடர்ந்து உண்பதே நீரிழிவு எனும் சர்க்கரை நோய்க்கு அடிப்படைக் காரணமாகும்.

அரிசி உணவோடு நம் பாரம்பரிய உணவாக உள்ள பருப்பும், நெய்யும் சேர்த்து எடுத்தால் சர்க்கரை சத்தோடு புரதமும், கொழுப்பு சத்தும் கூடும் . இதனால் சர்க்கரை உடலில் அதிகரிக்காது. இதனை அறிந்தே நம் முன்னோர்கள் தங்கள் உணவுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தை அமைத்துக் கொண்டனர்.

புரதங்கள் நம் உடலினை நோய் கிருமிகளிடம் இருந்து காக்கும் அரண்கள். உலகையே அச்சுறுத்திய கொரோனா நோய்த்தொற்றின்போதும் இந்த புரதச்சத்து உணவுகளை எடுத்துக்கொள்ளவே மருத்துவர்கள் அறிவுறுத்தினர். மாமிச வகைகளோடு, முளைகட்டிய தானியங்களும், பயிறு வகைகளும் கூட புரத உணவின் ஆதாரங்களே. புரதச்சத்து நிறைந்த கருப்பு உளுந்து, வளரும் குழந்தைகளுக்கும், இளம் பெண்களுக்கும் உள்ள தேவையற்ற கொழுப்பைக் கரைக்கும். சார்க்கரை வியாதி, உடல் பருமன் உள்ளவர்களுக்கு கொள்ளு நல்ல பலன் தரும்.

தாவரங்கள் மூலமாக பெறும் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் இவற்றில் கொழுப்பு கிடையாது. மேலும், வைட்டமின் இ, பிற தாது உப்புக்கள், நன்மை தரும் வேதிப்பொருட்களும் இவற்றில் உள்ளன.

பால் பொருள்களிலும் மாமிச உணவுகளிலும் மட்டுமே கொழுப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது. சூடான சோற்றில் நெய் கலந்து உண்பது முன்னோர் வழக்கம். இந்த பாரம்பரிய முறையினை நாமும் கடைப்பிடிப்பது நல்லது. கொழுப்புக்கு பயந்து நமது பாரம்பரிய சத்தான உணவு முறைகளை நாம் கைவிட்டுவிட்டோம்.

சித்த மருத்துவம், பிஞ்சு காய்கறிகளை எடுத்துக்கொள்ள அறிவுறுத்துகிறது. அதில் உள்ள நார்ச்சத்துக்கள் பல்வேறு உடல் உபாதைகளை தடுக்ககூடியவையாக உள்ளன. ‘எல்டிஎல்’ என்று கூறப்படும் கெட்ட கொழுப்பு, நமது இருதயத்திலுள்ள சிறிய ரத்த குழாய்களை பாதித்து மாரடைப்பை ஏற்படுத்தும். இதனைத் தடுக்க அடிக்கடி உணவில் நார்ச்சத்துள்ள கீரைகள், காய்கறிகளை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

குடல் புற்றுநோய், குடல் அரிப்பு நோய் வராமல் தடுப்பதில் நார்சத்துக்கள் முக்கிய பங்காற்றுகின்றன. பழங்களில் கூட நார்சத்து உள்ளது. பழங்களை சாறாகப் பிழிந்து அதனைப் பருகும்போது உடலில் உள்ள சர்க்கரையின் அளவு உடனே அதிகரிக்கக் கூடும்.

இன்று பெருகிவிட்ட நொறுக்கு தீனி மற்றும் இரசாயன பதார்த்தங்கள் கலந்த உணவை உட்கொள்ளும் பழக்கத்தாலும் நார்சத்து உணவுகளை எடுத்துக்கொள்வது குறைந்து விட்டது. நார்சத்துக்கள் பல்வேறு நோய்களை
வரவிடாமல் தடுக்கும் இயற்கை மருந்து ஆகும்.

வைட்டமின்கள், தாது உப்புகளின் முக்கியத்துவத்தை அறிவியல் கூறுவதற்கு முன்னரே நம் முன்னோர் அறிந்திருந்தனர். அவர்கள் கீரைகளை நெய் விட்டு வதக்கி உண்ணச் சொன்ன காரணம், அவற்றில் உள்ள சத்துக்களையும், வேதிப்பொருட்களையும் நம் உடலுக்கு முழுமையாக அளிக்கவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டப்பட்ட அரிசியில் தையமின் எனும் வைட்டமின் பி 1 இழக்கப்படுவதாக நவீன அறிவியல் சொல்கிறது. நம் முன்னோர் அன்றே கைக்குத்தல்அரிசியைப் பயன்படுத்தி நோய்கள் தம்மை நெருங்காமல் காத்துக்கொண்டனர்.வைட்டமின் பி 1 குறைபாட்டால் பெரிபெரி என்ற நோய் ஏற்படும் என்கிறது மருத்துவ அறிவியல்.

வைட்டமின் ஏ நிறைந்த பப்பாளி , கேரட் ஆகிய பொருள்கள் கண் பார்வைக்கு நல்லது என்பது மட்டுமல்ல, மேலும் பல்வேறு நோய்களையும் வரவிடாமல் தடுக்கும். இந்த நோய்த்தொற்றுக் காலத்தில் நமக்கு பெரிய அளவில் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது வைட்டமின் டி நிறைந்த இயற்கை வெயிலே.

இந்த வைட்டமின் டி, நம் உடலில் பாதிக்கப்பட்ட செல்கள் புற்று செல்களாக மாறுவதைத் தடுக்கும் வல்லமை உடையவை. எலும்புகளை வலுப்படுத்தும் தன்மையும் இதற்கு உண்டு.

அசைவ உணவுகளை நூறு டிகிரிக்கு மேல் வறுக்கும்போது ஹைட்ரோ சைக்ளிக் அமின் (ஹெச்.சி.ஏ.) எனும் வேதிப்பொருள் உண்டாகிறது. இந்த வேதிப்பொருள் நம் உடலில் இயற்கையாக உள்ள டிஎன்ஏ-வை சிதைத்து, புற்றுநோயை உண்டாக்கும் என எச்சரிக்கின்றன உலக நல அமைப்புகள். அதனால்தான், அசைவ உணவுகளை அதிக வெப்பநிலையில் சமைக்காமல் குழம்பு போன்ற பக்குவத்தில் சமைத்து உண்டனர் நம் முன்னோர். சோடியம், பொட்டாசியம் குளோரைடு, இரும்பு, துத்தநாகம், செம்பு ஆகிய சத்துகள் நாம் உண்ணும் பழங்கள், கீரைகள், காய்கறிகள், விதைகள் தானிய வகைகள் ஆகியவற்றில் அதிகம் உள்ளன. கீரைகளில் இயற்கையாக உப்பு சத்து இருப்பினும் அவற்றில் உள்ள 'ஆக்ஸலேட்' எனும் வேதிப்பொருள் முழுமையாக உடலில் உட்கிரகிக்கப்படுவதில்லை.

ஆதனால்தான் சமையலில் உப்பு சேர்க்கும் முறை பாரம்பரியமாக இருந்து வருகிறது. எவ்வளவுதான் இரும்பு சத்துள்ள உணவை உண்டாலும், அதனை உட்கிரகிக்க வைட்டமின் சி அவசியம். இதனை அறிந்துதான் முன்னோர் இரும்பு சேர்த்த சித்த மருந்துகளைத் தயாரிக்க எலுமிச்சம்பழச்சாற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு எமது முன்னோர்களின் வாழ்வு என்பது இன்றைய எமது வாழ்வில் பெரும் பாடமாகும். நாம் நவீன வேகத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறோம். அவ்வாறு ஓடுவதால் நமது ஆரோக்கியமான வாழ்வை மறந்து பசிக்கும், சுவைக்கும் ஏற்றவாறு ஏதாவது வயிறை நிறைத்துக் கொள்ள கிடைத்தால் போதும் ஏன்ற மனநிலைக்கு தள்ளப்பட்டு ஆரோக்கியமற்ற சூழலையும், உணவு முறையையும் பழக்கப்படுத்திக் கொண்டோம். எனவே எமதும், எமது தலைமுறையினதும்நலன் கருதி நாமும் பாரம்பரிய, சத்து மிக்க உணவு முறைகளைக் கைக்கொண்டால் நோயில்லாமல் ஆரோக்கியமாக நீண்டநாள் வாழலாம்.

இவ்வாக்கத்திற்கான தகவல் இணையம் மற்றும் எழுத்தாளரின் அனுபவத்தின் மூலமாகவும் பெறப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் விழா – 2023, 2024













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச காணி தொடர்பான சட்டங்களும் பிரதேச செயலக நிர்வாக நடைமுறைகளும்

**திரு. கதிர்காமலிங்கம் மயூரன்**
காணி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.

இயற்கை வளங்களுள் வரையறுக்கப்பட்டதும் வளர்ச்சியடையாததுமான வளமாக நிலம், காணப்படுவதுடன் இதனை அடிப்படையாகக் கொண்டே ஒரு நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள், முதலீடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையினைப் பொறுத்தவரை பொதுவாக நிலத்தினை அரச காணிகள், தனியார் காணிகள் என வகைப்படுத்தப்படுகின்றது. காணிகளினை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு ஏதுவாக காலத்திற்குக் காலம் சட்டங்கள் உருவாக்கப்பட்டும் திருத்தியமைக்கப்பட்டும் வருகின்றது. இதன் அடிப்படையில் அரச காணிகள் தொடர்பாக மாவட்ட ரீதியாக அரசாங்க அதிபரின் கீழ் காணி கடமைகளை மேற்பார்வை செய்து வந்த மாவட்ட காணி உத்தியோகத்தரது வகிபாகம் பிரதேச செயலக நடைமுறை மற்றும் 1992 ம் ஆண்டின் 58ம் இலக்க பிரதேச செயலாளர்களிற்கான தத்துவங்கள் கைமாற்றல் சட்டம் அமுலுக்கு வந்ததுடன் பிரதேச செயலாளர்களிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்டத்தில் பிரதேச செயலாளர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட கடமைகளையும் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளையும் ஆற்றிவருகின்றனர். 1987ம் ஆண்டு அரசியலமைப்பின் 13ம் திருத்த சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து அரச காணிகள் சம்பந்தமான முகாமைத்துவம் மாகாண சபைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மாகாண சபையில் காணி நிர்வாகம் செய்வதற்கு மாகாண காணி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாகாண சபைக்குரிய காணி அதிகாரம் தொடர்பாக அரசியலமைப்பின் 13ம் திருத்த சட்டத்தின் நிரல் 1 இல் 9ம் அட்டவணையின் பின்னிணைப்பு II இல் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

அரச காணிகள் தொடர்பாக காணி அமைச்சின் கீழ் காணி ஆணையாளர் நாயகம், மாகாண காணி ஆணையாளர் ஆகியோரின் வழிகாட்டல், மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்களினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதுடன், அரச காணிகளினை சிறந்த முறையில் நிர்வகித்து முகாமை செய்வதுடன் எதிர்கால அபிவிருத்தி தேவைகளிற்கென பாதுகாத்து பேணும் பொறுப்பு பிரதேச செயலாளர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள விசேட பொறுப்பாகும். இந்நிலையில் பிரதேச செயலகங்களிற்கு இணைப்பு செய்யப்படுகின்ற காணி உத்தியோகத்தர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் காணி வெளிக்கள போதனாசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமை பொறுப்பின் பிரகாரம் அரச காணி தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பனவற்றிற்கு அமைவாக பிரதேச செயலாளர்களிற்கு தொழினுட்ப ஆலோசனைகள், அறிக்கைகளினை செய்ய வேண்டியவர்களாவார்.

அரச காணிகள் என வரைவிலக்கணம் கூறும் போது அரசிற்கு சட்ட ரீதியாக உரிமைஉள்ளஅரசினால்பாரதீனப்படுத்தக்கூடியதும்பாரதீனப்படுத்தப்படுவதுமான காணிகள் அரச காணிகளாகும். கீழ் குறிப்பிடப்படும் காணிகளும் அரச காணிகளாக் கருதப்படும்.

* காணி உரித்து நிர்ணய திணைக்களத்தினால் அரச காணியென பிரகடனம் செய்யபடப்பட்ட காணிகள்
* காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட காணிகள்.
* சகல பொது ஆறுகளினதும், கால்வாய்களினதும் நீரோடைகளினதும் ஒதுக்குகள்.
* நில அளவை திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட நில அளவை வரைபடத்தில் அரச காணி என குறிப்பிடப்பட்ட காணிகள்.
* அரச காணிகள் ஆட்சி மீளப்பெறும் சட்டத்தின் கீழ் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அரசுடமையாக்கப்பட்ட காணிகள்.
* தீவின் சில பகுதிகளில் அமைந்துள்ள சேனைகள், தரிசு நிலங்கள், சதுப்பு நிலங்கள், மற்றும் உரிமை கோராத காணிகள்.
* 33 1/3 வருடங்களிற்கு குறையாது தொடர்ச்சியான ஆட்சியை காட்டாத அல்லது எவராலும் உரிமையும் கோரப்படாததும் உரிமை நிர்ணயம் செய்யப்படாத காணிகளையும் அரச காணியாக கருதலாம்.

தனியார்காணிகளென்னும்போதுகாணி உரித்துநிர்ணயதிணைக்களத்தினால் தனியார் காணிகளாக பிரகடனம் செய்யப்பட்ட காணிகளும் அரசிடமிருந்து விலைக்கு கொள்முதல் செய்யப்பட்ட காணிகளும் தனியார் காணிகளாகும். தற்போது அரச காணிகள் பிரித்து வழங்கலில் பின்வரும் சட்டங்களிற்கு அமையவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. காணி அபிவிருத்தி கட்டளை சட்டம் (Land Development Ordinance)
2. அரச காணி கட்டளைச் சட்டம் (State Land Ordinance)
3. காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டம் (Land Grant Special Provision Act)

**காணி அபிவிருத்தி கட்டளை சட்டம்**

1935 ஆண்டின் 19ம் இலக்க சட்டமாக காணி அபிவிருத்தி கட்டளை சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் கீழ் உழவர் வகுப்பினர், படித்த வாலிபர்/ மகளிர், குறைந்த வருமானமுள்ளோர், கூடிய வருமானமுள்ளோர் வகுதியினருக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தை நோக்கமாக கொண்டும் கிராம விஸ்தரிப்பின் கீழ் குடியிருப்பினை நோக்கமாகக் கொண்டும் மக்களிற்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இச் சட்டமானது அரச காணிகளினை திட்டமிட்ட அடிப்படையில் ஒழுங்குமுறையில் வழங்கி அபிவிருத்தி செய்தல், புதிய குடியேற்றங்களை உருவாக்குதல், காணிப்பயன்பாட்டு முறையினை உருவாக்குதல், காணியற்ற மக்களின் காணித்தேவையை பூர்த்தி செய்தல், சன நெருக்கடி மிக்க சனச் செறிவுள்ள பிரதேச மக்களின் காணித் தேவையை பூர்த்தி செய்தல், உணவுற்பத்தியினைக் கூட்டுதல் மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாத்து வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

மேலும் இச்சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு வரை அரச காணிகளினை 15.06.1995 இற்கு முன்னர் அத்துமீறி பிடித்து அபிவிருத்தி செய்வர்களிற்கு பகுதிநாட் கூட்டம் மூலம் அத்துமீறல் சீரமைக்கப்பட்டு காணி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. காணி ஆணையாளர் நாயகத்தின் 2008/4 சுற்று நிருபத்திற்கு அமைய காணியற்ற நபர்களாக பிரதேச செயலாளரிடம் பதிவு செய்யப்பட்டு காணியற்றோர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களிற்கு காணிக் கச்சேரி மூலம் பிரித்து வழங்கப்படுகின்றது. இதன்படி காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் பிரிவு 19 (2) இன் பிரகாரம் காணிக்குரிய ஆவணமாக பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றன. இவ் அனுமதிப் பத்திரத்தில் உள்ள நிபந்தனைகள் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் போது மேட்டுக் காணியாயின் 1 வருடத்தின் பின்பும், வயல் காணியாயின் 3 வருடத்தின் பின்பும் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தில் பிரிவு 19 (4) இன் கீழ் அதிமேதகு கௌரவ ஜனாதிபதி ஒப்பந்தத்துடன் அளிப்பு தயாரிக்கப்படும். இவ் அளிப்பானது மாவட்ட காணிப்பதிவகத்தில் பதிவு செய்த பின்னர் சேவை கட்டணம் அறவிடப்பட்டு உரிமையாளரிற்கு வழங்கப்படும்.

இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை அனுமதிப்பத்திரகாரரர் மீறுவாராயின் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் பிரிவு 106 தொடக்கம் பிரிவு 118 வரையான நடவடிக்கை மூலம் இரத்து செய்யப்படும். இவ்வாறு இரத்து செய்யப்படும் காணியானது தகுதியான நபரிற்கு காணிக்கச்சேரி நடைமுறை மூலம் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் அல்லது அரச காணி கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில் காணி உரிமையாளர் அல்லது அவரது வாழ்க்கைத்துணை மற்றும் அவர்களது இரத்த உறவினர்கள் இக்காணியில் உரிமை இல்லாது நிர்க்கதியான நிலைக்கு ஆளாகக்கூடாது என்பதாகும். இதன்படியே இச்சட்டத்தில் 3ம் அட்டவணை குறித்துக் காட்டப்பட்டுள்ளதுடன் தற்போது இவ் 3ம் அட்டவணை கீழ் குறிப்பிட்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிள்ளைகள் 4. உடன்பிறந்தோர்
2. பேரப்பிள்ளைகள் 5. மாமா, மாமி
3. பெற்றோர் 6. மருமகன், மருமகள்

**உரிமை வேலைத்திட்டம் (உறுமய வேலைத்திட்டம்)**

தற்போது விவசாய மக்களிற்கும் முன்னுரிமையான மக்களிற்கும் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம், அளிப்புபத்திரம் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு அபிவிருத்தி செய்து ஆட்சி செய்து வரும் காணிகளிற்கு பூரண உரிமையை வழங்கும் பொருட்டு கௌரவ ஜனாதிபதி அவர்களால் 2024 வரவு செலவு திட்டத்தில் உரிமை வேலைத்திட்டம் என்ற முன்மொழிவு முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காககாணி அமைச்சினால்23/2379/615/067ம்இலக்க2023.12.06த்திகதிய 'அரச காணிகளிற்கு பூரண உரிமையை வழங்கும் உரிமை வேலைத்திட்டத்திற்கான அனுமதி கோரல்" என்னும் தலைப்பிலான அமைச்சரவை பத்திரத்திற்கு 2023.12.11 ம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2024 ம் ஆண்டு தொடக்கம் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் பிரிவு 19 (2), 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட காணிகளின் உரிமையை 1947ம் ஆண்டின் 8ம் இலக்க அரச காணி கட்டளை சட்டத்தின் பிரிவு 2இன் கீழ் அதிமேதகு கௌரவ ஜனாதிபதியின் ஒப்பத்துடன் பூரண அளிப்பு தயாரிக்கப்பட்டு மாவட்ட காணிப்பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டு எவ்வித கட்டணமும் அறவீடின்றி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ் பூரண அளிப்பின் மூலம் எவ்வித நிபந்தனைகளும் இன்றி அரச காணிகளின் பூரண உரிமையானது மக்களிற்கு வழங்கப்படுகின்றது.

**அரச காணி கட்டளைச் சட்டம்**

1947 ஆண்டின் 08ம் இலக்க சட்டமாக அரச காணி கட்டளை சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் மூலம் குத்தகை (Lease), பாரதீனப்படுத்தல் (Vesting), கையளிப்பு (Handing Over) போன்ற முறைகள் மூலம் அரச காணிகள் கையுதிர்க்கப்படுகின்றன.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி பெற முடியாதவர்களிற்கும், தனி நபர்கள், கம்பனிகள், சங்கங்கள், என்பவற்றிற்கு வர்த்தக நோக்கம் அல்லது விவசாய நோக்கம் அல்லது கைத்தொழில் நோக்கங்களிற்கும், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றின் தேவைகளிற்கும் மற்றும் மாநகர சபை, நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் எந்த தேவையின் பொருட்டும் அரச காணியானது அரச காணி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் குத்தகையில் வழங்க முடியும்.

உள்ளூராட்சி சபைகள், முப்படைகள், துறைமுக அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபை போன்றவற்றின் தேவைகளிற்காக அரச காணியானது, அரச காணி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 27 (1) இன் கீழ் பாரதீனம் செய்து வழங்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்கள், அமைச்சுக்களின் தேவைக்கு அரச காணியானது அரச காணி கட்டளை சட்டத்தின் காணிக்கட்டளை 224 (1) இன் கீழ் கையளிப்பு செய்து வழங்க முடியும்.

**காணி அளிப்பு சிறப்பு ஏற்பாடுகள் சட்டம்**

1979ம் ஆண்டின் 43ம் இலக்க சட்டமாக காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 1972ம் ஆண்டின் காணி உச்ச வரம்பு சட்டத்தின்கீழ்அரசினால்கையகப்படுத்தப்பட்டுஅரசிற்குவிடுவிக்கப்பட்டகாணிகள் காணியற்ற மக்களிற்கு பிரித்து வழங்கப்பட்டு அளிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.


இதனை விட ஒரு பிரதேசத்தில் காணப்படுகின்ற அரச காணிகள், பொதுத் தேவைக்கு என ஒதுக்கப்பட்ட அரச காணிகள் மற்றும் ஒதுக்கீட்டு காணிகளினை அத்துமீறிப் பிடித்தவர்களினை வெளியேற்றுவதற்காக 1979ம் ஆண்டின் 7ம் இலக்க சட்டமாக அரச காணிகள் ஆட்சி மீளப் பெறும் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியினால் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அத்துமீறல்காரர்கள் வெளியேற்றப்பட்டு அரச காணிகள் பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் ஒரு பிரதேசத்தில் பொது தேவைக்கு காணிகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பொருத்தமான அரசகாணிகள் இல்லாத நிலையில் தனியார் காணிகளை பயன்படுத்த வேண்டிய நிலையில் இக்காணிகளை சுவீகரிப்பு செய்வதற்காக 1950ம் ஆண்டின் 9ம் இலக்க சட்டமாக காணி சுவீகரிப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தனியார் காணிகள், காணி சுவீகரிப்பு செய்யப்பட்டு நட்ட ஈடு வழங்கி அரசுரிமையாக்கப்படும். இதன் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

* காணி உரிமையாளர் அனாதரவான நிலைக்கு ஆளாகக் கூடாது
* குறித்த தேவைக்கு இக்காணி தவிர்ந்த வேறு பொருத்தமான காணிகள் இல்லாது இருத்தல்
* காணி எந்நோக்கத்திற்கு சுவீகரிக்கப்படுகின்றதோ அவ் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும்.
* காணி சுவீகரிக்கப்படுகின்ற திணைக்களம் உரிமையாளரிற்கு நட்ட ஈடு வழங்குவதற்குரிய பணத்தினை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மேற் குறித்த காணிச்சட்டங்கள், சுற்றறிக்கைகள் என்பவனவற்றிற்கு அமைவாக பிரதேச செயலக ரீதியில் சிறந்த முறையில் வினைத்திறனான காணி முகாமைத்துவத்தினை மேற்கொள்வதன் மூலம் மக்களின் காணிப்பிணக்குகளை நிவர்த்தி செய்து எதிர்கால சந்ததியினருக்கு பிணக்குகளற்ற காணி உரிமையை வழங்க முடிவதுடன் பிரதேச நிர்வாக கட்டமைப்பையும் சிறப்பாக கொண்டு செல்ல முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகில் நீர்த்தாரையும் (Water spout)மீன் மழையும்

**திரு. நடேசு சக்திவேல்**

ஆசிரியர், யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.

தெளிகரை, பூநகரி.

எமது சிறுபராயத்தில் இருந்து சிலகாலங்களில் நிலத்தை விட நீர்ப்பரப்புகளில் முகிலுக்கும் நீருக்குமிடையே யானையின் தும்பிக்கை போன்ற வடிவில் அல்லது புனல் வடிவில் குத்தாக முகில் நீர்த்தாரை (water spoout) தோன்றியதை அவதானித்திருப்பீர்கள். இதனை ஊரில் மூத்தோர் மேகத்தால் கடல் நீர் உறிஞ்சப்படுதல் என்று கூறுவார். இதனை காராணை தண்ணீர் இழுக்கிறது என்பர். இவற்றைப் பயணத்தின் போது சில வேளைகளில் சங்குப்பிட்டி பாலத்தை அண்டிய கடற்பரப்பில் அவதானிக்கலாம் அதாவது சுழல் காற்றின் போது கடல் அல்லது பரந்த நீர்பரப்பின் மேற்பரப்பில் இருந்து செங்குத்தான தூண் போன்ற வடிவத்தில் வானை நோக்கி நீர் மேல் எழும்பும் நிகழ்வு முகில் நீர்த்தாரை (water spoout) என்பர். இவ்வாறு கடல் நீர் வானை நோக்கி மேலெழும் போது கடலிலுள்ள உயிரினங்களான மீன்களும் முகில்களினால் இழுக்கப்பட்டு தரைப்பகுதி நோக்கி நகர்ந்து சென்று முகில் சிறு துளியாக மாறி மழையாகப் பொழியும் போது அதனுடன் முகில்களுள் இருந்த மீன்களும் விழுகின்றன. இதனையே மீன் மழை என்பர். இவ்வாறாக முகில் நீர்த்தாரை (water spoout) பற்றியும் அதனால் கிடைக்கும் மீன்மழை பற்றியும் இங்கு கவனம் செலுத்துவோம்.

## சுழல் காற்று (Tornado)

"டொர்னாடொ" என்ற வார்த்தை "ஸ்பானிய" மொழியில் இருந்து வந்தது. இதனை சுழல்காற்று சூரப்புயல். "டவிஸ்டர்" என்று பல்வேறு பெயர்களால் அழைக்கின்றர். இது சூறாவளியின் ஒரு வகையாக இருந்தாலும் சூறாவளியை விட அதிபயங்கரமான அழிவை ஏற்படுத்தக் கூடியது. அதனாலேயே சூறாவளியில் இருந்து இதனை வேறுபடுத்திப் பார்க்கின்றனர். உலகில் ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையான சுழல் காற்றுக்கள் தோன்றும் நாடு ஐக்கிய அமெரிக்காவாகும். அடுத்த நிலையில் அவுஸ்திரேலியாவில் உள்ளது. இவை தவிர சீனா, இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மன், வங்களாதேசம் உட்பட பல நாடுகள் சுழல் காற்றுத்தாக்குதலுக்கு உட்படுகிறது. பொதுவாக வெப்பவலயம் மற்றும் இடைவெப்ப வலயப் பகுதிகளே இதனால் பாதிக்கப்படுகின்றது. எனினும் எமது நாடான இலங்கையிலும் மற்றும் வடபகுதிகளிலும் மிகக்குறைந்த வேகம் கொண்ட சுழல் காற்றுக்களே தோன்றுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் சுழல் காற்றால் ஏற்படும் அழிவுகள் போன்று எமது நாட்டில் ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழல் காற்றின் வகைகள்

உலகில் தோன்றும் சுழல்காற்று அதன் இயல்புகள் தோன்றும் தன்மைக்கு ஏற்ப பலவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை

பல்சுழல் டொர்னாடொ (Multiple vortex)
(பல சுழல் அமைப்புக் கொண்டது)

முகில் நீர்த்தாரை (water spout)
(நீர் நிலைகளில் தோன்றுவது)
நிலப்பகுதி (Land spout)
(நிலப்பகுதிகளில் தோன்றுவது)

ஒத்த சுழற்சிகள் (Smilar Circulation)

குஸ்டொர்னான்டொ (gustnado)
(இடியுடன்கூடிய மழையில் இருந்து தோன்றுவது)

தூசுப்பிசாசு (Dust devil)
(தூசு, குப்பைகளை எடுத்துத் தோன்றுவது)

நெருப்புச் சுழற்சி (Fire whirls)
(காட்டுத்தீக்கு அருகில் தோன்றுபவை)

நீராவிப்பிசாசுகள் (Steam devil)
(சூடான நீர், பாலைவனத்தில் தோன்றுபவை)
மேற்கூறிய வகைப்படுத்தலில் மீன் மழைக்குக் காரணமான முகில் நீர்த்தாரை (Water spout) தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம்.

## முகில் நீர்த்தாரை (Water spout)

இதனை நீர்த்தம்பம் எனவும் அழைப்பர். பெரும்பாலும் வெப்பமண்டலம் மற்றும் மித வெப்பமண்டலப் பகுதிகளில் கடல், ஏனைய நீர்ப்பரப்புகளில் இவ்வகை டொர்னாடோக்கள் தோன்றுகின்றன. அதாவது ஐரோப்பா, மேற்கு ஆசியா, அவுஸ்திரேலியா, கலிபோர்னியா, நியூசிலாந்து, ஐம்பெருவாவிகள், அன்டாட்டிக்கா, இலங்கை, இந்தியாப்பகுதிகளிலும் இவற்றை அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் வடபகுதியில் பருத்தித்துறை என்ற இடத்தில் ஐப்பசி மாதம் 2022 ம் ஆண்டு இவ்வாறான ஒரு Water spout நடைபெற்றது. இதனை விட யாழ்ப்பாணம் பண்ணைக்கடற்பகுதி மற்றும் நவாலி, கேரதீவு பகுதிகளிலும் சிறிய அளவான (Water spout) இடம்பெற்றது. இவை தொடர்ந்தும் இடம்பெறும் நிகழ்வுகளாகும். இவை குறுகிய காலப்பகுதியில் மறைந்துவிடுகின்றது. இது தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிலைத்திருக்குமானால் அது அனர்த்தமாகவும் மாறக்கூடும். எனவே இவை பற்றி அறிந்து இருக்கவேண்டியது அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகில் நீர்த்தாரை (Water spout) தோன்றுவதற்கான காரணங்கள்

வெப்பத்தின் காரணமாக கடல் மற்றும் தரைப்பகுதியிலுள்ள வளி ஆவியாகி மேலெழும்பும் போது அவ்விடத்தில் தாழமுக்கம் ஏற்படுகிறது. அவ்வாறு மேலெழும்பும் காற்று வெப்பமான காற்றாகும். அதேவேளை வானில் இடி முகிலில் இருந்து தாழமுக்கப் பகுதியை நோக்கி குளிர்காற்று கீழிறங்குகிறது. இவ்விரு காற்றுக்களுக்குமிடையில் ஏற்படும் சிக்கலான இடைத்தாக்கங்களால் சுழல் காற்றுத் தோன்றி தூண் போன்ற வடிவில் மேகக்கூட்டம் உருவாகிறது. இவ்வாறு நீர்தம்பம் தோன்றுகின்றது. இரண்டு காற்றுக்களின் வெப்பநிலை சமநிலையடையும் போது நீர்த்தம்பம் அல்லது டொர்னர்டோ மறைந்து விடுகின்றது.

## முகில் நீர்த்தாரையின் பண்புகள்

நிலப்பகுதிகளைவிட நீர்ப்பரப்பில் தோன்றும் சுழல்காற்றுக்கள் பலவீனமானதாக இருந்தாலும் காற்றிடைப்புயலியக்கத்தின் போது வலுவான நீர்த்தாரை நிகழ்வுகள் நிகழ்கின்றன.

பெரும்பாலான நீர்த்தாரைகள் நீரை உறுஞ்சாது அவை தண்ணீர் மீது சிறிய மற்றும் பலவீனமான சுழலும் காற்று தம்பத்தை உருவாக்குகின்றன.

வெப்ப, இடைவெப்ப வலயங்களில் உருவாகின்றது.

அரிதாக நிகழக்கூடிய இந்நிகழ்வுகள் கடற்கரையோரம் வசிக்கும் மக்கள், மீனவர்கள், கடற்பயணிகள், ஆய்வாளர்கள், அவதானித்திருப்பார்கள்.

கடலிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்களை உறுஞ்சி எடுக்கும் தன்மை கொண்டது. அதுவே மழையின் போது கீழே நிலத்தில் விழுகின்றது. இதன் போதே மீன்மழை பொழிகின்றது.

சுழல் காற்று ஒன்றின் விட்டம் 2km வரை அமையும். சுழற்சி வேகம் மணிக்கு 120Km தொடக்கம் 500Km வரை அமையும்.

வட அரைக்கோளத்தில் தாழமுக்க மையத்தில் இடம்சுழியாகவும், தென்னரைக்கோளத்தில் வலஞ்சுழியாகவும் சுழலும்.

இது நகரும் பாதை வழியே அழிவை ஏற்படுத்தக் கூடியது. ஆபத்தானதுமாகும்.

## முகில் நீர்த்தாரையின் வகைகள்

**(Water spout) பொதுவாக பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டுள்ளது. அவை**

டொர்னான்டொ அல்லாதவை (Non tornadic)
டொர்னாடொ (Tornadic)
பனிப்பொழிவு (Snow spout)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டொர்னாடொ அல்லாதவை (Non tornadic)

இவை கடலோர நீரில் நிகழ்கின்றது. மற்றும் இருண்ட தட்டையான அடிப்பகுதி வளரும் வெப்பசலன கோபுரங்களுடன் தொடர்புடையவை. 20 நிமிடங்களுக்கும் குறைவான வாழ்க்கைக் காலத்தைக் கொண்டவை. புஜிட்டா அளவில் EF0 ஐ விட அதிகமாக இது மதிப்பிடப்படவில்லை. அதனால் இதன்தாக்கம் மிகக்குறைவு ஆகவே டொர்னாடொ அல்லாதவை என இதை அழைக்கின்றனர்.

### டொர்னாடொ (Tornadic)

இவ்வகை டொர்னாடொக்கள் மீசோசைக்ளோனில் இருந்து உருவாகின்றது. இது கடுமையான இடியுடன் தொடர்புடைய நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சூறாவளியைப் போன்றது. ஆனால் தண்ணீருக்கு மேலேயே இவ்வகை டொர்னாடொக்கள் தோன்றுகின்றது. பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளது.

### பனிப்பொழிவு (Snow spout)

பனிப்பகுதிகளில் குளிர்காலத்தில் பனிப்பொழிவு (Snow spout) நடைபெறுவதை அவதானிக்கலாம். குளிர்கால (Snow spout) உருவாகுவதற்கு இரண்டு முக்கியமான அளவுகோல்கள் உள்ளன. மிகக் குளிர்ந்த வெப்பநிலை நீரின் மேற்பரப்பில் இருக்க வேண்டும். அது நீரின் மேற்பரப்பில் நீராவி போன்ற மூடுபனியை உருவாக்கும். அளவுக்கு சூடாக இருக்கும். இது பனிப்பொழிவு தோன்றுவதற்கான தன்மையைக் கொண்டிருக்கும்.

இவ்வாறாக உள்ள நீர்த்தாரைகள் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அவை யாவன:

*1551* இல் மால்டாவில் ஏற்பட்ட டொர்னான்டொவால் வலெட்டாவின் கிராண்ட் துறைமுகத்தைத் தாக்கியது. ஏராளமான படகுகள் மூழ்கடிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான உயிர்கள் இழப்பு ஏற்பட்டது.

*1851* இல் சிசிலியில் ஏற்பட்ட டொர்னான்டொவால் மேற்கு சிசிலியில் நிலச்சரிவை உருவாக்கி கடற்கரை மற்றும் கிராமப்புறங்களை நாசமாக்கியது.

கடல்வாழ் உயிரினங்களை இழுத்து எடுத்து முகில்களுடன் கொண்டு சென்று அழிக்கின்றது.

இவ்வாறாக முகில் நீர்த்தாரை பற்றி அடிப்படையான தகவல்களை மேற்கூறியவாறு முன்வைக்க முடிந்தமையால் அதன்மூலம் ஏற்படும் மீன் மழை பற்றிய விடயங்களை இனங்காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் மழை

முகில் நீர்த்தாரை (water spout)புனல் வடிவில் கடல் நீரை உறிஞ்சும் போது அந்நீர்ப்பரப்புகளிலுள்ள உயிரினங்களும் முகில்களால் தூக்கி எடுத்து தரைப்பகுதி நோக்கி நகர்ந்து சென்று அம்முகில் மழையைப் பொழிவிக்கும் போது மீன்களும் விழுகின்றது. இதனையே மீன் மழை என்பர். இவ்வாறான மீன் மழை இலங்கை, இந்தியா போன்ற பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளது. இது பற்றி நோக்குவோம்.

மீன் மழை பற்றிய வரலாற்றை நோக்கினால் முதலாம் நூற்றாண்டில் உரோம இயற்கையியலாளரான பிளினி என்பவர் மீன், தவளை, மழை குறித்துப் பதிவு செய்துள்ளார். 1794 இல் பிரெஞ்சுப் படைவீரர்கள் பிரெஞ்சு நகரத்துக்கு அருகிலுள்ள லலெய்ன் என்ற இடத்தில் மீன்மழையைக் கண்டதாக பதிவு செய்துள்ளார்கள். 2022 இல் ஐக்கிய அமெரிக்காவிலும், 2023 அவுஸ்திரேலியாவிலும் பெரிய அளவில் மீன் மழை பொழிந்தது பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக முகில்நீர்த்தாரை (water spout) இன் செயற்பாடு காரணமாக பரவலாக மீன் மழை பொழிந்துள்ளதை அறியலாம்.

இலங்கையைப் பொறுத்தளவில் பரவலாக மீன்மழை பொழிந்துள்ளது. அதாவது 2012, 2014 இல் சிலாபத்திலும், 2017இல் ஒகி புயலால் யாழ்ப்பாணம் நல்லூரிலும், 2020 இல் மகியங்கனையிலும், 2021 இல் பதுளையிலும் மற்றும் வேறு பல இடங்களிலும் முன்னைய காலங்களிலும் தற்காலங்களிலும் மீன் மழையைக் காணமுடிந்துள்ளது. இதற்கு முகில் நீர்த்தாரை இன் செயற்பாடே காரணமாகும்.

## (Water spout) உருவாக்கமும் மீன்கள் முகில்களால் இழுக்கப்படுதலும்

முகில் நீர்த்தாரையும் மீன் மழையும் எனும் தலைப்பில் டொர்னான்டொ பற்றி சிறிய அறிமுகத்துடன் அந்தவகையில் ஒன்றான முகில் நீர்த்தாரை பற்றியும் அதன் பரம்பல் உருவாகும்முறை, அதன்வகை, பண்புகள் மற்றும் மீன் மழை பற்றியும் சிறு விளக்கத்துடன் அடிப்படையான தகவல்களை மேற்கூறியவாறு முன்வைக்க முடிந்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்:-**

1.en.wikipedia.org> wiki> Tornado

2. www.nationalgeographic.com> enviroment> article

3. Home/ Virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## பனம்பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 21ம் நூற்றாண்டில் ஆசிரியரின் வாண்மை விருத்தி


திரு. பொ. விஜயநாதன்
(MEd, MA - Tamil, BEd, PGDM, DSM)
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி பணிமனை, கிளிநொச்சி வடக்கு


ஓர் ஆசிரியரின் அறிவுப்பின்புலம் ஐந்து பிரதான பகுதிகளைத் தழுவியது. இந்த அறிவுப்பின்னணியில் இருந்தே ஓர் ஆசிரியர் கற்பித்தலுக்காக ஆற்றலை வளர்த்துக் கொள்ள முடியும். இந்தப் பின்னணி அறிவுதான் எந்த வகையான கற்பித்தல் உத்திகளையும் நுட்பங்களையும் கையாளலாம் என்பதை தீர்மானிக்க உதவுகின்றது. இந்தப் பகைப்புலனில் ஓர் ஆசிரியரின் அறிவுத் தொகுதி ஐந்து மையங்களைச் சுற்றிச் சுழல்கின்றது.

**ஆசிரியரின் அறிவுத் தொகுதி**

கல்வியின் விழுமியங்கள் / மூலத்தத்துவங்கள்
பாடப்பரப்பு பற்றிய நிபுணத்துவ அறிவு.
மாணவர்கள் வாழும் சமூகம் குறித்த அறிவு
கல்வித்தொழில்நுட்பம் / கற்பித்தல் உத்திகள் பற்றிய அறிவு
மாணவர் குறித்த அறிவு

வினைத்திறனுள்ள ஓர் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு வழங்கும் முதன்மையான கொடை அறிவும் ஒழுக்கமுமே. இந்த வகையில் ஆசிரியரின் அறிவுப் பின்னணி மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் பானையில் இருந்தால் தான் அகப்பைக்கு வரும் என்பது போல் ஆசிரியர் அறிவு வளமுள்ளவராகவும் அறிவால் வலுவூட்டப்பட்டவராகவும் இருந்தால் தான் மாணவர்கள் அறிவால் வளம் பெறுவர். ஓர் ஆசிரியர் தேர்ந்த வாசிப்பாளராகவும் தேடல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். தனது வீட்டில் ஒரு சிறியளவிலான நூலகமொன்றையேனும் அவர் முகாமை செய்து வரவேண்டும். வீட்டுப்பாதீட்டில் மாதாந்தம் ஒரு சில நூல்களையும் கொள்வனவு செய்பவராக இருக்க வேண்டும்.

**விழுமியம் சார் அறிவு**

மாற்றத்தின் முகவராக செயற்பட வேண்டும் என எண்ணும் ஓர் ஆசிரியர், முதலில் கல்வியின் நோக்கங்கள், விழுமியங்கள் குறித்து தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். கல்வியின் விழுமியங்கள் இன்று விரிவாக முன்வைக்கப்படுகின்றன. காரணம் விழுமியக்கல்வி (Education Based on Values) மங்கிப் போனதால் உலகம் முழுவதும் பாரதூரமான பண்பாட்டுப் பின்னடைவும் ஒழுக்க வீழ்ச்சியும் தலை தூக்கியுள்ளன. அன்றாடம் நாம் தொடர்புசாதனங்களின் மூலம் அறியும் செய்திகளில் அநேகமானவை அற வீழ்ச்சியுடன் தொடர்பானவை.

பாலியல் சீண்டுதல், பாலியல் இலஞ்சம், பாலியல் வல்லுறவு, வன்முறை, கொலை, கொள்ளை, சித்திரவதை, ஏமாற்று, மோசடி, திருட்டு, பௌதீக சமநிலைக்கு ஊறுவிளைவித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடலை மாசுப்படுத்தல், ஆயுத உற்பத்தி, போதைப்பொருள் உற்பத்தி, கடத்தல் பாவனை, பரவலாக்கல் என இத்தகைய அறம்சார்ந்த நெருக்கடிகள் உலகமெங்கும் தலைவிரித்து தாண்டவமாடுகின்றன. அறிவியலும், தொழில்நுட்பமும் மலைக்க வைக்கும் அளவு அதன் உச்சங்களைத் தொட்டுக் கொண்டிருக்கையில் மனித விழுமியங்களும் பெறுமானங்களும் கீழான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. மூளையும் உடலும் வளர்ந்த அளவுக்கு ஆன்மாவும் அறமும் வளரவில்லை. அறிவு வளர்ச்சியடைந்த போதும் பண்பாட்டு முதிர்ச்சி ஏற்படவில்லை. ஆய்வுகள் எல்லை மீறிச் சென்ற வண்ணம் உள்ளன. ஆனால், மனித குலத்தில் அறம் ஓங்கவில்லை. எனவே தான் பண்பாட்டுமையக்கல்வி (Culture Based Education) விழுமியம் சார் கல்வி ( Education Based on Values) இன்றைய கல்வியலாளர்களால் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. கலைத்திட்டமும் (Curriculum) ஆசிரியரின் நடத்தையும் இந்த இலக்கை எட்டும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த வகையில் கல்வியின் மூலதத்துவம் அல்லது விழுமியங்களை இன்றைய கல்வியிலாளர்கள் பின்வருமாறு பட்டியலிடுகின்றனர்.

1. பூகோள சகோதரத்துவம் ( Global Solidarity)
2. மனித கண்ணியம் (Human Dignity)
3. சமூகநீதி (Social Jutice)
4. மானசீகபலம் ( Mental Strength)
5. ஆன்மீக நுண்ணறிவு (Spiritual Intelligence)
6. சூழலுடன் நட்புவை (Eco - friendship)
7. ஒழுக்க வளர்ச்சி (Moral development)
8. சமூக அபிவிருத்தி (Social Development)
9. தன்னம்பிக்கை (Self Confidence)
10. சுயமதிப்பு (Selft easteem)
11. மாற்றத்தினை உள்வாங்குதல் ( Assimilating Change)
12. சுய முன்னேற்றம் ( Self East)
13. கருத்து வேற்றுமையை அங்கீகரித்தல் (Diffrence of opinions)
14. புதிய கண்டுபிடிப்பு (New Discoverise)
15. சமூக சமத்துவம் (Social Equality)
16. கூட்டுடமை (Co - operation)

தாம் வழங்கும் கல்வியின் மூலம் உருவாகப்போகும் பயன்மதிப்புக்கள் (Values) இவை தான் என்பதை ஆசிரியர் விளங்கிக்கொள்பவராயின் அதற்கேற்ப தனது கற்பித்தலையும் முன்மாதிரி நடத்தைகளையும் அவர் உருவாக்கிக் கொள்வார் என்பதில் ஐயமில்லை. இந்த பதினாறு விழுமியங்களையும் நுணுக்கமாக அவதானியுங்கள். இன்று தனி மனிதனும் சமூகமும் ஒட்டுமொத்த உலகமும் வேண்டி நிற்கும் அத்தனை மதிப்புக்களும் அதில் அடங்கியுள்ளமை புலனாகும். மானசீகப்பலம், ஆன்மீக நுண்ணறிவு, தன்னம்பிக்கை, சுயமதிப்பு, சுயமுன்னேற்றம், ஒழுக்க வளர்ச்சி என்பன தனிமனித ஆளுமை வளர்ச்சியில் மிகுந்த செல்வாக்குடையவை. இத்தகைய பயன் மதிப்புக்கள் இன்று இழக்கப்பட்டுள்ளதால் கோடிக்கணக்கான மனிதத் தலைகளைக் காணமுடிகின்றதே ஒழிய, மனித வளங்களைக் காண முடியாதுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வள அபிவிருத்தி என்பது வெறும் கோஷங்களால் அல்லது உடல் ரீதியான பயிற்சிகள் மூலம் அடைய முடியாத இலக்கு என்பதை சமகால அபிவிருத்தி சிந்தனையாளர்கள் உணர்ந்துள்ளனர். எனவே தான் இத்தகைய தனி மனிதனுக்கு அவசியமான விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். சமூக அபிவிருத்தி, மாற்றங்களை உள்வாங்குதல், கருத்து வேற்றுமையை அங்கீகரித்தல், சமூக சமத்துவம் ஆகியன உயர்ந்த சமூக உருவாக்கத்தில் மிகவும் முக்கியமானவை.

அவ்வாறே பூகோள சமத்துவம், மனித கண்ணியம், சூழல் நட்புடமை போன்ற பயன்மதிப்புக்கள் உலகளாவிய ரீதியில் அமைந்திருக்கும் சமாதானத்துக்கும் அவசியமானவை. ஓர் ஆசிரியர் தனிமனித ஆளுமையிலும் சமூக ஆளுமையிலும் செல்வாக்குள்ளவராக இருக்க வேண்டும் என்பதே இதன் மறு அர்த்தம், அப்படியாயின் அவரது சிந்தனையும் செயலும் உதாரணங்களும் தேடல்களும் பேசு பொருளும் மிகவும் உயர்ந்ததாக இருக்கும், இருக்க வேண்டும். ஊர்ப்பிரச்சினைகளும், சில்லறைத்தனமான விடயங்களும் அற்புதமான விவகாரங்களும் அவரது கவனத்தில் குவியாது. பாடசாலையில் சிறு குழுக்களாகவும், முகாம்களாகவும் பிளவுபட்டு அங்கும் தான் சார்ந்திருக்கும் தனிப்பட்ட இயக்க அமைப்பு சார் கருத்துக்களை மாணவர் மத்தியில் திணிப்பதை விட அவரது சிந்தனை விரிவானது, பரந்துபட்டது, உயர்வானது.

பாடசாலைக்கல்வியில் பாடரீதியான மதிப்பெண்களையும், உயர் பெறுபேறுகளையும் பெற ஓர் ஆசிரியர் முடியுமானவரை தியாகத்துடன் உழைப்பார். ஆனால், மாணவர் அடையாவிட்டாலும் பாடசாலையை விட்டு அவன் விடைபெற்றுச் செல்லும் போது மேலே குறிப்பிட்ட விழுமியங்களால் புடம் போட்டவனாக அவன் வெளியேறிச் சென்றால் அவன் தனக்கும் தான் வாழும் சமூகத்திற்கும் பயனுள்ளவனாக இருப்பான். அதில் எத்தகைய சந்தேகமுமில்லை. ஆகக்குறைந்தது அவன் சமூகத்திற்கும் பூகோளத்திற்கும் தீங்கிழைக்காதவனாகவேனும் இருப்பான். கல்வியின் இந்த மகத்தான குறிக்கோள்களையும் விழுமியங்களையும் அறியாத, அறிந்தும் கணக்கில் எடுக்காத வெறும் தகவல்களை மாணவர் மூளையில் திணிக்கின்ற ஓர் ஆசிரியர் தனது பணியை சரியாகச் செய்ய முடியாது.

**கற்பிக்கும் பாடப்பரப்பில் நிபுணத்துவ அறிவு**

ஓர் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் முதன்மையான பணி அவர் நன்றாகக் கற்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும் என்பது தான். அவ்வாறாயின் தான் கற்பிக்கும் விடயத்தில் அவர் நிபுணத்துவ அல்லது துறைசார் அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். தனது பாடத்தில் அவர் கொண்டிருக்க வேண்டிய அத்துப்படியான அறிவையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். நல்ல ஆசிரியராக இருப்பதற்கு நிபுணத்துவ பலம் (Expert power) மிகவும் முக்கியமானது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சமயம், அரசியல், பொருளியல், புவியியல், ஆகிய எந்தப் பாடமாகவேனும் (Subject) இருக்கலாம். அந்தக் குறிப்பிட்ட பாடப்பரப்பில் ஆழமான பரந்துபட்ட அறிவு ஓர் ஆசிரியருக்கு அவசியம்.

இந்த நிபுணத்துவ அறிவை ஓர் ஆசிரியர் வளர்த்துக்கொள்வது எவ்வாறு? குறிப்பிட்ட பாடம் தொடர்பில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடநூல்கள் மட்டும் இந்த அறிவை வழங்கி விடாது. மாறாக அந்தப் பாடம் தொடர்பான பிற நூல்களையும் வாங்கிப் படிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தேர்ந்த வாசிப்பாளராகவும் அவர் இருக்க வேண்டும். உயர் தகைமையுள்ள ஆசிரியரின் முதன்மையான பண்பு அவர் ஒரு மாணவராகவும் இருப்பார். புதிய புதிய விடயங்களைத் தேடிக்கற்பதில் தீராத ஆர்வமுள்ளவராக இருப்பார். தனது அறிவுத்தளத்தை (Knowledge) விரிபுபடுத்திக்கொள்வார். வாழ்நாள் நீடித்த (Life long) மாணவராகவே அவர் விளங்குவார். குறிப்பிட்ட பாடத்தில் ஆர்வமில்லாத மாணவர்களையும் ஆர்வமூட்டக்கூடியவராக இத்தகைய ஆசிரியரால் தான் இருக்க முடியும்.

A Good teacher is a consumer of knowledge என்பர். எப்போதும் புதிய அறிவையும் அணுகுமுறையையும் தேடிக்கொண்டிருப்பவர் தான் காலத்தை வென்று வாழலாம். சுயமாகவும் தொழில் ரீதியாகவும் தன்னை வளர்த்துக்கொள்ள இந்த அறிவுப் பின்னணி அவசியம். ஒருவர் பாடப்பரப்பில் நிபுணத்துவ அறிவைப் பெற்றுள்ளார் என்பதன் அர்த்தம் அக்குறிப்பிட்ட பாடம் குறித்து மிக ஆழமானதும் விரிவானதுமான அறிவைக் கொண்டுள்ளார் என்பது மட்டுமல்ல மாறாக அந்தப் பாடம் ஏனைய பாடப்பரப்புடன் கொண்டுள்ள தொடர்பையும் அடுத்த பாடங்கள் பற்றியும் அவர் அறிந்திருக்க வேண்டும்.

இன்றைய உலகில் கல்வியியலாளர்கள் குறிப்பிடுவது போன்று ஒரு துறையில் மிகவும் ஆழமான அறிவு பெற்ற ஒருவர் ஏனைய புலன்களில் பூச்சிய அறிவைக் கொண்டிருந்தால் அவரால் ஒருபோதும் நல்ல புத்தி ஜீவியாக கல்விமானாக இருக்க முடியாது. பிரபல அமெரிக்க ஊடகவியலாளரும் ஆய்வாளருமான நோம் சொம்ஸ்கி குறிப்பிடுவது போல ஆசிரியரும் ஒரு அறிவு ஜீவி எனில், அதற்கான பரந்துபட்ட ஆற்றலையும் அறிவையும் அவர் கட்டியெழுப்ப வேண்டும். பாடசாலைக்கல்வியின் பாட அலகுகள் முழு உலக அளவிலா அறிவையும் வழங்கும் நோக்கம் கொண்டிருப்பினும் எல்லா விடயங்களையும் பாடப்பரப்பில் உள்ளடங்குவது சாத்தியமில்லை. ஏனெனில் முறைசார் கல்வி பல மணித்தியாலங்களால் அல்லது சில வருடங்களால் வரையறை செய்யப்பட்டுள்ளது.

எனவே ஒரு குறிப்பிட்ட பாடம் தொடர்பில் ஆசிரியர் பெற்றிருக்கும் பாட நூற் கல்விக்கு அப்பால் அதே விடயத்தில் உலகளாவிய பரந்த அறிவு அவருக்கு அவசியம். அப்போது தான் அவரால் அறிவை இற்றைப்படுத்த முடியும். தனது துறையில் இற்றைப்படுத்தப்பட்ட (uppdated) அறிவைக் கொண்டிராத எவரும் சமகாலத்திற்கு வெளியேதான் வாழ நேரிடும். எந்தவொரு தொழின்மையாலும் இது புறக்கணிக்க முடியாத ஒரு யதார்த்தமாக மாறியுள்ளது. உதாரணமாக வரலாறு கற்பிக்கும் ஓர் ஆசிரியர் அமைச்சினால் வழங்கப்படும் பாடநூலில் ஆழ்ந்த புலமையும் நிபுணத்துவமும் பெற்றிருப்பதோடு அதற்கு வெளியிலுள்ள வரலாற்று அறிவுத்தொகுதியையும் உள்வாங்கி இருக்க வேண்டும். இதன் மூலம் இரு நல்ல விளைவுகள் ஏற்படும். முதலாவது மாணவர்கள் உலகளாவிய ரீதியில் அல்லது பாடப்பரப்பிற்கு வெளியில் கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியரால் பதிலளிக்க முடியுமான ஆற்றலையும் உள்ளூட்டத்தையும் (Potentiaty) கட்டியெழுப்பலாம். இரண்டாவது மாணவர்கள் மத்தியில் கற்றல் தூண்டுதலை வழங்குவதோடு கற்பித்தலில் அவர்களை வெகுவாக ஈர்க்கவும் முடியும்.

பாடப்பரப்பிற்கு வெளியில் எதுவும் தெரியாத ஆசிரியர்கள் பற்றி மாணவர்கள் கொள்ளும் மனப்பதிவு குறித்து paul ramsden என்பவர் மேற்கொண்ட ஆய்வுகள் முக்கியமானவை. பெரும்பாலான இத்தகைய ஆசிரியர்கள் பற்றிய எதிர் Negative மனப்பதிவுகளே மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் நிலவுகின்றன. தனது பாடப்பரப்பில் அத்தனை அம்சங்கள் குறித்தும் அத்துப்படியான அறிவு ஆசிரியரிடம் இருந்தாலும் அவரை "ஒன்றும் தெரியாதவராகவே" மாணவர்கள் கருதுகின்றார்கள். வகுப்பறையில் தமிழ் ஆசிரியரிடம் "தமிழ் அரிச்சுவட்டில் உள்ள எழுத்துக்கள் எத்தனை? என்று மாணவர் எழுப்பிய கேள்விக்கு அதை கணித ஆசிரியரிடம் தான் கேட்க வேண்டும் என்பது போலவே பதில் வரும்.

தனது பாடம் குறித்த கலைத்திட்டத்திற்கு ஒப்பான அறிவு ஆசிரியர்களுக்கு கிடைக்கும் போது இரு நல்ல விளைவுகள் ஏற்பட முடியும் எனக் குறிப்பிட்டோம். அது போன்ற அந்த அறிவுப் பின்னணி இல்லாதபோது இரு தீய விளைவுகளும் ஏற்படலாம். முதலாவது மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எப்போதும் தெரியாது என்று ஆசிரியர் பதிலளிக்கும் போது மாணவர்களின் கற்றல் ஆர்வம் குறைவதோடு, ஆசிரியர் மீதான மாணவர்களின் நம்பிக்கையும் சிதைந்து விடும். இது கற்றலை மட்டுமல்ல கற்பித்தலையும் பாதிக்கும். ஷாட்நாட்டுக் கருத்தொன்று இப்படி அமைந்துள்ளது.

A Ggood Teacher should answer all Questions even if they are stupid மடத்தனமான கேள்விகளை மாணவர்கள் எழுப்பும்போது கூட ஆசிரியர் அதற்கு நுணுக்கமாக பதிலளிக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியர் மாணவர் உறவு நெருக்கமாகும். கேள்வி கேட்பது அவன் சிந்திக்கின்றான் என்பதன் அடையாளம். எனவே அதற்குப் பதிலளிக்கும் அறிவுத் திறனும் அறிவு முதிர்ச்சியும் ஆசிரியருக்கு அவசியம்.

அதி திறமையான மாணவர்களை எதிர்கொள்ளும் ஆசிரியர்கள் தமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பொது அறிவை கணிசமானளவு வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் நல்ல ஆசிரியராக மிளிர முடியும்.

**மாணவர் குறித்த அறிவு**

கற்பிக்கும் ஆசிரியருக்கு மாணவர் பற்றிய முழு அறிவு அவசியம் . நீ எதைப் பேசினாலும் பேசப்படுகின்றவனின் விளங்கும் ஆற்றலுக்கேற்ப பேசு என்பது ஒரு கல்வியியல் உண்மை. மாணவனின் அறிவுத் தரத்திற்கேற்பவே ஆசிரியர் தனது கற்பித்தலை முன் வைக்க வேண்டும். அதற்கு முன்பாக மாணவனின் அடிப்படை உடலியல், உளவியல் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

ஒழுக்க வளர்ச்சி
நுண்ணறிவு வளர்ச்சி
ஆன்மீக வளர்ச்சி
மனவெழுச்சி வளர்ச்சி
மொழி வளர்ச்சி

என்பதையும் கண்காணிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்கள் கற்கும் மனோ நிலையில் தான் உள்ளனரா என்பதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். இந்த வகை அறிவையும் வழிகாட்டல்களையும் ஆசிரியருக்கு வழங்கவே இன்று கல்வி உளவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Educational psychogy) தனித்துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. அன்றாடம் புதிய புதிய அறிக்கைக் கையளிப்புடன் பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளையும் அது தந்த வண்ணமுள்ளது.

கல்வி உளவியல் இன்று பல்வேறு நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்றது. கணிசமான ஆசிரியர்கள் அதனைப் பயில்கின்றனர். ஆயினும் இத்தகைய ஆசிரியர்களின் உற்பத்தித்திறன் (Productivity) அதிகரிக்கவில்லை. அல்லது வினைத்திறன் உயரவில்லை. அதற்கு இரு காரணங்கள் இருக்கக்கூடும். இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் ஆகியன கல்வியில் வழங்கும் பட்டப்படிப்பு டிப்ளோமா கற்கை நெறி எனும் இந்தப் பாடம் மேற்கத்தைய கொள்கையும் கோட்பாடுகளையுமே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. எமது கீழைத்தேய கல்விப் பாரம்பரியங்கள், வகுப்பறைத் தேவைகளுக்கேற்ப அவற்றை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பது கற்பிக்கப்படுவதில்லை. அதற்குரிய விசேட வழிகாட்டல்கள் எதுவும் முன்வைக்கப்படுவதில்லை.

இத்தகைய பாடநெறியைத் (Course) தொடரும் ஆசிரியர்களின் மனப்பாங்கும் அதிலிருந்து நடைமுறைப்பயன்பாடுகளை பெறுவதற்கு சாதகமானதாக இல்லை. ஏனெனில் அநேகமான ஆசிரியர்கள் சம்பள உயர்வை இலக்கு வைத்தே இந்தக் கற்கையைப் பூர்த்தி செய்கின்றனர். சான்றிதழ் certificate பெறும் ஆர்வமேலீட்டினால் இக்கற்கைக்கு உந்தப்படுகின்றனரே ஒழிய உண்மையான தேடலும் அக்கறையும் அவர்களிடம் இருப்பதில்லை. இதனால் கோட்பாட்டுத்தனமான அறிவை விரிவுரையாளர்களிடமும், குறிப்புப் புத்தகங்களிடமும் Modules பெறும் பல ஆசிரியர்கள் பரீட்சையோடு அவற்றை மறந்து விடுகின்றனர். இந்நிலைமை நீடிக்கும் வரை மாணவர்களையும் மாணவிகளையும் ஆசிரியரால் மிகச் சரியாக அணுக முடியாமையாலேயே போய் விடும். மாணவர் உளவியலைப் புரிந்து கொள்ளாத இத்தகைய ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கின்றனர். இது தொடர்பான பல சம்பவங்கள் பல பாடசாலைகளில் நடந்துள்ளன.

மாணவர் பற்றிய அறிவு என்பது வினைத்திறனுள்ள ஓர் ஆசிரியரின் மிக முக்கிய மூலப்பொருள் Inputs எனலாம். இது உளவியலில் மிகவும் விரிவானது. ஒவ்வொரு நாளும் இது குறித்த புத்தகம் புது ஆய்வுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. ஒரு குழந்தையின் வளர்ச்சி உளவியலிலே Development psychology இதில் முதன்மையானது. ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து ஒவ்வொரு வயதுப் பருவத்திலும் எத்தகைய இயல்பு நிலையையும் பண்புகளையும் உள்வாங்கிச் செல்கின்றது. அந்த ஒவ்வொரு வயதுப் பருவத்திலும் அதன் உளவியல் தேவைகள் என்ன? எந்த வகையான பிரச்சினைகளை அது கடந்து செல்கின்றது? அல்லது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றது என்பது குறித்து ஆசிரியர் கண்டிப்பாக அறிந்து வைத்திருக்க வேண்டும். இது அவரது கற்பித்தல் திறனிலும் வகுப்பறை நடத்தைகளிலும் பெருத்த செல்வாக்குள்ளதை மனங்கொள்ள வேண்டும். ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்கோளங்கள் பின்வரும் பரிமாணங்களில் அமைகின்றது. மேற்பொந்த ஒவ்வொரு வளர்ச்சி நிலைகளும் ஒவ்வொரு வயதிலும் எதிர்பார்க்கப்படும் ஒரு சராசரிப் Average பரிமாணம் உள்ளது. அதில் குறைபாடு இருந்தால் அதை அசாதாரண அல்லது வளர்ச்சிக்குறைபாடு Development Disoder என்பர்.

அதேபோன்று மாணவர்களிடையே வளர்ச்சி நிலைகளில் Indiudual differences என்பர் உளவியலாளர்கள். மெல்லக் கற்போர், கற்றல் குறைபாடுடையோர், மீத்திறன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் எதிர்த்து நிற்கும் மாணவர்கள் Odd என்று மாணவர் மாணவர்களிடையே உள்ள பல்வகைத்தன்மைகளைப் புரிந்து கொள்ள ஆசிரியர்களுக்கு இந்த பின்னணி மிகவும் இன்றியமையாததது.

மாணவர்களின் இவ்வளர்ச்சி நிலைகளோடு அவர்களது உளவியல் தேவைகளுக்கும் தொடர்புள்ளது. எனவே வளர்ச்சி நிலைகளை நுணுக்கமாக அவதானிக்க வேண்டிய ஆசிரியர்கள் வீட்டிலும் வகுப்பறையிலும் மாணவர்களது அடிப்படையான உளவியல் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றனவா என்பதையும் சற்று கண்காணித்து வர வேண்டும். பாதுகாப்புத் தேவை. அன்புத்தேவை. பராமரிப்புத்தேவை. அங்கீகரிப்புத்தேவை. சமூக அந்தஸ்து தேவை. சுயமதிப்புத் தேவை என்பன வளர்ந்தோர் போன்று எல்லாப் பிள்ளைகளுக்கும் அடிப்படையான தேவைகளாகும். இவற்றை வீட்டில் பெற்றோர் நிறைவு செய்வது போன்று வகுப்பறையில் ஆசிரியர்கள் பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். ஒரு பிள்ளையின் இரண்டாவது பெற்றோர் ஆசிரியர் என்று இதைத்தான். கல்வியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

மாணவர்களிடம் காணப்படும் கற்றல் குறைபாடுகளை இனம்காண்பதிலும் ஆசிரியர் பங்கே முதன்மையானது. ஏனைய மாணவர்களுடன் பழகும் தன்மை. ஒதுங்கும் மனப்பான்மை. உச்சரிப்பில் குறைபாடு. விளங்கும் தன்மையில் தாமதம். தகவல்களை ஒழுங்குபடுத்துவதில் சிரமம் போன்ற கற்றல் குறைபாடுகளை அடிப்படையில் ஆசிரியர்களே இனம் காணல் வேண்டும். ஆகவே ஒரு ஆசிரியர் மாணவர் குறித்து மூன்று அடிப்படை அறிவைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவது மாணவர்களின் வளர்ச்சி நிலைமைகள் Development stages இரண்டாவது வளர்ச்சிக் குறைபாடுகள் அல்லது ஒழுங்கீனங்கள் Development disorders மூன்றாவது கற்றல் குறைபாடுகள் Learning Disabilities.

**மாணவர் வாழும் சமூகம் குறித்த அறிவு**

தனது வகுப்பறையில் கற்கும் மாணவர்கள் சார்ந்துள்ள அல்லது வாழ்கின்ற சமூகம் குறித்த அறிவு ஓர் ஆசிரியருக்கு மிகவும் இன்றியமையாதது. பாடசாலை என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடி என்பது போல் சமூகம் என்பது பாடசாலையின் கண்ணாடியாகவே உள்ளது. இந்த இரட்டைத் தெறிப்பு நிலையை Reflection ஆசிரியர் நன்கு விளங்கியிருக்க வேண்டும்.

மாணவர்களின் வகுப்பறை நடத்தைகளின் சமூக விசைகள், சூழலின் தாக்கம் மிகவும் வலிமையானது. ஒருவரது ஆளுமையில் சுற்றுச்சூழல் பரம்பரைக் காரணிகளை விட செல்வாக்குள்ளது. இதை இன்றைய உளவியலாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். தனிமனித ஆளுமையில் சமூக ஆளுமை ஏதோ ஒரு வகையில் பிரதிபலிப்பதை தவிர்க்க முடியாது. அந்த வகையில் சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களான அரசியல், கலாசாரம், ஆன்மீகம், வீடு, குடும்பம், சுகாதார அமைப்பு, உட்குழுக்கள், சமூகப் படிநிலை என்பன குறித்து ஆசிரியர் ஒரு பின்னணி அறிவைக் கொண்டிருப்பது அவசியம்.

மாணவர்களின் கல்வி ஆர்வத்திலும் கற்றல் செயற்பாட்டிலும் அவர்கள் சார்ந்துள்ள குடும்பம், அயலவர். குழுக்கள் என்பன எவ்வாறு தாக்கம் செலுத்த முடியும் என்பதை ஆசிரியர் உள்வாங்கிக் கொள்ள வேண்டுமாயின் அவருக்கு குறிப்பிட்ட சமூக அமைப்பின் சமகால செல்நெறி பற்றிய பின்னணி அறிவு தேவை. வகுப்பறையிலுள்ள 40 மாணவர்களும் ஒரே வகையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார, ஆன்மீக, பொருளாதார சூழலிலிருந்து வருவதில்லை. வேறுபட்ட சூழ்நிலைகளிலிருந்தே வகுப்பறையில் அவர்கள் அணி திரள்கின்றனர். இந்தச் சூழல் வேறுபாட்டை ஆசிரியர் புரிந்துகொள்ளல் மிகவும் அவசியம். இந்தப் புரிதலை அடிப்படையாக வைத்தே கற்பித்தல் செயன்முறையில் தேவையான மாற்றங்களை ஆசிரியரால் கொண்டுவர முடியும்.

சமுதாயம் பற்றிய பின்னணி அறிவு ஏன் அவசியம் என்பதற்கான இரண்டாவது விடை, ஆசிரியர் பாடசாலை மதில்களுக்குள் சுருங்கிச் செயல்படுபவரல்லர். அவரது சிந்தனை பாடசாலைக் கட்டங்களுக்கு வெளியிலும் விசாலிக்க வேண்டும். பாடசாலையை மேம்படுத்துவதில் சமூகத்தை ஒரு வளமாகப் பயன்படுத்த ஆசிரியர் முன்வர வேண்டும்.

கல்வி என்பது வகுப்பறைச் செயற்பாடுகளுக்குள் மட்டும் முடக்கப்படுவதில்லை. வெளியே உள்ள சமூக அமைப்புடனும் கல்வி இணைந்துள்ளது. மாணவர்களின் கல்வியை மேம்படுத்த சமூக அமைப்புடனும் கல்வி இணைந்துள்ளது. மாணவர்களின் கல்வியை மேம்படுத்த சமூக நிறுவனங்களின் உதவியையும் ஆதரவையும் ஆசிரியர்கள் நாட வேண்டும். சமூகத்திலிருந்து அர்ப்பணிப்பையும் கொண்டமையும். எதிர்பார்க்க வேண்டும். வெளி உலகத்தையும் சமூகத்தையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். சமூகம் குறித்த ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும்.

சமூகப் பாடசாலைபற்றி கொண்டுள்ள மனப்பாங்கு என்ன? சமூகத்திலுள்ள குறைநிறைகள் எவை? சமுதாயத்தில் கல்விக்குள்ள வசதிகள் எத்தகையன? சமுதாயத்தில் எத்தகைய வளங்கள் காணப்படுகின்றன? சமூகம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகள் எவை? அவற்றின் அடியாதாரங்கள் என்ன? இவை குறித்த தெளிவான புரிதல் ஆசிரியருக்கு அவசியம். அப்போது தான் அவரால் உயிர்ப்பு மிக்க ஆசிரியராக விளங்கலாம்.

பொதுவாக கிராமப்புறங்கள், போக்குவரத்து வசதிகளற்ற தூர இடங்கள், கடும் வறுமைக்குட்பட்ட பிரதேசங்கள், மதுபாவனை, போதைவஸ்துப்பாவனை உள்ள இடங்கள், கலாசார சீர்குலைவுகள் நிரம்பிய இடங்கள், ஊடகங்களின் எதிர்பாடான தாக்கமுள்ள இடங்கள், அதீத நகரமயமாக்கப்பட்ட பகுதிகள், அரசியல் அடக்கு முறையும் ஒடுக்கு முறையும் தலைவிரித்தாடும் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி ஆர்வம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே இருக்கும் என்பதை ஆய்வுகள் நிறுவியுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் வகுப்பறையில் உள்ளனர் என்பதை ஆசிரியர் அறிந்திருப்பது அவசியம். அப்போது தான் அதற்கேற்ற கற்றல் உத்திகளையும் நுட்பங்களையும் மாற்றியமைக்க முடியும்.

சமூகம் என்பதில் குடும்ப நிறுவனத்தின் பங்கு மிகவும் முதன்மையானது. பிள்ளைகளை மொழிமயமாக்கல், சமூகமயமாக்கல், பண்பாட்டுமயமாக்கல், அரசியல் மயமாக்கல் போன்ற கல்விக் கையளிப்பு செயற்பாடுகளில் பாடசாலையை விட குடும்பத்தின் பங்கே முதன்மையானது. ஒரு மாணவன் வருடாந்தம் பாடசாலைக்குச் செல்லும் நாட்கள் வெறும் 48% ஆனவையே. ஏனையவை வீட்டிலேயே கழிக்கின்றன. எனவே, பெற்றோரின் வகை மாதிரிகளும் பிள்ளைகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் மிகவும் செல்வாக்குள்ளது. ஆசிரியர் எவ்வளவு திறமையானவராக இருப்பினும், சமூகம் மாணவர்களது கற்றல் நடத்தைகளில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை அவர் புரிந்துகொள்ளாவிடில், மாணவர்களின் உண்மையான பிரச்சினைகளை அவரால் விளங்கிக் கொள்ள முடியாது. கற்றலை மேம்படுத்தவும் முடியாது.

1. கற்றல் வளர்ச்சி
2. இடைவிலகல்
3. வகுப்பறை கற்றலுக்கு இடையூறு விளைவித்தல்
4. அடுத்த மாணவர்களை வம்புக்கு இழுத்தல்
5. பாடசாலைச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்
6. ஆசிரியரை எதிர்த்து நிற்றல்

போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு மாணவர் வாழும் சமூக அமைப்பும் பங்களிக்கின்றது. கல்வி மீதான இத்தகைய சமூகத்தின் தாக்கம் குறித்து இன்று பல்வேறு வகையான ஆய்வுகள் நடைபெறுகின்றன. அது தனியான அறிவுப்புலமாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றது. கல்விச்சமூகவியல் (Education sociology) எனப்படும் இப்புலத்தில், கல்வியியலாளர்கள் சமூக அமைப்பின் வகை மாதிரிகள், செல்நெறிகள் மாணவர்களது கல்வியை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை ஆய்வு செய்து பல கருதுகோள்களையும் கோட்பாடுகளையும் முன்வைத்துள்ளனர்.

நல்லாசிரியருக்கு இந்த அறிவுப் பின்னணி மிகவும் இன்றியமையாதது. சமூக ஊடகங்கள் மூலமும், நேரடியான களப்பயணங்கள், அவதானங்கள், ஆய்வுகள் மூலமும் ஆசிரியர் இப்பின்னணி அறிவை வளர்த்துக்கொள்ளலாம். இது வகுப்பறையை முகாமை செய்வதற்கும் மாணவர்களை நன்கு கையாள்வதற்கும் பெரிதும் உதவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுப்பறைச்சூழலும் மாணவர் உளநலனும்

**திரு. நாகராஜா கஜீதரன்**
**வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஆசிரியர்**
**கிளி/ இரணைதீவு றோ.க.த.க பாடசாலை.**

புதிய கல்விச் சித்தாந்தத்திலே அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகக் கருதப்படுவது "இன்றைய மாணவர்களே நாளை சமுதாயத்தை கட்டியெழுப்பும் தலைவர்கள் என்பதாகும்" ஆகவே தான் மாணவரது உள நலம் பேணப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டதுடன் அதனூடாக நற்சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உளவியல் துறையானது மனித, விலங்கு நடத்தை பற்றி ஆராய்கின்றது. இதன் ஒரு பெரும் பிரிவாக கல்வி உளவியல் காணப்படுகின்றது. இவற்றுள் மாணவரது உளநலனில் தாக்கத்தைச் செலுத்துகின்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

**மாணவரது உளநலனில் தாக்கம் செலுத்தும் காரணிகள்**

1. உளவியல் அம்சங்கள்
2. குடும்பம்
3. பாடசாலை
4. சகபாடிகள்
5. பொருளாதாரம்
6. கலாச்சாரம்
7. ஊடகங்கள்
8. எதிர்பாராத நிகழ்வுகள்

மேலே குறிப்பிட்ட விடயத்தினுள் மாணவரது உளநலனில் செல்வாக்குப் பெறும் பிரதான காரணியாக அமையும் பாடசாலைச் சூழலினுள் உள்ளடங்கும் வகுப்பறை மற்றும் வகுப்பறைச் சூழல் தொடர்பாகவுமே இங்கு ஆழமாக நோக்கவுள்ளோம். பிறக்கும் குழந்தை வளரும் காலப்பகுதியில் அதனது முதலாவது சமூகமயமாக்கல் நிறுவனம் வீடாகும். இங்கு பெற்றோர், சகோதரர், பெற்றோருடன் இணைந்து வாழும் உறவினர்கள் மூலமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பல விடயங்களை கற்றுக் கொள்கின்றார்கள். வீட்டினை அடுத்து அமையும் முக்கியமான சமூகமயமாக்கல் நிறுவனம் பாடசாலை ஆகும். இங்கு ஆசிரியர்களிடமிருந்து பல்வேறு சமூக பின்னணியைக் கொண்ட சூழலில் இருந்து வரும் சகபாடிகளிடமிருந்தும் பல்வேறு விடயங்களை கற்றுக் கொள்கின்றார்கள்.

எனவே இத்தகைய சிறப்புமிக்க பாடசாலையினுடைய அகச்சூழல் என்பது முக்கியமானதாகும். அந்த வகையில் பாடசாலையின் ஒரு மாதிரி நுண் அலகாக விளங்குவது வகுப்பறையாகும். இதனைப் பின்வருமாறு காட்டலாம். ஆகவே இத்தகைய வகுப்பறைச் சூழலிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களது உள நலமானது மிகவும் முக்கியமானதொரு எண்ணக்கருவாகவே உள்ளது. உளநலம் என்பதில் மாணவர்களின் உணர்வுகள் அதிகரித்தோ, குறைவாகவோ இல்லாது உளச் சமநிலையடைந்து கற்றலை மேற்கொள்ளும் நிலையைச் சுட்டிக்காட்ட முடியும். மகிழ்ச்சிகரமான நிலைமை உளநலத்தில் விருத்தி செய்யக்கூடியதாகவும் பாதுகாக்க கூடியதாகவும் வகுப்பறை மற்றும் வகுப்பறைச் சுழல் காணப்பட வேண்டும்.

"ஒரு பாடசாலை திறக்கப்படுகின்ற வேளை பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன." அந்த வகையில் கற்றல் - கற்பித்தல் சார் விடயங்கள் உளநலத்துடன் தொடர்புடையதாக காணப்பட வேண்டும். வகுப்பறையால் உளநலத்தை பேணுவதற்காக இலங்கையில் 1992ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தில் "மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல்" எனும் அம்சம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதை ஆரம்பக்கல்வி, கற்பித்தல் செயற்பாடுகள், விளையாட்டுகள் என்பவற்றை உள்ளடக்கி சுறுசுறுப்பும் செயலூக்கமும் கொண்ட வகுப்பறையானது செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கமைவாக மாணவர்கள் விருப்புடனும் மகிழ்வுடனும் தங்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவர். இதனால் மாணவர்களது உளநலமானது சிறந்த முறையில் பேணப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

வகுப்பறைச் சுழலானது மாணவரது உளநலத்தை வளமாக்கும் கருவியாக காணப்பட வேண்டும். இந்நிலையில் வகுப்பறைச்சூழல், வகுப்பறையின் அமைவு, ஆசிரிய மாணவர்களின் இடைவினை, மாணவர்களின் எண்ணிக்கை, கற்றல் கற்பித்தல் முறை, மாணவரின் தனியாள் வேறுபாடுகள் போன்ற பல காரணிகள் மாணவர்களின் உளநலனை பாதிப்பதாக காணப்படுகின்றன.

வகுப்பறைச் சுழலமைவை எடுத்துக் கொண்டால் வகுப்பறையானது போதிய ஒளியுடையதாகவும் சுத்தமானதாகவும் அமைவது அவசியமாகும். அதே சமயம் காற்றோட்டமுடையதாகவும் வெப்பமற்றதாகவும் அமையப்பெற வேண்டும். வெப்பமான சூழல் மாணவர்களுக்கு வியர்வையைக் கூட்டி ஏனைய மாணவர்களிடையே வன்போக்கு நடத்தையையும் அதிகரிக்கும். அதே சமயம் மனச்சோர்வு, தலையிடி, என்பவற்றையும் உருவாக்கி சுறுசுறுப்பைக் குறைத்து கற்றலில் உள்ள மனநிலையை தகர்த்துவிடும். எனவே இயன்றளவு வெப்பநிலைச் சூழலை தவிர்ப்பதுடன் போதிய ஒளிவசதிகளையும் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

வகுப்பறையினுடைய அளவு முக்கியமான விடயமாகும். 20 X 20 சதுர அடி பரப்பில் வகுப்பறையின் நீள அகலம் காணப்பட வேண்டும். இவற்றை விட குறையும் பட்சத்தில் நெருக்கடியான சூழல் உருவாகும். அதிக மாணவர் தொகை குறைந்த பரப்பளவு உள்ள வகுப்பில் இருக்கும் போது பொருத்தமான கற்றல் நடத்தையில் ஈடுபட முடியாது போகும். எனவே இதன் மூலம் மாணவரது உளநலன் பாதிக்க வாய்ப்புண்டு.

ஜோன்டூயி, யுனிசெப் வகுப்பறை பற்றிக் குறிப்பிடும் போது வகுப்பறை மிகவும் வனப்பாக வேண்டும். உயிர்ப்பானதாக, உணர்வுபூர்வமானதாக செயற்பாடுகளுடன் கூடியதாக மாற்ற வேண்டும் என்கின்றார். ஒவ்வொரு மாணவரும் நான் பார்த்தேன், நான் செய்தேன், நான் விளங்கிக் கொண்டேன் என்பதற்கு அமைவாக கற்றல் அனுபவங்களைச் சுவரிலே ஏதோரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவில் காட்சிப்படுத்தும் போது மாணவரது உளம் மகிழ்ச்சியுறுவதுடன் நேரான சிந்தனையும் ஆர்வங்களும் உருவாகும்.

வகுப்பறைச் சூழலானது சுத்தமானதாக அமையப்பெற வேண்டும். இல்லையேல் உடல் மற்றும் உளரீதியான நோய்கள், தாக்கங்கள் உண்டாகும். உதாரணம் டெங்கு, மலேரியா மாணவரிடையே பரவுவதால் மாணவரது உளநலம் பாதிக்கப்பட்டு உடலாரோக்கியமும் பாதிக்கப்படும். அதே சமயம் மலசலகூடத்திற்கு அருகில் வகுப்பறை அமைவதாலும் பாதிப்புகள் ஏற்படும்.

வகுப்பறையில் கதிரை, மேசை, தளபாட அமைப்பு என்பன மாணவர்களிடையே முரண்பாடுகளை உருவாக்கும் தேவையற்ற பழுதடைந்த தளபாடங்களை தனியான அறையினுள் ஒதுக்கி வைத்தல் நன்று. இது மாணவரது கவனச்சிதைவை குறைக்கும். அதே வேளை கரும்பலகையின் அமைவு அனைத்து மாணவர்களுக்கும் தெரியுமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் மாணவனால் சரியாக கற்றலில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும். அதேவேளை மனஅழுத்தத்தையும் உருவாக்கும்.

செயற்பாடுகளுடன் கூடிய கற்றல் சூழலாக வகுப்பறை அமையப்பெற வேண்டும். இல்லையெனில் "நான்கு சுவர்களைக் கொண்ட ஒரு அறையை கல்விக்கூடம் என்பதை விட ஆற்றலையும் அறிவையும் மழுங்கக்கடிக்கச் செய்யும் சிறைச்சாலை எனலாம்." என்று கூறுகின்றார்.

வகுப்பறைச் சூழல் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளையும் வழங்குவதாக அமையப்பெற வேண்டும். குடிநீர் மற்றும் அவசர மருத்துவ வசதிகளை உடன் பூர்த்தி செய்வதாக காணப்படலானது உள நலனை மேம்படுத்தும். இன்றைய அநேக பாடசாலைகளில் அவ்வாறான நடைமுறைகள் அரிதாகவே உள்ளது. வகுப்பறைச்சுவர்கள் மற்றும் கதவுகள், கரும்பலகை மற்றும் யன்னல் என்பவற்றுக்கு பூசப்படும் வர்ணங்கள் கண்ணுக்கும் மனதிற்கும் குளிர்மையைத் தர வேண்டும். வெறுப்பையும் எரிச்சலையும் தூண்டுவனவாக அமையக் கூடாது. உதாரணம் மெல்லிய நீலம், பச்சை ஆகியன ஆரோக்கியமான நிறங்களாகும்.

"நூறு பேச்சை விட ஒரு காட்சி மேலானது." என்று சீனப்பழமொழி கூறுகின்றது. எனவே வகுப்பறையினுள் காட்சிப்படுத்தலுடன் கூடிய கற்பித்தல் மாணவருக்கு புரிதலையும் ஆரோக்கியத்தையும் தரும். இதற்காக நவீன சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மாணவருக்கு கண் மூலம் 83% கற்றலும், மூக்கு மூலம் 3.5% கற்றலும் வாய் மூலம் 1% உம் காது மூலம் 11% உம், 1.5% கை மூலமும் கற்றலைப் பெறுகின்றனர்.

வகுப்பறை சார்ந்த பொறுப்புகள் மாணவர் உளநலத்தைப் பேணும். உதாரணமாக தலைமைப் பொறுப்புகள் வகுப்பறைச் சுத்தம், கூட்டுமுறை அட்டவணை, மாணவர் ஒழுங்கு, பாடவேளை அமைப்பு, மாணவரது அன்றாட செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் அனைத்துமே உளநலனை தீர்மானிக்கும் தன்மையுடையதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் முறையின் போது ஆசிரியர் - மாணவர் இடைவினை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். ஆசிரியரின் கற்பித்தலானது கற்கண்டு போல இனிப்பாக இருக்க வேண்டுமே தவிர கசப்பாக இருக்கக்கூடாது. அது மாணவனையும் தனிப்பட்ட ரீதியில் அவதானிக்கக்கூடிய முறையில் அமைக்கப்பட வேண்டும். அதன் போது தான் ஒவ்வொரு மாணவரினையும் அவதானிக்கவும் பிரச்சினைகளை இனங்காணவும் தீர்க்கவும் முடியும்.

ஆசிரியர் மாணவரது விருப்பு வெறுப்புகளை கண்டறிதல் வேணும். அதேவேளை வழங்கப்படும் ஊக்கிகள், வெகுமதி, தண்டனை, மீள்வலியுறுத்தல், ஆகியவை உளநலனை விருத்தி செய்யும் மாணவர்கள் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு பொருத்தமான வகுப்பறைச் சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

வகுப்பறைச் சூழலில் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் முறைமை ஒரே மாதிரியாக அமையாமல் விளையாட்டுக்கள், நாடகம், குழுச்செயற்பாடுகள் என்றவாறாக காணப்படல் நன்று. வகுப்பறையில் வயது, தர ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதன் மூலம் உளப்பிரச்சினைகள், ஏற்றத்தாழ்வு மனப்பாங்குகள் இல்லாது ஒழிக்கப்பட்டு நட்பு வட்டாரம் அதிகரிக்கும் மன ஆரோக்கியம் ஏற்படும் சிறுவர்களுக்கு உரிய வகுப்பறை அவர்களுக்கு ஏற்றது போல வர்ணப்படங்கள், உருவங்கள் கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும். அதே போல் உயர்தர மாணவருக்கு ஏற்றது போல சிறந்த வாசகங்கள் காணப்படல். இதன் மூலம் மாணவர்கள் தம் வயது ஒத்தவரிடையே முரண்பாடு இன்றி மகிழ்வான தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

எனவே வகுப்பறையிலே மாணவர் உளநலத்தை பேணுவதில் வகுப்பறைச்சூழல், ஆசிரியர்கள், சகபாடிகள், அதே சமயம் காலநிலை மற்றும் பொருளாதாரம் போன்ற விடயங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மாணவரது உளநலனில் செல்வாக்கு பெறுகின்றது. ஆகவே நாட்டின் எதிர்கால தூண்கள் சிறந்த முறையில் கட்டியெழுப்ப வகுப்பறையானது மிகுந்த பங்கு வகிக்கின்றது. இவ்வாறான நல் வகுப்பறைச் சூழலானது பாடசாலையில் மட்டுமல்ல பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி அமைவங்கங்களிலும் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலமே சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது எனது கருத்து.



நினைவுகளில் எழுந்தவை
நிசப்தமென்றெண்ணாது – நாம்
நிஜங்களில் விதைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி கோட்டக்கல்வி நிர்வாக வரலாறு

**திரு. த. இரவீந்திரன்**
ஓய்வு பெற்ற அதிபர்
ஜெயபுரம், பல்லவராயன்கட்டு,
பூநகரி.

இலங்கையின் கல்வி வரலாறு திண்ணைப் பள்ளிக்கூடங்கள், விகாரைப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் என ஆரம்பகால கல்வியை வரையறை செய்யலாம். பாடசாலைக் கல்வியின் வரலாறு அன்னியர் வருகையுடனே ஆரம்பமாகிறது.

போர்த்துக்கேசர் காலத்தில் தேவாலயங்களுடன் இணைந்ததாக வேதப் பாடசாலைகள் இயங்கின. பூநகரியில் போர்த்துக்கேசர் காலத்தில் மூன்று தேவாலயங்கள் இயங்கியதாக போர்த்துக்கேசர் கால இலங்கையின் கல்வி பற்றிய நூல் ஒன்றில் குறிப்பிடப்படுகின்றது. அத்தேவாலயங்கள் பூநகரி, பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, ஈழவூர் ஆகிய கிராமங்களில் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. பூநகரி பல்லவராயன்கட்டு ஆகிய தேவாலயங்கள் இணைக்கக்கூடியதாக இருந்தாலும் ஈழவூர் தேவாலயங்களை இனங்காண முடியாதுள்ளது.

போர்த்துக்கேயரின் பின் ஒல்லாந்தர் ஆட்சியிடம் இத் தேவாலயப் பாடசாலைகள் இயங்கி இருக்கலாம். அவை போர்த்துக்கேயர் காலப் பாடசாலைகளாகவும் இருக்கலாம்.

ஒல்லாந்தர் காலத்தின் பின்னர் பிரித்தானியர் காலத்திலேயே பாடசாலைகள் பல பூநகரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிசனரிமார், சைவவித்தியா விருத்திச் சங்கம், தனியார் என பலர் பங்களித்துள்ளனர். ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிர்வாக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும் பிரித்தானியர் காலத்தில் இருந்தே கல்வி நிர்வாகம் ஒரு தெளிவான வரையறைக்குள் கொண்டு வரப்பட்டது.

பிரித்தானியர் காலத்தில் பாடசாலைகள் பாடசாலைமுறைச் சபையினூடாக நிர்வகிக்கப்பட்டது. யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள அமெரிக்கமிசன் பாடசாலைகள் அதிகமாக இருந்தன. அவை அமெரிக்க மிசனால் நிர்வகிக்கும்படி ஏற்பாடாய் இருந்தன. யாழ் குடாநாட்டிற்கு வெளியே அமெரிக்க மிசன் இயங்காதவாறு பிரித்தானிய அரசு தடை விதித்து இருந்தது. அதனால் பூநகரிப் பிரதேசத்தின் பாடசாலை நிர்வாகம் வேறு மிசனரிகளாலும் தனியாராலும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினாலும் நடத்தப்பட்டன. பிரித்தானியர் காலத்தில் நிர்வாக முறை மாகாண மட்டத்தில் காணப்பட்டது. வடமாகாண கல்வி அலுவலரால் மாகாணம் முழுவதுமான கல்வி நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பாடசாலைகள் அதிகரிக்க மாணவர் சேர்க்கையும் அதிகரிக்க கல்வி நிர்வாகம் பிராந்தியங்களுக்குள் குறுகின. ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஏற்பட்ட மாற்றத்தினால் மாவட்ட மட்ட கல்வி நிர்வாகம் செயற்படுத்தப்பட்டது. 1984 வரை யாழ்ப்பாண மாவட்ட கல்வி அலுவலகமே பூநகரிப் பாடசாலைகளின் கல்வி நிர்வாகத்தைப் பராமரித்தன. 1984 ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்ட கல்வி நிர்வாகம் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிப் பிரதேசப் பாடசாலைகள் ஒரு காலகட்டத்தில் பரந்தன் வட்டாரக் கல்வி அலுவலகத்துள் நிர்வகிக்கப்பட்டது. பின்னர் வட்டாரக் கல்வி அலுவலகமுறை மாற்றப்பட்டு பாடசாலைக் கொத்தணி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் மாவட்ட கல்வி அலுவலகமே நிர்வாக விடயங்களைக் கவனித்து வந்தன. பூநகரியில் இரண்டு கொத்தணி மூலாதாரப் பாடசாலைகள் 1985ம் ஆண்டின் பின் உருவாக்கப்பட்டன. முதலில் பூநகரி கொத்தணி உருவாக்கப்பட்டு பூநகரி மகாவித்தியாலயம் (பூநகரி மத்திய கல்லூரி) மூலாதாரப் பாடசாலையாக ஆக்கப்பட்டது. பின்னர் முழங்காவில் கொத்தணி உருவாக்கப்பட்டு முழங்காவில் மகாவித்தியாலயம் (தேசியப்பாடசாலை) மூலாதாரப் பாடசாலையாக ஆக்கப்பட்டது.

பூநகரி மூலாதார அதிபராக கடமையாற்றியவர்கள் முதலாவதாக திரு. கே. சிவகுமாரனும் 2வதாக திரு. V.K பரஞ்சோதியும் 3வதும் இறுதியுமான திரு. கா. குலசேகரம் அவர்களும் கடமையாற்றினர். முழங்காவில் கொத்தணியின் அதிபராக திரு. எஸ். சாம்பசிவம் அவர்களும் திரு. ஏ. கைலாயப்பிள்ளை அவர்களும் கடமையாற்றினர்.

1993ன் பின் பூநகரி கல்வி நிர்வாகம் கோட்டக்கல்வி நிர்வாகமாக மாறியது. ஆரம்பத்தில் பூநகரி கோட்டக் கல்வி அலுவலகம் முழங்காவிலை மையமாகக் கொண்டு இயங்கியது. 1வது கோட்டக்கல்வி அலுவலராக திரு. த. குருகுலராஜா அவர்கள் கிளிநொச்சி மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து இயங்கினர். பின்னர் பூநகரி கோட்டக்கல்வி அலுவலகம் முழங்காவிலுள்ள ஆசிரியர் விடுதியில் திரு. கு. பிறேமகாந்தன் அவர்களால் இயக்கப்பட்டது. கோட்டக்கல்வி அலுவலர்கள் இயங்கிய காலத்தில் பூநகரி கோட்ட பாடசாலைகள் ஆசிரியர் அதிபர் சுயவிபரக் கோவைகள் ஒரு எழுதுவினைஞரால் பராமரிக்கப்பட்டு வந்தன. பின்னர் திரு. கி.சின்னராசா அவர்கள் கோட்டக் கல்வி அலுவலராக இருந்த காலத்தில் அதிபர் ஆசிரியரின் சுயவிபரக் கோவைகள் மாவட்ட காரியாலயத்தில் வைத்து பராமரிக்கப்பட்டன. இக்காலத்தில் இருந்து கோட்டக்கல்வி அலுவலகம் நிர்வாக நடைமுறைகளை இணைக்கும் நிலையமாக மாறியது.

இதன் பின்னராக கோட்டக்கல்வி அலுவலராக திரு. கனகசபாரட்ணம், திரு. நா. சோதிநாதன், திரு. ப. அரியரட்ணம், திரு எஸ். சிவசாமி, திரு. மு. சண்முகராஜா, திரு. தி. கணபதிப்பிள்ளை, திரு. சு. தர்மரத்தினம், திரு. எஸ். உதயணன் ஆகியோர் கடமையாற்றினர். தற்போது திரு. என். கணேஸ்வரநாதன் அவர்கள் கோட்டக்கல்வி அலுவலராக கடமையாற்றி வருகிறார்.

தற்கால கோட்டக்கல்வி நிர்வாகம் பிறபாடவிதான நிகழ்வுகளை நடாத்துவதற்கும் ஏற்புடையதாக உள்ளது.

பூநகரி கோட்டக் கல்வி அலுவலகம் நாட்டின் சூழ்நிலை காரணமாக பூநகரி கொத்தணிப் பாடசாலைகள் இடம்பெயர்ந்து (1991) இயங்கிய வேளை முழங்காவிலில் கோட்டக்கல்வி அலுவலகம் இயங்கியது. இக் காலத்தின் பின் பூநகரி மகாவித்தியாலயம் இயங்கிய கிளி பூநகரி ஜெயபுரம் மகாவித்தியாலய வளாகத்துள் கோட்டக்கல்வி அலுவலகம் இயங்கத் தொடங்கியது. 2010 இன் பின், பூநகரி பாடசாலைகள் தத்தம் சூழலில் இயங்கத் தொடங்கிய பின் பூநகரிக் கோட்டக்கல்வி அலுவலகம் பூநகரி நல்லூர் மகாவித்தியாலத்தில் இயங்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி கோட்டக்கல்வி அலுவலகம் தற்போது பூநகரியின் முதல் தொடங்கிய பாடசாலையான நீண்ட காலமாக இயங்காதிருந்த யா/ மட்டுவில் நாடு மகேஸ்வரி வித்தியாலய கட்டிடத்தில் தற்போது இயங்குகிறது.

கோட்டக்கல்வி நிர்வாக நடைமுறையானது நாட்டின் மக்கள் இடப்பெயர்வு காலத்தில் (அரசியல் குழப்ப காலத்தில்) சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பாடசாலை நிர்வாகத்தை நடத்தியது. இடப்பெயர்வுக்கு முன்பு பூநகரி கல்விக் கோட்டத்தில் க.பொ.த சா/தர பாடசாலையாக இரண்டு பாடசாலைகள் இருந்தன.

கோட்டக்கல்வி நிர்வாக நடைமுறையானது நாட்டின் மக்கள் இடப்பெயர்வு காலத்தில் (அரசியல் குழப்ப காலத்தில்) சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பாடசாலை நிர்வாகத்தை நடத்தியது. இடப்பெயர்வுக்கு முன்பு பூநகரி கல்விக் கோட்டத்தில் க.பொ.த சா/தர பாடசாலையாக இரண்டு பாடசாலைகள் இருந்தன. இடப்பெயர்வால் மாணவர் நலன் கருதி மாணவர்கள் வசிக்கும் சூழலிலே பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு இயங்க கோட்ட நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டது. இந் நடைமுறை கொத்தணிப்பாடசாலைகள் இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் கோட்ட நிர்வாக காலத்தில் க.பொ. த. சா/தர வகுப்புக்களை நடத்த பாடசாலைகள் பதினேழு (17) தோன்றியுள்ளன. அதே போன்று க.பொ.த உயர்தரப் பாடசாலைகள் எட்டும் (8) தோன்றியுள்ளன.

வகுப்பேற்றங்களுடன் பாடசாலைகளின் தரமும் மாற்றமடைந்தன. குறிப்பாக 1AB பாடசாலைகள் இரண்டும் 1C பாடசாலைகள் ஆறும் ஆக தரமுயர்த்தப்பட்டுள்ளன. அத்துடன் தரம் மூன்று பாடசாலைகள் பல தரம் இரண்டு பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

கோட்டக்கல்வி நிர்வாக நடைமுறையை பலமுள்ள நிர்வாக நடைமுறையாக மாற்றினால் பூநகரி பிரதேச கல்வி வளர்ச்சி மேலும் மேலும் வளரும்.

**நூல்களைக் கற்கலாம்,**

**சொற்பொழிவுகளைக் கேட்கலாம்,**

**பல மணிநேரம் தொடர்ந்து பேசலாம்,**

**ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான்!**

**அதுவே உண்மையான கல்வி!**

**- விவேகானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியராக ஆசைப்படு மனமே!

**செல்வி. சுகன்ஜா ஸ்ரீரங்கநாதன்**
ஆசிரியர் - பல்லவராயன்கட்டு
பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

"அனைத்திற்கும் ஆசைப்படு ஆசிரியனாக ஆசைப்படு" மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள் தெய்வத்திற்கு முன்பே முதல் நிலையாக வைத்துப் போற்றப்படுபவர்கள். ஆசிரியர்கள் அதாவது "ஆசு" என்றால் குற்றம் "இரியர்" என்றால் தீர்ப்பவர் என்பது பொருளாகும். அதாவது மாணவர்களிடையே உள்ள மாசுக்களை குற்றங்களை தீர்த்து அறியாமையை அகற்றி ஞான ஒளி வழங்குபவர் ஆசிரியர்கள். உலகில் வைத்தியர், சட்டத்தரணி, பொறியியலாளர்கள், விஞ்ஞானி என பல தரப்பட்ட தொழில்களையே உயர்ந்த தொழிலாக மதிப்புக்குரிய தொழிலாக மதிக்கின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் உருவாக ஆணி வேராக அடித்தளமாக இருக்கும் மேன்மையான அர்ப்பணிப்பினைச் செய்யும் தொழிலாக ஆசிரியத் தொழிலே காணப்படுகிறது.

ஆசிரியத் தொழிலின் பெருமையை சொற்களால் அளந்து கூறமுடியாது. ஆயினும் அறிஞர்கள் ஆசிரியர்களின் மேன்மையை மிக ஆழமாக கூற முயன்றுள்ளனர். அந்த வகையில் மாவீரன் அலெக்சாண்டர் கூறுகையில் "நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன் ஆனால் நான் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கின்றேன் என்றார். மேலும் "கல்விக்கூடம் ஒரு தோட்டம். மாணவர்கள் செடிகள். ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள் என்றார் ஜிக்ஜேக்ளர் அவர்கள் மேலும் ஆசிரியர்கள் பற்றி வில்லியம் ஆல்பர்ட் அவர்கள் கூறுகையில்" சராசரி ஆசிரியர் பாடத்தை நடாத்துகின்றார். சிறந்த ஆசிரியர் நடைமுறை உதாரணங்களோடும் பல்வேறு கற்றல் நுட்பங்களுடன் உன்னதமான கற்பித்தலை மேற்க்கொள்கின்றார். என்று கூறினார். "சிறந்த ஒரு ஆசிரியருக்கு கற்பனைத்திறன் உண்டு. அவர்கள் மாணவர்களை துல்லியமாக மதிப்பீடு செய்வார்கள். மற்றும் இவர்களுக்கு நகைச்சுவை உணர்வும் அதிகம். மற்றும் புதிய புதிய சிந்தனைகளையும் வளர்ச்சிகளையும் பின்பற்றுபவர்கள் என்றார். பெர்ஷியா ஆக்ஸ்டெட். இவ்விதம் ஆசிரியர்களின் முக்கியத்துவங்களை பலரும் பலவிதமாக சிறப்பித்துள்ளமையை அவதானிக்கலாம்.

ஆசிரியப் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை. அதாவது ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னதமான பணியாகும். அப்படிப்பட்ட தெய்வீகமான பணியினை மாணவர்களிற்கு அளிக்க தன்னலமற்ற தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது கற்பிக்கும் தொழிலையும் மாணவர்களையும் நேசிப்பவராக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பணியினை தொழிலாக அன்றி சேவையாக செய்ய "ஆசிரியனாக ஆசைப்படு மனமே"

"சமூகக் கோட்டையில் சரித்திர கதவுகள் ஆசிரியர்கள்" வளம் மிக்க சமுதாயத்தின் கதவுகளைத் திறந்து வைப்பவர்கள் ஆசிரியத் தெய்வங்கள் ஆவார். ஆரம்ப காலத்தில் குருவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்னிலையாக்கப்பட்ட உறவாக திகழ்ந்தார். அக்கால சிஷ்யர்களும் குருவிற்கு சிறந்த மதிப்பினை வழங்கி வந்தனர். ஏகலைவன் தன் மானசீக்க் குருவிற்காக தனது வலது கையின் கட்டை விரலையே தட்சிணையாக வழங்கி குருவிற்கு மதிப்பளித்தான். அரசனின் மகனாக இருந்தும் அரசன் எனும் பதவியை துறந்து தனது குரு சூரிய பகவானின் ஆசையை தீர்க்க குருவின் மகன் சுக்கிரீவனுக்கு மந்திரியாக இருந்தார். ஆஞ்சநேயர் அக்காலத்தில் குரு சிஷ்ய உறவில் ஒரு புனிதம் இருந்தது.

இன்றைய காலம் கலிகாலம், இளைய சந்ததியினர் வன்முறைகளுக்குள்ளும், போதைப் பொருள் பாவனைக்கும் அடிமையாகி இருக்கின்றார். இவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. "ஆசிரியப் பணியே அறப்பணி அதற்கே உன்னை அற்பணி". அனைத்திற்கும் ஆசைப்படாதே ஆசிரியனாக இவ் உலகில் மிளிர சேவை செய்ய ஆசைப்படு அதுவே இன்றை நாட்டின் தேவைப்பாடு ஆகும். ஒவ்வொரு மனிதர்களையும் அற சிந்தனை கொண்ட ஒழுக்க சீலர்களாக மகான்களாக்கும் உன்னதமான சேவையினை செய்ய ஆசிரியனாக ஆசைப்படு மனமே.


" ஆசிரியப்பணியே அறப்பணி "
அதற்கே உனை அற்பணி"



**உலகில் இரண்டு புனிதமான**
**இடங்கள் உண்டு.**
**ஒன்று தாயின் கருவறை.**
**இன்னொன்று**
**ஆசிரியரின் வகுப்பறை.**
**தாயின் கருவறையில் ஒருவன்**
**உயிரை பெறுகிறான்**
**ஆசிரியரின் வகுப்பறையில் அவன்**
**அறிவை பெறுகிறான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் ஒன்றுகூடல் – 2024, 2023







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவின் வழி மேம்பாடு:
## சமூகவியல் விசாரணை

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
மேனாள் துணைவேந்தர், சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிவென்பது மனித மேம்பாட்டுக்கானது. அறிவின் வழியான மாற்றம் என்பது தவிர்க்க முடியாத இயங்கியலாக பயன்கனிகளை உலகுக்காக்கியமை இன்றைய மனித வரலாறாகப் பதிவு பெறுகின்றது. மனிதனின் எல்லாவித வளர்ச்சிக்கும் அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாகும். மனிதன் இரண்டு வித அறிவுகளைக் கொண்டவன்.ஒன்று இயலறிவு மற்றது அனுபவ அறிவு. ஆனால் கல்வி வாயிலாகப் பெறும் அறிவு இயலறிவுக்கும் அனுபவ அறிவுக்கும் செம்மையளிக்கும் என்பர் கல்வியியல் பேராசிரியர் ப.சந்திரசேகரம் (1975;2021). கல்வியானது நீண்டகால அடிப்படையில் மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிலைபேறான மேம்பாட்டு இலக்குகளின்படி (SDGs) சமமான கல்வி, அனைவருக்கும் வாழ்நாள் முழுமைக்குமான அறிவார்ந்த கல்வியை ஊக்குதலென்ற உலகளாவிய நிகழ்ச்சி நிரல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (UNESCO, 2014).மேலான இந்தப்பிரகடனங்களின் யதார்த்தம் எவ்வாறுள்ளது? அழகான மேம்பாடான உலகை படைப்பதில் அறிவுக்குள்ள இடத்தினை ஆராதிக்கும் அதேவேளை அறிவே இடராய வேறுபடுத்தல்களின் ஊற்றுக் கண்ணாகவும் ஆகியுள்ளதா? அறிவுக்கும், மேம்பாட்டுக்கும் உள்ள உறவின் பயணத்தில் சாதனைகள் பல கண்ட மனித சமூகங்கள் சவால்களையும் கூடவே எதிர்கொள்கின்றன. உலக அரங்கில் இன்று பெரிதும் விவாதிக்கப்படுகின்ற இவ்விடயம் எங்கள் கவனத்திற்கும் உரியது. இது தொடர்பான சமூகவியல் விசாரணையாகவே இக்கட்டுரை அமைகிறது.

நாளைக்கான திசையை நிர்ணயிப்பதிலும், செயல் திட்டங்களை வகுப்பதிலும் இந்தப்பொருண்மை தொடர்பான சிந்தனை இன்றியமையாதது. எங்கள் சிந்தனைக்கான பொருளில் இரண்டு முக்கியமான பதங்கள் உள்ளன. ஒன்று அறிவு, மற்றையது மேம்பாடு. இந்த இரண்டு பதங்கள் பற்றிய தெளிதலுடன் இவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவுத்தன்மையையும், விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. அறிவு பற்றிய பல்வேறு பரிணாமங்கள், விளக்கங்களை, நம் மனித சிந்தனை வரலாறு முழுமையும் காணமுடியும். அறிவொளிக்காலம் என இன்று நாம் இனங்காட்டும் காலத்திலிருந்தே விஞ்ஞான பூர்வமான அறிவின் எல்லைகள் பலவும் மனுக்குலத்தால் எட்டப்படும். மனிதனுக்கு அப்பாற்பட்டவை எனக்கருதப்பட்ட பல விடயங்கள் மனித வல்லமைக்கு உட்பட்டமை உணரப்படும். மனித மனமேம்பாடு, சூழல் பற்றிய தர்க்க சிந்தனை, அறிவியல் ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பன மனிதவல்லமை மீதான நம்பிக்கைக்கும் செயலுக்கும் கருவிகளாயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கும் சமூகத்தின் மேம்பாட்டுக்குமிடையிலான உறவின் விசாரணையினடியாகத்தான் நான் சார்ந்த சமூகவியல் துறையின் பிறப்பும் அமைந்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. சமூகம் பற்றிய விஞ்ஞான விசாரணையாகச் சமூகவியல் என்ற அறிவுத்துறையின் வரவு, சமூக ஒழுங்கு, வகுப்புகளுக்கிடையிலான அசமத்துவம், முடியாட்சியின் மேலாதிக்கம், மாற்ற முடியாத உண்மைகள் எனும் நம்பிக்கைகள் புதிய சிந்தனைச் சூழலில் வலுவிழந்தன. மனித உரிமைகள், சமூக உரிமைகளினடியான சனநாயக ஒழுங்கு எனும் சமூகவியல் சிந்தனை பகுத்தறிவின் அடியான சட்டவாக்கம், அதன் வழியான புதிய சமூக ஒழுங்கு, மக்களின் சமூக அரசியல், பொருளாதாரம் பண்பாட்டு வாழ்வில் புதிய உருமாற்றங்கள் எனும் பின்புலத்தில்தான் கல்விக்கும் கல்விச் சமூகத்திற்குமான உறவு பற்றிய கவனிப்பும், முக்கியத்துவம் பெறுகின்றது. கல்வி மேம்பாட்டுக்கான தேசங்களின் முதலீடு, கல்வி வளர்ச்சி சார்ந்த கலைத்திட்ட சீர்திருத்தங்கள், கல்வி விரிவாக்கம், கல்வி நிறுவனங்களுக்கும் அது சார்ந்த சமுதாயங்களுக்குமிடையிலான உறவுப் பிணைப்பின் அவசியம் எனப் பல்வேறு குவிமையங்களில் கல்விக்கும் சமூக மேம்பாட்டுக்குமிடையிலான உறவு பற்றிய ஆய்வுகளும், மதிப்பீடுகளும் உலக அறிவுப்புலமெல்லாம் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன. பலவாதவிவாதங்கள் இந்த விடயத்தில் நீளவே நிகழ்கின்றன. சமூக வாழ்வில் கல்விக்கான இடம் முதன்மையானது. ஆனால் கல்விச் சமூக மாற்றத்தின் சமூக மேம்பாட்டின் முகவராக? உள்ளதா? தனியன்களினதும், மேட்டுக் குடியினரதும் உயர்வுக்குக் கல்வி கைகொடுத்தது என்பது உண்மைதான். ஆனால் ஒட்டு மொத்த சமுதாயங்களினதும் மேம்பாட்டுக்கு வழிசமைத்ததா? இந்த வினாக்கள் சமூக மேம்பாடு தொடர்பான தெளிந்த சமூகவியல் தரிசனத்திற்கு எங்களை இட்டுச் செல்வன. “மேம்பாடு” (Development) என்ற பதம் இன்று பலராலும் பலவித அர்த்தங்களில் உச்சரிக்கப்படுகின்றது. அரசியல் வாதிகளிலிருந்து ஆய்வாளர்கள் வரை, வலதுசாரிகளிலிருந்து இடதுசாரிகள் வரை அவரவர் அவர்வழி என்றவாறு விளக்கங்கள் தரப்படுகின்றன. நிலவும் மேம்பாடு தொடர்பான அத்தனை கருத்தியல்களையும் இரண்டு முக்கிய சிந்தனைக் குழுமங்களிற்குள் அடக்கிவிட முடியும்.

மாக்சியர் அல்லதாதோர் (non- marxist) அல்லது மாக்சிய எதிர்ப்பாளர் (Anti -marxist)

மாக்சிய வாதிகள் (Marxist)

சில அறிஞர்கள் முதல் வகையினரை முதலாளித்துவ அல்லது சமூக நலனோக்கினராகவும், இரண்டாம் வகையினரைச் சமூக சமத்துவ நோக்கினராகவும் குறிப்பிடவிரும்புவர். அறிவின் சமூக பயன்பாடு பற்றிய எந்தவொரு ஆராய்ச்சி, மதிப்பீடும் மேற்கண்ட கருத்துநிலை பற்றிய தெளிந்த ஞானத்தின் வழிதான் சாத்தியமாகும். எங்களது இன்றைய விசாரணைக்கும் அதுவே வழிகாட்டியாகும். சமூக மேம்பாடு என்பதனை வாழ்க்கைத்தர மேம்பாடாக, சமூகத்தின் மக்கள் வாழ்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதாக முதல்வகையினரின் நோக்கும், போக்கும் அமைந்துள்ளன. புகழ்பூத்த சமூகவியலாளர் மக்ஸ் வெபரிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஐ.நா. சபை வரைவிலக்கணங்கள் வரை கல்வி என்பது சமூக நலம் சார்ந்த வாய்ப்புக்களினை மேம்படுத்தல் என்ற பொருளிலேயே விளக்கப்படும். சமூக ஒழுங்கு பேணப்படுதல் என்பதே மேம்பாட்டின் உயரிய குவிமையமாக இவர்கள் கருத்தியலில் வெளிப்படும். மாக்சியவாதிகளின் கருத்தியலோ, சமத்துவ விழுமியங்களின் அடியானது. இந்தவகையில் மேம்பாடு தொடர்பான (Kims, *1973*) என்ற அறிஞரின் வரைவிலக்கணம் எம் கவனத்திற்குரியது. 'வாழ்வின் அனைத்துத் தளங்களிலும், குறிப்பாக சமூகப் பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினைப் பெறமுடியாதபடி மறுக்கப்பட்ட மக்கள் எந்தளவுக்கு அவற்றினைக் கேட்கவும், பெறவும் முடிகின்றது என்பதனைப் பொறுத்தே சமூக மேம்பாடு' என்பது கிம் முன்வைக்கும் கருத்தியலாகும். இந்தக் கருத்தியல் குழுமங்களின் முரண்பாடுகளை ஆக்க பூர்வமாக சிந்தித்துப் பொருத்தமான முறையில் புதிய சிந்தனைத் தடத்தில் அறிவின் பயனைச் சமூகத்திற்காக்குதலே இன்றையகால அறிஞர் கடனாகிறது. அறிவால் சமூக மேம்பாடு சாத்தியமான அனுபவங்களை, அறிவால் மனித நாகரிகம் கண்ட சாதனைகளை நலன்களைப் பேணுகின்ற அதேவேளை இன்றுவரை சவாலாக உள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்துக்கான எங்கள் செயல்களை வடிவமைப்பது காலத்தின் கட்டாயமாகிறது. அறிவும் அதன் கையாளுகையும் இன்று யாருடைய தனி உடைமையாகவும் இல்லை என்பதிலுள்ள மகிழ்ச்சி எல்லையற்றது. சமூக அசைவிற்கான மிகப்பெரிய காரணியாகக் குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்தை எடுத்து நோக்கினால் இங்கு ஒரே ஒரு தொழிற்றுறையாக கல்வியே அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் நிலம் உள்ளவனுக்குத்தான் பொருள்வளம் என்பது போல பின்னாளில் கல்வி வழிதான் வாழ்வென்றானதும், அதன்வழி வாழ்வியலில் பல மாற்றங்களைக் கண்டதும் அறிவு தந்த சாதனைகள்தான். இன்றைய சமூக விழுமியங்களை நிர்ணயிக்கும் பெரும் விசையான மத்தியதர வகுப்பின் உருவாக்கத்தின் பின்னாலும் கூட, கல்வியின் பங்கும் பணியும் பெருமளவில் இருந்திருக்கிறது. ஆனாலும் இந்த அறிவின் கனிகளை அனைவருக்கும் ஆக்கும் கனவு மட்டும் இன்னமும் நிறைவேறாத கானல் நீராய்த் தொடர்கின்ற உண்மையே இங்கு எம் கவனத்திற்குரியதாகின்றது. எல்லோருக்கும் கல்வி என்ற உலகளாவிய பிரகடனங்கள், அது தொடர்பான முயற்சிகள் பலவற்றின் பின்னரும் நிலவும் கல்வி அசமத்துவம் பற்றிய புள்ளிவிபரங்கள் அதிர்ச்சி தருவன; ஆழ்ந்த கவலைக்குரியன. மில்லியன் கணக்கான பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதில் குழந்தைத் தொழிலாளர்களாகவும், பல்வேறு விதமான புறக்கணிப்புகளுக்குள்ளாக்கப்பட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கிட்டத்தட்ட *50* மில்லியன் பிள்ளைகளின் பிறப்பே பதியப்படவில்லையென்பதும், அவர்கள் பள்ளிக்கூடத்தினைக் கண்டதே இல்லையென்பதும் எவ்வளவு கொடுமையானது. வறுமையான பொருளாதார நிலை; ஆயுதப்போர் சூழ்ந்த அரசியல் நிலை; வளங்களின் பகிர்வில் அசமத்துவமும் அநீதியும் கொண்ட சமூக நிலை என்பது இந்தப்பிள்ளைகளின் விதியாகியுள்ளது. எழுத்தறிவு பற்றிய அரசுகளின் கவனிப்பில் கூட, முன்னைய அந்தரம் இன்று குறைந்துள்ளமை கவலையுடன் நோக்கப்படுகின்றது. அரசுகளின் முன்னுரிமையில் கல்வி பெறுகின்ற இடம் துயரமானது. உலகளாவிய நிலையில் *129* நாடுகளில் *51* நாடுகள் மட்டும் எதிர்பார்க்கப்படுகின்ற அளவுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்பாடசாலை வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன. இன்றைய உலக குடித்தொகையில் 774 மில்லியன் மக்களுக்கு ஒழுங்கான எழுத்தறிவு இல்லை என்பது அதிர்ச்சியின் விடயமில்லையா? 77 மில்லியன் பிள்ளைகள் வரையில் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் பாடசாலையில் இல்லை. இவர்கள் இடைவிலகல் பிள்ளைகள் பற்றிய ஆய்வுகளின் மூலப் பொருட்களாகியுள்ளனர்.

உலகளாவிய இந்தப் புள்ளி விபரங்களின் மத்தியில் இலங்கையின் நிலவரமும் மகிழ்ச்சி தருவதில்லை. இலவசக்கல்வி, 94.2% எழுத்தறிவு வீதம், என்ற பெருமிதங்களின் மத்தியிலும் கல்வியமைப்பு வெளிப்படுத்தும் பின்னடைவுகள் பாரதூரமானவை. 4 மில்லியனுக்கும் அதிகமான பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதினர் மூன்று இலட்சம் வரையிலான பிள்ளைகள் வீதியில் உள்ளார்கள். பள்ளி செல்லும் பிள்ளைகள் நிலையும் நிரந்தரமானது அல்ல.

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுடன் 'சிறிய பாடசாலை' ஒன்றுக்குள் முடக்கப்படும் பிள்ளைகள்; மேலே படித்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றினாலும் அரைவாசிக்கும் குறைவானவர்களே சித்தி பெறுகின்றார்கள். கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்புக்குச் செல்லும் பிள்ளைகளிலும் கூட, மூன்றில் இரண்டு வீத பிள்ளைகள் தோற்றுப்போன பிள்ளைகளாகி விடுகின்றனர். இதற்குள்ளும் பிரதேச ரீதியாகவும் பிரதேசங்களுக்குள்ளேயும் பாரிய வேறுபாடுகளைக் காணமுடியும்.

இவை பற்றிய பகுப்பாய்வுகள், பாடசாலை இடைவிலகல், குழந்தைத்தொழிலாளர் என்றும் கல்வியில் நாட்டமின்மை, மொக்குப்பிள்ளை, பெற்றோரின் பொறுப்பின்மை என தீர்ப்பு வழங்கிடும் சந்தர்ப்பங்களே வெளிப்படக்காணலாம். ஆயினும் அண்மைய எங்கள் கள ஆய்வுகளின் தரவுகள் பேசும் கதைகள் வாழ்வாதாரத்தைக் காணும் நோக்கிலேயே இடைவிலகல் என்பதனை வெளிப்படுத்துகின்றன. தாய்த்தலைமைக் குடும்பங்கள் பற்றிய எங்களது ஆய்வு பிள்ளைத்தலைமைக் குடும்பங்களில் முடிந்த பண்பாட்டு அதிர்ச்சி இது என்பேன். தந்தையின் இழப்பு அல்லது அவர்களின் பொறுப்பற்ற நடத்தைக்கோலங்கள் என்பன பிள்ளைகளின் கல்வியை குழிதோண்டிப் புதைத்திடும் அவலம், இக்கதையாடல்களின் சாரமானது.

'அப்பா இல்லை அம்மாவுக்கு ஏலாது, நான் வேலைக்குப் போனால் தான் வீட்டில அடுப்பு எரியும்'

'அப்பாவின்ர உழைப்பு அவர் குடிக்கே போதாது; எப்படி நாங்கள் சீவிக்கின்றது. அதுதான் நான் தொழிலுக்கு வெளிக்கிட்டனான்.'

'எனக்குப் படிக்க நல்ல ஆசை; என்னுடைய நண்பர்கள் பள்ளிக்கூடம் போறதைப் பார்க்க எனக்கு சரியான அழுகை அழுகையாக வரும்'

'நான் உழைச்சு எப்படியும் என்ரை தம்பி தங்கச்சியைப் படிப்பிப்பன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவனிப்பு எங்கள் காலக் கடமையாக உள்ளது. வேகமாக மாறிவரும் உலகில் பங்கேற்பதற்கு இன்றியமையாத கல்வியை இழந்த இந்தப்பிள்ளைகள் வாழ்வினை மீட்டுத்தருவது இன்றியமையாதது. ஆனால் இன்று சந்தையால் வடிவமைக்கப்படும் பொருளாதாரத்தில் கல்வியும் பண்டமாக்கப்பட்டுள்ளது. மாணவர்களை உற்பத்திப் பண்டங்கள் (Products) என அழைப்பது, சந்தையில் விலை போகக்கூடிய பட்டதாரிகள் (Marketable Graduates) என அழைப்பது அறிவு வேலையாட்கள் (Knowledge Workers) வரையறுப்பது போன்று அவலங்கள் எம் கவனத்திற்குரியன. அறிவும் திறனும் பொருளாதார பண்டங்களாகிய நிலையில் அதனைத் தரும் கடமை யாருக்கானது என்ற விடயமும் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. சமூக வகுப்புக்கும் கல்வி அடைவுக்குமான இணைவை எங்கள் புலத்துச் சமூகவியல் ஆய்வுகள் உறுதி செய்வனவாகவே உள்ளன.

எங்கள் கல்விக் கொள்கைகள், பாடசாலையமைப்பு, அது சார்ந்த வகைப்பாடுகள், நடைமுறைகள் யாவும் மனிதர்களுக்கிடையிலான, சமூகங்களுக்கிடையிலான இடைவெளிகளை மென்மேலும் அதிகரிப்பதாகவே உள்ளன. கல்வித்தத்துவம் வேறு, நடைமுறை வேறு என்பதாகவே செயன்முறைகள் தொடர்கின்றன. எத்தனை சீர்திருத்தங்கள் வந்தபோதும் அடிப்படை மாற்றங்களை எட்டமுடியாமைக்கு என்ன காரணம்? சுயமாய், எங்கள் சூழமைவுக்கு ஏற்ற கல்வித்திட்டங்களை நாம் வகுத்திருக்கவில்லை. காலனித்தவத்தின் நீட்சியாகவே எல்லாம் தொடர்ந்து இன்னமும் நவகாலனித்துவமாய் தொடர்கிறது. அதிகரிக்கும் பாடசாலை இடைவிலகல், இளைய தலைமுறையினரின் அமைதியின்மை என நீளும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பின்னால் பொருத்தப்பாடில்லாத கல்வி நடைமுறைகளினதும் அநீதியான மேலாண்மைகளினதும் கரங்களைக் காணமுடிகின்றது. இவற்றுக்கு மேலாக தனியார்மயமாக்கம், உலகமயமாக்கம் என்ற புதிய தத்துவ வியாக்கியானங்களுடன் அறிவை வியாபாரப்பண்டமாக்கி அதற்குள் இளைய தலைமுறையினரின் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். மேம்பட்ட மனிதனைத் தேடும் ஆராய்ச்சி வெறும் சந்தை ஆராய்ச்சியாக முடிந்திடக் காண்கின்றோம். (சண்முகலிங்கன், 1998)

தேசங்களின் வாழ்வும் வளமும் இதன்வழி வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மீளவும் நச்சு வட்டமாய் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதை நிறுவுதலாகவே பல கல்வி விரிவாக்கங்கள் முடிந்து போகின்றமை பற்றிய அச்சம் இன்று பெரிதும் உணரப்படும். கூடவே இன்றைய அறிவின் முகாமைத்துவம் அதன் முகாமைத்துவத்துடன் இணைந்த அறிவின் அரசியல் பற்றிய விடயங்களும் எங்களின் குறிப்பான கவனத்திற்குரியனவாகின்றன. அறிவின் பெயரால் எங்கள் அறிவுக்கூடங்களில் கற்பிக்கப்படும் கலைத்திட்டங்கள் எந்தளவுக்கு சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்கு வழிசமைப்பனவாக உள்ளன? எங்களது வகுப்பறைச் செயற்பாடுகள் பிள்ளைகளின் ஆக்கத்திறனான சமூகப் பயனான செயல்வீரத்துக்கும் வழி சமைப்பனவாக உள்ளன. இவற்றுக்கான விடைகளைத் தேடும்போது எங்களுக்கு ஏற்படுகின்ற விரக்தி நிலைகளின் புரிதலில் நாங்கள் கண்ட வெற்றிகளினதும் தோல்விகளினதும் பாடங்களிலிருந்துதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது எதிர்காலத்துக்கான பயணத்தின் செல்நெறி அமையவேண்டும். வேகமான அறிவியல் புரட்சி, தொழிநுட்ப மலர்ச்சிகளிடையே உலகம் சுருங்கியதான தத்துவங்களுக்குள் மகிழ்ச்சி கொள்கின்றோம். அதேவேளை சமுதாயங்களைத் தொலைத்த குறுகிய தனிமனித வாதங்களுக்குள் மனிதம் யந்திரமாகிய நிலைமைகளை விளங்கிக்கொள்ள விருப்பம் இல்லாமல் இருக்கின்றோம். விரும்பினாலும் விளங்க நேரமில்லாமல் அலைந்து திரிகின்றோம். அறிவாராய்ச்சியின் உன்னத கண்டுபிடிப்புகளில் ஒன்றான அணுகுண்டின் பிறப்புக்குக் காரணமான ஐன்ஸ்ரீன் அதன் இன்றைய பாவனை தொடர்பாக நொந்து வருந்தியதான நிகழ்வுகள் இன்னமும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

தகவல் தொழிநுட்பப் புரட்சியின் வரவான தொலைக்காட்சி மற்றும் தகவல் வலைப்பின்னல்களிடையே யதார்த்தங்களை மறுத்துக் கனவுலகை யதார்த்தமென ஆராதிக்கின்றோம். அறிதல் இல்லாத செயல் இன்றைய தகவல் யுகத்தின் உள்கட்டமைப்பாகியுள்ளது. இதன் விளைவாகவே இன்று எழுத்தறிவுக்கான எங்கள் ஏக்கம், ஊடாக அறிவுக்கான ஏக்கமாகவும் விரிவாக்கம் பெற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அறிவின் வழியான சமூக மேம்பாடு தொடர்பாக நாங்கள் சிந்தித்த ஒவ்வொரு அம்சங்களைப் பற்றியும் நாம் ஆழ உரையாட வேண்டும். அறிவின் பயன் எல்லை மனிதம், பயனாய் மனித வரலாறு கண்ட மேலான நலன்கள், மேலாண்மைகளுக்குள் தொலைந்து போகாதபடி காப்பது எம் கடன். அனைவருக்கும் கல்வி என்ற இலட்சியம் மெய்ப்பட மெய்யாகவே உழைப்பது கல்வியாளர்களின் பெரும் சமூகப் பொறுப்பாகும்.

எங்கள் கவனத்திற்குட்பட்ட விடயங்கள், வினாக்களில் சில கல்வியாளர்களாகிய எங்கள் எல்லைக்குள் உள்ளன. பல எங்களைக் கடந்த சமூக அரசியல் புலங்களுக்குள் உள்ளன. இந்நிலையில் தனித்தும், கூட்டாகவும் இந்த விடயம் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து காத்திரமான முடிவுகளைக் காண்பதும் இன்றியமையாதது. வரலாற்றின் செல் நெறியை மேம்படுத்தும் காலக்கடமையில் அறிவார்ந்து செயல்படுவோம். நாளைய மேம்பாட்டின் இயக்க விசைகளாய் நிமிர்வோம்.

**உசாத்துணைகள்:-**

Kim, Kynog Dong (1973) Toward A Sociological Theory of Developments, Rural Sociology, Vol, No 4

UNESCO (2014) Shaping the future we want: UN Decade of Education for Sustainable Development 2005- 2014 (Final Report),Pairs

சண்முகலிங்கன், என் **(1998)** மேம்பாட்டின் சமூகவியல், மானுடம் - இதழ் **-1**, சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சந்திரசேகரம், பேராசிரியர் ப.**(1975,2021)** கல்வித்தத்துவம் (மீள் பதிப்பாசிரியர்: பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்), பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவையாரின் கல்வி ஒழுக்கம் பதிப்பும் உரையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர் தமிழியல் ஆய்வுத்துறைக்குக் குறிப்பிடக்கூடிய பங்களிப்பினைச் செய்துள்ளார். இலக்கியம், இலக்கணம், உரை, உரைநடை நாடகம் பதிப்பு முதலான துறைகளிலே இவர்கள் ஆற்றிய பணிகள் பெரும்பாலும் நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்படவில்லையென்றே குறிப்பிடலாம்.

தமிழ் கூறும் நல்லுலகால் நன்கு அறியப்பட்ட பெரும்புலவர் ஔவையார். இவரின் நூல்களில் ஒன்றான "கல்வி ஒழுக்கம்" என்னும் நூல் தமிழ்நாட்டு அறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பல்வேறு இடங்களிலும் "கேட்டதுண்டு கண்டதில்லை" என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஔவையாரின் "கல்வி ஒழுக்கம்" என்னும் நூல் ஈழத்துத் தமிழ் அறிஞர் ஒருவரால் உரையெழுதிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பதிப்புப் பற்றியே இக்கட்டுரை அமைகின்றது.

ஔவையார் அருளிச் செய்த கல்வி ஒழுக்கம் என்னும் நீதிநூலுக்கு ஈழத்தைச் சேர்ந்த கந்தநாதர் பொன்னம்பலம் உபாத்தியாயர் என்பவர் ஓர் உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். பொன்னம்பல உபாத்தியாயரின் கல்வி ஒழுக்க உரைப்பதிப்பு 1926ம் ஆண்டு ஆனி மாதம் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையில் அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் கூறும் நல்லுலகில் முதன்முதலில் கல்வி ஒழுக்கத்திற்கு உரையெழுதிப் பதிப்பித்த பெருமை பொன்னம்பல உபாத்தியாயரையே சாரும். பொன்னம்பல உபாத்தியாயரின் உரைப்பதிப்பு வெளிவருவதற்கு முன்னர் கல்வி ஒழுக்கம் என்னும் நூல் தமிழ்நாட்டிலும் பதிப்பிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. சைவ இலக்கிய வரலாறு எழுதிய ஔவை துரைசாமிப்பிள்ளை தமது நூலிலே ஔவையாரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஔவையார் அருளியவை என ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, வாக்குண்டாம், நல்வழி, ஞானக்குறள், விநாயகரகவல், பந்தனந்தாதி, அசதிக்கோவை, வைத்தியநிகண்டு, கல்வி ஒழுக்கம், நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, நான்மணிமாலை, தரிசனப் பத்து என்னும் நூல்கள் கூறப்படுகின்றன. இவற்றுள் முதற்கண் கூறிய ஏழும் ஒழிய, எஞ்சியவை கிடைத்தில. கல்வி ஒழுக்கம் என்னும் நூலைப்பற்றிக் கூறிவந்த செந்தமிழ் ஆசிரியர் "கல்வி ஒழுக்கம்" என்பது ஒரு நூல். இது மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடைவே நாற்சீடியான் வருவது என்று உரைத்து "ஈட்டிய பொருளின் எழுத்தே உடைமை சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற அடிகளைக் காட்டியுள்ளார். அக்கல்வி ஒழுக்கம் என்னும் நூல்தானும் இப்போது கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை துரைசாமிப்பிள்ளை மாத்திரமன்றித் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய டாக்டர் மு. வரதராசனும் ஔவையாரின் கல்வி ஒழுக்கம் என்னும் நூலும் கிடைக்கவில்லையென்றே குறிப்பிட்டுள்ளார். அவர் கூற்றுப் பின்வருமாறு:

கல்வியொழுக்கம், நன்னூற்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, அசதிக்கோவை, ஆகிய நூல்களும் இவரால் (ஔவையாரால்) இயற்றப்பட்டது என்பர். இவை இப்போது கிடைக்காதவை. அசதிக்கோவையின் சில பாட்டுக்கள் மட்டும் கிடைக்கின்றன.

1965 ஆம் ஆண்டு கலைமகள் தீபாவளி மலரிலே ம. பொ. சிவஞானம் எழுதிய ஔவையார் என்னும் கட்டுரையிலே கல்வி ஒழுக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் ஆங்கில அறிஞர் பலரால் ஆங்கில மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. ஔவையாரின் கல்வி ஒழுக்கம் என்னும் நூல் வான்ருதியின் என்னும் ஜேர்மானிய அறிஞரால் ஜேர்மன் மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

தீபாவளி மலரில் ம. பொ. சிவஞானத்தின் கட்டுரையை கண்ணுற்ற பொன்னம்பல உபாத்தியாயரின் சகோதரன் டாக்டர் குழந்தைவேலு தம்மிடமுள்ள கல்வி ஒழுக்கப் பிரதியை ம.பொ. சிவஞானத்திற்கு அனுப்பியுள்ளார். கல்வி ஒழுக்கத்திற்குப் பொன்னம்பல உபாத்தியாயர் எழுதிய உரையின் இரண்டாம் பதிப்பு 1968 ஆம் ஆண்டு உரையாசிரியரின் சகோதரர் டாக்டர் குழந்தைவேலுவினாற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கல்வி ஒழுக்கம் இரண்டாம் பதிப்பின் தோற்றுவாய் எனக் குறிப்பிட்டுக் குழந்தைவேலு எழுதிய பதிப்புரையின் முடிவிலே மூன்று வெண்பாக்களைப் பாடியுள்ளார். அவ்வெண்பாவில் ஒன்று பின்வருமாறு:

கற்றோரும் மற்றோரும் கண்டதில்லைக் கேள்வியென்று
முற்றுரைத்த வாசகத்தை முன்னோர்ந்து - பற்றுடனே
அச்சேற்றிக் கண்ட அருநூலைக் காத்திடவே
இச்சைசெய்த வேலை யிது

தமிழ்நாட்டு அறிஞர்களுக்குக் கிடைக்காத, தமிழ்நாட்டிற் பதிப்பிக்கப்படாத கல்வி ஒழுக்க ஏட்டுப்பிரதி பொன்னம்பல உபாத்தியாயரின் கைக்கு எவ்வாறு கிடைத்தது என ஆராய்வதும் இன்றியமையாததாகும். தமிழ் நூற்பதிப்புத் துறையிலே ஈழத்துத் தமிழ் அறிஞர்களுக்குச் சிறப்பானதோர் முக்கியத்துவம் உண்டு. ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் இவ்வகையிலே விதந்து குறிப்பிடவேண்டியவர்கள். உ.வே. சாமிநாதையர் முதலிய தமிழ்நாட்டுப் பதிப்பாசிரியர்களுக்கு ஈழநாட்டிலிருந்து ஏட்டுச் சுவடிகள் அனுப்பப்பட்டுள்ளன. பழந்தமிழ் நூல்களின் பதிப்புரைகளிலே ஈழத்திலிருந்து பெறப்பட்ட ஏட்டுப்பிரதிகள் பற்றிய விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கருத்துப் பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுவர்.

தமிழகத்தின் தலைசிறந்த இலக்கிய, இலக்கணப் படைப்புக்கள் தமிழ் கூறும் நல்லுலகின் ஒரு பகுதியாக விளங்கிய இலங்கையில், குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் பயிலப்பட்டு வந்தன என்பதற்குச் சாட்சியாக அமைவன பத்தொன்பதாம் நூற்றாண்டில் பழந்தமிழ் நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு முயற்சிகளின் பொழுது பயன்படுத்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏட்டுப்பிரதிகளாகும். கந்தபுராணம் முதல் கம்பராமாயணம் வரை, தொல்காப்பியம் முதல் நேமிநாதம் வரை பெரும்பாலான நூல்களுக்கான ஏடுகள் யாழ்ப்பாணத்திலிருந்து பெறப்பட்டன. இது அந்நூல்களின் பதிப்புரைகளிலிருந்து தெரியவருகின்றது. யாழ்ப்பாணத்தில் இவ்வேட்டுப் பிரதிகள் எவ்வாறு கிடைத்தன, இவை எங்கிருந்து கொண்டுவரப்பட்டன. பிரதியெடுப்பு எவ்வாறு நடைபெற்றது என்பன போன்ற வினாக்களுக்கு விடையிறுக்க முனையும்பொழுது, யாழ்ப்பாணத்தில் நிலையான தமிழ்க் கல்விப் பாரம்பரியம் ஒன்று நிலவி வந்தது என்பதும்...

மேற்காட்டிய கூற்று ஈழத்தில் நீண்டகாலமாக ஒரு கல்விப் பாரம்பரியம் நிலவி வந்தமையை வலியுறுத்துகின்றது. யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலே பல தமிழ் இலக்கிய, இலக்கண, ஏட்டுப்பிரதிகள் சரஸ்வதி பண்டாரம் என்னும் நூல் நிலையத்திலே பேணப்பட்டமைக்குச் சான்றுகள் உள. சரஸ்வதி பண்டாரம் நிறுவப்பட்டிருந்த சூழலிலே தமது உறவினருடன் தங்கியிருந்து பொன்னம்பல உபாத்தியாயர் கற்றும் கற்பித்தும் வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பொன்னம்பல உபாத்தியாயரின் ஊரான வடமராட்சிப் பகுதிக்கும் தமிழ் நாட்டிற்கும் நீண்டகாலமாகவே வணிக, கலாசாரத் தொடர்புகள் நிலவிவந்துள்ளன. இத்தொடர்பு காரணமாகவும் வடமராட்சிப் பகுதியிலிருந்த இவருக்குக் கல்வி ஒழுக்க ஏடு கிடைத்திருக்கலாமெனக் கருதலாம்.

நாவலர் கல்வி மரபில் வந்தவரான பொன்னம்பல உபாத்தியாயரின் பதிப்பு முறைமையும் நாவலரைப் பின்பற்றியதாகவே காணப்படுகின்றது. பதிப்புமுறை பற்றி விரிவான பதிப்புரை எதையும் இவர் எழுதவில்லை. சிறிய முன்னுரை ஒன்று எழுதியுள்ளார். இம்முன்னுரையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

தெய்வப்புலமை ஔவையாரால் அருளிச் செய்யப்பெற்ற கல்வி ஒழுக்கம் என்னும் நூலில் மூலபாடம் ஏட்டுப் பிரதிகளிலுள்ள கரலிகித வழுக்களைந்து ஒருரையியற்றி வெளியிடலானேன். சொற்குற்றம் பொருட்குற்றம் முதலியன காணப்படின் அறிஞராயுள்ளோரறிவித்தால் குறிப்பிடத்தக்கது.

கல்வி ஒழுக்கம் "அஞ்சு வயதில் ஆதியை ஓது" எனத் தொடங்கி "வௌவிப் படிக்க வாழ்வுண்டாமே" என்பதுவரை மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடிப்படையிலே எண்பத்து நான்கு (84) நூற்பாக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. பெரும்பாலும் ஆத்திசூடியின் அமைப்பினைக் கொண்டுள்ள இந்நூல் கல்வியின் முக்கியத்துவத்தையே சுட்டிநிற்கின்றது. இதனாலேயே இதற்குக் கல்வி ஒழுக்கம் என்னும் பெயர் ஏற்பட்டது போலும்.

**உரையின் இயல்பு**

பொன்னம்பல உபாத்தியாயர் **சந்தனாசாரியார் புராணவசனம்** என்னும் நூலைப் பரிதாபி ஆவணியிலே (1912) எழுதியுள்ளார். செம்மையான உரைநடை எழுதும் ஆற்றலுள்ளவர் என்பதை அவரது வசனநூல் தெளிவாகக் காட்டுகின்றது. கல்வி ஒழுக்க உரை பெரும்பாலும் நாவலரின் ஆத்திசூடி உரையமைப்பிலேயே அமைந்துள்ளது. மேலதிக விளக்கம் தேவையெனத் தாம் கருதியவிடத்து அடிக்குறிப்புக்குள் விளக்கம் தருவதும், சிறுபான்மையாக இலக்கணக் குறிப்புக்கள் கூறுவதும் சிற்சில இடங்களிற் சொற்பொருள் விளக்கம் தருவதும் பாடபேதம் காட்டுவதும் இவரது உரையின் தன்மை எனலாம். இவரது உரையின் தன்மையைப் புலப்படுத்தப் பின்வரும் பகுதியைச் சுட்டிக்காட்டலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்கமுந் நூ லமுந் தோன்றக் கற்றறி (29)

இ - ள் சூக்கமும் - ஞானமும் நூ லமும் - கிரியையும், தேன்றக் கற்றறி - தெரிய நீ கற்றறி எ - று. சூக்கம் - நுண்பொருள். நூலம் - பருப்பொருள். என்பது ஒன்று.

சைகையுஞ் சமர்த்துந் தந்திடும் கல்வி (32)
சைகையும் - பழக்கத்தையும், சமர்த்தும் - திறமையையும், கல்வி தந்திடும் - கல்விப்பொருள் (ஒருவனுக்குக் ) கொடுக்கும் . எ - று
சைகை என்பது குறிப்பு என்றும் ஒருபொருள் கொள்ளலாம்.

போதக் கற்றவன் புண்ணியஞ் செய்தவன் (66)

போதக்கற்றவன் - நிரம்பக் கல்வி கற்றவன், புண்ணியஞ் செய்தவன் - தர்மஞ் செய்தவனாவான். போதங்கற்றவன் - என்று சில பிரதிகளிற் காணப்படுகின்றது.
போதம் - ஞானம்

இவ்வாறு கல்வி ஒழுக்க உரை அமைந்துள்ளது. ஔவையாரின் கல்வி ஒழுக்கம் என்னும் இச்சிறுநூல் ஈழத்துத் தமிழ் உரைமரபிலும் பதிப்புத் துறையிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. பொன்னம்பல உபாத்தியாயர் கிடைத்தற்கரிய இந்நூலைப் பதிப்பித்ததனூடும் அதற்கு உரையெழுதியதனூடும் ஈழத்து இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவராகின்றார். ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பற்றி ஆய்வு செய்த எவரும் இக் கல்வி ஒழுக்கப் பதிப்புப் பற்றியும் அதன் உரை பற்றியும் குறிப்பிடாமை விசனத்திற்குரியதே.

**அடிக்குறிப்புக்கள்**

1. துரைசாமிப்பிள்ளை, ஔவை, சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைநகர் 1958, பக். 418 - 419
2. வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அங்காதெமி, நான்காம் பதிப்பு, புதுடில்லி, 1980, பக். 181
3. சிவஞானம் , ம. பொ., "ஔவையார்", கலைமகள், தீபாவளிமலர், 1965, பக். 43
4. நேர்காணல் : க. குழந்தைவேலு, கரவெட்டி கிழக்கு, வயது - 90, 1982
5. பொன்னம்பல உபாத்தியாயர், க. (உரை), கல்வி ஒழுக்கம் - மூலமும் உரையும் , பதிப்புரை : குழந்தைவேலு, க., ஆனந்த நிலையம், இரண்டாம் பதிப்பு, கரவெட்டி, யாழ்ப்பாணம், 1958, பக் iv
6. சிவத்தம்பி, கா., "ஈழத்துத் தமிழ்க்கவிதைப் பாரம்பரியம்", சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு, 1984, பக். 35
7. பொன்னம்பல உபாத்தியாயர், க. (உரை), கல்வி ஒழுக்கம், முன்னுரை.
8. மேலது, பக். 5.
9. மேலது, பக். 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தில் தமிழ் உரை உருவாக்க மரபு

**செல்வி. த. ஜெலானி**
B.A Honest in Tamil (U O P),
M.A in Tamil (U O P),
M.Phil reading (U O P).

தமிழியல் மரபின் படைப்பாக்கப் பின்புலத்தில் இலக்கண இலக்கியங்களுடன், 'உரை' யும் மொழிப்புலத்தை மையமாகக் கொண்டதே. இலக்கண இலக்கியங்களுக்கான புரிதலை ஏற்படுத்தும் தொழிற்பாட்டைக் கொண்டது உரை. தமிழ் மொழிப் பயிற்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் உரைகளின் பங்களிப்பென்பது மிகவும் தேவைப்படும் ஒன்றாகும். இலக்கண இலக்கியங்களைக் கற்பதில் எளிமை உண்டாக்கும் முகமாக எழுந்த உரையானது காலவோட்டத்தில் தனித்த இலக்கிய வகைமையாகப் பரிணாமம் பெற்று நீள்கின்றது.

ஈழத்தில் தமிழ் உரை மரபு பற்றி நோக்குகையில் தமிழகத் தமிழியல் ஆக்க மரபின் ஊடாட்ட விளைவு முக்கிய காரணமாகும். இதற்கு, நீண்டகாலமாகத் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இடையே அரசியல் மற்றும் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப் பண்பாடு முதலானவை தொடர்பான உறவுகள் நிலவி வந்துள்ளமையே அடிப்படையாகின்றது. இதன் பாதிப்பு யாழ்ப்பாணத்தரசர் காலத்திலிருந்து அதிகமாகின்றது. ஆரம்ப காலத்தில் அரசியல், பொருளாதார ரீதியில் நிலவிய உறவு காலப்போக்கில் கல்வி, இலக்கியப் பணிகளில் ஆழம் கொண்டதாக வளர்ச்சி பெறுகின்றது.

கல்வி, இலக்கியப் பணிகள் எனும்போது ஈழத்திற்கும் தமிழ்நாட்டிற்குமிடையிலான தமிழ்ப் புலமையின் தொடர்பின் ஆரம்பம் இரு தளங்களில் நிலவியுள்ளது. அவை தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்து கல்வி, இலக்கியப் பணியாற்றுதல், ஈழத்திலிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்று தமிழ்ப்பணியாற்றுதல் எனும் இரு தளங்களாகும். இரு நாட்டுத் தமிழறிஞர்களினதும் தமிழ்ப் புலமையின் பரஸ்பர தமிழ் உணர்வுப் பரிமாற்றம் ஈழத்தில் தமிழ் மொழியின் பன்முக வளர்ச்சிக்கும் காரணமாயமைந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியர் வருகையுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் முதலியவற்றுக்கான பதிப்பு முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதில் ஈழத்தவரின் பங்களிப்பென்பது தவிர்க்க முடியாததாகும். அத்துடன், தரமான பதிப்புத் துறையின் முன்னோடிகளாகவும் ஈழத்தறிஞர்களே விளங்கியுள்ளனர். மேலும், தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படுவதற்கான அடித்தளமும் இலங்கைத் தமிழறிஞர்களாலேயே இடப்பட்டுள்ளது.

இக்காலகட்டத்திலேதான் தமிழ் நூல்கள் உரைகளுடன் பதிப்பிக்கப்பெற்றன. அத்துடன், புதிய உரைகளும் உரை ஆய்வுகளும் பதிப்புக் கலையுடன் இணைந்து வெளிவந்த தன்மையையும் காணமுடிகின்றது. பழைய உரைகள் அச்சுவடிவம் பெற்று வெளிவந்தபோதே அவற்றின் முதன்மையும் புதிய உரைகளின் தேவையும் தமிழுலகிற்குத் தெரிய வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்கான உரைகள் காலந்தோறும் தொடர்ச்சியாக, பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் எழுந்தவண்ணமுள்ளன.

அதனடிப்படையில், ஈழத்திலும் உரை உருவாக்க மரபினைத் தெளிவாக பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தே சான்றுகளுடன் பார்க்க முடிகின்றது. ஈழத்தில் யாழ்ப்பாணத்தரசர் காலத்திலோ அதற்குப் பின்வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலோ செய்யுள் நூல்கள் தோன்றியுள்ளமைக்கான சான்றுகள் கிடைக்கின்றனவேயன்றி, ஈழத்தெழுந்த எந்தவொரு நூலுக்கும் உரை எழுந்தமைக்கான சான்று ஏதும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் இக்காலத்தில் ஈழத்தெழுந்த செய்யுளிலக்கியங்களுக்கு உரையெழுதவேண்டிய தேவை இருந்திருக்கவில்லையோ எனலாம். அத்துடன் பெரும்பாலான இலக்கியங்கள் நாட்டார் இலக்கியவழிவரும் எழுத்திலக்கிய வடிவங்களாகவே காணப்பட்டன. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு ஈழத்து உரைமரபின் முக்கிய தடம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தையொட்டி இருந்துள்ளது. ஞானப்பிரகாசமுனிவர், கூழங்கைத்தம்பிரான் எனும் இருவரின் உரை உருவாக்க முயற்சியே ஈழத்து உரைமரபின் ஊற்றுக்கல்லாக அமைகின்றது. இது தொடர்பில் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் பின்வரும் கருத்தைப் பதிவு செய்கின்றார்.

"ஈழத்துத் திருநெல்வேலி என்னுமூரினரான ஞானப்பிரகாச முனிவர் சிவஞானசித்தியாருக்கு உரையெழுதியுள்ளார். இவர் போர்த்துக்கேயர் காலத்திலே அவர்களின் ஆட்சியின் கொடுமை தாங்காது ஈழத்தை விட்டுப் புலம்பெயர்ந்து தமிழகம் சென்று மரணபிரியந்தம் வரை அங்கேயே வாழ்ந்தவர். ஈழத்து ஞானப்பிரகாசர் சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு எழுதிய உரையையே ஈழத்து உரைமரபின் முக்கியமானதோர் மூலமாகக் கொள்ளவேண்டி இருக்கின்றது. ஈழத்து உரையாசிரியராகிய ஞானப்பிரகாசர் இந்தியாவில் இருந்தே சிவஞானசித்தியார் உரையை எழுதியார். இவ்வுரையை யாழ்ப்பாணம் இணுவில் நடராசையர் 1887 இல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்"

மேலும் அவர் "கனகசபாபதியோகி' எனும் பெயரால் அழைக்கப்பட்ட கூழங்கைத்தம்பிரானுடனும் அவர் மாணாக்கர் பரம்பரையுடனுமே தெளிவான உரை மரபும் உரையாசிரிய மரபும் துலக்கமடைய ஆரம்பிக்கின்றது என்பதனையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"நல்லைக்கலிவெண்பா, கூழங்கையர் வண்ணம், சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை, யோசேப்புப் புராணம் முதலியவற்றை இவர் இயற்றினார் என்பர். இவர் நன்னூலுக்கு ஓர் உரை எழுதியுள்ளார். நீண்டகாலமாகக் கிடைக்காதிருந்த இவ்வுரை 1980 இல் டாக்டர் தாமோதரன் அவர்களால் ஜேர்மனியில் உள்ள ஹைடல்பேர்க் பல்கலைக்கழகத்திலே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கூழங்கைத்தம்பிரானிடம் முறையாகப் பாடங்கேட்டவர்களுள் இருபாலை நெல்லைநாதமுதலியார், இருபாலை சேனாதிராயமுதலியார், மாதகல் மயில்வாகனப் புலவர், நல்லூர் ப. கந்தப்பிள்ளை, காபிரியேல் பச்சிக்கோ பாதிரியார் முதலானோர் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இம் மாணாக்கர் பரம்பரையின் ஊடாகவே ஈழத்து உரையாசிரிய மரபின் முகிழ்ப்பான போக்குகளைக் கண்டு கொள்ள முடிகின்றது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தெழுந்த இலக்கியங்களுக்கு உரையெழுதத் தொடங்குமுன் தமிழ்நாட்டுப் படைப்புக்களுக்கு ஈழத்தறிஞர்களினால் உரையெழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகைப் புலத்தில் ஈழத்து உரை உருவாகப் பின்புலத்தை பதிவு செய்ய வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

**உரை உருவாக்க மரபுப் பின்புலம்**

ஈழத்திலக்கிய வரலாற்றில் சங்க இலக்கிய அறிவுச் செயற்பாடுகளுக்கு முக்கிய இடம் உண்டு. இங்கு, பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கு உரை எழுதும் மரபு ஒரு சிறந்த இலக்கியப் பயில்வாக வளர்ச்சி பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. ஈழத்தில் உரைப்பாரம்பரியம் உருவாகுவதற்கு தமிழ்நாட்டுத் தமிழியல் மரபின் இடைத்தொடர்பு வழிவகுத்திருந்தது. ஈழத்து உரை மரபின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் அவதானிக்கும்பொழுது ஈழத்தில் நிலவிய புராணபடன மரபு, பரீட்சைகளை மையாமாகக் கொண்ட கல்வித் தேவைகள், அச்சியந்திர வருகையின் தாக்கம், பதிப்புலகில் ஈழத்தறிஞர் ஈடுபாடு காட்டியமை, புலமை வெளிப்பாட்டில் போட்டி மனப்பான்மை, சமயச் செயற்பாடுகள் முதலான விடயங்கள் பலவும் உரை உருவாக்கத்திற்கு ஏதுவான காரணிகளாய்க் காணமுடிகின்றது.

**ஈழத்தில் நிலவிய புராணபடன மரபு**

ஈழத்தின் உரையாசிரியப் பாரம்பரியத்தினை நுணுகி ஆராய்ந் தன்மையில் ஈழத்தில் உரைகள் தோன்றுவதற்கான முக்கிய காரணியாக இங்கு நிலவிய புராணபடன மரபு அமைந்திருந்தமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. பொதுவாக ஈழத்துச் சைவ ஆலயங்களிலே வருடாவருடம் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், சிவராத்திரிபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலான சில முக்கிய புராணங்கள் படித்துப் பயன் சொல்லும் மரபு காலங்காலமாக நிலவி வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இது மிக முக்கியத்துவம் வாய்ந்த சமய நிகழ்வாகவும் கொள்ளப்படுகின்றது.

புராணத்தை ஒருவர் இசையோடு வாசிக்க அதற்கு இன்னொருவர் பொருள் கூறுவது புராணபடனம் என்று அழைக்கப்படுகின்றது. புராணத்திற்குப் பொருள் கூறுவதைப் பயன் சொல்லுதல் என்றே அழைப்பர். "புராணத்தின் பயன் அதன் உரையே என்ற கணிப்பீட்டின் வெளிப்பாடாகவே இச்சொல் வழக்கு நிலவியதெனக் கருதலாம். சாதாரண பொதுமக்கள் புராணத்தைக் கேட்டுப் பயன்பெறுவது செய்யுளாலன்றி அதன் உரையாலே நிகழ்ந்துள்ளமையும்" குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் கலாசாரம் 'கந்தபுராணக் கலாசாரம்" எனக் குறிப்பிடப்படுமளவிற்கு ஈழத்தில் புராணபடன மரபு செல்வாக்குப் பெற்றிருந்தமையும் அவதானிக்கத்தக்கது.

ஈழத்து மரபுவழித் தமிழறிஞர்களிற் பலர் புராணபடன மரபுடன் தொடர்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். புராணப்படிப்பு எனும் புராண படன மரபிற் பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை (வியாக்கியானம்) முதலியன முக்கியம் பெற்றுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. இவ்வகையில் நோக்கும்பொழுது உரை மரபுக்குரிய கூறுகளில் பெரும்பாலானவற்றை இப்புராண படன மரபில் கண்டுகொள்ள முடிகின்றது. பொதுவாக ஈழத்தில் நிலவிய வாய்மொழி உரைமரபு இப்புராணப் படிப்பிலிருந்தே உருவாகியிருக்கின்றமையும் அவதானிக்கத்தக்கது.

புராணபடன மரபிலே பயன் சொல்வோரின் இலக்கிய, இலக்கண ஆளுமைக்கேற்ப உரையும் விரிந்து செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. வாய்மொழியாக வழங்கி வந்த புராணபடன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபினூடாக ஓர் உரைமரபுப் பாரம்பரியம் நிலவி வந்துள்ளமையைக் காணமுடிகின்றது. புராண படன ஆசிரியர்கள் புராணங் கேட்போரின் மனங்கொண்டு ஆற்ற வேண்டிய கடப்பாடுகளை நாவலர்கள் புராணபடன விதியாகக் கூறியுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

"…. இலக்கணப் பிழை இல்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாத இடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல் வேண்டும்" என்ற நாவலருடைய கருத்தும் செய்யுளுக்கான பொருள் சொல்லல் என்ற நிலையில், புராணப்படிப்புத் தரும் உரைமரபு உருவாக்கப் பின்புலத்தை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். ஆளுமை மிக்க புராணபடன உரையாசிரியர்கள் வாய்மொழியாக விட்டுச் சென்ற உரைமரபு பின்வந்த மரபுவழி உரையாசிரியர்களினால் உள்வாங்கப்பட்டு உரைப்பனுவல்களாக வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில், சைவசமய வளர்ச்சியின் பொருட்டும் தமிழ்க்கல்வி வளர்ச்சியின் பொருட்டும் ஈழத்துத் தமிழ் அறிஞர்களினால் உருவாக்கப்பட்ட புராணபடனம், ஈழத்து உரைமரபில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது. பாடங்கேட்டல் மரபின் வளர்ச்சிப் படிநிலையாக ஈழத்தில் புராணபடன மரபு முக்கியமானதாக மேலெழுந்தது. இது, உரை உருவாக்கத்திற்கான அடிப்படைகளுள் ஒன்றாக அமைந்து கொண்டது. இதன் தாக்கத்தை அதிகமாக புராணங்களினதும் திருமுறைகளினதும் உரைகளில் காணமுடிகின்றது.

**கல்வித் தேவைகள்**

ஈழத்து உரை மரபில் அதிகமான இலக்கியங்களுக்கான உரை உருவாக்கத்தில் சமயத்தின் தாக்கத்தை விட, கல்வித்தேவையே பிரதானமாயமைந்துள்ளது. குறிப்பாக சங்க இலக்கியங்களுக்கான உரை உருவாக்க முயற்சியில் இதன் தாக்கத்தைக் கண்டுகொள்ளலாம். மரபுவழிக் கல்வியில் உரையுடன் இலக்கிய இலக்கணங்கள் போதிக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

தமிழ்ப்புலத்தில் வழங்கி வந்த மரபுவழிக் கல்வி மரபில் "பாடங்கேட்டல்" எனும் கல்வி முறைமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது ஆசிரியர் சொல்லும் பாடங்களைக் கேட்டல் என்ற பொருளில் மாத்திரமன்றித் தமக்குத் தெரியாத விடயங்களை குறிப்பாகத், தாம் கற்கின்ற இலக்கிய இலக்கணச் செய்யுளுக்கான பொருளை, விளக்கங்களை ஆசிரியரிடம் கேட்டறிந்து கொள்ளுதல் என்ற பொருளையும் உள்வாங்கியிருக்கலாம். இத் தன்மையினடிப்படையில் நோக்கும்பொழுது, மாணவர்களின் கேள்விகளுக்கு விடைகொடுக்கும் முயற்சியிலும் அவர்களுக்கான சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் தன்மையிலும் அவ்வாசிரியப் பாரம்பரியத்திலிருந்தும் உரை உருவாக்கத்திற்கான பின்புலத்தை அணுகமுடிகின்றது.

ஈழத்தில் நிலவிய கல்வி மரபினூடாக உரையாசிரிய மரபும் வளர்ந்து வந்துள்ளது. ஆசிரியனிடமிருந்து மாணவனுக்கும், பின் மாணவனிடமிருந்து தன் பின் வருகின்ற தலைமுறைக்கும் பாடங்கேட்டலினூடாக இவ்வுரைமரபு வளர்ந்து வந்திருக்கின்றதெனலாம். 'இறையனார்களவியல்" உரையிலே இடம்பெறும் மரபு போன்ற ஒரு தொடர்ச்சி ஈழத்து உரை மரபிலும் நிலவியுள்ளது எனக் கருதலாம். பொதுவாகத் தமிழ் உரை மரபின் உருவாக்கத்திற்கு அடிப்படையாயமைந்தது போலவே ஈழத்து உரையாசிரியப் பாரம்பரியம் கல்வித் தேவையினடியாகத் தோன்றி வளர்ந்து வந்துள்ளமையை ஈழத்தில் நிலவிய கல்விச் செயற்பாடுகளினூடாக அறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியுமாகின்றது. "இலக்கிய, இலக்கணங்களைப் பாடஞ் சொன்ன ஆசிரியர்கள் பாடஞ் சொல்லுவதற்காகப் படித்துள்ளனர். படிக்கும்போது புதியதாக வருஞ் சிந்தனைகளையும் குறித்து வைத்துக்கொண்டு பாடம் நடத்தியுள்ளனர். மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடைகூறும் பொழுதும் சில சிக்கல்களை விடுவிக்கும்பொழுதும் உருவாகும் பிரச்சினைகளையும் குறித்து வைத்திருக்கின்றனர். பின்னர் உரையெழுதும்பொழுது அக்குறிப்புக்கள் மிகவும் பயனுடையவையாக இருந்திருக்கின்றன. கணேசையரின் தொல்காப்பிய உரைக்குறிப்புக்கள் அந்த வகையில் எழுந்தவையென்பதை அதன் பதிப்புரையும் முன்னுரையும் தெளிவுபடுத்துகின்றன."

மரபுவழிக் கல்விமரபிலிருந்து நிறுவனரீதியான கல்வி மரபு உருவாகி வளர்ந்தபோது பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி நடவடிக்கைகள் முக்கியமாக அமைந்தன. அவ்வகையில் பரீட்சை நோக்கில் பாடப்புத்தகங்களின் தேவையும் அதிகரித்தது. ஆதலால், பரீட்சைக்கென பரிந்துரை செய்யப்பட்ட பாடநூல்களாக அமைந்த இலக்கிய, இலக்கண நூல்களுக்கு உரையெழுதவேண்டியதன் அவசியம் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இப்பின்புலத்தில் ஈழத்து உரைமரபின் அடுத்தகட்ட பரிமாணத்தைக் கண்டுகொள்ள முடிகின்றது. இந்நிலையில் மாணவர்களின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டதோடு மட்டுமல்லாமல், தெளிவான, பொருத்தமான ஆராய்ச்சி நோக்கோடு உரைகள் எழுதவேண்டும் என்பதில் ஆர்வம் செலுத்தியுள்ளமையையும் அவதானிக்கலாம்.

தொடக்கத்தில் பண்டித, பாலபண்டித முதலான பரீட்சைகளை நோக்கமாகக் கொண்டு தேவையான நூல்களுக்கு உரையெழுதியதோடு, தொடர்ந்து பிற்பட்ட காலங்களில் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குரிய பாடநூல்களாக அமைந்த இலக்கண, இலக்கியங்களுக்கும் உரைகள், உரைவிளக்கக் குறிப்புக்கள் எழுதும் வழக்கம் நிலவியுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. "வில்லிபாரதம், கிருட்டினன் தூதுச்சருக்கம், நைடதம், நீதிநெறிவிளக்கம், கந்தபுராணம் வள்ளியம்மை திருமணபடலம், இரகுவமிசம் முதலான இலக்கிய நூல்களுக்கும், நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை முதலிய இலக்கண நூல்களுக்கும் கல்வித்தேவையை மனங்கொண்டே உரைகள் எழுதப்பட்டன எனலாம்"

இவ்வகையில் பார்க்கும் பொழுது கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டும் உரை எழுந்ததற்கான சூழல் நிலவியமையை ஈழத்தில் நிலவிய கல்விச் செயற்பாடுகளின்வழி அறிய இயலுமாகின்றது. தமிழ்க் கல்வியில் ஆர்வமுடன் பயிலும் மாணவர்களின் புலமை விருத்தியின் பொருட்டும் உருவாகிய உரைமரபினடியாக பரிந்துரைக்கப்பட்ட பாடநூல்களுக்குப் பெருமளவு உரைகள் ஈழத்தில் தோன்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### சில உந்துதல்கள்

ஈழத்தில் தமிழ் உரைமரபு உருவாக்கத்தில் புராணபடன மரபு, கல்வித் தேவைகள் என்பவற்றை விடவும் வேறு சில உந்துதல்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைக் காணலாம். மேற்கத்தேயவரின் வருகையுடன் இடம்பெற்ற கிறிஸ்தவ மிசனறிமாரின் நடவடிக்கைகள், ஆங்கிலங் கற்ற தமிழறிஞர்களிடையே ஏற்பட்ட புத்தூக்க உணர்வு, பழந்தமிழ் நூல்களைப் பேணிப்பாதுகாத்துப் படிக்கவேண்டுமென்ற உயரிய மனப்பாங்கு முதலியன உரை உருவாக்க உந்துதல்களுக்கு அடிப்படைக் காரணிகளாயமைந்தன. இவ்வுந்துதல்களைச் செயற்படுத்த அச்சியந்திரத்தின் பயன்பாடு பெருந்துணை புரிந்ததெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களுக்கான உரைகள் தோன்றுவதற்கு சில சங்கங்களும் அரும்பணியாற்றியுள்ளமையைக் காணலாம். இவற்றுள் மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் முதலானவை விதந்து குறிப்பிடத்தக்கவை. இச்சங்கங்களின் ஊக்குவிப்பு முயற்சிகளுக்கு அடிப்படையாக தமிழ் மறுமலர்ச்சி, தமிழ் நூற்பேணுகை, தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்புதல், உரைகளை எழுதுவித்து வெளியிடுதல் முதலான நோக்கங்கள் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. "ஈழத்து அறிஞரால் உரையெழுதப்பட்டு எவராலும் அறியப்படாதிருந்த ஐங்குறுநூறு உரை, ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டமையும் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு தரப்பினரிடையேயும் முகிழ்த்த உத்வேகத்தினடியாகவும் ஈழத்து உரை மரபின் பன்முகப்பட்ட வளர்ச்சிப்போக்குகளை அவதானிக்கலாம். அந்த வகையில் ஆங்கிலங் கற்ற மத்தியதர வர்க்கத்தினரின் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கவை. தமிழ் மொழி ஆர்வமும், விழிப்புணர்ச்சியும் இவ் அரச உத்தியோகத்தர்களிடம் காணப்பட்டமையினால் உரை உருவாக்க மரபில் அவர்களின் பங்களிப்பும் அளப்பரியதாகும். "ஆங்கிலக் கல்வியைப் பெற்று அரச உத்தியோகங்களில் அமர்ந்த தமிழபிமானிகளிடையே தோன்றிய புத்தூக்கமும் ஈழத்து உரை மரபுக்கு உந்து சக்தியாய் ஓரளவுக்கு அமைந்திருந்தது என்று கருதலாம். இவர்களது உத்தியோகச் சூழலும் தொல்சீர் இலக்கியங்களையும், பிற்கால இலக்கிய, இலக்கண ஆர்வத்தினைத் தூண்டியிருக்கலாம்."

மேலும், இக்காலப்பகுதியில் ஈழத்தில் அச்சியந்திரப் பயன்பாடு பரவலாகியமையும் உரை உருவாக்க மரபில் முக்கிய உந்துசக்தியாக அமைகின்றது. தமிழ் நூற் பரம்பலுக்கு அச்சியந்திரத்தின் பணி அளப்பரியதாகும். இவ் அச்சியந்திரத்தின் பல்வேறு பயன்பாடுகளுள் பழந்தமிழ் நூல்களுக்கு உரையெழுதி வெளியிடுதல் முதன்மை வாய்ந்ததாக அமைந்ததெனலாம். குறிப்பாக, பத்தொன்பதாம் நூற்றாண்டளவில், தமிழ்ப் புலமை ஆறுமுகநாவலருடைய பணிகளில் பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தல், பண்டைய தமிழ் நூல்களுக்கு உரையெழுதுதல், பாடப்புத்தகங்களை எழுதுதல் முதலான விடயங்களுக்கு அச்சியந்திர வசதியே உறுதுணையாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. அச்சியந்திரத்தின் பயன்பாட்டினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'பதிப்பு முயற்சிகளும்' ஈழத்துத் தமிழ் உரை உருவாக்க வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தன எனக் கொள்ளலாம். அச்சுவாகனம் ஏறிய நூல்கள் மக்கள் மத்தியிலே மிக வேகமாகப் பரவத்தொடங்கியதுடன், அவற்றைப் படிப்போர் பொருள்விளங்கிப் படிக்கவேண்டுமென்று கருதிய அறிஞர்கள் பலரினால் இலக்கிய, இலக்கணங்களுக்கு உரையெழுதப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது.

"பாடநூல்களாக அமைந்த இலக்கிய, இலக்கண நூல்களுக்கு முழுமையாக இல்லாவிடினும் பகுதிபகுதியாகவேனும் உரைகள் எழுதி வெளியிடுவதற்கு அச்சியந்திரத்தின் பயன்பாடே உதவியதெனலாம். நாவலரைத் தொடர்ந்து ஈழத்திலே, சிறப்பாக யாழ்ப்பாணத்திலே அச்சுக்கூடங்களை நிறுவியவர்களிற் பெரும்பாலானவர்கள் தமிழிலக்கிய, இலக்கணங்களில் புலமை பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். நாவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வல்வை வைத்தியலிங்கம்பிள்ளை, வதிரி சி. நாகலிங்கம்பிள்ளை, வண்ணார்பண்ணை சி. தாமோதரம்பிள்ளை, கல்வியங்காடு மாணிக்க முதலியார் முதலிய தமிழ் புலமையாளர்கள் அச்சுக்கூடங்களை நிறுவிப் பணியாற்றியுள்ளனர்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உரை உருவாக்க மரபினை நுணுகி ஆராயும்பொழுது, உரைப்பனுவல்களின் தோற்றத்திற்குப் பழந்தமிழ் உரையாசிரியர்களின் உரைகளை மேலும் விளக்கமடையச் செய்யவேண்டும். இலகுவாக்க வேண்டுமென்ற உந்துதலும் ஈழத்து உரைமரபில் குறிப்பிடக்கூடிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளதெனலாம். "மூலநூற்பாக்களை விளங்கிக்கொள்வதிலேற்பட்ட சிக்கல்களும், சிற்சில கருத்து முரண்பாடுகளும் ஈழத்திற் புதிய உரைவிளக்கக் குறிப்புக்கள் தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்தன எனவும் கருதலாம். அரசஞ்சண்முகனாருக்கும் கணேசையருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடும் தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்புக்களின் தோற்றத்திற்கு ஒரு வலுவான காரணி ஆகலாம்"

இவ்வாறாக, புராணபடன மரபு, கல்வித்தேவைகள், ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்களினதும் அபிமானிகளினதும் புத்தூக்கம், ஈழத்தில் நிறுவப்பட்டிருந்த சங்கங்களின் செயற்பாடுகள், ஆராய்ச்சி மனப்பாங்குகள், வித்துவப்போட்டி மனப்பான்மைகள் முதலான பல்வேறு காரணிகள் ஈழத்தில் தமிழ் உரை உருவாக்கப் பாரம்பரியத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியுள்ளன எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழி புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு

திரு. ர. கஜேந்திரன்
தமிழ்ச்சிறப்புக்கலை (3ம் வருடம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விலங்கு நிலையில் இருந்து மனிதனை வேறுபடுத்தும் முக்கியமான கருவி மொழியாகும். மொழி ஆற்றல் வாய்ந்த கருத்துப் பரிமாற்றத்திற்கான தலையாய கருவி. மனிதனின் எண்ணங்கள், ஆசைகளை, சிந்தனைகளைப் பல்வேறு வகைகளில் ஏற்றவாறு வெளிப்படுத்தும் ஓர் ஒப்பற்ற சாதனமாகவும் இயங்கு தன்மை கொண்ட இயந்திரமாகவும் விளங்குகின்றது. மொழி சமுதாயம் சார்ந்தது. மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை. அதே போன்று சமுதாயம் இல்லையேல் மொழியும் இல்லை . இந்த இரண்டறக் கலந்த உறவை அடிப்படையாகக் கொண்டே மொழியானது அது சார்ந்துள்ள சமூகத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கும் கண்ணாடி என்று குறிப்பிடப்படுகிறது. இன்றும் சொல்லப்போனால் மனித நாகரிகத்தோடும் சமுதாய உறவுகளோடும் பின்னிப் பிணைந்து இயங்கி வருகின்றது.

ஒவ்வொரு மொழியும் தனக்கென தனித்துவமான வரலாற்றை உடையது. அவ்வகையில் தனித்துவமான மிக நீண்ட வரலாற்றை உடைய பல மொழிகள் உள்ளன. அவற்றுள் கிரேக்கம், இலத்தீன், அரபு, உருது, பாரசீக மொழிகள் குறிப்பிடத்தக்கவை. அவ்வாறான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. தமிழ் மொழி பன்னெடுங்காலமாக வளர்ச்சியடைந்து செழுமையுற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கு தமிழ்மொழியின் இலக்கண, இலக்கிய வளம் சான்றாகின்றது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்கே உலகு", "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" முதலியன மொழியின் தோற்றம் பற்றிய கூற்றுக்களாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்" என மொழிப்புலமை வாதிகள் மொழிப் பழமைவாதம் பற்றிப் பேசியுள்ளனர். இவ்வாறு பழமைவாதம் பற்றி பேசி இருப்பினும் அவர்கள் பழையன கழித்து புதியன புகுத்தும் முயற்சியால் நாகரிகத்தினால் ஏற்படுகின்ற சமூக மாற்றத்தின் காரணமாக மொழியானது புதுமையாக்கப்படுகின்றது. அதாவது காலம் காலமாகப் பேணிவரும் பழமையில் இருந்து விடுபட்டும் சில பழமைகளோடு இணைந்தும் புதுமையை நாடி நிற்றல் அல்லது புதுமையை நோக்கி பயணித்தல் மொழி புதுமையாக்கம் எனப்படும்.

நவீன காலம் என்பது புதிய வாழ்க்கை மதிப்பீடுகளைக் கொண்ட காலம் ஆகும். எனவே புதிய மதிப்பீடுகளைக் கொண்ட தமிழையே நவீன தமிழ் அல்லது புதிய தமிழ் என்போம். சமூக வளர்ச்சியில் ஆட்சி அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள், என்று புதிய அமைப்புகள் உருவாகும் போது அவற்றின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மொழியானது மாறுதலடைந்து புதுமையாக்கத்திற்கு உள்ளாகிறது. இப்புதுமையாக்கத்தின் பயனாக பேச்சு மொழியில் மட்டும் வெளிப்பட்டு வந்த வட்டார வழக்கானது எழுத்துத் தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்து கொள்கிறது. இதனால் குறித்த ஒரு வட்டாரத்திற்கு மாத்திரம் ஏற்புடையதாக காணப்பட்ட வட்டார வழக்கானது பல தமிழ்ச் சமூகத்திலே விரிவடைகின்றது.

உயிருள்ள மொழிகள் எல்லாம் மாற்றம் பெறுகின்றன. மொழிகள் நீண்டகால வாழ்வின் பின்னர் சிறு சிறு மாற்றங்களைப் பெற்று ஒன்று இன்னொன்றாக மாறிப் புதுமையடைகின்றது. இம் மாறுதலுடன் கூடிய புதுமையாக்கத்திற்கு அறிவு நிலையில் ஏற்படுகின்ற வளர்ச்சியும் காரணமாக அமைகின்றது. அதாவது உலகளாவிய அறிவின் அடிப்படையில் பல அறிவுத் துறைகளின் கருத்துக்களும் பிரச்சினைகளும் எழுதப்படுகின்றன. எனவே வட்டார வழக்கு மற்றும் அறிவு வளர்ச்சி என்பன குறுகிய வட்டத்தை விட்டு வெளிவந்து மொழியின் பொருள் மற்றும் வடிவத்தில் புதிய சொல், புதிய தொடர்கள், புதிய நடைகள், வெளியீட்டு வடிவங்கள் என பல தூய்மைப்படுத்தப்பட்ட நோக்கிலே மொழி தூய்மையாக்கப்படுகிறது.

மொழித்தொடர்பு, மொழிக்கலப்பு அதனால் ஏற்படும் மொழிமாற்றம் என்பவற்றின் அடிப்படையிலேயே மொழித்தூய்மை நோக்கத்தக்கது. முழுமையாக எந்தவிதமான வெளித்தொடர்பும் அற்ற ஒரு சமூகத்தில் மட்டுமே மொழித்தூய்மை என்பது சாத்தியமாகிறது. ஆனால் தற்காலத்தில் அத்தகைய சமூகத்தைக் காண்பது அரிது அல்லது காணவே முடியாது என்றே கூறலாம். மொழி வளர்ச்சி நடவடிக்கைகளில் பிற மொழிக்கூறுகளை விலக்கி தாய்மொழி கூறுகளை மட்டும் பயன்படுத்துவதையே மொழித்தூய்மை என்ற சொற்றொடர் குறித்து நிற்கிறது. இத் தூய்மையாக்கத்தின் காரணத்தால் பழைய சொற்கள் நீக்கப்பட்டு புதிய தமிழ்ச் சொற்கள் சேர்க்கப்படுகிறது.

தமிழானது தன் பரப்பிலேயே விரிவடைகின்ற போது அதனை பாதுகாக்க வேண்டும் என்பது தமிழின் புதுமையாக்கத்திலே நேரடியான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. புதிய இலக்கியவாதிகளினாலும், பத்திரிகையாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட எளிமையாக்கமானது மொழியை புரிந்து கொள்ள இலகுபடுத்தியது. மேலும் இவ் எளிமையாக்கமானது பேச்சு தமிழிற்கும் எழுத்து தமிழிற்கும் உள்ள இடைவெளியைக் குறைத்தல், சொல்லின் வடிவ வேறுபாடுகளைக் குறைத்தல் என்ற வகையில் முக்கியம் பெறுகின்றது. இதற்காக தற்காலத்தில் தரிப்புக் குறிகளை பயன்படுத்தி மொழியின் புரிந்து கொள்ளலை அதிகரிக்கிறது.

புதுமையாக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொழித் தூய்மையாக்கமும் மொழி எளிமையாக்கமும் தமக்கிடையே முரண்பாட்டினைக் கொண்டதாகவே காணப்படுகிறது. குறிப்பாக சொல்வதானால் அதற்கு நேரெதிரான ஒன்றாக தூய்மையாக்கம் காணப்படுகிறது. இவ்விரண்டிற்கும் இடையிலான முரண்பாடே புதிய தமிழை நிர்ணயிக்கிறது.

மொழிப் புதுமையாக்கத்திலே 03 பொதுவான கூறுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவையாவன, தொழில்நுட்பத் திறன், மொழி வளவிருத்தி, மொழிப்பொருள் அமைப்பில் ஏற்படுகின்ற மாறுதல்கள் என்பனவாகும். தொழில்நுட்பத்திறனை எடுத்துக்கொண்டால் தட்டச்சு, அச்சுப்பொறி, கணிப்பொறி தொழில்நுட்ப சாதனங்கள் மொழியினை முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்த வாய்ப்பளிக்கின்றன. இவற்றைத் தாண்டி இன்று பூகோளமயமாதலின் தூண்டுதலினால் தொழில்நுட்பத் திறன் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் அனைவராலும் பயன்படுத்தப்படுகின்ற திறன் தொலைபேசிகளிலே மொழிப்புதுமையாக்கம் இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையாக்கத்தில் முக்கியம் பெறுகின்ற மொழிவள விருத்தியை நோக்கினால் இவ்விருத்தியானது மொழிப் பன்னிலை நோக்கிலே மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக தமிழில் அறிவியல் கலைச்சொற்கள், சட்டக்கலைச்சொற்கள் என்றும் இதழியல் நடை, நிர்வாக மொழி நடை, சிறுகதை வடிவம், விளம்பர வடிவம் என்றும் மொழியாக்கத்தில் புதிய மொழி நிலைகள் தோன்றியிருக்கின்றன. இவற்றில் புதிய ஒலியன்கள், மெய்மயக்கங்கள், புதிய தொடர்கள், தர்க்கரீதியான தொடர் அமைப்புக்கள் என்பன தோன்றியுள்ளன.

புதிய சமூக மதிப்பீடுகளை வெளியிடும் வகையில் அமையும் மொழிப்பொருள் அமைப்பில் புதுமையடைகிறது. எடுத்துக்காட்டாக ஆரம்பகால சமூகத்திலே குலத்தின் அடிப்படையில் பேசப்பட்ட நாவிதன், வண்ணான், என்பன முறையே தொழில் அடிப்படையில் முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளி எனப் பேசப்படுகிறது. இம் மாறுதல் மொழியிலே புதுமையாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு மொழி பேசுவோரின் பண்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் புதுமையாக்கம் இடம்பெறுமாயின் அது மொழியில் ஆழ்ந்த மாறுதல்களை ஏற்படுத்தும் மாறாக திட்டமிட்டு பல்வேறு துறை சார்ந்தவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற புதுமையாக்கமானது வேரற்ற மரம் போல சமூகத்தோடு ஒட்டாது காணப்படும் உதாரணமாக திட்டமிட்டு பல்வேறு துறையினரால் அந்தந்த துறையினர்களுக்கென கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு அவை பயன்படுத்தப்படாமல் அகராதிகளிலே முடங்கியிருப்பதை சுட்டிக் காட்டலாம்.

புதுமையாக்கத்தில் சமூகப் போக்கிற்கு ஏற்ப வாழ்க்கைப் பின்னணியும், கல்வித்தகுதியும் நோக்கங்களும் பயிற்சியும் கொண்டவர்களால் மொழியானது வரையறைப்படுத்தப்படுகிறது. இவ் வரையறைகள் மொழிப் புதுமையாக்கத்திலே ஊடாடுவதால் புதிய தமிழிலேயே மயக்கநிலை காணப்படுகிறது. அதாவது பழந்தமிழிலே காணப்பட்ட விதிகள் முற்றாக புறக்கணிக்கப்படாமலும் புதுமையாக்கத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட புதிய விதிகள் முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளப்படாமலும் மயக்கநிலையிலேயே புதிய தமிழானது காணப்படுகிறது எனலாம். இத்தகைய மயக்க நிலையின் ஆய்வின் முடிவாக தோன்றியதே அகராதிகள் ஆகும்.

பேச்சுத் தமிழிலே ஒவ்வொரு நாட்டினருக்கும் வேறுபாடு காணப்பட்டாலும் எழுத்துத் தமிழானது குறிப்பிடத்தக்களவு ஒன்றாகக் காணப்படுகின்றது. எனவே இத்தகைய வேறுபாடுகளை புதிய தமிழில் குறைப்பதிலும் வளர்ப்பதிலும் அகராதிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அகராதிகளைத் தவிர புதிய தமிழின் கூறுகளை நிலைப்படுத்துவதற்கு சாதனங்களும் தேவைப்படுகின்றன. இச் சாதனங்களில் புதிய இலக்கண நூல்கள், அகராதிகள், மொழிப் பயன்பாட்டு கையேடுகள் முக்கியம் பெறுகின்றன. இவைபுதிய விதிகளை நடைமுறைப்படுத்தவும் மயக்க நிலையை குறைப்பதற்கும் அவசியமாகின்றன. மேற்கோள் நூல்களினால் நன்மை கிடைக்கின்றது. நூல்கள் அனைவருக்கும் பொதுவானவையாக காணப்படுகிறது. நூல்களில் உள்ள விடயங்கள் தேவையான சொற்களை சுதந்திரமாகவும் விரும்பிய நேரத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

அகராதிகள் மொழிப் புதுமையாக்கத்திலே பெரும் பங்காற்றுகின்றன. இவ் அகராதிகள் தொகுத்தவரின் அல்லது வெளியிட்டவரின் கருத்தாக அல்லாமல் சமூக மதிப்பீடுகளை பிரதிபலிப்பதாக அமைகிறது. அகராதி என்பது அகர வரிசைப்படி அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு மொழியின் சொற்களையும் அவற்றுக்கான பொருளையும் சில சமயங்களில் அச்சொற்கள் தொடர்பான வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல விபரங்களையும் கொண்டுள்ள நூலைக் குறிக்கும். இவ்வாறு தமிழ்ச்சொற்களுக்கான பொருள் மற்றும் விவரங்களைத் தரும் நூல் தமிழ் அகராதி ஆகும்.

தமிழ் அகராதிகள் தோன்றுவதற்கு முன் தமிழ்ச் சொற்களின் பொருள்களை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டவை நிகண்டுகள் எனப்பட்ட நூல்களாகும். இதிலே சொற்கள் பொருள் அடிப்படையில் இரு தொகுதிகளாக செய்யுள் வடிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். இதனை மனப்பாடமாக வைத்திருப்பவர்களுக்கே அன்றி மற்றவர்கள் பொருளை தேடியறிதல் மிகவும் கடினமானது. எனவே நிகண்டில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கான முயற்சியிலே தோன்றியதே இவ் அகராதி ஆகும்.

புதுமையாக்கத்திலே இன்று தமிழ் மின் அகராதி கணனி, தொலைபேசி என்ற கருவிகளில் பிறமொழிச் சொற்களுக்கு தமிழில், தமிழ்ச் சொற்களுக்கு பிறமொழிச் சொற்களில் என பல வழிகளில் பொருள் தருமாறு வேகமாக உருவாக்கப்படும் அறிவியல் தொழில் நுட்ப கலைச்சொற்களை தமிழில் உருவாக்கி பகிர்ந்து பயன்படுத்த உதவுகிறது.

எம் தமிழுக்கு "கன்னித்தமிழ்" என்பது ஒரு அழகான கற்பனையே உண்மையில் தமிழும் மற்ற உயிரோட்டமுள்ள உலக மொழிகள் அனைத்தையும் போலவே காலம் தோறும் மாறி மாறி வந்துள்ளது. இம் மாறுதல்களுக்கு சான்றாக நாம் அகராதிகளை காட்டமுடியும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழ் மொழியின் சொற் செல்வத்தை அரும்பாடுபட்டு தமிழுலகிற்கு வழங்கிய "தமிழ் பேரகராதி" தமிழ்மொழி வரலாற்றில் ஒரு மைல்க்கல்லாகும். அதைப்போலவே 21ம் நூற்றாண்டின் நுழைவாயிலில் காத்திருக்கும் தற்காலத் தமிழின் மாற்றங்களையும் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் கண்ணாடியாக விளங்கும் "க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி"யும் தமிழ் வரலாற்றில் மற்றொரு மைல்க்கல்லாகவே காணப்படுகிறது.

தற்காலத் தமிழின் பரந்தளவிலான பயன்பாட்டினை பிரதிபலிக்கின்ற செய்தித்தாள்கள், வார, மாத, இதழ்கள், சிறுகதைகள், நாவல் முதலிய படைப்பிலக்கியங்கள், வேளாண்மை, அறிவியல் போன்ற துறை நூல்கள், ஒலி - ஒளி பரப்பு தமிழ் நடை போன்ற தரவு மூலங்களிலிருந்து ஏறத்தாழ 40000 பக்கங்களை படித்துப் பார்த்து அவற்றில் 16000 சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ஆக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் மொழியில் ஏற்பட்டிருக்கின்ற புதுமையாக்கத்தைப் பற்றி அறிய உதவுகிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் புதுமையாக்கத்தின் விளைவால் உண்டான தற்காலத் தமிழைச் சரியாகப் புரிந்து கொண்டு பயன்படுத்தவும் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தற்காலத் தமிழை புதிதாக கற்பதற்கும் இவ் அகராதி தொகுக்கப்பட்டுள்ளது என அகராதியின் பொறுப்பாசிரியர் டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் கூறியிருப்பது புதுமையாக்கத்திலே அகராதியின் போக்கு எத்தகையது என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது.

தற்காலத் தமிழ் என்பது தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னரான மொழி என பொதுமைப்பாட்டிலே நோக்கப்படுகிறது. இந்த அகராதி தற்கால எழுத்து தமிழுக்கானது என்ற எல்லையும் வரையறுக்கப்பட்டுள்ளது. தற்கால எழுத்து தமிழில் இடம்பெற்று விட்ட வட்டார, சமூக, மத வழக்குகளும் ஓரளவு பேச்சுத்தமிழும் க்ரியாவின் தற்காலத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக இலங்கைத் தமிழில் ஈ என்று விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ் அகராதியில் கொச்சைத் தமிழ்ச் சொற்கள் இடம் பெறவில்லை. இருப்பினும் கொச்சைத் தமிழ் சொற்கள் பேச்சுத் தமிழில் இருந்து எழுத்துத் தமிழில் புகுந்து எதிர்காலத்தில் வருகின்ற அகராதிகளில் இடம்பெறலாம் என்பது புதுமையாக்கத்தின் மூலம் வெளிப்படுகின்ற உண்மைச் செய்தியாகும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி புதிய தமிழின் புதுமையாக்கத்திற்கு ஏற்றாற்போல் புதிய முறையை பின்பற்றுகிறது. அதாவது சொல்லுக்கான பொருள் விளக்கத்தை கூறுகிறது. அதாவது சொல்லுக்கான பொருள் விளக்கத்தைக் கூறுகிறது. மேலும் இவ்வகராதி தற்காலத் தமிழில் உயர் வழக்கு, அருகி வரும் வழக்கு, பெருகிவரும் வழக்கு என்று சொற்களை வகைப்படுத்தியுள்ளது.

உயர் வழக்கு என்பது நான் என்பதற்கு யான் என்ற சொல்லை பயன்படுத்தும் பண்டித நடையைக் குறிக்கிறது. அருகி வரும் வழக்கு என்பது இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் பெரிதும் வழங்கிய வடமொழிச் சொற்கள் தற்காலத் தமிழில் அருகி வருகின்றன. அவற்றை குறிக்கின்றது. அவற்றிற்கு உதாரணமாக நமஸ்காரம் - வணக்கம் என்றும், பிரசங்கம் - சொற்பொழிவு என்றும் அகராதியிலே காணலாம்.

அருகிவரும் சொற்களையும் பெருகி வரும் சொற்களையும் சுட்டிக் காட்டுவதன் மூலம் இவ்வகராதி தற்காலத் தமிழின் போக்கினை தெளிவாகக் காட்டுகிறது. இருப்பினும் அருகிவரும் சொற்கள் எதிர்கால அகராதிகளிலே பெருகிவரும் சொற்களாக மாறலாம் என்பதில் ஐயமுமில்லை. தற்காலத் தமிழில் பெருவழக்காக பரவி வரும் புதிய சொற்களை இவ்வகராதி பெருகிவரும் வகைப்படுத்தியுள்ளது. மேலும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்ற பிறமொழிச் சொற்களையும் கிரந்த எழுத்துக்களையும் இவ் அகராதி பயன்படுத்துகிறது. அத்தோடு இன்றைய எழுத்து தமிழில் பெரிய பெருவாரியாக வழங்கும் ஆஸ்பத்திரி, துருப்பு முதலான ஆங்கிலச் சொற்களும் குறைவாகவே சேர்த்துள்ளது.

புதுமையாக்கத்திற்கு ஏற்ப அகராதியின் உயிர்நாடியாக இருப்பது அதில் சேர்க்கப்பட்டுள்ள புதிய தமிழ்ச் சொற்களும் பழைய சொற்களுக்கு கூறப்படுகின்ற புதிய பொருள்களும் ஆகும். இவ்வாறு புதுமையாக்கம் நடந்திருக்கிறதா என்று ஆராயவும் வந்திருக்கிற புதுமைக்கூறுகளை நிலைப்படுத்தவும் அகராதிகள் உதவுகின்றன. புதுமையாக்க பணியை அகராதிகள் சரிவரச் செய்ய வேண்டுமானால் பஞ்சாங்கத்தினைப் போல அகராதியை பயன்படுத்தும் பழக்கம் சிறுவர்களில் இருந்து முதியோர் வரையுள்ள தமிழர்களிடையே அதிகரிக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. Dr. A.F.M. Ashraff, introduction to tamil Language and practical Grammer, published by : South Eastern university of Srilanka.
2. எம். ஏ. நுஃமான், தொடர்பாடல் மொழி நவீனத்துவம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.
3. இ. அண்ணாமலை, மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு
4. ஐராவதம் மகாதேவன், வளரும் தமிழுக்கு ஒரு வளமான அகராதி, பண்பாடு பருவ இதழ் (ப. இல : 28 - 32), வெளியீடு - இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
5. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி - தமிழ் விக்கிபீடியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவை - யார்?

**திரு. கா. கார்த்திகேசு**
**(ஓய்வூதியர்) நல்லூர்,**
**பூநகரி.**

ஔவையின் அன்னை பெயர் ஆதி என்றும், தந்தை பெயர் பகவன் என்றும் உறையூரிலுள்ள ஒரு சத்திரத்தில் ஔவை பிறந்த போதே தாய் தந்தையர்களுக்கிடையே ஏற்பட்டு இருந்த உறுதி மொழிப்படி கைவிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்பொழுது தாயை நோக்கிக் குழந்தை பாடியதாக ஒரு செய்யுள் உண்டு.

இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டானோ - முட்டமுட்டப் பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய் நெஞ்சமே அஞ்சாதே நீ. என்பதாகும்.

பாணர் குடியில் ஔவையார் வளர்ந்தார் என்றும், இதனால் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார் என்றும் கூறப்படுகிறது. ஔவை என்பது வயது முதிர்ந்தாளைக் குறிக்கும் ஒரு சொல். இப்பெயராலேயே ஔவையார் அழைக்கப்பட்டார்.

ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் ஆகியோரின் சம காலத்தவர் ஆவர். பசிக்கு சிறிது கூழ் கிடைத்தாலும் ஔவை மகிழ்ந்தொரு பாடல் பாடுவாள். இக்காரணத்தினால் "கூழுக்குப் பாடி" என ஔவையைக் கூறினர்.

தகடூரை ஆண்ட அதியமான் நெடுமானஞ்சி என்னும் அரசன் ஔவையார் மீது அளவற்ற அன்பு பூண்டிருந்ததோடு தன் அரண் மனையில் சில காலம் ஔவையை இருத்தினான் உண்ட பின் நீண்டகாலம் உயிர்வாழக் கூடிய அரிய நெல்லிக்கனி அதியமானுக்கு ஒரு முனிவர் மூலம் கிடைத்தது. அன்பின் மேலீட்டால் இந்த அரிய கனியை ஔவைக்கு ஈந்தான் அதியமான்.

"பூங்கமல வாவிசூழ்" புல்வேளூர்ப் பூதனையும் ஆங்கு வரு பால் பெண்ணை ஆற்றினையும் - ஈங்கே மறப்பித்தாய் வாழதிகா! நாவை அறுப்பித்தாய் ஆகமலம் தந்து. (ஆகமலம் - நெல்லிக்கனி) என்று அதியமானைப் புகழ்ந்து பாடினார் ஔவையார். அதியமான் சேரன் உடனான போரில் மாண்டு போக மைந்தன் எழினி முடி சூடினான். எழினி கொடையிலும், நடையிலும், படையிலும் சிறந்து விளங்கினான். எழினி உடன் சிறிது காலம் தங்கிய ஔவையார் பின்பு தமிழ் நாடெங்கும் சுற்றி வலம் வந்தார்.

சோழ நாட்டில் உள்ள உறையூரில் பெருநற்கிள்ளி என்னும் சோழ வேந்தன் செய்த ராஜசூய யாகத்தில் கலந்து சிறப்பித்த ஔவையார் பல பரிசில்களை அரசனிடம் பெற்றுக் கொண்டார். முடியுடை மூவேந்தரும் இவ் விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறம்பு மலையில் பாரி வாழ்ந்திருந்தான். அவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். கல்வியும் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்றவன். புலவர்களை பேணிப் போற்றும் பெற்றி வாய்ந்தவன். கொடையில் சிறந்தவன். பறம்பு நாட்டு அரசன் பாரியுடன் பழகினாள். ஔவை, பாரி ஔவையை நன்கு உபசரித்தான்.

பழையனூர் காரி என்பவன் ஔவையில் அளவுகடந்த அன்பு பாராட்டினார். பாரி பறித்த பறியும் பழையனூர் காரி கொடுத்த களைக் கொட்டும் - சோமான் வாராய் என அழைத்தார். வாய்மையும் இம் மூன்றும் நீலச் சிற்றாடைக்கு நேர் என்ற வெண்பாவை பாடினார் ஔவை.

பாரியின் பேரும் புகழ் கண்டு பொறாமை கொண்ட மூவேந்தர் பறம்பு நாட்டை முற்றுகையிட்டுப் பாரியையும் கொன்றனர். ஔவை பாரி மக்கள் அங்கவை சங்கவையை சந்தித்த போது தமக்கு நேர்ந்த நிலை குறித்து ஔவையிடம் அழுது முறையிட்டனர்.

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின் எந்தையும் உடையோம் எங்குன்றும் பிறர்கொளார். இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின் வென்றெறி முரசின் வேந்தர் எங் குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே" (புறநானூறு)

கன்னிப் பருவத்து மகளிர் அங்கவை சங்கவையை திருக்கோவலூர் மன்னன் தெய்வீகன் என்பவனுக்கு திருமணம் செய்து வைத்தார் ஔவையார் தமிழ்நாட்டு முடிமன்னர் மூவரையும் திருமண நிகழ்வுக்கு அழைப்பித்தார் ஔவையார்.

திருமணத் திருமுகத்தை பின்வருமாறு எழுதி அனுப்பினார் ஔவையார்

**சேரனுக்கு அழைப்பிதழ்**

சேரலர் கோன்சேரன் செழும் பூந்திருக்கோவில் ஊரளவுந்தான் வருக உட்காதே - பாரிமகள் அங்கவையை கொள்ள அரசன் மனமிசைந்தான். சங்கவையுங் கூடத்தான்.

**சோழனுக்கு அழைப்பு**

"புகார் மன்னன் பொன்னிப் புனல் நாடன் சோழன் தகாதென்று தானங்கிருந்து - நகாதே கடுக வருக கடிக் கோவலூர்க்கு விடியப் பதினெட்டாம் நாள்"

**பாண்டியனுக்கு எழுதியது**

வையத்துறைவன் மதுராபுரித் தென்னன் செய்யத்தகாதென்று தேம்பாதே - தையலர்க்கு வேண்டுவன கொண்டு விடிய ஈரொன்பான் நாள் ஈண்டு வருக இயைந்து.

ஔவையார் அழைப்பை பயபக்தியுடன் ஏற்று திருமண நிகழ்வில் மூவேந்தரும் கலந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமண விருந்து:**

திருமணம் நிறைவேறியதும் ஔவையார் மூவேந்தர்களையும் விருந்துக்கு அழைத்தார். ஔவையாரே கல்விக்கரசியே! ..... உணவோடு பனம் பழமும் வேண்டும் என்றனர். பார் வேந்தர், பனம்பழப் பருவ காலம் அல்ல அது. உங்களுக்கும் பனம்பழம் தருகிறேன் எனக் கூறிய ஔவையார் அங்கு கண்ணில் பட்ட பனம் துண்டம் ஒன்றை எடுத்து நட்டு, மூன்று பழம் வேண்டும் என்றார்.

"திங்கள் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்மங்கைக்கு அறுகிட வந்து நின்றார். மணப் பந்தலிலே சங்கு ஒக்க வெண் குருத்து ஈன்று பச்சோலை சலசலத்து நுங்குக் கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனி சிவந்து பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே என்று பாடியதும் அம்மையாரின் வாக்கு தெய்வவாக்காகையால் பனந்துண்டு பனைமரமாய் வளர்ந்து, மூன்று பழங்களைக் கொடுத்தது. விருந்தளித்து மகிழ்ந்த ஔவையார் சில நாள் தங்கிய பின் விடைபெற்று அகன்றார்.

திருக்கோவலூரில் இருந்து புறப்பட்ட ஔவை புல்வேளூர் பூதனிடம் சென்றார். ஔவையில் அன்புள்ள அவன் ஔவைக்கு வரகுசோறும் மோரும் கொடுத்து பசி தணித்தான்.

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே புல்வேளூர்ப் பூதன் புரிந்து விருந்திட்ட சோறு எல்லா உலகும் பெறும்." என்று புகழ்ந்து பாடினார் ஔவை.

ஊர் சுற்றி ஔவையார் ஒரு நாள் மிகுந்த பசியால் வருந்தி ஒரு குடியானவன் வீட்டிற்குச் சென்றார். அவனோ அதிகம் உலோபி. இரக்கம் இல்லாதவன். எச்சில் கையால் கூட காக்கையை கலைக்க மாட்டான். இங்கே ஒன்றுமில்லை போ என்று ஔவையாரை விரட்டினான். ஆனால் அவன் மனைவி மாறாக அன்பு இரக்கம் உடையவர். அவர் தன் நாயகன் அறியாவண்ணம் அன்புடன் ஔவையை அழைத்து உணவளித்து உபசரித்தார். நல்ல பெண்ணுக்கு ஒரு கயவனையா கணவன் ஆக்கினாய் என கடவுளிடம் கோபித்து ஔவை பாடிய பாடல் இது.

"அற்ற தலை போக அறாத்தலை நான்கினையும் பற்றித் திருகிய பறியேனோ - வற்றல் மரமனையானுக்கு இம் மானை வகுத்த பிரமானை யான் காணப்பெறின்"
(வற்றல் மரம் - பாலைவனமரம்)

அவனுக்கோ ஔவையை அழைத்து விருந்தளிக்க மிக விருப்பம். மிகவும் நல்லவன். மனைவி நேர் மாறானவள். கொடியவள். எப்படியோ ஔவையை அழைத்து திண்ணையில் உட்கார வைத்து, தான் மாத்திரம் உள்ளே போய் இனிய மொழி உரைத்து ஒரு கிழவி மிகவும் பசியோடு சிறிது உணவுக்காக எங்கள் வீட்டுத் திண்ணையில் வந்திருக்கின்றார் என்றான்.

அச்சொல் கேட்டதும் அவள் பாம்பு போல் சீறி அவனைக் கண்டபடி ஏசி, கழுநீர் பானையில் இருந்த தண்ணீரை எடுத்து வந்து அவன் தலையில் ஊற்றினாள். முறத்தால் அடித்தாள். இவற்றை எல்லாம் திண்ணையில் இருந்து பார்த்த அம்மை "இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி விருந்து வநததென்று விளம்ப - வருந்திமிக ஆடினாள் பாடினாள் ஆடிப் பழ முறத்தால் சாடினாள் ஓடோடத்தான்" என்று பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் பிறகு அவளை சமாதானப்படுத்தி, உணவு அளித்தான். அக்குடியானவன் ஔவைக்கு. ஔவை அப்போது இப்படிப் பாடினார்.

"காணக்கண்கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய் திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பிலாள் இட்ட அமுது
மேலும் ஔவையால்,

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடியிருக்கலாம் - சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யா மாகிற்
கூறாமல் சன்னியாசம் கொள்
என்றும் உபதேசித்தார் நாலு கோடி செய்யுள்கள்.

சோழ மன்னன் கட்டளைப் படி நாளை விடியுமுன் நாலுகோடி பாடல்களைப் பாடும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளான அவைப் புலவர்கள் ஔவையின் உதவியை நாட ஔவை பாடிக் கொடுத்தார். நாலு கோடி பாடல்கள் அவை.

மதியாதார் முற்றம் மிதித் தொருகாற் சென்று மிதியாமை கோடி பெறும்

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

கோடி கொடுத்தும் குடிப் பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்

கோடான கோடி கொடுப்பினும் தன்னுடைய
நாக் கோடாமை கோடி பெறும்

ஒரு நாள் காட்டு வழி சென்ற ஔவையார் நாவல் மர நிழல் ஒன்றில் இளைப்பாற வந்தார். மரத்தில் மாடு மேய்க்கும் சிறுவன் ஏறி நிற்பதைக் கண்டார். தம்பி எனக்கும் பழங்கள் பறித்துப் போடு என்றார். பாட்டி உனக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? கேட்டான். இடைச்சிறுவன் சுடுகிற பழம் போடு என்றார். ஔவைப் புலவர். மரக்கிளையை அசைக்க நன்கு கனிந்த பழங்கள் உதிர்ந்து வீழ்ந்தன. அவற்றில் மணல் ஒட்டியிருக்கக் கண்டு, கையில் எடுத்து, வாயால் மணல் போக ஊதினார் ஔவை. சிறுவன் பாட்டியை பார்த்துக் கேட்டான். பாட்டி பழம் சுடுகிறதா! என்று. பழம் சுடுமா? என்று கேட்ட பாட்டி பையனிடம் தோற்று வெட்கிப் போனாள்.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடரி இருங்கதலித் தண்டுக்கு நானும் - பெருங்கானில்
கார் எருமை மேய்க்கின்ற காளைக்கே நான் தோற்றேன்
ஈர் இரவும் துஞ்சா தென்கண் - என்று பாடிக் கவலைப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச் சிறுவன் முருகனாகத் தோன்றினான். செந்தமிழ் கவியே உன் அமிழ்திணிய இனிய செந்தமிழ் செய்யுட்களை கேட்க விரும்புகின்றேன். அம்மையே வருந்தாதே. இவ்வுலகில் கொடியது யாது? அரியது யாது? இனியது யாது? பெரியது யாது? எனக்கு விளக்கிக் கூறுவாயாக.

**கொடியது:**

கொடியது கேட்கின் நெடிய வெவ்வேலோய் கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை அதனினினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய் அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர் அதனினும் கொடிது இன்புற அவர் கையில் உண்பது தானே

**அரியது:**

அரியது கேட்கின் வரி வடிவேலோய்!
அரிதரிது மானிடராதல் அரிது.
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

**இனியது:**

இனியது கேட்கின் தனி நெடுவேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியை தொழுதல்,
அதனினும் இனிது அறிவினார்ச் சேர்தல்,
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

**பெரியது:**

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ - நான்முகன் படைப்பு,
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்.
"கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவன் பாகத் தொடுக்கம்
இறைவனோ தொண்டர் உள்ளத்துள் ஒடுக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"
இவ்வாறு அகவற்பாக்களால் விடையளித்தார்.
அம்பன் ஊர் சிலம்பி என்ற பெண்ணுக்கு அவள் கொடுத்த பொருளுக்கு ஏற்ப கம்பர் அரைப்பாட்டும் எழுதிக் கொடுத்தார். அவனிடம் தற்செயலாக வந்த ஒளவை அப்பாட்டைப் பூர்த்தி செய்தார். பாட்டில் சிலம்பி என்ற தன் பெயர் வரக்கண்டு சிலம்பி மனம் மிக மகிழ்ந்தார்.

**கம்பர் பாட்டு**

தண்ணீரும் காவிரியோ தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே

**ஒளவை முடிப்பு**

- பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும் செம்பொற் சிலம்பே சிலம்பு
ஒளவை பாட்டின் பின்னர் சிலம்பி சிறப்பாக வாழ்ந்தார்.

**வரப்புயர:**
குலோத்துங்க சோழன் திருமணத்திற்கு சென்ற ஒளவை வரப்புயர என வாழ்த்தி நிறுத்திக் கொண்டார். அப்போது அரசன் அவைப் புலவர் ஒட்டக்கூத்தரைப் பார்த்தான். குறிப்புணர்ந்த ஒளவையார் வாழ்த்துப் பாடலை பூர்த்தி செய்தார்.
"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோலுயரக் கோன் உயர்வான்."
அவையினர் ஒளவை ஆற்றலைப் போற்றினர்.

தமிழ் நாடெங்கும் கால் நடையாகப் பவனி வந்த ஒளவையாரின் அனுபவம் அவர் பாடல்களில் வெளிப்படுகின்றது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதி நூல்களை ஒளவையார் பாடினார்.

பொருட் செல்வத்தை விட, கல்விச் செல்வம் உயர்ந்தது என்பதை ஒளவையின் பின்வரும் பாடல் பறை சாற்றுகின்றது. இது சோழ மன்னன் கொடுத்த விலை மதிப்பில்லாத பட்டுச் சேலையை ஒளவையார் பெற்றுக் கொண்ட போது பாடியது

"நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும் நூற்சேலை நால் திங்கள் நாளுக்குள் நைந்து விடும் - மாற்றலரை பொன்ற பொரு தடக்கை போர்வேல் அகளங்கா என்றும் கிழியாது என்பாட்டு."

ஒரு முறை கம்பர் ஒளவையை ஏளனம் செய்யும் வகையில் ஒரு காலடி நாலிலைப் பந்தலடி அடிபோட்டு ஒளவையிடம் விடை கேட்டார். ஒளவை பின்வரும் பாடலால் கம்பர் செருக்கை அடக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது,

எருமை, கழுதை, குட்டிச்சுவர் , குரங்கு என வசைபாடுகிறது இக்கவிதை.
குணமில்லாதவளோடு வாழும் வாழ்க்கையை இப்படிக் கூறுகிறார் ஔவை

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபம் நன்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும் - கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடும் விழல்

இன்னாரோடு இவை நீங்கும் என்ற பாடல்:
தாயோடு அறுசுவை போம் தந்தையோடு கல்வி போம்
சேயொடு தான் பெற்ற செல்வம் போம் - ஆய வாழ்வு
உற்றாருடன் போம் உடன்பிறப்பால் தோள் வலிபோம்
பொற்றாலியொடு எவையும் போம்

மனைவி இறந்து போக எல்லாவகையான நலன்களும் இல்லாது ஒழிந்துவிடும் என்பதே இப்பாடலின் பொருள்.

உழவுத் தொழில் சிறக்கப் பின் வரும் சௌகரியங்கள் அமைய வேண்டும் எனக் கூறுகின்றார்.

ஏரும் இரண்டு உளதாய் இல்லத்தே வித்துளதாய் நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊரருகே
சென்று வர அணித்தாய்ச் செய்வாரும் சொற்கேட்டால் என்றும் உழவே இனிது

(ஏர் - கலப்பை)
நீண்டகாலம் வாழ்ந்து மக்களை நெறிப்படுத்தும் நீதிகளைச் சொன்ன ஔவை தமிழ் உலகிற்கு கிடைத்த தனிப்பெரும் சொத்தாவர்.

**உசாத்துணை நூல்கள்**
**ஔவையார்**
**பண்டிதர் க. இராசையா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகியற் கல்வியில் பரதநாட்டியத்தின் முக்கியத்துவம்

**திருமதி. லிங்காயினி ஜீவரூபன்**
**(B.F.A, M.F.A (1st Class)**
**PG.DE (Merit Pass)**
**கிளி/ ஜெயபுரம். ம.வி**

தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களில் ஒன்றாகத் தனித்துவம் வாய்ந்ததாகக் காணப்படும் பரதநாட்டியமானது தமிழ் நாட்டிற்கு உரித்துடையதாகக் காணப்பட்டாலும்; தமிழ்நாட்டிலும் பார்க்க இலங்கையிலும் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களிலும் பரவியும் சிறப்பித்தும் காணப்படுகின்றது. பாடசாலைக் கல்வியில் பரதநாட்டியத்தை ஓர் பாடமாக மாணவர்கள் அவரவர் விருப்பின் பேராக கற்கும் நிலை காணப்படுகிறது. இக்கலையின் பிறப்பிடமான தென்னிந்தியாவில் கூட இல்லாத ஓர் சிறப்பம்சம் இலங்கை நாட்டில் தமிழர் கல்வி கலைத்திட்டத்தில் இணைக்கலைத் திட்டத்தில் 1972 இல் சேர்க்கப்பட்டு இன்று வரை பாடக் கலைத்திட்டத்தில் ஓர் அங்கமாகக் காணப்படுவது போற்றுதற்குரியது.

பாடசாலை மட்டத்தில் இடைநிலைப்பிரிவில் தரம் 6 இல் அழகியல் பாடத்தொகுதி அறிமுகமாகிறது. அழகியல் பாடத் தொகுதிக்குள் (பரத நாட்டியம், சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும்) பரதநாட்டியம் எனும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டு தொடர்ந்து தரம் 10 இல் தொகுதி ii எனும் பாடப்பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டு உயர்தரத்தில் கலைப்பிரிவுக்குள் உள்ளடக்கி பாடசாலை மட்டத்தில் பரதநாட்டியம் தனித்துவம் பெற்று காணப்படுகிறது. அதுமட்டுமன்றி உயர் கற்கைநெறிகளிலும் பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகளில் இலவசமாகக் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்ற பெருமை இப்பாடத்தினையும் இலங்கை கல்வித்திட்டத்தையும் சார்ந்தது.

ஒரு மாணவனுடைய சமூகக் காரணி, சமூக மனவெழுச்சி காரணிகளில் குடும்பம், அயல், பாடசாலைச் சூழல் என்பன உள்ளடக்கப்படுகின்றன. உயிரியற் காரணியைக் காட்டிலும் மற்றைய இரண்டுமே அதிகமான மாற்றங்களைத் தனிமனித மாணவ ஆளுமையில் ஏற்படுத்துகின்றன. இவற்றில் பாடசாலை மிகவும் பிரதானமானதாகும். சிறுவயதிலிருந்து பாடசாலையில் மாணவர்கள் பெறுகின்ற சிறப்பானகல்வி (கற்றல் - கற்பித்தல்முறை) ஒழுக்க விழுமியங்கள், தலைமைத்துவத்தை ஏற்றல், முன்னிற்றல், பொறுப்பை ஏற்றல், பொறுமை, குழுவாக செயற்படல், நட்பு, விட்டுக்கொடுக்கும் தன்மை போன்ற பண்புகள் பாடசாலையிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. பாடசாலையில் பாடவிதான அமைப்புக்களும், பாடத்திட்ட மாற்றங்களும் மூத்த கல்வியலாளர்களால் மாணவர்களுடைய ஆளுமையினை கருத்திற்கொண்டே உருவாக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அழகியல் கலையின் தேவையும் வலியுறுத்தப்பட்டது. இலங்கையில் கல்விப்புலத்தில் கலைத்திட்டம் முக்கியப்படுத்தப்படுகிறது. கல்வியின் இலக்குகளை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்த இயக்க வட்டமாக அமைவதே கலைத்திட்டமாகும். மாணவர்களின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்றவாறு கையளிக்கப்பட வேண்டிய அறிவை ஒழுங்கமைத்தல், அனுபவங்களை ஒழுங்கமைத்தல் என்பன கலைத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கலைத்திட்டம் சார் சமநிலையினை ஏற்படுத்தவதற்காகவே அழகியற்கல்வி இணைத்துக் கொள்ளப்பட்டது. மாணவர்களிடையே நுண்மதியை வளப்படுத்தல், மனவெழுச்சி உறுதிப்பாட்டை வலுவடையச் செய்தல், நினைவாற்றலை வளர்த்துக்கொள்ளல், அறிக்கைத் திறன்களை மேம்படுத்திக்கொள்ளல் முதலிய பண்புகளை வளர்த்துக் கொள்வதில் அழகியற் கல்வி நேரடியாக துணைநிற்கிறது.

பரதக்கலை ஆன்மீக ரீதியிலும், அறிவியல் ரீதியிலும் பல்வேறு உண்மைகளை உள்ளடக்கியுள்ளது. மனிதனுடைய உள்ளம், உடல் சார்ந்த வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றி வருகின்றது. இருப்பதுடன் வெளிப்படையாக அழகியல் இன்பம் தரும் ஒரு உள்ளார்ந்தமாகப் பல ஆளுமையின் கலைப்படைப்பாக தத்துவார்த்தங்களை விளக்குகின்ற கலைப்படைப்பாக அமைந்துள்ளது. மனிதனுடைய வாழ்க்கையில் மனிதனுடைய உடல் ஆரோக்கியத்திலும், எலும்பு, தசை, நரம்பு, நாளங்களுள் இவற்றின் சுறுசுறுப்புக்களும், உள ஆரோக்கியத்தின் சுயமானதும் நேர்மையானதுமான சிந்தனைகளும் சமய ரீதியில் அந்தந்த மதம் சார்ந்த தத்துவங்களையும், கோட்பாடுகளையும் வெளிப்படுத்துவதுடன் சமூகம் சார்ந்த பல்வேறு நல்ல போதனைகளையும் வழங்கி வருகின்ற ஒரு ஊடகமாகவும் பல்வேறு பரிணாமங்களில் தன்னுடைய பயன்பாட்டை வழங்கி வருகின்றது.

உலகியல் ரீதியாக வளர்க்கப்பட்ட பரத நடனக்கலையானது மக்களுடைய உள, உடல், உறுப்புக்களின் நிலை, சைகைகள், முகபாவனை, கண்தொடர்பு இவற்றின் ஊடாக உடற்கூற்று முறையில் உளப் பண்பைப் புகட்டுவது நல்ல உணர்வை அண்டி தெய்வக்கற்றலை வளர்த்து சமூகத்திற்கு ஏற்ற நன்மக்களை உருவாக்கும் வலிமை வாய்ந்தது. மக்களுடைய மன அமைதி, மன மகிழ்ச்சி இரண்டிலும் தாக்கம் செலுத்துவதாக ஆடல் விளங்குகிறது. நடனக்கல்வியின் மூலமாக புதிய சிந்தனைகள், கருத்துக்கள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றது. இத்தகைய தன்மைகளை அடிப்படையாகக் கொண்டே நடனக்கல்வியானது பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

பரதக்கலையானது மாணவர்களுடைய உடலையும் உள்ளத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது. தாளத்திற்கேற்ப பாதங்கள் நர்த்தனம் செய்வதும், கட்டுப்பாடு என்னும் தளத்தை உருவாக்கி கொடுக்கிறது. சுய கட்டுப்பாடு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததாகும். அதற்கான தளம் பரதநாட்டியக் கலை மூலமாகவே பாடசாலையில் இடப்படுகிறது. நாட்டியக் கலையானது மற்றவர்களின் திறமைகளைப் போற்றவும் இரசிக்கவும் தூண்டுகோலாக அமைகிறது. மற்றவர்களிடமுள்ள திறன்களை, ஆற்றல்களை இனங்கண்டு மதித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழப்பழக்குகிறது. வெற்றி தோல்விகளை சமமாக நோக்குகின்ற மனப்பாங்கினை வளர்க்கிறது. ஒருவரை செயல்திறன் உடையவனாக்குவதற்கு பரதநாட்டியம் அனுசரணையாக அமைகிறது. வாழ்க்கையில் ஏற்படுகின்ற வெற்றி தோல்விகளை மன அமைதியுடனும், முகமலர்ச்சியுடனும் எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலை வழங்குகின்றது. ஏனையோரை மதிக்கும் மனப்பாங்கு விரிவுபடுத்தப்படுகிறது. பரதநாட்டிய பாடத்தைக் கற்கும் ஒரு மாணவன் முதலில் தான் கற்கும் பாடத்தை நேசித்து இறைவனுக்கு முதலில் மரியாதை( வணக்கம்) செலுத்துவான். பின்னர் தனக்கு பரதக்கலையைக் கற்றுத்தரும் குருவை மதித்து குருவை வணங்கியே பாடத்திற்குள் பிரவேசிப்பான். இவ்வாறு தினந்தோறும் செய்கையில் இவனிடம் இயல்பாகவே இறைவன், குருவை மதிக்கும் பண்பு வளர்க்கப்படுகிறது. ஆகையால் இம்மாணவர்களிடம் பெற்றோர், முதியோர், ஏனையோரை மதிக்கும் பண்பு விருத்தியடைகிறது.

இவ்வாறான பல சாதகமான விளைவுகள் மாணவர்கள் மத்தியில் பண்பு அடிப்படையில் ஏற்படுகின்ற காரணத்தினால் நடனக் கல்வியானது பாடசாலையில் பிரதானமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

- இரசனையை வளர்த்தல்.
- வீண் நேரத்தைக் குறைத்துப் பொழுதைப் பயனுள்ளதாக்கல்.
- பெரியோர், குரு, பெற்றோரை மதித்தல்.
- இறை நம்பிக்கை / ஆன்மீக நம்பிக்கையை வளர்த்தல்.
- விழுமிய பண்புகளைப் பேணுதல்.
- கலாசாரப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் பேணுதல்.
- தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல்.
- ஏனையோரை மகிழ்ச்சிப்படுத்துதல்.
- நடனக் கலையில் தேர்ச்சி பெறுதல்.
- வேலைவாய்ப்புக்களைப் பெறுதல்.
- சமூக அந்தஸ்து, அங்கீகாரத்தினைப் பெறுதல்.

இத்தகைய திறன்களை மாணவர் மத்தியில் வளர்க்கும் பொருட்டு பரத நாட்டிய பாடக்கல்வி பாடசாலையில் கற்பிக்கப்பட்டு அழகியல் கல்வியில் முக்கியத்துவம் பெறுகின்றது. உயர்கல்வியின் பின்னரான தொழில் வாய்ப்புக்களின் கூடிய தன்மையும் நடனப்பாடத்தில் காணப்படுகின்றமையால் பாடசாலை மாணவர்கள் இப்பாடத்தினைக் கற்பதில் அவர்களுடைய எதிர்காலம் தொழில் பற்றிய எண்ணம் இலகுவில் நிறைவேறுகிறது. சில பல்கலைக்கழகங்கள் பரதநாட்டியப் பாடத்தினை பட்டப்படிப்புத்துறையாக வளர்க்கப்பட்டு வருகிறது. பட்டம், கலாநிதிப் பட்டம் வரையிலான ஆய்வுகளுக்கு வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களுடனும் உந்தல்களுடனும் கூடிய ஆற்றுகை நிகழ்வுகளுக்காக பல உலகியல் அரங்குகள் வாய்ப்புக் கொடுக்க ஆர்வத்துடன் முன்னிலையில் இருக்கின்றன.

தொழிநுட்பத்திற்கு நிகராக மனிதனுடைய மனதை வெற்றி கொள்ளும் படைப்பாகவும் மன ஆறுதலுடன் கூடியதுமானதும், வருமானத்தையும் புகழையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் துறையாக நடனத்துறை வளர்ச்சி கண்டுள்ளது. பாடசாலைக் கல்விக்கு அப்பால் நடனக் கலைக்கென பரந்ததொரு உலகம் காணப்படுகிறது. ஆக்கபூர்வமான செயற்திறன்களை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களும், களங்களும் காணப்படுகின்றன எனக்கூறின் அது மிகையாகாது. பரீட்சைகளுக்கு அப்பாற்பட்டு பட்டம், பதவி, புகழ், உச்சம் என்ற நிலை பரத நாட்டியத்தைக் கற்பதால் ஏற்படுகிறது.

எனவே அழகியல் கல்விச் செயற்பாடுகளில் பரதநாட்டிய பாடமானது மாணவர்களின் பல்வேறு ஆளுமையினை வளர்க்கும் ஒரு அம்சமாக முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது.

**குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.**

**– மகாத்மாகாந்தி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பு விழா - 2023, 2024










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி சமுத்திரவியல் நாகரிகமும் வாணிபத் தொடர்புகளும்

(தொல்லியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

(வாழ்நாள் பேராசிரியர்– வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## அறிமுகம்


இலங்கைத்தீவின் பண்பாட்டு வரலாறானது இத்தீவிற்குள் பிராந்திய வரலாற்றுத்துண்டங்களாகவே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து பரிணாமம் அடைந்திருந்தமையை இதுவரையிலும் தீவு அடங்கலாகவும் யாழ்ப்பாணக் குடா நாடு பொறுத்தும் இங்கு இதுவரையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சடப்பொருட் சான்றுகளிலிருந்தும் இப்பொழுது உணர முடிகிறது. தென்னிந்தியாவில் மொழிவழிப்பண்பாட்டுத் தனித்தன்மை அடிப்படையில் உருவான நில வேறுபாடுகளை ஒத்த வகையில் இலங்கைத்தீவிலும் அதேயடிப்படையில் பண்பாட்டுகோலங்கள் தோற்றுவிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டு, வடபுலத்து வாழ்வியல் கோலங்களாக பாதுகாக்கப்பட்டு வந்த நிலையில் யாழ்ப்பாணப் பண்பாடு, வன்னிப்பண்பாடு, மட்டக்களப்புப் பண்பாடு, மன்னார்ப் பண்பாடு என பிரதேச அடிப்படையில் வாழ்வியல் கோலங்களை அடையாளப்படுத்தி, வகுக்கப்பட்டு, வைக்கப்பட்ட நிலையில் எஞ்சியிருந்த இலங்கைப்பண்பாட்டினையும் வேறொரு பிறிதோர் பிராந்தியத்துடன் அடையாளப்படுத்தி, பார்க்கப்பட்டு வந்துள்ள மரபினையும் காண்கின்றோம். கடந்த 5000 ஆண்டுகாலமாக மிக நீண்ட நாகரிகக்கோலங்களை இப்பிராந்தியத்தில் வாழ்ந்திருக்கக்கூடிய மக்கள் தம்மத்தியில் நிகழ்ந்த பல்வேறு பண்பாட்டுச் சம்பவத்தொகுப்புகளின் ஊடாக அடையாளப்படுத்தி, வரலாற்றிலக்கியங்களிலும் கோயிற்புராணங்களிலும் பதிவு செய்து வைத்திருந்த தன்மையைக் காண்கிறோம். இலங்கையின் மத்தியில் உள்ள உயர்நிலப்பிராந்தியத்தின் மனித வாழ்வுப்பண்பாட்டு தோற்றப்பாடு மற்றும் அதன் வளர்ச்சியும் காலத்தால் முற்பட்டதாகவும் பண்பாட்டு நகர்வுகளுக்குரிய மையப்புள்ளிகளாகவும் விளங்கி வந்துள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது. இதுவே ஒட்டுமொத்த இலங்கைத்தீவின் பண்பாட்டு அடையாளத்தினை சமுத்திரவியல் பண்பாடாக உருவகித்து வைத்திருப்பதற்கான அடிப்படையாக அமைந்தது. அந்த வகையில் வட இலங்கையில் திட்டவட்டமான பண்பாட்டுத் தொடர்ச்சியினையும் அதன் பரிணாம வளர்ச்சியினையும் கொண்டு காணப்பட்ட ஒரு கரையோரப் பிரதேசமாக பூநகரி அமைந்து காணப்படுவது இப்பொழுது தொல்லியல் சான்றுகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உலகிலே நதிப்பள்ளத்தாக்கற்ற நகர நாகரிக வாழ்வின் மையமாக கிரீட்டன் தீவினுடைய நாகரிக வாழ்வு போன்று சமுத்திரத்தினையடிப்படையாகக் கொண்ட பூநகரியின் நாகரிக வளர்ச்சியானது யாழ்ப்பாணக்குடா நாட்டினையும் அதனோடு இணைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகப்பிரதேசங்களையும் இணைத்துக் கொண்டிருந்த வகையில் பூநகரி நாகரிகம் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டியதாக உள்ளது. காலந்தோறும் வணிக மார்க்கங்களின் ஊடாக பூநகரி பெற்றிருந்த இறுக்கமான பண்பாட்டுத் தொடர்புகள் (இராசரட்டையின் நதிப்படுக்கைகளை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசனவியல் நாகரிகம் போன்று) **வட இலங்கையில் சமுத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட பூநகரி நாகரிகம் அதன் பண்பாட்டுக் கோலங்களை குடாநாடெங்கும் வியாபித்து வைத்திருந்தமை மட்டுமல்லாது தீவகப் பிராந்தியங்கள் முழுவதிலும் பண்பாட்டுத் தொடர்புகளை பிணைத்து வைத்திருந்தமையை தொல்லியல் சான்றுகளுடன் இலக்கியச் சான்றுகளும் உறுதிப்படுத்தி நிற்பதைக் காணமுடிகிறது.** அந்த வகையில் வடபுலத்தில் பரதவர் சமூகத்தினைச்சார்ந்த இயக்கவியல் நிறுவனமாகக் கொண்ட அரச உருவாக்கம், கப்பல் வாணிபம், அயலுலகத் தொடர்புகள், உள்நாட்டு கைத்தொழில் வளர்ச்சிக்கான மூலோபாய கேந்திர மையங்களின் வளர்ச்சி மற்றும் துறைமுக நகரங்களை ஒன்றிணைத்து வைத்திருந்த முறை, அவற்றின் முகாமைத்துவம் ஆகியன கேந்திரஸ்தானமாகிய பூநகரியுடன் பிணைக்கப்பட்டிருந்த தன்மையை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதன் அடிப்படையில் பூநகரி நாகரிகம் எனப் பெயரிட்டு, வடபுலத்து வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தினை எழுதும் பொருட்டு அதனைத் தொடக்கி வைப்பதாக இவ்வாய்வுக்கட்டுரையானது ஒரு **பிராரம்ப நிலையில்** அமைக்கப்படுகிறது.

**பூநகரியின் அமைவிடம் மற்றும் சமுத்திரத்தின் சூழமைவும் பின்னணி நிலமும்**




நாசாவின் சட்லைற் படமானது இந்து சமுத்திரத்தின் மத்தியில் தீவக நிலக் குறைகள் உள்ளிட்ட வட இலங்கையின் அமைவிடத்தினைச் சேது அணைக்கட்டுக்கு வடகிழக்காக தென்னிந்தியாவுடன் (இராமேஸ்வரத்துடன்) இணைக்கப்பட்ட நிலையில் ஒரு மேம்பாலம் போன்ற தோற்றத்தில் மிகத்துல்லியமாக இராமர் அணை பெயரிலும் வடிவமைப்பிலும் சமுத்திரப் பண்பாட்டு வழிவந்த நாகரிகத்தின் கட்டுமானமொன்றை வெளிப்படுத்துகின்றது. இராமருடைய யாழ்ப்பாணக்குடா நாட்டின் ஊடான புனித பயணங்கள் சீதையை சிறை மீட்டதன் பின்னர் பூநகரியின் துறைமுகமான நாகதேவன் துறைமுகமூடாக சாட்டித்துறைக்கும் அதன்பின்னர் அங்கிருந்து வில்லூன்றிக்கும் அதன்பின்னர் நிலாவரைக்கும் நிகழ்ந்ததாக ஐதீகங்கள் குறிப்பிடுகின்றன. திருவடிநிலைக்கும் இராமர் வருகை தந்து சீதையின் அஸ்தியை கடலில் கரைத்ததாக இன்னோர் ஐதீகம் நிலவுகிறது.

படம் ஆதாரம் - (Google Earth)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இராமர் அணைக்கட்டினை மனிதனால் செய்யப்பட்ட உலகின் முதலாவது கடற்பாலம் என்று கருதப்பட்டு வரும் இக்காலத்தில் சீனப்பெருஞ்சுவர் சீன நாகரிக காலத்தில் உருவாக்கப்பட்டமை போன்று இந்து சமுத்திரப்பரப்பில் குறிப்பிட்ட கடல்கோள் ஏற்படுவதற்கு முன்னரேயே இராமர் பாலம் மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். கடல்கோளின் பின்னர் காவிரித்துறைமுகம் கடல் நீருக்குள் அழிந்தது போன்று இராமர் பாலமும் கடலுக்குள் அழிந்து விட்டது என்று குறிப்பிடுவது இவ்வாய்விற்கு வலுச்சேர்க்கும் காரணியாக அமையும். இப்பின்னணியில் சமுத்திரம் சார்ந்த நாகரிகம் ஒன்று வட இலங்கையில் செழிப்புற்றிருந்த காலத்தில் பூநகரி பெருமளவிலான கட்டடத் தொகுதிகளுடன் இலங்கையின் முதலாவது கடல் நகரமாக மன்னார் - மாதோட்டத்துடன் இணைந்து எழுச்சி பெற்றிருந்தது என்பதில் இப்பொழுது நம்பிக்கை கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பூநகரியினூடான உள்நாட்டு வர்த்தகப் பாதைகள் இயற்கையான கடல் முகப்புகளுடன் இணைதலைக்காட்டும் படம்



பூநகரியின் பின்னணி நிலமும் அதன் அலைத்தடுப்பு (அலைவாங்கி) அமைப்பும் (மத்தியதரைக்கடலில் அமைந்துள்ள கிரீட்டன் தீவின் அமைவிடத்தையும் துறைமுகக் கிட்டங்கிகளையும் (கீழே காட்டப்பட்டவாறு) ஒத்திருப்பதனை அவதானிக்குக. அல்லைப்பிட்டியில் 1978 இல் ஜோன் காஸ்வெல் என்ற அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர் சீனக்கப்பல் ஒன்றின் புதைவிடத்தினைக் கண்டுபிடித்ததோடு பெருமளவிலான சீனப் பீங்கான் பாத்திரங்களை அக்கப்பலின் அடித்தளத்திலிருந்து அகழ்ந்தெடுத்திருந்தனர். இது சீனாவின் பட்டு வர்த்தகப்பாதை பூநகரியுடன் இணைக்கப்பட்டிருந்தது.என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றது.

## கடல் வாணிப நகராக பூநகரியின் தோற்றமும் வளர்ச்சியும்



கி.மு 3000க்கும் கி.மு 1300க்கும் இடைப்பட்ட காலப்பரப்பில் மன்னார் குடாவையும் பண்ணைக்கடலையும் இணைத்து வைத்திருந்த ஒரு பெரும் கடற்பரப்பின் ஒருமையப்புள்ளியாக கேந்திர முக்கியத்துவம் பெற்ற நிலையில் நாகர் மரபினருள் பூநாகர் என்ற இனக்குழுவினரின் வாழ்விடமாக அமையப்பெற்ற தற்காலப் பூனகரி என அழைக்கப்படும் ஒரு வாணிப மையம் கடலோடிகளின் கட்டுப்பாட்டுக்குரிய மையமாக தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய நிர்வாக - ஒழுங்குபடுத்தல் மையமானது கடலோடிகளின் மைய நகரமாக வட இலங்கையில் வளர்ச்சியடைந்தது மட்டுமல்லாது பௌத்த சமயத்தின் வருகைக்கு முன்னரிலிருந்தே சமுத்திரவியல் நாகரிகமொன்றின் தளமாக வளர்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்ததோடு விஜயநகரநாயக்கர் காலம் வரையிலான சர்வதேச வாணிப நடவடிக்கைகளிலும் தொடர்புபட்டிருந்தமையின் பின்னணியில் செல்வச்செழிப்பு மிகுந்த ஒரு நகரமாக பூநகரி வளர்ச்சி பெற்றிருந்தது. அதன் செல்வச் செழிப்பு மிக்க பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியைக் கண்டறிவதற்கு இதுவரையில் அப்பிராந்தியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்களாக கண்டுபிடிக்கப்பெற்ற சான்றுகளையே பயன்படுத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. வட இலங்கையில் காலத்தின் நிமித்தம் யதார்த்தமாக தோற்றம் பெற்று, கடற்பரப்பிற்கு மத்தியில் 10க்கும் மேற்பட்ட கலங்கரை விளங்கங்களுடன் கடல்சார் நிர்வாகக் கட்டமைவினைத் தாங்கிய தளமாக பூநகரிப்பிராந்தியம் வளர்ச்சி பெற்றதற்கான காரண காரியத் தொடர்புகளைக் கடல் வாணிபமே உருவாக்கியிருந்தது. வாணிபத்தின் நிமித்தம் உருவாக்கப்பட்ட ஒரு பிரம்மாண்டமான வியாபார மையமான பூநகரது வாழ்வில் மையம் ஒரு பெரும் கடல்கோளுக்குப் பிறகு தான்தோன்றியாக உருவாகியிருந்தது. இவ்வாறு உருவாக்கம் பெற்றிருந்த அம்மையமானது அதன் பின்னனி நிலப்பரப்பில் கடல்சார் உட்கட்டுமானங்களை மிக நெருக்கமாகக் கொண்டு, ஒரு சமுத்திரவியல் நாகரிகமாக பரிணாமம் பெற்றிருந்த வரலாற்றினை இலங்கையின் பாளி - பௌத்த வரலாற்றாசிரியர்கள் இருட்டடிப்புச் செய்து விட்டிருந்தனர். வடஇந்தியாவிலிருந்து வந்திருந்த வம்சாவழி வரலாற்று வரன்முறை வடிவமைப்பாளர்கள் பௌத்தமதத்தினை முன்னிலைப்படுத்தியதன் காரணமாக அன்று பூநகரியின் நாகரிக வரலாறு மறைக்கப்பட்டு இன்றுடன் 5000 வருடங்களாகிவிட்டன. ஆனாலும் இன்று வட இலங்கையிலிருந்து எம்மவர்களால் சேகரிக்கப்பட்டு வரும் தொல்லியல் சான்றுகள் கடல்தளத்தில் மறைந்துபோனவற்றினை விட , தரைப்பரப்பில் இன்று எஞ்சியுள்ள தொல்லியல் எச்சங்கள் ஊடாக கடல்சார் நாகரிக வரலாறு ஒன்றின் அடையாளத்தினை (பூநகரியை மையமாகக் கொண்டு) எமக்குத் தந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம்.

வட இலங்கையில் மத்தியகாலப்பரப்பில் தோற்றம் பெற்றிருந்த தமிழ் இலக்கியப் பரப்பிலும் இக்கடற்பரப்பினை மையமாகக் கொண்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வளர்ச்சிபெற்றிருந்த புராதன நாகரிகமொன்றின் விபரிப்பு இடம்பெற்றிருப்பதனையும் இவ்விடத்தில் வரலாற்றுத் துணையாதாரமாகக் கொள்ள வேண்டும். **எவ்வாறு மத்தியதரைக்கடலில் கிரீட்டன் தீவு கி.மு. 1700 அளவில் இருந்து கி.மு. 1300 வரையுமுள்ள காலப்பரப்பில் நான்கு நகரங்களைத் தோற்றுவித்திருந்த நிலையில் சமுத்திரவியல் நாகரிகக்கட்டுமானமொன்றினை தோற்றுவித்திருந்தமைக்கு ஒப்ப, வட இலங்கையில் பூநகரி என்ற தளம் கடலை மையமாகக் கொண்ட நகர நாகரிக வாழ்வொன்றினை உருவாக்கித் தந்திருந்தமையை அண்மைக்காலங்களாக பெற்றுக்கொள்ளப்படும் தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தி வருகின்றன.** இந்து சமுத்திரத்தின் வாணிப மார்க்கமொன்று வட இலங்கையில் மன்னனார்க்குடா மற்றும் பண்ணைக்கடல் உள்ளிட்ட நெடுந்தீவு கடற்பரப்பினையும் மற்றும் பூநகரியுடன் இணைந்து நேர் எதிர்த்திசையில் வடக்காகக் காணப்படுகின்ற பண்ணைத்துறை, பாஷையூர், பூம்புகார், அரியாலை, அல்லைப்பிட்டி போன்ற கடற்கரைப்பரப்புகளையும் இணைத்த வகையில் அமைந்த ஒரு பரந்த முக்கோணக் கடற்பிராந்தியப் பரப்பினை இணைத்து, மையப்படுத்திச் சென்றிருக்கக்கூடிய வகையில் ஒரு செழிப்பான வாணிபக்கட்டமைப்பிற்குரிய கடல் வள நாகரிகம் தனித்துவமாக, **இலங்கையின் நீரியல்வள நாகரிகத்துக்குச் சமாந்தரமாக,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால் அதன் வரலாற்று வளர்ச்சியை மிக துல்லியமாக ஆராய்ந்து வெளிக்கொணர்வதற்கேற்ற வரலாற்றுப்பதிவுகளையும் வரலாற்று வளர்ச்சியை மிக துல்லியமாக ஆராய்ந்து வெளிக்கொணர்வதற்கேற்ற வரலாற்றுப் பதிவுகளையும் வரலாற்று நிகழ்வுகளின் முன்னோட்டத்தினையும் இராசரட்டையின் சிங்கள பௌத்த சமயப் பண்பாட்டு வளர்ச்சிக்கு **கொழுகொம்பாக** அமைந்திருந்த **நீர்ப்பாசனவியல் தொழிநுட்பத்தினை** அடிப்படையாகக்கொண்ட நாகரிக வரலாறு தடுத்துவிட்டதன் காரணத்தினால், வட இலங்கையின் தனித்துவமான ஒரு பெரும் நாகரிக மரபும் பண்பாடும் வட இலங்கையின் வரலாற்று வானிலிருந்து வெளிக்கொணரப்படாமலேயே தரைக்குக் கீழ் மறைக்கப்பட்டு விட்டது. இராசரட்டையின் நீர்வள நாகரிக மரபானது சிங்கள பௌத்தமத நிறுவனங்களுக்கான போஜிப்பினை வழங்கியதன் பின்னணியில் இந்தியாவில் அம்மதத்தின் நிறைபேற்றிற்கும் வாழ்வியல் தோல்விக்கும் காரணமாக விருந்த கடல் வாணிபத்தின் இயக்கவியல் பற்றிய வரலாற்று வளர்ச்சியின் விபரங்களுக்கான இலக்கியப்பதிவினை வரலாற்றிலிருந்து விலகியிருந்தமையை மிகத்தெளிவாக இங்கு காணமுடிகின்றது. **இதுவே வட இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட்ட பூநகரி நாகரிகம் தொடர்பான சில வரலாற்று நிகழ்வுகளை பதிவேற்றம் செய்திருந்தமையையும் மறப்பதற்கில்லை. ஈழத்துப் பூதந்தேவனார், ஈழத்து முடிநாகராயர், யாழ்பிரமதத்தன் போன்றோர் புலவர்களாக வாழ்ந்ததன் பின்னணியில் பாடிய பாட்டுக்கள் சங்க இலக்கியப்பரப்பில் இடம்பெற்றதற்கான காரணகாரியத்தொடர்புகளையும் பூநகரி நாகரிகத்துடன் இணைத்துப்பார்க்க வேண்டிய ஒரு வரலாற்றுப்பணி தற்போது எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.**

## நாகரிகத்தின் பிரதான நிறுவனங்கள்.

ஒரு நாகரிக சமுதாயத்தில் காணப்படுகின்ற கூறுபாடுகள் நான்கு ஆகும். அவை பொருளாதார வளம்(மிகையுற்பத்தி), அரசியல் அமைப்பு அல்லது மக்கள் ஒன்று கூடி இயங்கும் நிறுவனங்கள், எழுத்து வழக்குடன் கூடிய கணிக்கப்பட்டு பதியப்பட்ட மொழியும் மரபுகளும்,தொழிநுட்பத்துடன் கூடிய கல்வியறிவும் நகரக்கட்டமைவும் அதனுடன் இணைந்திருக்கும் கலை வளர்ச்சியும் ஆகும்.

## சமுத்திரவியல் தளத்தில் பொருளாதார மேலாண்மை

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நிலையான பொருளாதார வாழ்க்கை இன்றியமையாதது. விலங்குகளை வேட்டையாடியும், கிழங்குகளைத்தின்றும், மீன்களைப்பிடித்தும் நாடோடிகளாக மனிதன் வாழ்ந்து வந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டபோதே அதாவது வேளாண்மையில் ஈடுபட்டு ஒரு இடத்தில் நிலையாக வேரூன்றிய பின்னரே அச்சமூகத்தில் நாகரிகம் தோற்றம் பெற்றது. பல தொழில் பிரிவுகள் ஏற்பட்டது. மனிதர்கள் ஒன்று சேர்ந்து குழுமம் குழுமமாக சிந்திக்கத்தொடங்கியதால் பல அறிவியல் முன்னேற்றங்களும் ஏற்பட்டன. இதே போன்றதொரு நிலை சமுத்திரவியல் தளத்தினின்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டுப்பொருட்களான முத்து, வலம்புரிச்சங்கு, சிப்பி, சுறா எலும்பு, கடல்படு இரத்தினக்கற்கள் போன்றன பிரதான வாணிபப்பொருட்களாக விளங்கியமையை இலக்கிய மூலங்கள் பதிந்து வைத்துள்ளன. நகராண்மை விருத்தி மற்றும் சுகாதாரம் என்பன சமுத்திரவியல் நாகரிக வாழ்வில் முக்கியமான இயங்கு துறைகளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு வளையல் கைத்தொழில் சார்ந்த பல நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. படகு மற்றும் பாய்மர, கட்டுமரங்கள் கைத்தொழில்களுடன் உலோகக் கைத்தொழில் விருத்தியடைந்திருந்தமையின் காரணத்தினால் வெளிநாட்டு வாணிபமும் பயணங்களும் சமுத்திரவியல் நாகரிகத்தின் பல கூறுகள் இன்னும் நிலத்தினுள்ளும் நீரினுள்ளும் மறைந்திருக்கின்றன.

## பூநகரி சமுத்திரவியல் நாகரிகத்தின் அடிப்படைகள்

### 1. வரிவடிவங்களும் சிந்தனை மரபுகளும்

வடஇலங்கையில் மிகவும் அதிகமாக கிடைத்த பிராமிச்சாசனங்கள் பூநகரிப் பிராந்தியத்திலிருந்தே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவை பெருமளவிற்கு மட்பாண்டப் பொறிப்புக்களாகவே கிடைத்துள்ளன. மிகவும் தனித்துவமான வரைபுகளை உள்ளடக்கிய வகையில் பூநகரி நாகரிகத்துக்குரிய வரிவடிவங்கள் மட்பாண்டங்களின் மீது வரையப்பட்டுக் கிடைத்துள்ளன. ஏறத்தாள 40 கிராமங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புராதன மட்பாண்டக்கலசங்களிலிலிருந்து பொறிக்கப்பட்டுக் காணப்பட்ட தமிழ்ப்பிராமி வரிவடிவங்கள் பூநகரி நாகரிகத்தின் பரம்பலை கோடிட்டுக்காட்டுகின்றன. ரோமன் அம்போறா, ரோமன் சிவப்பு ரௌலெட்டட், கிரேக்கத்தின் அறிற்றையின் மற்றும் தென்னிந்திய ரௌலெட்டட் ஆகிய விலை உயர்ந்த மட்பாண்டங்களில் பிராமி எழுத்துக்கள் வரையப்பட்டுக் காணப்படுகின்றன. ரோமரின் அம்போறா மட்பாண்டங்கள் திராட்சை மதுசாரம்(யவன பானம்) போன்ற உயர்ரக குடிவகைகள் மற்றும் உணவுப்பண்டங்களின் சேமிப்புக்கலங்களாக ஏற்றுமதி இறக்குமதிக்குரிய கப்பல் உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டிருந்தமையைக் காண்கின்றோம். பூநகரி புராதன காலத்துத் துறைமுகங்களுள் ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியிருந்தது என்பதனை மலாய் மொழியில் எழுதப்பட்ட **சராயு மிலாயு** என்ற இலக்கியம் குறிப்பிடுகின்றது. பூநகரித்துறைமுக நகர்பற்றிய பல குறிப்புகளை கிரேக்க ரோம இலக்கியங்களிலும் காணமுடிகின்றது. தொலமியின் உலக வரைபடத்திலும் பூநகரித்துறைமுகப்பட்டினம் குறிப்பிடப்பட்டிருப்பதனைக் காணமுடியும். மத்தியகால சோழ மன்னருடைய தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளிலும் பூநகரி பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. பூநாகர் மரபிலிருந்து தழைத்திருந்த இந்த வாணிப மையம் தொடர்ச்சியாக தொழிற்பட்டு வந்த நிலையில் மீண்டும் சோழர்காலத்தில் இரண்டாம் கட்ட பண்பாட்டு வளர்ச்சிக்கான உள்ளீடுகளை உள்ளீர்த்துக் கொண்ட நிலையில் தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் ஆலயத்தின் நித்திய வழிபாட்டுக்கான மலர் வகைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்துவந்திருந்தளவிற்கு பூநகரி என்ற நாகரிகத் தளத்தினுடைய மிக நீண்ட பின்னணி நிலமானது கோட்டை- கொத்தளங்களாலும் வணிகப்பொருட்களின் பாதுகாப்புக் களஞ்சியங்களாளவும் வளர்ச்சி பெற்றிருந்த வரன்முறையை எம்மவர் பலர் அறிந்திருக்க இன்னும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தீவுப்பரப்புகளில் சிலவற்றில் மல்லிகைத்தீவு உட்பட மத்தியகால வரலாற்றில் மலர்வகைகளை உற்பத்தி செய்யும் தளங்களாக விளங்கியிருந்தமைக்கான இலக்கியச் சான்றுகளும் கிடைத்துள்ளன. நயினார் தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலபுராணத்தில் பூவைக் கொண்டு சென்று வழிபடும் நாகம் பற்றிய ஐதீகமும் அதன் தொன்மமும் முன்னர் குறிப்பிட்ட கருத்தினை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.


## பூநகரி எழுத்துமுறையுடன் கூடிய பேச்சுமொழி

ஒரு நாகரிக வாழ்வின் முக்கியமான ஓர் அளவீடாக எழுத்து வழக்குள்ள பேச்சு மொழியை மக்கள் தமது வாழ்வில் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று **கிளவூட் குளுக்கோன்** என்ற சமூகவியல் விஞ்ஞானி குறிப்பிடுகின்றார். ஒரு பண்பாட்டு வாழ்வு முறையில் வெறும் பேச்சு மொழி மட்டுமே வழக்கிலிருந்து வந்தமைக்கான உதாரணங்கள் பலவற்றை எடுத்துக்காட்ட முடியும். கற்கால மக்களது வாழ்வியல் இத்தன்மையைக் கொண்டது. வெண்கல உலோகக் கண்டுபிடிப்பின் பின்னரேயே கருவித் தொழிநுட்பப் பாய்ச்சல் காரணமாக எழுத்து முறை வாணிபத்தேவையின் பொருட்டு உருவாக்கப்பட்டது. புராதன பழம்பெரும் நதிக்கரையோர நாகரிகங்கள் யாவும் எழுத்துமுறையின் கண்டுபிடிப்புடனேயே வளர்ச்சியடைந்திருந்தன. அவ்வகையில் பூநகரிப் பிராந்தியமும் வரிவடிவமுறையை அதற்கேயுரித்தான தனித்துவத்துடன் தாங்கி, உருவாக்கியுள்ள முறையில் நாகரிக வாழ்வொன்றின் செழிப்பிற்கு வித்திட்டிருந்தமையைக் காணமுடிகிறது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஏராளமான உள்நாட்டு வெளிநாட்டு மட்கலசங்களில் பிராமி வரிவடிவில் வரையப்பட்ட வாசகங்களைக்கொண்ட சாசன வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவை தமிழ்ப்பிராமி வாசகங்கள் என தொல்லியல் விற்பன்னர்களால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். இவற்றுள் சில ஆட்சியாளர்களின் குலப்பெயர்களாகவும் சில மட்பாண்டப் பதிவுகள் வணிகர்களுடைய பெயர்களாகவும் மற்றும் சில பதவிப்பெயர்களாகவும் காணப்படுவதிலிருந்து இப்பெரும் கடற்பிராந்தியத்தில் கடல்சார் நிர்வாக முகாமைத்துவ அலகுகளுடன் கூடிய கடலாதிக்கத்தினூடான நகர உருவாக்கத்தின் வழியே நாகர் இன மக்களின் வாழ்வியல் கோலமாக பூநகரி நாகரிகம் பரிணாமமடைந்திருந்தது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. கண்ணகியின் காற்சிலம்புக்கான முத்துப்பரலைத் தேடி மீகாமன் நாகதீவிற்கு வந்தது பற்றிய ஐதீகமும் விஸ்னுபுத்திர வெடியரசன் பற்றிய ஐதீகமும் வட இலங்கையிலிருந்த சமுத்திர அரசர் பற்றிய தொகுப்பாகவே உள்ளன. போத்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர் காலங்களிலும் இக்குறிப்பிட்ட கடல் முகப்பானது அவர்களுடைய பொருளியல் நடவடிக்கைகளுடன் பிணைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூநகரியை நோக்கிய யாழ்ப்பாணக்குடா நாட்டின் நகரங்களுக்கான பிரதான வழித்தடங்கள் நாவாய்கள் மூலம் பயணித்து சென்றடையக் கூடிய கடல் வழிப்பாதைகளைக் கொண்டுள்ள தன்மையைக்காட்டும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் புற உருவப்படம்.**




**அல்லைப்பிட்டியுடன் பூநகரி - நாகதேவன் துறைமுகம் ஒரு நேர்கோட்டில் கொண்டிருந்த கப்பல் மார்க்கத்தினைக்காட்டும் படம்**




Modern villages around Poonakari (Pooneryn)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பூநகரியின் புராதன கட்டட அழிபாடுகளும் அவற்றின் மீதான தொல்லியல் ஆய்வுகளும்

பூநகரிப்பிராந்தியக் கட்டட சிதைவுகள் தொடர்பாக கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆய்வாளர்கள் சிலரால் (J.P. Lowise) மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கைகளைத்தவிர இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் எம்மவர்களால் எதுவுமே செய்யப்பட்டிருக்க வில்லை. ஆனால் ப.புஸ்பரத்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேவையாற்றியிருந்த காலப்பரப்பில் பூநகரி மீது தொடர்ச்சியாக மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளினதும் அகழ்வாய்வுகளினதும் விளைவாக **தென்னியங்குள கட்டட அழிபாடுகளை** மட்டும் அவரது நுலான **பூநகரி தொல்பொருளியல்** ஆய்வு என்பதில் இணைத்துள்ளார். இந்நூலில் ஆறாம் அத்தியாயமாக **பூநகரியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகளும், அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும்** என்ற தலைப்பில் 46 பக்கங்களை உள்ளடக்கிய வகையில் விபரித்து எழுதியுள்ளார். தென்னியன் குள கட்டட அழிபாடுகளை மட்டுமே மையப்பொருளாகக் கொண்டு அதனை **ஐந்து தொகுதிகளாக** வகுத்து புகைப்படங்களுடன் விபரித்துள்ள அதேவேளையில் பூநகரியின் ஏனைய பாகங்களில் கண்டுபிடிக்கப்பெற்ற இந்துக்கோயில்களின் அழிபாடுகள் - கட்டட எச்சங்கள் தொடர்பாகவும் அடுத்து வந்த அத்தியாயங்களில் விளக்கியிருப்பதனைக் காண்கின்றோம். தென்னியங்குள அழிபாடுகளை அவர் விபரிக்கும் போது அங்குள்ள மூன்று கிராமங்களான **செழியாவில், மூங்குவில்** மற்றும் **நீராவி** ஆகிய இடங்களில் இதுவரையில் 10க்கும் மேற்பட்ட கட்டடத்தொகுதிகளின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதெனவும் அவை தற்போது காடடர்ந்த பரப்புகளாக காட்சி தருவதினாலும் மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளாக காணப்படுவதனாலும் கட்டட அழிபாட்டு மையங்கள் உயர்ந்த மண்மேடுகளாக காட்சிதருவதினால் பூரணத்துவமான ஆய்வறிக்கையை எடுத்துக்கொடுக்க முடியாமல் உள்ளது எனவும் விபரித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


இக்குறிப்பிட்ட அத்தியாயமானது எமது ஆய்வுக் கருப்பொருளைப் பொறுத்தவரையிலும் அதீத முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது. பூநகரியின் பின்னணி நிலப்பரப்பாகக் காணப்படும் மேற்குறிப்பிடப்பட்ட கிராமங்களில் காணப்படும் ஐந்து தொகுதிக்கட்டடங்களும் முழுவதுமாக இந்து ஆலயங்களுமல்ல அதேநேரத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான குடியிருப்புக்கட்டடங்களுமல்ல என புஸ்பரத்தினம் குறிப்பிடிருப்பது எமது ஆய்வின் கருப்பொருளுக்கு சாதகமாக அமைந்துள்ளது. அதாவது இக்கட்டடங்கள் சில கருங்கற்கலாலும் பல முருகைக்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன என்ற குறிப்பினைப் பார்க்கும் போது திட்டவட்டமாக அவை கடல்வாணிப பல்பொருள் அங்காடிகளாக ஏற்றுமதி - இறக்குமதிப் பண்டங்களின் பண்டத் தரிப்புக் கூடங்களாக விளங்கியிருந்தன அல்லது தொழிற்பட்டிருந்தன எனக்கொள்ளமுடியும். எவ்வாறெனினும் இன்று பெருங்காடடர்ந்து காணப்படும் பூநகரியின் பிராந்திய சூழலானது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பல நகரங்களுடனான நாகரிக வாழ்வின் பெருந்தளமாக விளங்கியிருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ரோம நாணயங்களும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களும்








**பூநகரிப் பிராந்தியத்திலிருந்து கலாநிதி ப.புஸ்பரத்தினத்தினால் மேலாய்வின் போது சேகரிக்கப்பட்ட (மேலே) ரோம நாணயங்களும் (கீழே) வெள்ளியினாலான வட இந்திய மகத அரசின் அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களும்**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூநகரிப் பிராந்தியத்தின் மீதான மேலாய்வின் போது கலாநிதி ப.புஸ்பரத்தினத்தினால் சேகரிக்கப்பட்ட இலக்குமி நாணயங்கள்**






**தொடக்க காலப் பாண்டியர் நாணயங்கள் - பாண்டியன் பெருவழி நாணயங்கள்**



**பூநகரியில் கிடைத்த சிங்க நாணயங்கள் - கலிங்க மரபில்**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**பூநகரியில் கிடைத்த சிங்க நாணயங்கள் - பல்லவர் மரபில்**



**வேள் எனப் பெயர் பொறிக்கப்பட்ட மட்பாண்ட சாசனம்**







**பூநகரி மீதான மேலாய்வின் போது சேகரிக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

பூநகர் சமுத்திரவியல் நாகரிகமும் வாணிபத் தொடர்புகளும் என்ற இந்த ஆய்வுக்கட்டுரையில் பூநகரியினுடைய அமைவிடமானது சமுத்திரவழிப் போக்குவரத்துடன் மிகவும் இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருந்த தன்மையை எடுத்தாராய்ந்திருந்த முறைமையைப் பார்த்திருந்தோம். நாகதேவன்துறை மிகவும் நீண்டகால எல்லை வரைக்கும் நிலைத்திருந்து பண்டங்களை ஏற்றியிறக்கும் ஒரு சிறந்த துறைமுகமாக தொழிற்பட்டிருந்தமையைக் காண்போம். யாழ்ப்பாண வைபவமாலையிலும் இத்துறைமுகத்தினைப்பற்றிய அசைவியக்கம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றிருப்பதனைக் காணமுடிகின்றது. கண்ணகியின் கதை மரபுகளிலும் நாகதேவன்துறையுடன் நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துச்சொல்லப்படுகின்றன. விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாற்றிலும் நாகதேவன்துறை இணைக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. இவ்வாறு பூநகரியுடன் இணைந்துள்ள நாகதேவன்துறையின் செயற்பாடுகள் தென்னிலங்கையில் வளர்ச்சியடைந்திருந்த நீர்ப்பாசனவியல் நாகரிகத்தால் ஏற்பட்ட தொடர்புகளை விட, குடா நாட்டின் கடலோடிகளின் தொழிற்பாட்டினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமையைக் காணமுடியும். சமுத்திர வாணிபம் பல கட்டங்களாகவும் கடல்முகப்பின் எதிரேற்றம் தொடர்பிலும் வாணிபக்கலங்களின் மிதவைத் தன்மையின் அடிப்படையிலும் பருவக்காற்றின் வீச்சுத்திறனின் அடிப்படையிலும் நிகழ்ந்து வந்திருந்தமையை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்கும் போது பூநகரியை மையமாகக் கொண்ட குடாக்கடல் பரப்பானது வருடம் முழுவதும் தொடர்ச்சியாக ஏற்றுமதி - இறக்குமதி நடவடிக்கைகளில் தொடர்ச்சியான முறையில் இயங்குதிறனைக் கொண்டிருந்தமையை உணரமுடிகிறது. சமாந்தரமாக மூன்றடுக்கு நீட்சிப்போக்குக் கொண்ட மணல்சாரல் தொடரைக் குடாக்கடல் நடுவண் மையமாகக் கொண்ட நிலப்பரப்பின் இறங்குதுறை முனையங்கள் கடல் வாணிபத்திற்கான ஏற்றியிறக்கல் தொழிற்பாட்டினை மிகவும் இலகுபடுத்தியுள்ள அதேவேளை, இருபருவக்காற்றுக்காலங்களிலும் எதிர்ப்புறமாகவும் அதற்கு நேர்ப்புறமாகவும் கிட்டங்கிகளில் வாணிபப் பொருட்களை பாதுகாக்கவும், நகர்த்தவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இத்தகையதொரு இயற்கைச் சூழலானது யாழ்ப்பாணக்குடாநாட்டின் பிரதான வாயிலாக விளங்கும் தீவகப்பரப்புடன் இணைந்துள்ள பூநகரியின் கடல் முனையங்கள் ஆண்டுமுழுவதுமாக தொழிற்பட்ட வண்ணம் இருப்பதற்கான வாய்ப்பினைப் பூநகரிப் பிராந்தியம் அளித்துள்ளது.

எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி, மாசிடோனியா, சஸாணியம், சீனா ஆகிய நாடுகளுடன் தென்னிந்திய பல்லவர்கால, சோழர்கால, விஜயநகர வணிக கணங்கள் யாவும் பூநகரிப்பிராந்திய துறைமுகங்களுடன் நேரடியாக வாணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமைக்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. மன்னார் - சிலாபம் முத்துவிளையும் முத்துச்சிலாபக்கடற்கரைக்கும் பூநகரிப் பிராந்திய துறைமுகங்களுக்குமிடையே இடைவிடாத நாவாயோட்டத் தொடர்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலம் தொட்டு இருந்து வந்துள்ளன. சிந்துவெளி நாகரிக காலத்து மக்கள் உபயோகித்திருந்த முத்துவகைகள் மன்னார்க்குடா முத்துக்கள் என்பதனை தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ள இவ்வேளையில் மதுரையில் கோயில் கொண்டிருக்கும் மீனாட்சியம்மனின் ஆடைக்கவசம் மன்னார் குடாவிலிருந்து பெறப்பட்ட முத்துக்களினால் ஆக்கப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. பாண்டியர் வம்ச காலத்து வாணிப நடவடிக்கைகள் சங்க காலத்திலிருந்து கி.பி 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பூநகரியுடனான முத்துவியாபாரத்துடன் தொடர்புபட்டிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறான ஒரு கேந்திர ஸ்தானத்தின் கடற்படுக்கையை ஊடறுத்தே இராமர் அணை கட்டப்பட்டது என்பதனை அவதானிக்கும் பொழுது ஆதிகால முத்துக்கைத்தொழில் விருத்தியின் பொருட்டே மன்னார் - இராமேஸ்வரம் மார்க்கத்தில் முத்துக்குளித்தல் தளம் அமைக்கப்பட்டிருந்தது என்று கருதலாம். காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தின் அழிவுக்குக்காரணமாக அமைந்திருந்த கடல் கோளின் போது இம்முத்துக்குளிக்கும் தளமும் நீருக்கடியில் முழ்கிவிட்டது. விஸ்ணுபுத்திர வெடியரசன் ஆட்சிக்கால நிகழ்வுகளை இம்முத்துக்குளித்தல் வரலாற்றுடன் இணைத்து நோக்கும்போது வடஇலங்கையில் ஒரு சமுத்திரவியல் பேரரசின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் அழிவுநிலைகளை பூநகரியுடன் பிணைக்கப்பட்டிருந்த நிலை தெளிவாக்கும். இதே வாணிபத்தொடர்பே அதாவது விஸ்ணுபுத்திர வெடியரசன் காலத்து சமுத்திரப் பேரரசின் பொருளியல் ஈட்டத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்த முத்து வர்த்தகமே யாழ்ப்பாணப்பேரரசின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்திருந்தது என்பது யதார்த்தமான ஒரு வரலாற்று நிகழ்வாக வரலாற்று இலக்கியங்களில் பதியப்பட்டுள்ளமையை நாம் அறிவோம். அந்தவகையில் பூநகரிப் பிராந்தியத்திலுள்ள சமாந்தரமாய் அமைந்துள்ள மணல் திட்டுக்களின் இருபக்க கடற்படுக்கைகளை நீரடி அகழ்வாய்வுக்கு எதிர்காலத்தில் உட்படுத்தும் போது இச்சமுத்திரவியல் நாகரிகத்தின் நிலைகளின் சிறப்பியல்புகள் பல வெளிவரும் என்பதில் எவ்வித சந்தேகமுமிருக்காது.

**இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள் :-**

1. புஸ்பரட்ணம், ப., 1993 **பூநகரி தொல்பொருளாய்வு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு திருநெல்வேலி.
2. புஸ்பரட்ணம், ப., 2017 **இலங்கைத்தமிழர் ஒரு சுருக்க வரலாறு**, தமிழ்க்கல்வி சேவை, சுவிற்சர்லாந்து.
3. கிருஸ்ணராசா, செ., 1998 **தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத்தொன்மையும்.** வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
4. சூரியதாசன், S. & திருமதி நரேந்திரா, R.2015 **பூநகர் பெட்டகம்**, தொகுதி - 1
5. ஆசிரியர் குழு., 2014 **பூந்துணர், நறவம்** - 4 கலாசாரப்பேரவை பிரதேச செயலகம், பூநகரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை:-**

01.OUR. TRIBUTE. A. SUPPLEMENT (1999 - 2009)
(SR Printers, 281, Deans Road, Colombo - 10 17, February - 2010

02. அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா மலர், புனித கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். 1997.

03 .கச்சதீவு அன்றும் இன்றும் (ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் (1700 - 2002) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி 2002

04. 'சிந்தனைத்திரட்டு' , (1972) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி

05. 'அமைதித்துளி' (1977) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி

06. ஆழ்கடல் முத்துக்கள் (1979) அற்புத மரியநாயகி ஆலயம், பெரியதெரு, நீர் கொழும்பு, அருட்திரு தீபஞானம் அ.ம.தி

07. 'இறைஞான ஈர்ப்புக்கள்' (1996) புனித வளன் கத்தோலிக்க அச்சகம் - யாழ்ப்பாணம் அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி

08. சுயவிபரக்குறிப்பு (சுருக்க கையெழுத்துப் பிரதி 2009, அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரியின் கிராமிய வழிபாடுகளும் கறுக்காய்த்தீவு வாய்க்காலடி வைரவர் ஆலயமும்

**திரு.சி. நடேசரத்தினம்**
தலைவர்
வாய்க்காலடி வைரவர் ஆலயம்
கறுக்காய்த்தீவு.

இலங்கையின் வடபால் கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை எழில்கொள் பூநகரி பிரதேசத்தில் நெல்வயல்களால் சூழப்பட்ட அழகுநிறை சைவக்கிராமமான கறுக்காய்த்தீவு கிராமத்தின் மேற்கு எல்லையிலே முழு கிராமத்தையும் காவல் செய்பவராக கிழக்கு நோக்கி கோவில் கொண்டிருப்பவரே சிவமுகூர்த்தங்களில் ஒருவரான எமது அருள்மிகு வாய்க்காலடி வைரவ பெருமானாவார்.

வைரவப் பெருமான் பிள்ளையார், காளி போன்ற பரிவார மூர்த்திகளுடன் வீற்றிருந்து தனது அடியவர்களை காவல் செய்து அவர்களின் குறைகளையும் தீர்த்தருளுகின்றார். ஆரம்பத்தில் கறுக்காய்த்தீவினை சேர்ந்த பொன்னம்பலம் சின்னத்தம்பி (அப்புலிங்கம்) அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்த மேற்படி ஆலயமானது தற்காலத்தில் அவரது மரபினராய் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் இவ் ஆலயம் கறுக்காய்த்தீவு வயற்கரை வைரவர் ஆலயம் என்ற பெயரினாலும் அறியப்படுகின்றது.

வைரவப் பெருமானுக்கு வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் தவறாது இடம்பெற்றுவருவதுடன் செவ்வாய்க்கிழமைகளிலும் அடியவர்களால் வழிபாடுகள் நடாத்தப்படுகின்றது. அத்துடன் தீபாவளி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், போன்ற பண்டிகைகளும் நான்கு சாம பூசைகளுடனான சிவராத்திரி தினமும் வித்துநாள், புதிரெடுத்தல் போன்ற சம்பிரதாயங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அத்துடன் அடியவர்கள் தங்களுக்கு அருள்பாலிக்கும் வைரவப் பெருமானுக்கு நன்றிக்கடன் தீர்க்கும் முகமாக மடைபரவி, வடைமாலை சாற்றி நேர்த்திக்கடன் நிறைவேற்றும் வழக்கமும் இன்றுவரை சிறப்பு அம்சமாகக் காணப்படுகின்றது.

இன்று இவ் ஆலயம் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், ஆகிய மண்டபங்களுடனும் மணிக்கோபுரம், மடப்பள்ளி, சுற்றுமதில் போன்ற கட்டமைப்புக்களுடனும் கூடிய ஓர் அழகிய ஆலயமாக முழுமைபெற்று கிராமத்திற்கு அழகு சேர்க்கின்றது.

வைரவப் பெருமான் ஆரம்பகாலத்தில் தற்போது கோவில் கொண்டிருக்கும் இடத்திற்கு வடக்கே கடற்கரையில் மரத்தடியில் கோவில் கொண்டிருந்ததாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் நாகதேவன்துறையூடாக போக்குவரத்து மேற்கொள்வதற்காக கறுக்காய்த்தீவூடாக கால்நடையாக சென்றுவரும் வியாபாரிகள், வழிப்போக்கர்களிற்கு வைரவப் பெருமான் மனிதவடிவில் தோன்றி உதவிகள் செய்ததாகவும் சிலரை சோதனைக்குட்படுத்தி தனது அருட்கடாட்சத்தினை அவர்களுக்குக் காட்டி அவர்களிடமிருந்து நேர்த்திக்கடன்களை பெற்றுவந்ததாகவும் ஒளிப்பிளம்பு வடிவிலும் சதங்கை ஒலிகள் மூலமும் தனது நடமாட்டத்தினை அடியவர்களுக்கு காட்டி வந்தார் எனவும் கிராமத்தின் முதியவர்கள் இன்றும் மெய்சிலிர்க்க கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் வைரவப்பெருமான் கோவில் கொண்டிருந்த குறித்த இவ்விடத்தில் வைத்து பூசைகள், விழாக்கள் நடாத்துவதற்கு போக்குவரத்து போன்ற பலகாரணங்களால் சிரமப்பட்ட அன்றைய பூசகரான பொ. சின்னத்தம்பி அவர்கள் தனது சொந்த நிலமாகிய தற்போது ஆலயம் உள்ள இடத்தில் இருந்த நாவல் மரம் ஒன்றின் அடியில் ஓலை கொட்டகையினால் மடாலயம் அமைத்து வைரவப் பெருமானை வழிபட ஆரம்பித்துள்ளார். அந்தக் காலத்திலும் வைரவப் பெருமான் மனித வடிவிலும் , ஒளிப்பிழம்பு வடிவிலும் தங்கை ஒலிகள் மூலமும் தனது நடமாட்டங்களை அடியவர்களுக்கு காட்டுவதுடன் அவர்களை காவல் செய்து வந்திருக்கிறார். அடியவர்களும் அற்புதம் நிறைந்த வைரவப் பெருமானுக்கு தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி வந்திருக்கின்றனர்.

1980 களின் பிற்பகுதியில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், ஓலை கூரையிலான மகாமண்டபம் மற்றும் நிருத்த மண்டபம் ஆகிய மண்டபங்களும் தீர்த்தக்கிணறும் அமைக்கப்பட்டு கருங்கல்லினாலான மூலமூர்த்தி விக்கிரகம் பிரதிஸ்டை செய்யப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மகா கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது.

இவ்வாறு ஆலயம் வளர்ச்சி காண ஆரம்பித்த சூழ்நிலையில் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டது. குறித்த இராணுவ நடவடிக்கைகளின் போது செக்காலை பத்தினிப்பாய் போன்ற கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்த அடியவர்கள் வைரவப்பெருமானுக்கு மடாலயங்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். உள்நாட்டு யுத்த அச்சம் சற்று குறைவடைந்த நேரமாகிய 1994ம் ஆண்டு சொந்த ஊருக்கு நெற்செய்கை மேற்கொள்ள வந்த அடியவர்கள் ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் கிட்டத்தட்ட 25 மீற்றர் தூரத்தில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த இராணுவப் பாதுகாப்பு மண் அரணுக்கு அருகாமையில் சிறுமரத்தடியில் வைக்கப்பட்டிருந்த தமது குலதெய்வமாகிய வைரவப் பெருமானின் விக்கிரகத்தினை கண்டெடுத்து செக்காலை கிராமத்தில் வைரவப் பெருமானுக்காக அமைக்கப்பட்டிருந்த மடாலயம் ஒன்றில் வைத்து வழிபட்டு வந்தனர்.

2000 ஆம் ஆண்டிற்கு பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த நிறுத்தத்தினைத் தொடர்ந்து மீண்டும் வைரவப்பெருமானின் மூலமூர்த்தி விக்கிரகத்தினை தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் கர்ப்பக்கிரகத்திற்குரிய இடத்தில் ஓலைக் கொட்டகையினால் மடாலயம் அமைத்து அதனுள் வைத்து வழிபடத் தொடங்கினர்.

**2003** ம் ஆண்டு வைரவப்பெருமானின் அடியவரான திரு. கா. கார்த்திகேசு அவர்களும் அவரது துணைவியாரான கா. சந்தானலட்சுமி அவர்களும் ஆலய சூழலில் இருந்த தனது பதின்மூன்றரை பரப்பு சொந்த காணியினை ஆலய வளர்ச்சி கருதி ஆலய நிர்வாகத்தின் பெயரிற்கு தர்மசாசனம் செய்து கொடுத்தார்.

குறித்த யுத்த நிறுத்த காலத்திலும் பூசைகள் பண்டிகைகள் சிறப்பாக இடம்பெற்றுவந்ததோடு மீண்டும் **2007** ஆம் ஆண்டு ஆரம்பமாகிய இறுதிக்கட்ட யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வின் போதும் பூசைகள் தடைப்பட்டன. பின்னர் **2010** ம் ஆண்டு மீள்குடியேற்றத்தினை தொடர்ந்து இன்றுவரை பூசைகள் சிறப்பாக நடைபெறுவதுடன் திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

**2014** ம் ஆண்டு நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு குறித்த ஆலயமானது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபையினது அயராத உழைப்பினாலும் அடியார்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடனும் பாரிய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வைரவப்பெருமானின் ஆலயம் முழுமையும் அழகும் நிறைந்த ஆலயமாக உருவாகியுள்ளதுடன் **04.09.2020** அன்று மகா கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டு தொடர்ந்து பத்து நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று மண்டலாபிஷேக இறுதி நாளில் சங்காபிஷேகமும் இடம்பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி ஓர் பழந்தமிழ் நகர்

**திருமதி. செல்மினி விஜிதாத்மன்**
ஆசிரியர்
ம/ பாப்பாமோட்டை றோ.க.த.க பாடசாலை
ஞானிமடம், பூநகரி

பூகோளசார் அமைவில் இந்து சமுத்திரத்தின் இயற்கையாய் மிளிரும் இலங்கைத்தீவின் வட பிரதேசத்திலேயுள்ள கிளிநொச்சி மாவட்டத்திலே வடக்கே யாழ்ப்பாணக் கடலேரியையும் தெற்கே வெள்ளாங்குளத்தினையும் மேற்கே மன்னார் கடலினையும் கிழக்கே குடமுறுட்டி ஆற்றினையும் கொண்டு வரலாற்றையும் பண்பாட்டையும் தனித்துவமாய் பேணிக் காத்து வருகின்ற தன்னகரே பூநகரி. பூநகரிப் பிரதேசத்தின் கடலன்னையும் நிலமகளும் இணைந்து வழங்கும் திரவியங்களே இப்பகுதிச் செல்வமெனின் மிகையாகாது. கடல்படு திரவியங்களால் அது தொடர்பான தொழில் வகைகள் பல்கிப் பெருகியிருந்தன. அதே போல் ஊர் உலகம் போற்றும் “பூநகரி அரிசி' இனங்களால் இல்லங்களில் இல்லாமை இல்லாதொழிந்திருந்தது. ஆவினங்களின் ஐஸ்வர்யங்கள் அகலக்கால் விரித்ததென்றே கூறலாம்.

வரலாற்று நோக்கில் பூநகரி என்ற சொல்லாட்சியானது கால ஆட்சிகளில் 'புதுக்கி, பூனேரி, பூனகரி, பூனேரியன், பூநகர், பூனரின்' போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெயர்கள் காலப்போக்கில் நடைமுறை வழக்கில் மாற்றமடைந்து இன்று 'பூநகரி' என்ற பெயருடன் விளங்குகின்றது. பூநகரி என்பது நெல் பூக்கும் பூந்துணர் பருவத்தை குறிப்பதாக பாரம்பரியமான மூத்த விவசாய குடிமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த நெல் பூக்கும் காலம் தான் இப்பிராந்திய மக்களின் வசந்த காலமாக இருந்திருக்கின்றது. ஆதிக்குடியிருப்புக் காலப்பகுதியில் பொன்னாவெளி பாற்பண்ணைக்கும், பல்லவராயன்கட்டு வேடுவத்தொழிலுக்கும், நெல்லூர் நெற் களஞ்சியமாகவும் திகழ்ந்துள்ளது.

கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமி குறிப்பிட்ட 'புதுக்கி' என்ற இடம் பூநகரியையும், தலைகோரி என்ற இடம் பூநகரியிலுள்ள கல்முனையையும் குறிப்பிடுகின்றது என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**1924** இல் கொட்றிங்ரன் என்பவரால் வெளியிடப்பட்ட இலங்கையில் ஆதிகால நாணயங்கள் பற்றிய நூலில் பூநகரியில் உரோமகால நாணயங்கள் கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றார். இவை அக்காலத்தில் இருந்த வியாபாரத் தொடர்புகளை எடுத்துக்காட்டுகின்றதெனலாம். கி.பி .3 ஆம் நூற்றாண்டில் இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிற்கும் அனுராதபுரத்திற்கும் இடையிலான வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் யாழ்ப்பாணம் - பூநகரி ஊடாக நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றது எனலாம். மேலும் பூநகரி வாடியடியில் காணப்படுகின்ற பூநகரிக் கோட்டையினை போர்த்துக்கீசர் தமது ஆட்சியின் கடைசிக் காலத்தை அண்டி நிறுவினர். அதன் தள அமைப்பு ஏறத்தாள சதுர வடிவானதாகவும் இதன் பக்கங்கள் 100 அடி நீளம் கொண்டனவாகவும் கோட்டையின் வடகிழக்கு, தென்மேற்கு மூலைகளில் இரண்டு கொத்தளங்களும், கிழக்குப் பக்கச்சுவரில் கோட்டையின் வாயிலும் இவ்வாயிலுக்கு அருகே உட்புறத்தில் காவலர் அறையும், தெற்கு, மேற்கு சுவரை ஒட்டியபடி வரிசையாக போர்வீரர் தங்கும் அறையும், கிழக்குப்புறச்சுவரை அண்டி பல அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டிருந்தது என ஒல்லாந்தர் கோட்டைகள் பற்றி ஆராய்ந்து நூல் எழுதிய நெல்சன் என்பவர் குறிப்பிடுகின்றமையைக் காணமுடிகின்றது.

**பூநகரி கோட்டை**

*1989 - 1994* ஆம் காலப்பகுதியில் பூநகரியில் ஓரிரு பிராமி எழுத்துப்பொறித்த மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டதுடன் அவற்றின் காலத்தை கி.மு 2 - 1 ஆம் நூற்றாண்டு எனக் கணித்திருக்கும் மகாதேவன் அவர்கள் அவற்றின் எழுத்து, மொழி தமிழ் எனக் கூறியுள்ளார்.இந்நிலையில் 2003 ம் ஆண்டு மீண்டும் மண்ணித்தலை, வெட்டுக்காடு, கல்முனை போன்ற இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது முன்னரை விட அதிக எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள் கிடைக்கப்பட்டதுடன் ஓரிரு எழுத்துக்களைக் கொண்ட இம் மட்பாண்ட ஓடுகளுள்ள பெரும்பாலான எழுத்துக்கள் விளிம்பை ஒட்டி அதன் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் எழுதப்பட்டுக் காணப்பட்டன என்றும் அவற்றில் தமிழ் மொழியிலே சிறப்பான எழுத்துக்கள் காணப்பட்டதாகவும் ஏனைய எழுத்து வடிவங்கள் தமிழகத்தில் உள்ள கொடுமணல், அரிக்கமேடு, மாளிகைமேடு, அழகன்குளம், பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், வல்லம் போன்ற இடங்களில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட எழுத்துக்களை ஒத்தனவாக உள்ளன எனவும் கூறப்படுகின்றது.

**பூநகரியில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப்பொறித்த மட்பாண்ட ஓடுகள்**

தொன்மையான நாட்டுப்புற வழிபாடுகளில் ஒன்றான நாக சான்றாக நாகபடுவான் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாகவழிபாட்டு சான்றுகள் காணப்படுகின்றன. நாகபடுவான் என்ற பெயரில் நாகம் இருப்பதுடன் படுவம், படுவான் என்றால் ஆழமானகுளம் அல்லது பெரியகுளம் எனவும் பொருட்படுகின்றது. குறித்த இடத்திலிருந்து ஆதிகால பண்பாட்டு சின்னங்கள், சுடு மண்ணிலான நாகச்சின்னங்கள் பீடத்துடன் கூடிய நாகம், நாகினி சிலைகள் சிற்பங்கள், நாக கற்கள், பழமை வாய்ந்த அடையாள சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இவ் ஆதாரங்கள் ஆதிகால மக்களில் குலமரபுச் சின்னமாக நாகம் இருந்தது என்பதை உறுதிப்படுத்துபவனவாக உள்ளதோடு இங்கு கண்டெடுக்கப்பட்ட சில சான்றுகள் இதுவரை தெற்காசியாவில் கிடைக்கப்பெறவில்லை எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்ணித்தலை சிவ ஆலயம்**

**நாகவழிபாட்டு சின்னங்கள்**

தமிழருக்குரிய பண்டைய கால சிவாலயங்களில் ஒன்றான மண்ணித்தலை சிவாலயம் 1989 ம் ஆண்டு மண்ணித்தலை என்ற கடற்கரை கிராமத்தில் சிதைவுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாலயம் கற்களையும், செங்கற்களையும் கொண்டு கட்டப்பட்ட 12 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட மிகச் சிறிய ஆலயமாகும். மூன்று தளங்களைக் கொண்ட இவ் விமானத்தின் குதம், சாலை, பஞ்சரம் என்பன முற்பட்ட சோழர் கலை மரபில் கட்டப்பட்ட ஆலயம் என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றது.

வட இலங்கையில் தெய்வவழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்ததனை பூநகரி, மட்டுவில் நாட்டில் கிடைக்கப்பெற்ற வெள்ளியிலான விக்கிரகங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட இவ்விக்கிரகம் லக்சுமிக்குரியது என்பதனை அதன் அங்க அடையாளங்கள் உறுதி செய்வதுடன் இவ்வாறான விக்கிரகங்கள் கி.பி 10 - 11 ம் நூற்றாண்டளவில் ஈழத்திலும் தமிழகத்திலும் பயன்பட்டிருக்கலாம் என பல சான்றுகள் கூறுகின்றன.

பூநகரியில்வரலாற்றுப்பழமைவாய்ந்த அரசபுரம் எனும் இடம் தமிழ்பிராந்தியங்களில் புராதன நகரங்களில் வழிபாடுகள் காணப்படும் இடங்களில் ஒன்று எனக் கூறப்படுகின்றது. அவ்வகையில் இடப்பெயர்வு காலத்திற்கு முன்னர் இவ்விடத்தில் ஒரு புராதன கட்டடம் இருந்ததற்கான கட்டட அத்திவாரங்களும், சிதறுண்ட நிலையிலே செறிவான செங்கட்டிகளும் காணப்பட்டுள்ளன. இக்கட்டடத்திற்கு கிழக்கே அரசபுரக்குளம் காணப்படுகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் இக்கட்டிடங்களை இடித்து அதன் கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு மாந்தையிலுள்ள சில ஆலயமும் கறுக்காய்த்தீவு அரியாலைப் பகுதியில் ஆலயங்களும் கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது. பூநகரியில் வாழும் மக்கள் இங்கிருந்த கட்டடத்தை அல்லிராணி வாழ்ந்த அந்தப்புரம் எனக் கூறிக் கொள்கின்றார்கள். இந்த மரபுவழியிலே அந்தப்புரம் அரசபுரமாக அழைக்கப்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறாக அரசபுரத்திற்கு அண்மையில் ஆலடிச்சோலை எனும் காட்டுப்பகுதியில் பொன்முலாம் பூசப்பட்டு கருங்கல்லில் புடைப்புச் சிற்பத்திலேயான விநாயகர் கண்டெடுக்கப்பட்டதுடன் ஈழத் தமிழர் கலை வரலாற்றை பறை சாற்றி நிற்கின்ற சூரிய சிற்பமானது பல்லவராயன்கட்டு எனும் இடத்திலும் கண்டெடுக்கப்பட்டது.

இவ்வாறாக அகழ்வாராட்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட சான்றுகளினை வைத்து நோக்குகின்ற போது **'பூநகரி ஓர் பழந்தமிழ் நகர்'** எனக் கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

**நன்றி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


1. தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம்

2. தமிழ் எழுத்தின் தோற்றம் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம்

3. பூந்துணர் - காலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், பூநகரி.

'முடியாது' என்று நீங்கள் சொல்வதையெல்லாம்
யாரோ ஒருவர் எங்கோ செய்துகொண்டிருக்கிறார்.

- ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னாவெளிக் கிராமத்தின் பூர்வீகமும் இன்றைய நிலையும்

**திரு. செல்லப்பா குழந்தைவேலு**
வேரவில்

**அறிமுகம்:**

கோளமயமாதல், புவி வெப்பமடைதல், சூழல் மாசடைதல், கடல் நீர் மட்டம் உயர்தல் போன்ற பல் வேறுபட்ட காரணங்களாலும், பல்தேசியக் கம்பனிகளின் இயற்கைச் சமநிலைக்கு மாறான பல துரித நடவடிக்கைகளாலும் சர்வதேசம் எங்கும் பல தீவுகளும் கடற்கரையை அண்டிய நெய்தல் நிலக் கிராமங்களும் படிப்படியாக அழிந்தும் மறைந்தும் வருகின்றன.

இவ்வரிசையில் இயற்கைக் காரணிகளைவிட பல்தேசியக் கம்பனிகளின் கழுகுப் பார்வையாலும், ஆழ் துளை கிணறுகள் மூலம் மிகை அளவிலான நீர் எடுத்தல் போன்ற இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகளாலும், பூநகரிப் பிரதேசத்தின் பழமைமிகு வரலாறு கொண்டதும் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்றவற்றால் பண்டைக்காலம் முதலே பொருளாதார மேம்பாடுடைய கிராமமாகத் திகழ்ந்த பொன்னாவெளி இன்று அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையை எடுத்துரைத்து, மக்களை விழிப்புணர்வு அடையச் செய்யும் நோக்கிலேயே இக் கட்டுரை பதிவிடப்படுகிறது.

**அமைவிடம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியின் மையப் பகுதியிலிருந்து சுமார் 36 கி.மீற்றர் தூரத்தில் தெற்கே இப் பொன்னாவெளிக் கிராமம் அமைந்துள்ளது. பல்லவராயன் சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து, மண்டைக்கல்லாறு வீதியில் 15 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக் கிராமம் பூநகரிப் பிரதேசத்திலுள்ள பூர்வீக குடியிருப்புக்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

**குடியிருப்பு:**

இங்கு வசித்துவந்த மக்கள் பூநகரி பிரதேசத்தின் மிகவும் தொன்மையான வன்னிக் கிராமமான ஈழவூரிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்றும் அறியப்படுகின்றது. இன்றும்கூட இந்த ஈழவூர் எனும் பிரதேசத்தில் இம்மக்களுக்கு பெருமளவு காணிகள் உள்ளதாகப் பிதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றில் ஈழவூர்:**

ஈழவூர் என்பது ஈழதேசத்தின் வரலாற்றில் கிறிஸ்த்து சகாப்தத்துக்கு முன்பே அறியப்பட்ட இடமாக காணப்படுகின்றது. பாளி மொழியில் எல்லாளன் என மகாவம்சம் குறிப்பிடும் அநுராதபுரத்து தமிழ் அரசனே ஈழராஜாவாகும். இவனது தாயகம் பூநகரியின் ஈழவூர் என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அன்றைய ஈழவூர் என்பது இன்றைய வேரவில் கிராமமும் அதையண்டிய பிரதேசமுமாகும். பாலாவி ஆற்றுக்கும் மண்டைக்கல்லாறுக்கும் இடையிலான பிரதேசத்தில் எல்லாளனது படைகள் குதிரைப் பயிற்சி பெற்றதாகவும் வாய்மொழி வழக்காறுகள் மூலம் அறியமுடிகின்றது..

**எல்லாளன் (ஈழராஜா) காலத்தில் பொன்னாவெளி**

வெள்ளாங்குளம், நாகபடுவான், கரியாலை, குமுளமுனை, கிராஞ்சி, வீரவில் (வேரவில்), பாலாவி, சுன்னாவில் எனப்படும் சுமார் 18 கிராமங்களின் கோட்டமாக பொன்னாவெளி காணப்பட்டது. இவ்விவசாயக் குடியிருப்புக்களான குக் கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் கிராமத் தலைவன் பொறுப்பாக இருந்தான். இப் 18 கிராமங்களையும் இணைத்த கோட்டத் தலைவனாக பொன்னாவெளிக் கிராமத் தலைவன் கும்பநாகன் விளங்கினான். (ஈழராஜா, செங்கை ஆளியான், க. குணராஜா)

**நிலமும் மக்களும்:**

பொன்னாவெளிக்கிராமமானது சுமார் 800 ஏக்கர் வயல் நிலப்பரப்பையும் மேற்கே கடற்கரை வரை மேச்சல் தரையையும் மேட்டுப் பயிர்ச் செய்கை நிலங்களையும் கொண்டிருக்கின்றது. இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 30 மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவந்தன.. ஆரம்ப காலங்களில் இன்னமும் அதிகமான குடும்பங்களும் மக்களும் வசித்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், இக் கிராமத்திற்கு உடையார் ஆட்சி தேவைப்பட்டுருக்காது என்பதையும் ஊகிக்க முடிகின்றது.

**இறை வழிபாடு**

இவ்வூர் மக்கள் யாவரும் சைவமரபினராகவும் அம்மதத்தில் மிகவும் பற்றுள்ளவராகவும் காணப்படுகின்றனர். சிவன், பிள்ளையார், அம்மன் ஆலயங்கள் இங்கு காணப்படுகின்றன. இவை முன்னர் சிறப்புற்று, ஆகம மரபுடன் உற்சவங்களும் மிகச்சிறப்பாக நடைபெற்றதாக அறியப்படுகின்றன. சிவாலயத்தில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமானது தமிழ் நாட்டின் அண்ணாமலையில் இருந்து கொண்டு வரப்பட்டதாகவும், அண்ணாமலையில் இருக்கும் சிவலிங்கத்தைப் போன்று கருவறையும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

**உடையார்கள்**

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஓர் பிரதேசத்தின் அல்லது கிராமத்தில் மிகுந்த பொருள்வளமும் பண பலமும் ஆளணிப்பலமும் உடையவர்களாக இருப்பவர்கள் உடையார் எனப்பட்டனர். இவர்களது அதிகாரத்தின் கீழ் கிராமங்கள் இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடையார்களின் ஆட்சியில் பொன்னாவெளி:**

பொன்னாவெளிக் கிராமமானது ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்களது ஆட்சிக்காலத்தில் உடையார்களால் ஆளப்பட்டு வந்ததுடன் குமாரசாமி அருளம்பலம் எனும் உடையார் காலத்தில் ஈழவூரில் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவ் உடையாரே இக் கிராமத்தின் இறுதி உடையாராகவும் காணப்படுகின்றார்.

**பொன்னாவெளியும் நெடுந்தீவும்:**

பொன்னாவெளியை நிர்வகித்து வந்த உடையார்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டாலும் இறுதியாக அப் பொன்னாவெளியை நிர்வகித்த குமாரசாமி அருளம்பலம் எனும் உடையார், பொன்னாவெளியிலேயே வசித்து வந்தார். அவரது மனைவி வேலணையைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நெடுந்தீவு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஐயனார் கோவில் திருவிழாக் காலங்களில் இங்கிருந்து அரிசி, நெய் போன்றவை முன்னர் அனுப்பப்பட்டு வந்ததுடன், அவ் ஆலயத்திற்கான கூரை வேலைகளுக்கு இங்கிருந்து பனை மரங்களும் அனுப்பப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் முதிரை தேக்கு, பாலை, கருங்காலி போன்ற மரங்களும் வருடந்தோறும் அனுப்பப்பட்டு வந்ததாகவும் வாய்மொழிக் கதைகள் மூலம் அறிய முடிகின்றது.

**நெடுந்தீவு ஐயனார் கோவிலுக்கான விளை நிலங்கள்**

பொன்னாவெளிக் கிராமத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் ஐயனார் கோயிலுக்கான வயல் நிலங்கள் இருந்ததாக, வாய் மொழிக் கதைகள் மூலம் அறியப்பட்ட போதிலும் அவை எவை என அறுதியிட்டுக் கூற முடியாதிருப்பதுடன் பொன்னாவெளிக் கிராம வயல்கள் யாவும் இப் பிரதேச மக்களின் பெயர்களிலேயே தற்போது காணப்படுகின்றன.

**வெடியரசன் காலத்தில் பொன்னாவெளி:**

நெடுந்தீவை நிர்வாக மையமாகக் கொண்டு ஆட்சி செய்த வெடியரசனதும் அவனது தம்பிமாரதும் ஆட்சி நிர்வாத்தில் பூநகரிப் பிராந்தியமும் காணப்பட்டதாகவும் பொன்னாவெளியின் கடற்கரைப் பிரதேசத்தில் பகைவர் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கும், ஏனைய பாதுகாப்பு காரணங்களுக்காகவும் 'நெருப்புயர்த்திக் கோபுரம் காணபட்டதாகவும் வெடியரசன் பற்றிய பல வரலாற்றுக் கட்டுரைகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. மேலும் சில நெருப்புயர்த்திக் கோபுரங்கள் இவ்வரசனின் காலத்தில் வீர நாராயணன் முனை (அதுவே வீரபாண்டியன் முனை என இக்காலத்தில் அழைக்கப்பட்டது) வலைப்பாடு, நாகதேவன்துறை ஆகியவற்றில் அமைந்திருந்ததாகவும் நம்பப்படுகின்றது.

**வெடியரசன் காலத்தில் பொன்னாவெளியும் பசுக்களும்:**

இம் மன்னன் காலத்தில் தீவுப்பகுதிகள் யாவும் பாற்பொருள் உற்பத்தியில் சிறந்து விளங்கியது. நெடுந்தீவில் பசுக்கள் அதிகமாகக் காணப்பட்டதால், அது பசுத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்பட்டது போலவே பொன்னாவெளிக் கிராமமும் அவனது பசுக்கள் நிறைந்து காணப்பட்டதாலும் பரந்த வயல்வெளிகளில் பொன்நிறக் கதிர்மணிகள் நிறைந்து காணப்பட்டதாலும் ,தனை ஒட்டியே, பொன் + ஆ (பசு) + வெளி = பொன்னாவெளி என காரண இடுகுறிப் பெயர் ஏற்பட்டதாக அறியமுடிகின்றது. இதே போன்றே வெடியரசன் காலத்தில் அவனது பசுக்கள் நிறைந்து காணப்பட்ட இடமான ஊர்காவற்துறையும் ஊர் + ஆ (பசு) + துறை = ஊராத்துறை என அழைக்கப்பட்டது.

**நாவலரும் பொன்னாவெளி உடையாரும்:**

ஆறுமுக நாவலரும் பொன்னாவெளி அருளம்பல உடையாரும் நெருங்கிய நட்புடன் இருந்ததாகவும், அதன் காரணமாக நாவலருக்குத் தினந்தோறும் பொன்னா வெளியிலிருந்து பசும்பால் அனுப்பட்டதுடன் நெய், அரிசி போன்றவையும் இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இவர்களது நெருங்கிய நட்புக்காரணமாகவே கிளிநொச்சிப் பிரதேசத்தில் முதன் முதலாக பூநகரிப்பகுதியில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**நாகர்கால ஆட்சியும் தடுப்பணையும்**

பொன்னாவெளிக் கிராமத்தின் மேற்கே காணப்படும் கடல் நீர் ஏரியானது ஊர் மனைக்குள் புகுந்து குடிமனைகள், பயிர்ச்செய்கை நிலங்கள், புல்வெளிகள், நன்னீர்க் கிணறுகள் யாவும் பாதிக்கப்படாது இருப்பதற்காக நாகர்காலத்திலேயே தடுப்பணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை நீண்ட காலமாகப் பராமரிக்கப் படாமையால் உவர் நீர் புகுந்து அவை உவர் நிலங்களாக இன்று மாறிக் கொண்டிருக்கின்றன. இத் தடுப்பணையானது நாகமுனையில் காணப்படுகின்றது.

**பொன்னா வெளியின் இயற்கைவள அபகரிப்பும் சூழலின் அழிவும்:**

பொன்னாவெளிக் கிராமத்தில், இன்று ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பெருமளவான நிலத்தடி நீர் விவசாயத்திற்காக எடுக்கப்படுகின்றது. மேலும் இங்கே பெருமளவான சுண்ணக்கல் களியவளம் இருப்பதாக அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டமையால், சுமார் 100 மீற்றர் ஆழத்திற்கு சுரங்கம் தோண்டி எடுக்கும் முயற்சிகளும் ஆரம்ப கட்டத்தை எட்டியுள்ள நிலையில், எமது பூர்வீகக் கிராமமான பொன்னாவெளி அழிந்து, சமுத்திர நீர் ஏரியாக மாறி, இலங்கையின் நில வரைபடத்திலும் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படச் சாத்தியமுள்ளது.

**நிறைவாக:**

நாகர் இன காலத்திலும் எல்லாளன், வெடியரசன் ஆகிய அரசர்கள் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்ததோடு, பின்னுள்ள காலமெல்லாம் குறிப்பாக ,டப்பெயர்வு காலம்வரை இக் கிராமமானது பசுமையும் செழுமையும் வாழ்வியல் வளமும் கொண்டதாகத் திகழ்ந்து வந்தது. இந்நிலையில் மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையால், இக்கிராம மக்கள் அயல் பிதேசங்களில் வாழ்ந்து வருவதோடு, தமது விளைநிலங்களில் சிலர் பயிற் செய்கையில் ஈடுபட்டும் வருகின்றனர். கால ஓட்டத்தில் மீண்டும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம், மக்கள் வசிப்பிடமாகிச் செழிப்புறும் என எண்ணியிருந்த வேளையில், சுண்ணக்கல் அகழ்வு முயற்சி எமது நம்பிக்கையில் இடி விழுந்தது போல் உள்ளது. இந்நிலையில் பூர்வீகமான வன்னிக் கிராமம் ஒன்று, வரைபடத்திலிருந்து இல்லாமல் போவதை வேடிக்கை பார்க்கமுடியுமா? உரிய துறையினரும் அதன் அதிகாரிகளும் பொன்னாவெளியை மீட்டுத் தர துரிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என எதிர்பார்ப்போம்.

**"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்."**

**உசாத்துணைகள்.**


1. எல்லாள காவியம். டாக்டர். அகமது ஜின்னாஹ் ஷரீப். அன்னை வெளியீட்டகம், மருதூர். 01.12.2013
2. ஈழராஜா எல்லாளன். சிங்கையாரியன் க. குணராஜா. ஜனவரி 2004.
3. விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு. பண்டிதர் மு.சிவப்பிரகாசம்.1990.
4. சிங்கையாரியன் நாவல்கள்.-ஒரு திறனாய்வு நோக்கு-கந்தையா முருகதாசன் முதுதத்துவமாணி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு 2005 .


**கட்டுரைகள்**


1. தீவகத்தில் வெடியரசனின் ஆட்சி ஓர்தேடல். யாழினி வரதராஜன். அலைமொழி (சஞ்சிகை) 5 பிரதேச செயலகம் ,ஊர்காவற்றுறை.2021
2. கச்சதீவு ஓர் மீள்பார்வை.ஹர்சினி R.H.N. அலைமொழி (சஞ்சிகை) பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை 2021





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச பண்பாட்டு விழா – 2023

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றிக்கு வித்தாகும் நல்வாழ்வு

**கலாபூஷணம் பொன். தில்லைநாதன்**
ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்,
4ம் கட்டை,
பூநகரி.

இருபாலை என்பது யாழ்ப்பாண நகரிலே ஒரு பழம்பெரும் விவசாயக்கிராமம். இரு பாலை மரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்ததாக அருகருகே நெடித்து உயர்ந்து வளர்ந்திருந்ததால் அக்கிராமத்துக்கு அப்பெயர் தோன்றக் காரணம் என ஆயிரம் பிறைகண்ட ஒரு முதியவர் தெரிவித்தார்.

நிறைய விவசாயிகள் அங்கு வாழ்ந்து வந்தமையும் அங்குள்ள பரந்த தோட்ட வெளிகளில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தை தமது சீவனோபாய தொழிலாகக் கொண்டிருந்தமையும் அந்தக்கிராமத்தில் வாழ்ந்த ஏனைய மக்களில் பெரும்பாலானோர் இவர்களுக்கு விவசாய நிலங்களில் நாளாந்தக் கூலி வேலை செய்யும் தொழிலாளிகளாகவும் கடமையாற்றியதன் மூலம் தம் குடும்பச் சுமையை நீக்கி வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இருபாலைக்கு அடுத்த அயற்கிராமமான கைதடியில் ஆதரவற்ற குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கும் அரச உதவி பெறும் நிறுவனமும் அதோடு இணைந்ததாக ஆதரவற்ற வயோதிபருக்கு ஆதரவுக்கரம் நீட்டிப் பாதுகாக்கும் "மூதாளர் காப்பகமும் சிறப்புற இயங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இருபாலைக் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவன்தான் கோகுலன். கோகுலன் தன் வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் ஆரம்பப்பாடசாலையொன்றில் ஆரம்பக்கல்வியைக் கற்று தரம் 5 வரை படித்து சித்தியடைந்த நிலையில் அப்பாடசாலையின் அதிபராக இருந்த அவ்வூரைச்சேர்ந்த கந்தப்பு கோகுலனின் பெற்றோரை அணுகி " உங்கள் மகன் கோகுலன் படிப்பில் மிகவும் ஆர்வமுள்ளவன் என்பதை நான் உங்களுக்குச் சொல்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து படிக்க வேண்டுமென்பதில் பெரு விருப்பம் கொண்டுள்ளான். உங்கள் குடும்ப நிலையைக் கூட எண்ணி அவனால் தொடர்ந்தும் படிக்க முடியுமா என சிந்தித்து பெருங்கவலை கொண்டுள்ளான். உங்கள் வறுமை நிலையை முன்னிறுத்தி அவருடைய படிப்பை இடைநிறுத்தி விடாமல் தொடர்ந்து மேல் வகுப்பிற்கு படிக்க வைத்தால் அவனது எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக மாறும். எனது கடந்த கால மாணவர் அணுகுமுறையைச் சிந்தித்துத் தான் இவ்விடயத்தைச் சொல்கிறேன். அவனை நீங்க படிக்க வைக்க முனைந்தால் நான் மாதம் மாதம் என்னால் முடிந்தவரை அவன் படிப்பிற்கு உதவ தயாராய் இருக்கிறேன் என்ற உறுதிமொழியைத் தருகின்றேன். என்றதும் கோகுலனின் தந்தை கந்தப்பு ஆசிரியரின் காலைத்தொட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி "நான் பட்டினி கிடந்தாவது அவன் படிப்பிற்கு உதவுவேன்". என உறுதி கூறிய கந்தப்பு ஆசிரியரோ என் கனவு வெகுசீக்கிரத்தில் நனவாகி விட்டது என ஆனந்தம் கொண்டவராக கோகுலனின் தந்தையை வழி அனுப்பி வைத்தார்.

கோகுலனின் தந்தை அவ்வூரில் ஆதரவற்றோர் கல்விபயிலும் பாடசாலைக்குச் சென்று அப்பாடசாலை அதிபரோடு தன் நிலையைச் சொல்லி கலந்துரையாடினார் .ஒரே கல்லில் இருமாங்காய் போல, கல்வி பயில்வதற்கான அனுமதியும் அருகே உள்ள மூதாளர்பசுஞ்சோலையுடன் அதிபர் தொடர்பு கொண்டு அவனுக்கு தங்குமிட வசதியும் உணவு வசதியும் கிடைத்தமையால் கோகுலன் பெரும் சந்தோசமடைந்தான்.

கோகுலனுக்கு பெரும்பேறாகக்கிடைத்த இரு இடத்துத் தொடர்பும் நல்ல ஆரோக்கியத்தையும் நிம்மதியையும் தந்ததெனலாம். கோகுலன் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் அவனது வயதுப்பிரிவில்(சம்பியன்) வெற்றி வீரனாகத் தெரிவு செய்யப்பட்டான். அதன் காரணமாக மாணவத்தலைவர்களில் ஒருவனாகத் தெரிவு செய்யப்பட்டதும் ஏனைய மாணவர்கள் மத்தியில் போட்டி பொறாமையை உண்டாக்கியதெனலாம். தன்னை இந்த நிலைக்கு உருவாக்கி மாதம் மாதம் அவனது கல்வித் தேவைகளை பூர்த்தி செய்து வரும் தன் விசுவாசத்திற்குரிய கந்தப்பு வாத்தியாரை அணுகி தன் மனக்கிலேசத்தை தெரிவித்தான்.

கோகுலனுக்கு நல்ல அறிவுரைகளும் புத்திமதியும் கூறியதோடு இது பல இடங்களிலும் ஏற்படும் நிகழ்வுதான் அவ்விடயத்தை உனது சிந்தனையில் கொள்ளாது பாடங்களில் உன் கவனத்தை செலுத்தி உனது பரீட்சைப் பெறுபேறு சிறப்பானதாக வர உன் சக்தியை எல்லாம் செலவிடுவதே ஏனைய மாணவர்களின் போட்டி பொறாமையை சுக்கு நூறாக்குவதற்கு உரிய ஆயுதமாகக் கொள். நான் கூறியபடி நடந்து கொள். என வாழ்த்தி அனுப்பினார்.

இரண்டு மாதங்களில் தன் உயர் வகுப்பு பரீட்சை வர இருப்பதை உணர்ந்து கந்தப்பு வாத்தியாரின் ஆலோசனையை மனதில் நிறுத்தி படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தான். பரீட்சையும் நெருங்கி வந்தது. கொஞ்சமும் சளைக்காது பரீட்சைக்குத் தோற்றினான். பரீட்சை முடிந்து தனது பெறுபேற்றை எதிர்பார்த்துக் காத்திருந்தான். நாள்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகியது. இரண்டு வாரங்களில் பரீட்சை முடிவு வெளிவர இருப்பதாக தினசரிப்பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி இருந்தது. பரீட்சைப் பெறுபேறு எப்போ வந்து சேரப்போகிறது. அந்த நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அந்த நன்னாள் இன்றுதான். அன்று வெள்ளிக்கிழமையும் கூட; அதிகாலை எழுந்து விட்டான். அந்நேரம் சோபாலப்பிட்டி பிள்ளையார் ஆலயகண்டாமணி டாங்.... டாங்..... என்ற பெரும் நாதத்துடன் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆம், நல்ல சகுனம்தான். என பிள்ளையார் அப்பாவை வணங்கிக் கொண்டு எழுந்த கோகுலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நீராடி பிள்ளையார் ஆலயம் சென்று வணக்கத்தை முடித்துக் கொண்டு, தான் படித்த பாடசாலை வளாகத்திற்குள் சென்றான். ஒரே மாணவர் படை நிறைந்து வழிந்தது. பல நண்பர்கள் ஓடி வந்து கோகுலனுக்கு கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றனர். அதன்பின்னர் தான் கோகுலன் விடயத்தை புரிந்து கொண்டான். எல்லாப் பாடங்களில் A தர திறமைச்சித்தி பெற்று முதல் மாணவனாக வந்திருந்தான். உடனேயே தன்னை இந்நிலைக்கு உள்ளாக்கி உதவிகள் புரிந்த கந்தப்பு வாத்தியார் அவன் மனக்கண்முன் தோன்றினார். ஓடிச்சென்று ஆசிபெற வேண்டும். நன்றி தெரிவிக்க வேண்டும். என்று வயோதிப நிலையில் கூனிக்குறுகிய நிலையில் உள்ள கந்தப்பு வாத்தியார் இல்லத்தை நோக்கிச் சென்றான். அவன் வரவையும் அவர் எதிர்பார்த்து இருந்ததையும் கோகுலன் அறிந்து கொண்டான். அவன் பாதம் தொட்டு வணங்கிய கோகுலனைப் பாராட்டி ஆசிர் வதித்தது அவனுக்கென ஏற்கனவே தயார்நிலையில் வைத்திருந்த ஒரு பொதியை (பார்சல்) கோகுலனிடம் கையளித்தார். நன்றியறிதலோடு அதைப்பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தான். வந்தவன் மிகுந்த ஆவலோடு அந்தப்பொதியை பிரித்தான். என்ன ஆச்சரியம்; அத்தனையும் பெறுமதிமிக்க விலை மதிப்பற்ற புத்தகங்கள். ஒவ்வொன்றாய் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.

"அன்னையும் பிதாவும்"
"நன்றி மறவேல"
"திருக்குறளும் பொழிப்புரையும்"
"அர்த்தமுள்ள இந்துமதம்"
(பல பதிப்புகள்)
"மகாபாரதம்"
"கம்ப இராமாயணம்"

சந்தோசத்தால் துள்ளிக்குதித்தான். மறுநாளே கந்தப்பு வாத்தியாரின் நினைவோடு அவற்றைப் படிக்கத் தொடங்கினான். காலம் உருண்டோடிக் கொண்டிருந்தது. ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றி அதில் சித்தி அடைந்த காரணத்தால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியதன் பயனாக ஆசிரியராக நியமனமும் தான் படித்த பாடசாலையிலேயே கணித பாட ஆசிரியராக நியமனம் கிடைத்தது. மாணவர்களும் கோகுலன் மீது விசுவாசமும் அன்பும் கொண்டவர்களாக இருந்தமையால் பாடசாலையில் செல்வாக்கு மிக்க ஆசிரியர்களில் ஒருவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலக்கிரமத்தில் அதே பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றிய வாசுகியை காதல் திருமணம் செய்து கொண்டான். கோகுலனும் வாசுகியும் பாடசாலைக்குச் சொந்தமான பாடசாலைக் குடிமனையில் வாழ்ந்து வரும் நாளில் இவர்களுக்கு கோவலன் எனும் பெயருடைய மகன் பிறந்தான். கோவலனுக்கு 10 வயதைத் தாண்டிய நிலையில் கோவலனுக்கு கோகுலனின் தந்தை கூறும் கதைகள், அறிவுரைகள் அவனுக்கு வெறுப்பையும் ஆத்திர உணர்வையும் உண்டாக்கியது. அதனால் பேரனோடு எந்நேரமும் சீறிச் சினந்து கொண்டிருப்பான். இவ்விடயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலனுக்கும் வாசுகிக்கும் பெருங்கவலையை உண்டாக்கி வந்தது. அன்று ஒருநாள் பேரனோடு சீறிச் சினந்து மதிப்பில்லாத வார்த்தைகளைப் பேசி விட்டான். அதனால் கோகுலன் கோவலனைத் தண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதும் இதனால் வாசுகிக்கும் கோவலனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதும் வாழ்க்கையிலே முதல்முறையாக மனக்கசப்பும் ஏற்பட்டது. இந்நிலையால் தந்தையை தனிமைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு முடிவு காணும் பொருட்டு தான் ஆரம்பத்தில் இருந்து வாழ்ந்த கைதடியில் அமைந்துள்ள மூதாளர் காப்பகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கு சென்ற கோகுலனுக்கு பல அதிர்ச்சிகள் காத்திருந்ததை உணர்ந்தான். அங்கு தான் படிக்கும் போது பொறுப்பாளராக இருந்த அதே நபர்தான் தற்போது இருப்பதை உணர்ந்தான். தன்னை அடையாளம் கண்டுவிட்டால் நிலமை சிக்கலாகி விடுமோ என சிந்தித்தவன் இற்றைக்கு 40 வருடகால, முந்திய விடயங்களை இந்த வயோதிப காலத்தில் மறந்திருக்கலாமல்லவா என சிந்தை தெளிந்தான். நேரடியாக தன்னை அடையாளம் காட்டாது அவரிடம் சென்றான். "வாங்கோ தம்பி அமருங்கள் வந்த விடயத்தைக் கூறுங்கள்" என்றார்.
கோகுலன் தன் வீட்டில் நடைபெற்ற விடயங்களைக் கூறி, தானும் மனைவியும் சேர்ந்து எடுத்த முடிவைச் சொல்லி காப்பகத்தில் தன் தந்தையைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் வந்துள்ளதாகவும், கோகுலன் உரைக்கவும் எங்கள் காப்பகச்சட்டப்படி நாம் மறுப்புத்தெரிவிக்க முடியாதென்றும் நீங்கள் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் என்ற நிலையில் மாதாமாதம் அவரின் பராமரிப்பு உதவியாக சிறுதொகைப் பணத்தை நீங்கள் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நல்ல வேளையாக தன்னை அடையாளம் காணவில்லை என்று திடமான நம்பிக்கையோடு வீடு வந்தான்.

வீட்டுக்கு வந்த கோகுலன் தன் மனைவியிடம் நடந்த விடயத்தை சொல்லி மறுநாள் தந்தையை மூதாளர் காப்பகத்திற்கு அழைத்துச் செல்வதற்கான பயண ஏற்பாடுகளைக் கவனித்தான். மறுநாள் தந்தையின் உடமைகளுடன் காப்பகத்திற்குச் சென்றவன் முதல் கதைத்துக் கொண்ட தன் படி அவரைக் காப்பகப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்து திரும்பி படியில் இருந்து இறங்கிய அவனது காதில் தந்தையின் குரல் உரத்து உறுதியாக விழுந்தது. தன் நடையின் வேகத்தை குறைத்துப் படியில் நின்றபடி அவர்கள் உரையாடலை உள்வாங்கினான்.

"ஐயா! பெரியவரே.... என்னை உங்களுக்கு நல்ல ஞாபகமிருக்கிறதா? என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள் கோகுலனின் அப்பா. அந்தப்பெரிய உதவிசெய்த உங்களை எப்படி மறக்க முடியும்? அதனால் தானே கோகுலன் இன்று ஊர் போற்றும் ஒரு கணிதபாட ஆசிரியராக இருக்கின்றார் "அதனால் தான் அவரை ஊர் போற்றும் காரணத்தால் தன்னைப் பெற்ற தந்தையையே மூதாளர் காப்பகத்தில் விட்டுச்செல்ல அவர் முடிவெடுத்தாரோ? அவருடைய இந்த முடிவையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? நான் ஏற்றுக்கொண்டேன். என்று முழுமனதாக சொல்ல முடியா விட்டாலும் அவரும் மனைவியும் தங்கள் குடும்ப அமைதிக்காக, நிம்மதிக்காகவும் இந்த முடிவை மேற்கொண்டிருக்கலாமென நான் கருதுகிறேன். என் பேரப்பிள்ளைகள் இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மதிப்பற்ற வார்த்தைகளால் பேசுவதும் எனக்கு நிம்மதியற்ற நிலையை அங்கு உருவாக்கியதும் இந்த முடிவுக்குச் சம்மதித்தேன் ஐயா என கண்ணீர்விட்டு விம்மி விம்மி அழுதார் கோகுலனின் அப்பா இங்கு நடைபெற்ற அத்தனை கலந்துரையாடலையும் நன்றாகச் செவிமடுத்த கோகுலன் பெரும் மனப்பாரத்தோடு வீட்டை நோக்கி நடைப்பிணமாக மெல்ல மெல்ல காலடி எடுத்து வைத்தான்.



**காலம் முழுவதும்**
**உன்னை வயிற்றிலும்**
**மடியிலும்**
**தோளிலும்**
**மார்பிலும்**
**சுமப்பவள்**
**தாய் மட்டுமே!**
**அவளை என்றும்**
**மனதில் சுமப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகர் வளம்பெற புதுப்பானை பொங்கட்டும்

**கறுக்காய்த்தீவூர் ப. ஸ்ரீவனஜன்**
முகாமைத்தவ சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.

பொங்கட்டும் பொங்கட்டும் புதுப்பானை பொங்கட்டும்
பூநகரித் தாய்புகழ் ஊரெல்லாம் தெரியட்டும்
திக்கெட்டும் அறியட்டும் திசையெங்கும் பரவட்டும்
மங்காப் புகழாய் பாரெங்கும் ஓங்கட்டும்

கொக்குடையான் மாளாப்பு குளங்கள் பல இணையட்டும்
பூநகரி நீர்த்தேக்கம் தளந்தட்டி பாயட்டும்
கோடை வறள் நிலமும் குளிர்காடாய் மாறட்டும்
மேச்சல் தரவைகளும் பசுந்தரையும் தோன்றட்டும்

உப்புநீர் தடுப்பணைகள் இன்னும் பல தோன்றட்டும்
நன்னீர் குளங்களாக களப்பெல்லாம் மாறட்டும்
கண்டலும் காடுகளும் குறையாமல் இருக்கட்டும்
மானும் மரையும் மறைந்தங்கு வாழட்டும்

ஒல்லாந்தர் கோட்டையடி ஒய்யாரமாகட்டும்
வாடியடி மாடிகளால் தரம்மாறி போகட்டும்
கட்டிடங்கள் கடைகளென நிறம்மாறிப் போகட்டும்
வசதி வாய்ப்போடொரு நகரொன்று தோன்றட்டும்

சங்குப்பிட்டி பாலத்தடி சஞ்சடியாய் மாறட்டும்
எங்குமில்லா உல்லாசம் நாளை வந்து சேரட்டும்
தங்ககங்கள் உணவகங்கள் கடல்மேலே தோன்றட்டும்
கண்கவரும் காட்சிகளாய் கடலேரி விளங்கட்டும்

சுக்குப்பக்கு புகைவண்டி சுந்தரமாய் ஓடட்டும்
சங்குப்பிட்டி தாண்டியது யாழ்ப்பாணம் போகட்டும்
வில்பத்து பாதையெமை தெற்கோடு இணைக்கட்டும்
கடுகதி வீதியொன்றும் காலப்போக்கில் தோன்றட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணித்தலை சோழேச்சரம் மறுமலர்ச்சி காணட்டும்
மணங்கமழும் சிவபூமி மறுபடியும் தோன்றட்டும்
மண்ணித்தலை கேணியொன்று மகிமையாக அமையட்டும்
பிதிர்க்கடன்கள் தீர்க்குமொரு தீர்த்தமாக விளங்கட்டும்

வெட்டுக்காடு கடற்கரையும் வேறு தரம் ஆகட்டும்
வெளிநாட்டார் நம்நாட்டார் வந்தங்கு கூடட்டும்
நாகதேவன் துறை மீண்டும் ஞாபகத்தில் தோன்றட்டும்
ஞானியார் மடத்தைப்போல் மடங்கள் பல தோன்றட்டும்

கிராஞ்சிக்கும் கல்முனைக்கும் கல்வீதி ஆகட்டும்
நினைத்த நேரம் போய்வரவே பேருந்தும் ஓடட்டும்
பொன்னாவெளித் தொன்மையது பொக்கிசமாய் விளங்கட்டும்
இரணைதீவின் நிலை மீண்டும் இயல்பு நிலை ஆகட்டும்

வானுயர்ந்த காற்றாடிகள் விடிவள்ளி சொரியட்டும்
வடிவான தேசமொன்று வடக்கு மண்ணில் பிறக்கட்டும்
சக்தி வள மையமாக பூநகரி மாறட்டும்
எம் ஊரார் வெளிநாட்டார் முதலீடும் கூடட்டும்

பிரதேச செயலகமோர் உபபிரிவு காணட்டும்
தென்பூநகரியிலும் சேவையெளிதாகட்டும்
கைத்தொழில்கள் சுயதொழில்கள் கலாசாரமாகட்டும்
கை நிறைய காசு பணம் வந்திங்கு புளங்கட்டும்



**தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம்



**திரு. வி. எஸ். இதயராஜா**
**- ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

அதிகாலைப் பொழுதில் சில்லென்று வீசிய தென்றல் மேனியைத் தழுவி, இதமான மெல்லுணர்வைத் தாராளமாக அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தது. பரவச உணர்வுடன் அலுவலக வாகனத்தின் கண்ணாடியூடே இருபுறமும் அடர்ந்த வனத்தினைப் பார்க்கின்றேன். அழகான கொம்புகள் முன்னே நீட்டி நிற்க, மரையொன்று வீதியைக் குறுக்கறுத்துப் பாய்கின்றது. அந்தக் காட்சியைப் பார்த்த கண்களுக்கு விருந்தாக பட்டாம்பூச்சிகளின் பட்டாளம் அழகினை அந்தக் கானகத்தில் தூவிப்பறந்தன.

பூநகரிப் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகக்கஷ்டமான இடமாகும். அதிலும் அங்குள்ள பாடசாலைகளின் தரம் சாதாரணமும் இல்லை. அத்தகைய பாடசாலை ஒன்றினைத் தரிசிப்பதற்கே இன்றைய பயணத்தினை மேற்கொண்டுள்ளோம்.

பல்லவராயன்கட்டு சந்தியில் திரும்பி வேரவில், வலைப்பாட்டுக்கான கிரவல் வீதியில் மெதுவாகச் செல்கிறது வாகனம். திறந்திருந்த கண்ணாடிகளைப் பூட்டச் சொல்கிறார் ஓட்டுநர். சிறிது தூரம் சென்ற பின்னர் எழுந்த தூசிப்படலத்தைப் பார்த்த பின்னரே கண்ணாடியைப் பூட்டச் சொன்னதன் தாற்பரியம் புரிந்தது. சிறிது தூரம் சென்ற பின்னர் கிராஞ்சிக்குச் செல்லும் சந்தியில் சனக்கூட்டம் ஒன்று தென்படுகின்றது.

எமது பாடசாலைத் தரிசிப்பு வேரவில் மகாவித்தியாலத்திற்கானதே. அத்தோடு வலைப்பாடு பாடசாலையையும் ஒரு பறவைப்பார்வை மேற்கொள்வதுமே. அதுபற்றி ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனம் கிராஞ்சி சந்தியை நெருங்குகின்றது. அங்கு குழுமியிருந்த பொதுமக்கள் எமது வாகனத்தை இனங்கண்டு போலும் எமது வாகனம் மேற்கொண்டு செல்லவிடாமல் வீதியை மறித்து நின்றனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. குழப்பத்துடன் ஓட்டுனரைப் பார்க்கின்றேன். அதனைப் புரிந்து கொண்ட ஓட்டுனர் மோகன்,

“சேர் நாங்கள் வாறதைத் தெரிந்து கொண்ட கிராஞ்சிப் பாடசாலையின் பெற்றோர்கள் தான் வழிமறித்து நிற்கின்றனர். அந்தப் பாடசாலைக்கு முக்கியமான பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லையாம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கேட்க நினைத்த எல்லாக் கேள்விகளுக்கும் சுருக்கமான பதிலைச் சொல்லிவிட்டு, வாகனத்தைநிறுத்துகின்றார். என்னுடன்பயணித்துக்கொண்டிருக்கும் பாடத்துறை சார் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மூவரையும், ஆசிரிய ஆலோசகர்களையும் பார்க்கின்றேன். இந்தப் பிரச்சினைக்கும் தமக்கும் நேரடியாகப் பங்கில்லை என்பது போல் தமது முகபாவத்தினைக் காட்டுகின்றனர். எதுவானாலும் கல்விப்பணிப்பாளருக்கு அடுத்த நிலையிலுள்ள என்னால், அலுவலகத்திற்கே உரிய டீயடட பாஸிங்கைப் பொதுமக்களிடம் செய்யமுடியாத நிலையில், எதுவானாலும் எதிர்கொள்வது என்ற நிலைப்பாட்டுடன் வாகனத்திலிருந்து இறங்குகின்றேன்.
என்னபிரச்சினைஎன்று அவர்களேசொல்லட்டும்என்று, அவர்களைப்பார்க்கின்றேன். நான் இந்தக் கல்வித் திணைக்களத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் இடமாற்றம் பெற்று வந்தபடியால், நான் யாரென்று அவர்களுக்குத் தெரியாதபடியால் ஏனைய அதிகாரிகள் மீதே தமது கோபத்தினைக் கொட்டித் தீர்த்தனர். அது எனக்கு வசதியாக இருந்தது. அவர்களின் பிரச்சினையை அறிவதற்கும், எனக்கான நிலைப்பாட்டை எடுப்பதற்கும் அவகாசம் கிடைத்தது.

பொதுமக்களிடம் உயர் அதிகாரிகளைப் போட்டுக் கொடுக்க அவர்களுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும். என்னைச் சுட்டிக்காட்டி, கல்விப் பணிப்பாளருக்கு அடுத்த நிலையில் அதிகாரம் வாய்ந்தவர் இவர்தான் என்று, என்னை முன்நிறுத்தி இலாவகமாகத் தப்பித்தனர். அவர்களின் எதார்த்தமான கோபத்தினைப் புரிந்துகொண்டு, அவர்கள் தொடர்ந்து தமது பிரச்சினையைச் சொல்வதற்கு இடம்கொடுத்து, அமைதியாக அதனைச் செவிமடுத்தேன்.

அவர்களை அமைதிப் படுத்துவது பெரும் பிரச்சினையாகவே தென்பட்டது. அவர்களிடம் எனது கோரிக்கையை முன்வைத்தேன்.

"நீங்கள் ஷெல் அடிப்பதுபோல் சொற்களை வீசினால், நான் எப்படிப் பேசுவது. தயவுசெய்து வீதியில் நின்று பேசுவது உங்கள் பிள்ளைகளுக்கும் கௌரவம் இல்லை. எனவே பாடசாலைக்குச் சென்று பேசுவோம்."

அவர்களைச் சமாதானப்படுத்தி, ஓட்டுனருக்கு கிராஞ்சி பாடசாலைக்குச் செல்லப் பணித்தேன். ஏனையோரைப் பார்த்து.

"நீங்கள் திட்டமிட்டபடி பணியைச் செய்யுங்கள். நான் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசிவிட்டு உங்களுடன் இணைகின்றேன்." என்றவாறு குறித்த பாடசாலையில் இறங்கிக்கொண்டேன்.

கிராஞ்சி பற்றி ஏற்கனவே அறிந்திருக்கின்றேன் ஆனால் இதுதான் முதன் முறையாக எனது தரிசனம். பாடசாலை அதிபர் என்னைக் கண்டவுடன் ஒரு புன்முறுவலுடன் வரவேற்றார். அவரது புன்முறுவலின் பூடகம் பின்னரே எனக்குப் புரிந்தது. யான் பெற்ற இன்பம் பெறுக என்பதே அது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பல வருடங்களாக எழுத்து மூலமாகவும் நேரிலும் சம்பந்தப்பட்ட எல்லோரிடமும் கணிதம் விஞ்ஞானம் உட்பட முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர் இன்மையால், பாடசாலையை நடாத்துவதிலுள்ள சிரமத்தினைச் சொல்லியுள்ளார். ஆனால் யாரும் கண்டுகொள்ளவில்லை என்பதே யதார்த்தமாகும்.

அதிபரிடம் சொல்லிப் பொதுமக்களை அமரவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து அவர்களுடன் உரையாடச் சென்றேன். அவர்களின் பிரச்சினை பரிதாபத்திற்குரியதே. ஆரம்ப வகுப்புக்களை வகுப்புக்கு ஒரு ஆசிரியரால் கற்பிக்க முடியும். ஆனால் ஆறாம் வகுப்புக்கு மேல் ஒரு ஆசிரியரால் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க முடியாது. பிரதானமான கணித விஞ்ஞான, ஆங்கில பாடங்கள் கற்பிக்க ஒரு ஆசிரியரும் இல்லை என்பதை அதிபரும் தனது பேச்சில் உறுதிசெய்தார்.
பிரதான பாடங்களுக்கான ஆசிரியர் தட்டுப்பாடு, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் நூறில் தொண்ணூறு வீதமான பாடசாலைகளில் நிலவிய போதிலும் கிராஞ்சி போன்ற அதிகஷ்டப் பாடசாலைகளில் சொல்லும் தரமில்லை.

எப்படியோ இவர்களை சமாளித்து அமைதிப்படுத்த வேண்டும். பின்னர் அலுவலகத்தில் பேசித் தீர்வினைத் தேடவேண்டும் என்ற எண்ணத்துடன், அவர்களை அமைதிப்படுத்துவது பற்றிச் சிந்தித்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆசிரிய கல்வியியற் கல்லூரி ஆசிரியை ஒருவரின் நியமனத்தினை வவுனியாவுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவியது ஞாபகத்திற்கு வந்தது. அவர் கிராஞ்சியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனை வைத்து அவர்களின் ஆக்கிரோசத்தினத் திசைமாற்ற யோசித்தேன்.

அவர்களிடம் அன்பான கரிசனையுடன் பேச்சை ஆரம்பித்தேன். அவர்களின் முகங்களில் கோபம் தணிந்து நம்பிக்கை பிறப்பதை பேச்சின் இடையே அவதானிக்கத் தவறவில்லை. இதுதான் சமயம் என்று,

"இந்த ஊரில் கடந்த பத்து வருடங்களில் படித்து உத்தியோகம் பார்ப்பவர்கள் ஒருவரும் இல்லையா?" அவர்களின் தன்மானத்தை உசுப்பும் ஒரு கேள்வியைக் கேட்டேன். மிகவும் ஆக்கிரோசமாகப் பேசிய படசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரான பெண்மணி, எழுந்து பேசினார்.

அவரது பேச்சிலிருந்து சுமார் பதினைந்து ஆண்களும் பத்து பெண்களும் படித்து பல்வேறு பதவிகளில் இருப்பதை அறிய முடிந்தது. "அப்படியானால் அவர்கள் எங்கே இப்போது இருக்கின்றார்கள்?" என்ற பதில் கேள்வியை எழுப்பினேன். அதற்குக் காரணம். இங்கு குழுமியிருந்தோரில் பெரும்பாலானோர் பெண்கள். அதில் யாரும் உத்தியோகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்களிடமிருந்து நேரடியான பதிலைக் காணோம். அவர்கள் தமக்கிடையே குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். அதிலிருந்து அவர்களில் யாரும் கிராமத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். அவர்களை நோக்கி மிகவும் நிதானமாக எனது பேச்சைத் தொடர்ந்தேன்.

"உங்களின் கிராமத்தில் பிறந்து பல கஷ்டங்களை அனுபவித்து, படித்து முன்னேறியவர்கள் தமது உயர்வுக்குப் பின் பல காரணங்களுக்காகத் தமது நலன்களைக் கருத்தில் கொண்டு கிராமத்தை விட்டுச் சென்று விட்டார்கள். நிலைமை இவ்வாறிருக்க வேறு ஊரிலுள்ளவர்கள் உங்களுக்காகக் கவலைப்பட வேண்டும் என்று நினைக்கலாமா? உங்களது ஊரைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கக்கூடியவர் வேறு ஊரில் கற்பிக்கின்றார். அது உங்களுக்குத் தெரியுமா?" அவர்களிடம் அவர்களின் பிரச்சினையைத் திசைதிருப்பி விட்டேன். இப்போதும் அவர்கள் என்னிடம் பேசாது தமக்குள்ளேயே பேசிக்கொண்டனர். அதனைப் பயன்படுத்தி முழுப்பிரச்சினைக்கும் காரணம் அவர்கள்தான் என்று பழி போடாமல், எனது பேச்சைத் தொடர்ந்தேன்.

"யுத்த காலத்தில் உயிருக்குப் பயந்து உங்கள் கிராமத்தில் பலர் இடம்பெயர்ந்து இருந்தனர். அப்போது அவர்கள் இங்குள்ள வசதியீனங்களைப் பொருட்படுத்தவில்லை. நீங்களும் அவர்களை ஆதரித்து முடிந்த உதவிகளைச் செய்தீர்கள். இப்போது அவர்களின் பிள்ளைகள் வசதிவாய்ப்புக்களை எதிர்பார்க்கின்றனர். ஆனால் தமது உயிரைக் காப்பாற்றிய உமது கிராமம் போன்ற கிராமங்களுக்குச் சேவையாற்றும் கடப்பாட்டிலிருந்து ஒருபோதும் அவர்கள் விலகமுடியாது என்பது எனது கருத்தாகும். அதேவேளை உங்களது பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களைத் தருவதும் எமது கடமை என்பதை நாம் மறக்கவில்லை. இதனை நான் நிறைவேற்றுவேன்."

எனது பேச்சை ஆதரித்து அவர்களின் கரகோசம் எனக்கு நிறைவைத் தந்தது. அதனைத் தொடர்ந்து அவர்களது பிரதிநிதிகளாக மூவரடங்கிய குழுவும் அதிபரும் சேர்ந்து சுமுகமான உரையாடலுடன் உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இரண்டு மணிநேரத்தில் பாடசாலையிலிருந்து, ஏற்கனவே திட்டமிட்ட பாடசாலையில் இணைந்து கொண்டேன். இது எனது இருபத்தைந்து வருட சேவையில் முக்கியமான அனுபவமாகும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களில், கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றாதோர் இரண்டு வருடங்கள் வன்னி மாவட்டங்களில் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அமைய பல ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் வருகை தரவுள்ளதை அறிந்தபோது, கிராஞ்சி பாடசாலை பற்றிய நினைவுகள் நிழலாடின.

வசதிவாய்ப்புகள் உள்ளோர் வேண்டிய திருகுதாளங்கள் செய்து வெளிமாவட்ட இடமாற்றத்தினை இரத்துச் செய்தது போக, பாதிக்குப் பாதியாக வசதிவாய்ப்புக்கள் இல்லாத ஏழைகள் பாளைகளான ஆசிரியர்கள், கொலைக்களத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிவந்த பலி ஆடுகளாகப் பரிதாபத்துடன் கல்வித் திணைக்கள வளாகத்திலுள்ள மாமரத்தின் நிழலில் ஒதுங்கினர்.

அதிலும் சிலர் தமது இறுதிக்கட்டமான தந்திரோபாயங்களை மேற்கொண்டு, ஏ 9 வீதிக்கரையில் உள்ள பாடசாலைக்குச் செல்வதற்கு முயன்றனர். இன்நிலையில் யாழ்ப்பாணம் முழங்காவில் மன்னார் வீதியிலுள்ள பாடசாலைகளுக்கும் முண்டியடித்து சாதித்தனர். என்னோடு சேர்ந்த சிலரைத் தவிர, கிராஞ்சிபற்றிக் கரிசனை காட்டவில்லை. கிராஞ்சி பற்றிய நினைவுகள் எனது நித்திரையைத் தின்று தீர்த்தது.

கஷ்டப் பிரதேசத்திற்கான இடமாற்றத் திட்டத்தில் பத்து வீதமாவது சென்றதா என்பது கேள்விக் குறியாகவே இருந்தது. அதிலும் பலர் தமக்குச் சாதகமான விடுமுறைகளைப் பெற்றுத் தகடுதத்தனம் செய்தனர். அது தெரிந்தும் அலுவலக விதிகளை மீறி ஒன்றும் செய்யமுடியாத கையறு நிலையில் தவித்தேன்.

ஒரு நாள் காலையில் வழமைபோல் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றபோது, சிற்றுண்டிச்சாலை ஐயா, என்னைச் சுட்டி ஒருவருடன் பேசியதை கண்டுகொண்டேன். நான் கேட்காமலே ஒருவர் தன்னை அறிமுகப்படுத்தி, தான் இடமாற்றம் பெற்றுவந்த ஆசிரியர் என்பதைக் கூறினார். அவரிடம் அலுவலகத்தில் சந்திக்கும்படி கூறிவிட்டு தேநீர் அருந்தினேன்.
அந்த ஆசிரியருடன் வந்திருந்த பெண்ணின் நெருக்கத்தினை வைத்து தம்பதிகள் என்பதோடு, முதிர் திருமணம் என்பதையும் கணித்துக்கொண்டேன்.

நான் நினைத்ததுபோல அவர்கள் தம்பதிகள் தான். அத்தோடு இருவரும் ஆசிரியர்கள். கணித, விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கக்கூடியவர்கள் என்பது கூடுதல் தகவல். ஆனால் பெண் ஆசிரியருக்கு மட்டுமே இடமாற்றம் கிடைத்துள்ளது என்பது கவலையளித்தது.

இருவருடனும் உத்தியோகபூர்வமான உரையாடலைத் தவிர்த்து, சிநேகபூர்வமான பேச்சினை ஆரம்பித்து, கணவனும் இடமாற்றம் பெற்று வந்தால், தங்குமிட வசதியுடன் ஒரு பாடசாலை பெற்றுத் தருவேன். முடியுமாயின் உணவுக்கான பொருட்களையும் இலவசமாகப் பெற்றுத்தர முடியும் என்று நம்பிக்கை ஊட்டினேன்.

அவர்கள் அதற்கு இணங்கியதால், இடமாற்றத்திற்கும் ஏற்பாடு செய்து, ஏனைய வசதிகளையும் அதிபர் ஊடாக மேற்கொண்டேன்.

கிராஞ்சி கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக்கடற்கரையை அண்டியுள்ளது. அங்குள்ள மக்கள் ஏழை விவசாயிகள். விவசாயத்துடன் மீன்பிடித்தல், வேட்டையாடுதல், கூலி வேலை செய்வதை தொழிலாகக் கொண்ட சாதாரண எளியமக்கள். என்னதான் தமிழ், தமிழர், தமிழ், தேசியம் என்று பலவாறு வாய்கிழியப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினாலும் சமூகரீதியில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்கான கௌரவத்தினையும் வாய்ப்புக்களையும் ஒடுக்குகின்ற தமிழர் குழுமத்தினால் மறுக்கப்பட்டே வாழ்கின்றார்கள் என்பதே யதார்த்தமாகும்.

ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளை உற்று நோக்கின், அவைகள் சமூக மட்டத்தில் ஒடுக்கப்படும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாடசாலைகள் என்பதை நுணுகிப் பார்த்தால் புரிந்து கொள்வது கஷ்டமானது அல்ல.

அருகருகே உள்ள இரண்டு மூன்று பாடசாலைகளில் சாதாரணதர, உயர்தர வகுப்புகளை இணைப்பதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க முடியுமாயினும் அதை நடைமுறைப்படுத்துவதில் சமூகக் காரணங்களும் தடையாக இருக்கின்றன. மக்கள் மனதில் 'இடமாற்றம்' ஏற்படாதவரை யாவுமே திட்டங்களும் கனவுகளுமாகவே மிஞ்சும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாரம்பரியம்



**சித்தன்**
நெற்புலவு, பூநகரி

பூநகரி மக்கள் நாம்
நெல் வேளாண் குடிகள் யாம்
முழு நாளும் சோற்றுணவு
இரவில் மீதிச் சோற்றில்
நீர் ஊற்றிப் பேணுவோம்
காலை எழுந்தவுடன் மக்கள்
கலயத்துள் கவனமாய் பிழிந்தெடுத்து
வட்டிலிட்டதனை பச்சடியும்
தயிரும் உப்பும் அளவாய் சேர்த்து
பிசைந்தெடுத்து கவனமாய் கையில்
கவளம் கவளமாய் வைத்துண்ண
காலையுணவு கச்சிதமாய் முடியும்
வாயும் வயிறும் மனமும் குளிரும்
தெம்பாய் தம் வேலைக்காய் புறப்படுவர்
நேர முகாமையும் ஒழுங்காகி
விரைந்தோடும் ஊரவரின் உழைப்பு

பழஞ்சோற்றுக்குவப்பாய் பழங்கறிகள்
இறைச்சிக் குழம்பும் விரால்
கருவாடும் இறால் வத்தலும்
திருக்கை வறையும் குழம்பும்
உவப்பாகும் எல்லோருக்கும் என்றென்றும்
மரக்கறியின் பழையதும் பக்குவமாய்
பிசைந்தெடுத்தால் பாங்காகும்
வற்றல் குழம்பென்றால் மகத்தாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டால் உழுத காலத்தே
அளவான சோற்றில் நீர்விட்டு
தேங்காய்ப்பால் பச்சைமிளகாய்
வெங்காயத்துடன் சேர்த்துக் கரைத்து
பனாட்டுடன் பருகப் பசியாறும்
களையாறி விடாயாறி மெருகுடன்
வேலையாகி வெயில் முற்றமுன் முடிந்திடும்

பழஞ்சோறும், பழந்தண்ணிக் கரைசலும்
மருந்தென தற்கால ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன
பி 12 உம் பி 06 உம் கல்சியமும்
வேறு இரும்பும் சேருமென்கிறதாய்வு
உடலுக்கு நண்பனாய் குடற்புண்ணாறி
தோல்வியாதி, மயிர் கொட்டல் குறையும்
முகமும் பளபளப்பாகுமென்கிறது
அமெரிக்கரின் ஆய்வொன்று

பூநகரி மொட்டக் கறுப்பன் பழஞ்சோறு
இல்லை இப்போது வீடுகளில்
இடம்பிடித்தது பிட்டும் இடியப்பமும்
விரைவோம் பழையதை தொடர்வோம்
நலம் பெறுவோம் உடல்
உறுதி பெறுவோம் என்றும்
பழையதை மறவோம் உணவுப்
பண்பாட்டை மீண்டும் தொடங்கிடுவோம்
மிடுக்காய் மீண்டும் புதுப்பிப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம்



**திரு. இராமையா இராஜரட்ணம்**
ஜெயபுரம் வடக்கு

பூநகரி பிரதேச கலாசார பேரவை, ஆண்டிதழ், பூந்துணர், நறவம் - 9 (கார்த்திகை 2019) பதிப்பினில் "கோலம்" எனும் தலைப்பிட்டு கோலம் சம்பந்தமான பலவிதமான நல்லபல உண்மைகளை கட்டுரையிலே எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியே இதுவாகும்.


தமிழ் பண்பாட்டு நிகழ்வுகளின் போது, ஒரு இடத்திலேனும் கோலம் போடவில்லையெனில் அது முழுமை பெறாது, அழகிருக்காது. முற்காலத்தில் பர்ணசாலைகள், மகாஞானிகள், ரிஷிகள், முனிவர்கள் வாழுமிடங்கள் யாவும் கோலத்தால் தான் அழகுபடுத்தப்பட்டிருக்கும். வீடுகள் போன்ற இடங்களிலும் படங்கள் தொங்க விடும் வழக்கம் இருந்திருக்கவில்லை.


இன்றும் அதே கோல வடிவத்திலேயே ஜன்னல், கதவுநிலைகள், கதவுகள், முன் வாயில் கதவுகள் யாவும் கம்பிகளை வளைத்து ஒட்டுவித்து தயாரிக்கப்படுவதெல்லாம் இந்த கோலவடிவங்களே, என்பதுவே உண்மை.


ஓர் இடத்தில் ஒரு சிறிய கோலத்தை அரிசி மாவினால் போட்டு வைத்தாலும் அவர் புண்ணியத்தை சேமிக்கின்றார் என்பதே உண்மையாகும். அரிசி மாவினால் கோலம் போடுபவர் இல்லம் அழகுபடுகிறது. இடமும் தூய்மையாகவும் விளங்கும், உள்ளம் மகிழ்வுறும், உடலை வளைத்து, நெளிந்து, குனிவதால் உடலும் ஆரோக்கியம் அடைகிறது. ஜீவராசிகள் உண்டு பசியாறி வாழ்த்துகின்றன.


இக்கலையினை இளைய தலைமுறையினர் கற்றுத் தெளிவு பெறாவிட்டாலும் (நேரமின்மையால்) தமிழர் வாழ்வியலின் மகிமையினை அறிந்து தெளிவார்கள் என்பதற்காக உந்தப்பட்டு செயல்பட்டேன், முயற்சி வெற்றியைத் தந்தது. பிடித்திருந்தால் ஏற்று அருளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்மையின் குரல் ....

**திருமதி. லக்சலா தர்சன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.

பெண்ணே....
மாதவம் செய்ததனால் நல்ல
மங்கை எனப் பிறந்தோம்...
உயர் மேதைகளாய் வாழ்ந்து
புகழ் மீதினிலே சிறந்தோம்...
சமையல் கட்டைத் தாண்டி - புது
சரித்திரம் படைக்க வந்தோம்

வேதகாலம் தொட்டு விஞ்ஞான காலம் வரை
பெண்ணிலே அடிமையும் உண்டு
பெண்ணிலே ஆண்மையும் உண்டு
பெண்ணிலே காவல் தெய்வமும் உண்டு
காக்கும் காவல் தெய்வமும் உண்டு
காக்கும் கடவுளும் உண்டு
ஆணுக்குப் பெண் எதிலுமே சளைத்தவள் அல்ல
என்ற உண்மைதனைக் கூறிட வந்தோம்

பெண்ணே....
உன்னால் எதுவும் முடியாது
உனக்கு எதுவும் தெரியாது - என்பவரது
மடமைதனைத் தகர்த்தெறிந்து
சிறகுகளைத் தானம் பெற்ற பறவைகளாய்
விண்ணிலே பறப்பதற்கு வந்துள்ளோம்.

குடும்ப சுமை எவ்வளவு எம்மீது திணித்தாலும்
சிறு புன்னகையினால் அத்தனையும்
தவிடு பொடியாக்கி தன்னம்பிக்கையோடு சாதிக்க வந்தோம்
ஆண்மகனைப் பின் தொடர்ந்து வந்தோம்
ஆண்களுக்கு நிகராக வந்தோம்
அவர்களை முன்னோக்கியும் செல்வோம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே
எது சுதந்திரம் என்று எண்ணிப்பார்..... எம்மை
நசுக்கிய காலமெல்லாம் நடுங்கியோடட்டும்
விதவைக் கோலம் பூண்டு
வீட்டுக்குள் முடங்கிக்கிடவாமல்
மீதமுள்ள வாழ்க்கையை உன்னால்
விருட்சம் போல் வாழமுடியும் என்ற
நம்பிக்கை கொண்டெழு....

அடுப்பு ஊதுவதற்கு மட்டுமே - பெண்
என்ற அனைவரின் அகந்தை ஒழித்து
அகிலம் முழுவதும் ஆட்சி புரியவந்தோம்.......
எத்தனை எத்தனை நாடுகளில் பெண்கள்
அரசாள்கின்றார்கள் - இவர்கள்
கால் பதிக்காத துறைகள் என்று
எதுவும் உண்டோ.... இல்லை

பெண்மையைப் போற்றும் ஒவ்வொரு ஆண்மகனும்
சிறந்த பெண்ணால் வளர்க்கப்பட்டவர்கள்...
ஆண் துணையற்று தன் பிள்ளைகளை வளர்ப்பவர்கள்
வீரப் பெண்மணிகள், நானிலம் போற்றப்பட வேண்டியவர்கள்

அதுமட்டுமா!
காவியங்களிலே கதாநாயகிகளாக வாழ்ந்து
இன்றுவரை கருத்தில் உள்ள பெண்கள் ஏராளம்
பெண்மையைத் தாண்டி ஒரு புனிதம் இல்லை
அவர்களிலே சிறந்தவர்களாக.....
கவிப் புலவராய் விளங்கும் ஔவைப் பிராட்டி உண்டு
அன்பிற்குப் பெயர் போன அன்னை தெரசா உண்டு
வீரத்தை உலகிற்கு அளித்திட்ட வேலுநாச்சியார் உண்டு
மாவீரப் பெண்மணியாம் ஜான்சிராணி உண்டு

காவியத் தலைவிகளாம் கண்ணகி சீதாப்பிராட்டி
திரௌபதியும் உண்டு....
விண்ணிலே பறந்து விண்ணிலே மறைந்த
கல்பனா சௌவுலா உண்டு.....
கதைகளிலே மட்டுமல்லாமல் நிஜத்திலே
சிங்கப் பெண்களாய் வாழும் மங்கையர் பலர் உண்டு......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளும் ராஜாவாகினும் வீடாளப் பெண் வேண்டும்
பெண் இல்லாத வாழ்வு முழுமை பெறாது....
ஒரு துளி உதிரத்தைக் கூட நுட்பமாக
உருவம் செய்து தருபவள் பெண்....
இறைவன் பூமிக்கு வருவதில்லை...
சாதனைகளுடன் சரித்திரம் படைக்க
அவரால் அனுப்பி வைக்கப்பட்ட
கற்பக விருட்சம் தான் பெண்.
பெண்ணே நீ இல்லை எனில்
கருணை மிகு அன்னையர் தினம் இல்லை
கொஞ்சி மகிழ சிறுவர் தினம் இல்லை
ஆண்மை போற்றும் தந்தையர் தினம் இல்லை
வாழ்வில் எந்தவொரு கொண்டாட்டமும் இல்லை....

அன்பால் அரவணைக்கும் அன்னை - அவள்
பொறுப்புடன் சீரமைக்கும் அக்கா அவள்
தமயனுக்காய் தவிக்கும் தங்கை - அவள்
மனதால் மயக்கும் மனைவி - அவள்
கண்ணால் கவரும் காதலி - அவள்
குறும்பு செய்யும் குட்டிமகள் - அவள்
இப்படி எத்தனை வகைக்குள்ளடி நீ அடங்குவாய்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி தழைக்குமாம் இவ் வையகம்...
பெண்ணே ... குனிந்தது போதும்
தலை நிமிர்ந்து உன் பணி தொடரட்டும்
பாரதி கண்ட புதுமைப் பெண், நாங்கள் தான்
என்று உரத்துக் கூறி
பாரினில் உன் பணிதனை சிறப்புறத் தொடர்ந்திடு...

உன்னால் முடியும்
என்னால் முடியும்
நம்மால் முடியும்
பெண்ணால் எதுவும் முடியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமிய வாழ்க்கை முறையை மதிப்போம்

செல்வி. முடியப்பு மரியசுபாசினி
பிரதான வீதி,
நாச்சிக்குடா

காலைச்சூரியன் கதிர் பரப்ப
கண் விழித்து எழுந்திடுவோம்
கரத்தை கூப்பி கும்பிட்டே - தொடர்
கடமை தனையே தொடங்கிடுவோம்

(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)

ஆசை அம்மா குடிசையிலே
அடுப்படியில் விறகுமாட்டி
மட்பானையிலே கூழுமாக்க - அதை
பிழாவில் நாம் பருகிடுவோம்

(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)

பள்ளிக்கூடம் செல்கையிலே
அயல்வீட்டாரை உடனழைத்து
கால் நடையாக கதைபேசியே - அங்கே
கடுகதியாய் நாம் சென்றிடுவோம்

(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)

பக்குவமாய் பாடம் கற்க
பாலை நிழலை தேடிடுவோம்
பாட்டும் அங்கே பாடிடவே - உடன்
மேள தாளமும் ஒலித்திடுமே

(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப்பொழுது ஆனதுமே
மணல்திடலை தேடிடுவோம்
பாதம் வைத்து கோயில் கட்டி - நாம்
பார்க்கும் திசையெல்லாம் மகிழ்ந்திடுவோம்
(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)

நிலவொளியை நம்பி அங்கே
நிதமும் நாம் ஒன்று கூடி
கண்ணாம்மூச்சி விளையாடியே - பின்
இசைக்கச்சேரி முழங்கிடுவோம்
(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)

காலங்கள் பல கடந்தாலும்
காப்போமே எம் பழமையினை
மனதிருத்தி நாம் ஏற்றிடுவோம் - என்றும்
மகிழ்ந்து பாடிக் கொண்டாடுவோம்

(தன்னானே தன்னானனே தன தன்னானே தன்னா னனே - 2)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோர்களே நில்லுங்கள் ஒரு நிமிடம்

**திரு. நற்குணம் தயான்**
ஞானி மடம்,
செம்பன்குளம், பூநகரி.

பெற்றோர்களே!
நில்லுங்கள் ஒரு நிமிடம்
உங்கள் பிள்ளைகள்
உலகத்தை கையிலே - வைத்து
உலாவருவதில் கவனம் கொள்ளுங்கள்.

இணையத்தில் நித்தம்
இன்னபல தளங்கள்
நிறைந்து கிடக்கிறது
நிலைகொள்ளா ஆசைபிறக்கும்.

குழந்தை மனசு
குழப்பும் வயசு
தடுமாறும் நேரம்
தவறுகள் நிகழும்.

பிள்ளையின் நடத்தையோடு
பிழையான தளங்களுக்கு
போகாது உங்கள்
கவனம் இருக்கட்டும்.

கணனி முதல்
கையடக்கம் வரை
கற்றுக் கொண்டு - நீங்கள்
கண்கானியுங்கள்.

இணையத்தில் நவீன
இலகுபடுத்தல்கள் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவழிகள் உள்ளதை
பழகிக்கொண்டு வழிகாட்டுங்கள்.

தனிமை அவர்
தவறுக்கான தளமே
கருத்தாய் கவனித்து
பொறுப்பாய் வளருங்கள்.

நவீனம் நமக்கு
நன்மையும் தரும்
தீமையும் தரும்
தீர்வுக்கு வழியுண்டு.

நம்பிள்ளை நாளை
நற்பெயர் வாங்கிட
நட்புடன் பழகுங்கள்
நல்லதாய் மாறும்.

இணையத்தின் தீமைகண்டு
இடைநிறுத்தி விடாதீர்கள்.
நல்லது கெட்டது
நாளும் சொல்லுங்கள்.

நற்பண்புகளால் வளரும் பிள்ளை
நெறிகெட்டு போவதில்லை.
நவீனத்தின் நலன்களும்
நம்வாழ்வுக்கு வழிகாட்டுமே.

பெற்றோர்களே நில்லுங்கள்
பேருண்மை மறந்திடாதீர்
பற்றோடு பாசமும்
பண்பினாலும் பிள்ளைகள்
பாழாய் போவதில்லை
இணையத்தில் நீங்கள்
இணைந்தே பயணியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் தமிழ்

**திரு. யோ. பிரான்சிஸ்**
பள்ளிக்குடா
பூநகரி

எண்திசை எங்கும்
எங்கள் தமிழ்
எக்காலமும் முழங்கும்
பொற்காலம் மலரும்.

அழகிய தமிழ்மொழியே - நீ
அழியாமல் வாழ்ந்திடுவாய்
முக்கால முழுமதியாய்
முத்தமிட்டு வணங்குகிறேன்.

மாண்டவர் ஆசியோடு
மாண்புடன் துலங்கிடுவாய்
இலங்கையில் இன்பத்தமிழ்
இனிதாய் பேசட்டும்.

உலகினில் நதியென பாய்ந்தே பரவினாய் - அழியாது
ஊற்றெடுத்து உலகினையே ஆழ்வாயே.

உலகப் பொதுமறை - நம் திருக்குறள் அறிவீரோ
ஓதும் மந்திரம் தமிழ் ஆகட்டும்
ஔவையின் ஆத்திசூடியும்
அகிலத்தின் பொதுமறையாய் மாறட்டும்.

இனங்கள் கடந்தே
இகத்தினில் மலரட்டும்
இதிகாசம் கடந்த
எங்கள் உயிர் மொழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணிலே மருவிடும் மனித உயிர்கள்

செல்வி. நீ. தமிழ்மொழி
நாச்சிக்குடா
பூநகரி.

உயிர் காக்கும் பணியிலும் நீங்கள்
ஊழல் புரிவது நன்மை தருமோ
வலிக்கு நிவாரணி நீங்கள் - எம்
வாழ்வை அழிப்பது முறையா

வாழ்வளிக்கும் கடவுள் என்று தானே
வரிசை வரிசையாய் மருத்துவர் உங்கள்
வாசலில் நித்தம் நித்தம் நாங்கள்
வலியோடு தஞ்சமென வந்து நின்றோம்

நெஞ்சமதில் கொஞ்சம் ஈரமேனும்
இல்லையோ - எம்
நெஞ்சமெலாம் பரிதவித்து நிற்கதியாய் நிற்கிறோம்
மருத்துவத்தில் மனிதம் மலரட்டும்

வஞ்சமது செய்தோமோ எம்
வாழ்வில் பழிதீர்ப்பதற்கு
பிஞ்சுமுதல் கனிவரையும்
பிடிங்கி எறிவதேனோ - உங்கள்
நெஞ்சத்தில் ஈரம் சுரக்கட்டும்.

கடவுளைப் பார்த்ததில்லை
கண்முன் காணும் - நாம்
கையெடுத்து கும்பிடும்
கடவுளும் நீரய்யா

மன்றாடி கேட்கின்றோம்
மனிதநேயம் காக்கும்
மனிதக் கடவுளாய்
மனுக்குலம் காத்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீனவர் வாழ்வு

திரு. பெ. பொலிகாப்பியர்
வலைப்பாடு

ஆதிமறை போற்றிடுவோம்.....,!
ஆதிமறை போற்றிடுவோம்
ஆண்டவனின் சீடர் நாங்கள்
ஆழ்கடல் சென்றிடுவோம்
அலையுடனும் மோதிடுவோம்

வலைநகர் கரையோரமாக லயம்
அமைத்தவனே அருள்மழை
பொழிந்தவனே வறுமைப்
பிணி நீக்கிடுவாய்

இரவெல்லாம் கடலினிலே
இறைவனோடு பேசிடுவோம்
இன்பமாய் உறங்கிடாது
கண்விழித்து காத்திருப்போம்

காலைமுதல் மாலை வரை
கால் கடுக்க நின்று நாங்கள்
காற்றுப் போல் நீர் களன்று
காவல் செய்யும் தொழிலாளி


கடவுளை தினம் நினைத்து
கஸ்ரத்தை தினம் சுமந்து
கவலையின்றி தினசரி சிரித்து
கடமை செய்யும் தொழிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவின் நாற்றம் மணந்திடவே
மகிழ்வுடனே முகம்தடவி மனமாறப்
பேசிடுவோம் மனமகிழும் தொழிலாளி
பாடுபட்டு உழைத்த பணம்
பாழாகிப் போயிடவே
பலபேர் கூடிநின்று
பலவித மது அருந்தி
பாடுபட்டு உழைத்த பணம்
பாழாகிப் போனதுவே
பட்ட கடன் தீரவில்லை
பாரச்சுமையும் தீரவில்லை
எம்மையும் சிரிக்க வைப்பாய்
எம்மையும் நினைக்க வைப்பாய்
எங்கள் நோய் நீ சுமப்பாய்
எம்மை என்றுமே காத்திடுவாய்
காலையில் எழுந்திடுவோம்
கடவுளை தினம் நினைத்து
கடலுக்குச் சென்றிடுவோம்
கடல்வளமும் தந்திடுவாய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவளுக்கு வலிகளும் வலிமையே

**திரு. பத்மசேனன் சனோஜன்**
BA, எழுத்தாளர், ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,
சுண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குனர்.

அவசர அவசரமாக வீட்டு வேலைகளை முடித்து விட்டு வீட்டிற்குள் சென்றவளுக்கு சுவர் ஓரமாக மாட்டப்பட்ட கடிகாரத்தில் அவள் கண்கள் பதிந்தது. காலை ஆறுமணி "கடவுளே பேருந்த விட்டா இன்று வேலை இல்ல" என்று மனதில் நினைத்தபடி " அம்மா தம்பிக்கு பள்ளிக்கூடம் கொண்டு போக சாப்பாடு ஆற வைத்திருக்கிறேன் எடுத்து கொடுங்கோ, சுடுதண்ணி போத்தலில் தேனீரும் ஊற்றி வைச்சிருக்கிறேன்" என்று அவளது தாய்க்கு கூறிக்கொண்டே ஆடை மாற்றி முடித்திருந்தாள். வேகமாக தலையை வாரி கொண்டை போட்டவள் " நேரத்துக்கு சாப்பிடுங்க நான் போயிற்று வாறன்" என்றபடி தூக்கத்தில் இருந்த மகனை கட்டி முத்தமிட்டு வேகமாக ஓடினாள். இரண்டு மயில்கல் தூரம் அவள் நடந்தே செல்ல வேண்டும்.

" காவியா " என்ற குரல் கேட்டு திரும்பிப்பார்த்தாள் " ஏறுங்க நான் இறக்கி விடுறன் சந்தியில " என்ற ஊர்க்கார சகோதரனுக்கு" இல்ல பரவாயில்லை நான் நடந்தே போறன்" என்று வேக வேகமாக நடந்து சென்றாள். காவியா நடுத்தர குடும்பத்தில் பிறந்தவள். தந்தை இறந்து விட்டார் . 79 வயதான தாய் இவளோடு வீட்டில் தான் இருக்கிறாள். ஆறு சகோதரர்கள். அதில் மூன்று சகோதரிகளும், மூன்று ஆண் சகோதரர்களும் எல்லோரும் திருமணமாகி அவர்கள் அவர்களுடைய குடும்பங்களுடன் இருக்கின்றனர். இன்றைய பொருளாதாரத்தில் தங்கள் தங்கள் குடும்பத்தைப் பார்ப்பதே பெரிய கஸ்ரம் இதில் தன்னையும் மகனையும் பார்க்கவில்லை என்று குறை கூற முடியுமா. காவியாவுக்கு ஒரு ஆண் பிள்ளை. இவள் தனது பிரதேசத்தில் உள்ள மரமுந்திரிகை தோட்டத்தில் நாட்கூலிக்கு வேலைக்குச் சென்று வருவாள். அதில் வரும் வருமானத்தில் குடும்பத்தை பார்த்து வந்தாள். "காவியா " பெயருக்கேற்ற குணவியல்புகளால் காவியத்து அரசியாகவே இன்றும் வாழ்கிறாள். சாந்தமும், அதிர்ந்து பேசாத , அடுத்தவரைக் காயப்படுத்தாத இயல்பு கொண்டவள். யாரிடமும் எதையும் எதிர்பார்க்க மாட்டாள். முறைப்படி சங்கீதம் கற்காவிட்டாலும் இசைஞானம் இவளுக்கு வரமாக கிடைத்தது. நடிப்பிலும் அவள் சிறப்பாக நடிக்ககூடியவள். இவள் 2005ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைவதற்கு முன்பு கலைநிகழ்வுகளின் ஊக்குவிப்பு அதிகப்படியாக இருந்தது. அதனால் ஊரில் நடைபெறும் நிகழ்வுகளிலும் சரி ஆலய நிகழ்வுகளிலும் சரி அவள் நடிப்பால் ஊரவர்களையும் , புதிதாக ஊருக்கு வரும் விருந்தினர்களையும் மகிழ்விப்பாள். இவள் குரலாலும் , ஆடல் திறமையாலும் எல்லோருடைய நினைவுகளிலும் நிலைத்திருந்தாள். பல திறமைகளை தன்னகத்தே கொண்டவள். அவள் குணத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பிலும் , சிறந்தவள் குடும்பத்திலும் சமூகத்திலும் மரியாதையாகவே நடந்து கொள்வாள். இருபத்தைந்து வயதிருக்கும் வீட்டார் வரன் பார்த்து பக்கத்து ஊரில் தூரத்து உறவு முறையுள்ளவரை சிறப்பாக உறவுகளைக் கூட்டி திருமணம் நடத்தி வைத்தார்கள். அவள் குணத்திற்கும், பண்பிற்கும் ஏற்ப கிடைத்த துணையும் நல்லதாகவே அமைந்தது. அவர்கள் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது. காவியன் என்றபெயர் வைத்து அழகு பார்த்தனர்.

மிகவும் மகிழ்ச்சியாக நகர்ந்த குடும்பத்தின் இன்பமான வாழ்க்கை கண்டு கடவுளும் பொறாமை கொண்டானோ என்னவோ? குழந்தைக்கு சரியாக ஒருவயது பூர்த்தியாகியதோ தெரியவில்லை. அப்போதுதான் அந்த துயர நிகழ்வு நடந்தது . அவள் கண்முன்னே தனது கணவனின் உயிர் பிரிந்தது. ஆம் அன்றும் இன்றும் அலை அலையாக மக்கள் வெள்ளம் நிரம்பும் மடுத்திருப்பதி பெருவிழா. அப்பெருவிழாவிற்கு உறவுகள் சேர்ந்து பேருந்து பிடித்து திருவிழாவிற்கு செல்வது வழமை. திருவிழா முடித்து மகிழ்வாக திரும்பும் போதுதான் துயரம் நிகழ்ந்தது. காவியாவியின் மைத்துனியின் குழந்தை வாந்தி எடுத்தது. பேருந்தின் வாசலில் நின்ற காவியாவின் கணவன் குழந்தையை வேண்டி வாந்தி எடுப்பதற்கு ஏற்றவாறு ஓடும் பேருந்தின் வாசல் கதவைப் பிடித்தபடி வாந்தி எடுக்க குழந்தையை ஏந்திக் கொண்டிருக்க அந்த துயரம் நிகழ்ந்தே விட்டது. குழந்தையும், காவியாவின் கணவரும் இறந்த துக்கம் தான் இன்று வரை தாளாமல் மிச்சமாக இருப்பது. அடிக்கடி ஒவ்வொரு தருணங்களிலும் "பேருந்தை நிறுத்தும் படி சொல்லிப்போட்டு பிள்ளைய வாந்தி எடுக்க வைச்சிருந்திருக்கலாம். இது நடந்திருந்தா தப்பி இருப்பார் " அவள் வாய்கள் உச்சரிக்கும். தன் கணவன் இப்போது இருந்திருந்தால் என்பிள்ளை அன்புக்கு ஏங்கத்தேவையில்லை. " அவளுக்கு கஸ்ரங்களைத் தாங்கி வாழத்தெரியும் ஆனால் பிள்ளையைப் பார்க்கவோ, செல்லங்கொஞ்சவோ முடியாத நிலை. இவள் காலையில் எழும் போது பிள்ளை நித்திரையாக இருப்பான், வீட்டிற்கு வரும் போதும் பிள்ளை நித்திரையாகி விடுவான். தானே வெளிக்கிட்டு, தானே சாப்பிட்டு நினைக்கும் போதே கண்கள் பனித்தது அவளுக்கு. இரவில் மட்டும் தான் தாயின் அணைப்பில் பிள்ளையின் உறக்கம் இருக்கும். இவளுக்கும் அந்த ஒரு ஆறுதல் மட்டும் தான். காவியனும் படிப்பில் கெட்டிக்காரன் பாடசாலையில் முதலாம் பிள்ளையாகவே வருவான். ஏன் 2019ல் கிளிநொச்சி தேசிய பாடசாலையில் படித்தபோது அங்கு அவ்வளவு படிக்க கூடிய பிள்ளைகள் இருந்தும் அவனே முதலாம் பிள்ளையாகத்தான் வந்தான். அப்போது தரம் 9ல் படித்துக்கொண்டு இருந்தான்.

ஓட்டமும் நடையுமாக பேருந்தை ஒருவாறு பிடித்து விட்டாள். பேருந்தில் ஏறி இருந்த போதும் பிள்ளையின் நினைவுதான் அவளை வாட்டியது இவளவு நவீன வளர்ச்சியில் சமூகம் மாறியும் அவள் கையில் ஒரு தொலைபேசி இல்லை. அவளோடு வேலைக்கு வரும் ஊர்க்கார பிள்ளையின் தொலைபேசியில் தான் தன் சகோகோதரிக்கு அழைப்பை ஏற்படுத்தி வீட்டு நிலவரத்தினையும், பிள்ளையையும் விசாரித்துக் கொள்வாள். பிள்ளையோடும் தாயோடும் கதைத்து நிலமையை விசாரித்துக் கொள்வாள். அவ்வாறான நேரங்களில் தாய்க்கும் காவியாவுக்கும் ஒரு பெரும் போரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்து விடும். அவள் என்ன செய்வது. தவறு செய்ததற்காக யாரையும் ஒதுக்கி விட முடியாது. ஆனால் தொடர்ந்து தவறு செய்பவர்களை திருத்தவும் முடியாது. காவியா தொலைபேசி வேண்டிக் கதைக்கும் லதாவும் கணவன் இல்லாதவள் தான். அவள் தனக்கான துணையை தேடிக்கொண்டிருந்தாள். வருபவர்களெல்லாம் நம்பிக்கையை கொடுத்து விட்டு ஏமாற்றிச் செல்வதால் லதாவை எல்லோரும் தவறாகவே பார்த்தனர். அவள் தனக்கான பாதுகாப்பினை அன்பினை எதிர்பார்ப்பதை உணர்ந்தவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் அவளை சுக்குநூறாக்கி யார் எது வேண்டுமானாலும்பேசட்டும் என்று தன்வழியிலே பயணிக்கிறாள். அவளுடன் கூட்டுச்சேர வேண்டாம் என்று அடிக்கடி அம்மா சண்டைபோடுவாள்.

தனது கிராமத்து பிள்ளை என்பதாலும், தன்னைப்போல் ஒற்றையாய் நிற்பவள் என்பதாலும் அவளின் உணர்வுகளை புரிந்து கொண்டு வேலையிடத்தில் பழகுவாள். அவளோடு இவள் வேலையிடத்தில் பழகுவது. அது அம்மாவுக்கு பிடிக்காது. "நாளைக்கு உன்னையும் இந்த ஊரும் சனமும் இப்படி கழுவி ஊத்தும் உந்த கூட்ட விடு" என்ற புரிதலில்லாத அம்மாவின் புலம்பலை சமாளித்து நகர்ந்து விடுவாள்.

லதாவுக்கு ஒரு பெண்பிள்ளை தான். அவளது கணவர் குழந்தை கிடைப்பதற்கு முன்னே அவளை ஏமாற்றி சென்று விட்டான். பிள்ளைக்கும் அப்பாவைத் தெரியாது. ஆனால் ஒரு சமாதான நீதவானை வைத்து இன்னார் தான் தகப்பன் என்று பிள்ளைக்கு பதினோரு வயது இருக்கும் போது பிறப்பு பத்திரம் ஒருவாறு எடுத்து விட்டாள். தனது மகளுக்கு சிறுவயதில் இருந்தே தான் பழகும் ஆண் நபர்களை எல்லாம் அப்பா என்று சொல்லும்படி சொல்லிக் கொடுப்பது வழக்கம். காவியாவும் எவளவோ அறிவுரை சொல்லிவிட்டாள் பிள்ளையின் எதிர்காலம் குறித்து. அதை லதா ஒரு பொருட்டாகவே எடுத்ததில்லை.

ஒரு நாள் காவியா "லதா உனக்கு தெரியும் உன்னோட ஏன் சேர வேணாம் என்று அம்மா அடிக்கடி சண்ட பிடிக்கிறது என்று. காவியனுக்கும் மகள் சொல்லி இருக்கிறாள், இத்தினமாதம் அம்மா இந்த அப்பாவோட இருந்தவா, இத்தின வருசம் அம்மா இந்த அப்பாவோட இருந்தவா என்று நாலு மூன்று பெயர் சொல்லி இருக்கிறாள், காவியனும் அத கேட்டு என்னட்ட வந்து கேட்கிறான், நீங்க மட்டும் ஏனம்மா ஒரு அப்பாவ காட்டுறீங்க என்று. நான் என்னத்த சொல்ல முடியும்.

லதா நீ பெண்பிள்ளைய பெத்து வைச்சிருக்கிறாய் அந்த பிள்ள பாவம், இந்த சமூகம் நம்மள வாழவிடாது உனக்கு ஒரு வாழ்க்கை தேவை தான். உனது உணர்வுகளை புரியாதவன் இல்லை. ஏமாற்றி செல்லும் ஆண்களை தவறு சொல்லாது. பெண்களை மட்டுமே தவறான பார்வையில் வைத்திருக்கிறது. நமது சமூகம் இனி நீ யாரையும் நம்பாத. உன்னை திருமணம் செய்வதாக கூறி யார் வந்தாலும் பதிவு திருமணம் செய்த பின்னரே வீட்டிற்கு வரலாம் என்று சொல்லு. ஏமாத்துறவர்களுக்கு செருப்படியா இருக்கும் " என்று கூறியபடி லதாவையும் அழைத்துக் கொண்டு வேலை செய்யத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள் காவியா. லதாவுக்கு இது புதிது இல்லை என்பதால் அதை காதில் வாங்கியும் வாங்காதது போல " கதைக்கிற ஆக்களே என்ன வந்து பார்க்கப் போயினம்" என்றபடி இருவரும் மரமுந்திரிகைப் பழத்தை ஆய்ந்து பழத்தை வேறாகவும், விதையை வேறாகவும் பிரித்து போட்டுக்கொண்டு இருந்தனர். இவர்கள் வேலை செய்யும் மரமுந்திரிகைப் பண்ணை வெள்ளாங்குளச் சந்தியிலிருந்து துணுக்காய் போகும் வீதியில் உள்ளது. நாச்சிக்குடாவில் இருந்து நாச்சிக்குடா சந்திவர நடந்து வந்து பேருந்த பிடிச்சி வெள்ளாங்குளச்சந்தியில இறங்கி பிறகு கொஞ்சத்தூரம் நடக்க வேண்டும். பயணக்களைப்பே இவர்களுக்கு உடல்ச் சோர்வ அதிகப்படுத்தி விடும்.
வேலை வேலையாக இருந்தாலும் அவளுக்கு மகனின் நினைவுதான். அவன் என்ன செய்வான் பத்திரமா வீடு வந்து சேர்ந்திருப்பானா, சாப்பிட்டிருப்பானா, பிள்ளைய பக்கத்தில இருந்து பார்க்க முடியாத வேதனை தொண்டையை அடைக்க, தண்ணீரை எடுத்து குடித்தாள். தண்ணீர் குடித்த கையோடு பிரித்துப்போட்ட விதைகளையும் பழங்களையும் தூக்கிக் கொண்டுபோய் உரிய இடத்தில் சேர்த்தாள். சற்றும் அவள் இளைப்பாற விரும்பாமல் மீண்டும் பழங்களை மரத்தில் இருந்து ஆயத்தொடங்கினாள். பழங்களை ஆய்ந்த படியே " இன்னும் எவளவு நேரம், இன்னும் நேரம் போகுதே இல்ல பிள்ள பாவம் என்ன செய்யிறானோ தெரியேல்ல" என்றபடி " அக்கா என்ன நேரம் " என்று கேட்டவளை " இப்ப நான்கு மணி நீ ஏன் காவியா காவியன பற்றி மட்டுமே நினைக்கிறா உன்னைப் பற்றியும் நினைக்கலாமே " நக்கலாகவும் அவளை சிரிக்க வைக்கவும் கதை கேட்டாள். "எனக்கு அவன் தான் உலகம், அவன் பெரியாளாகி நல்ல இடத்துக்கு வந்தா போதும்" என்று சொல்லியபடி தன் வேலையில் கண்ணாய் இருந்தாள். பக்கத்தில் நின்ற கனகா " பாவம் 26 வயதில வாழ்க்கைய இழந்து தன் பிள்ளைக்காக ஓடிக்கொண்டிருக்கும் காவியாவை நினைத்து மெய்சிலிர்த்தபடி அவளும் தன் வேலையில் கவனம் செலுத்தினாள். சற்று நேரத்தில் அலாரம் ஒலிக்க " அப்பாடா" என்ற பெருமூச்சோடு உள்வருவோர் வெளிச்செல்வோர் பதிவேட்டில் ஒப்பமிடுவதற்காக முதல் ஆளாய் ஓடினாள். மகனை பார்க்கும் ஆவலில் மட்டும் அவள் முந்தியடித்து ஒப்பம் வைக்க ஓடுவாள். அவள் ஓடுவதைப் பார்த்த சகபணி புரியும் பெண்கள் வியந்தே பார்த்தார்கள் அப்பளுக்கில்லாது தன் கணவனையும் , அவனாகவே பிறந்த மகனையும் மட்டும் நினைத்து ஓர் காவியமாக வாழும் காவியாவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதமை அகற்றிடுவோம்



**திருமதி. தோமஸ் மரியகன்னி**
வலைப்பாடு.

**பல்லவி**

வலிகள் நிறைந்த வாழ்க்கையடா- தோழா
வழிகள் தடுமாறும் காலமடா - உன்
விழியினில் விளக்கை ஏற்றி வைத்து - தோழா
ஒளியினில் எழுதிடு வெற்றி சரிதையினை . (வலிகள் நிறைந்த)

**அனுபல்லவி**

துன்பங்கள் யாவும் வாழ்வில் ஏணிப்படி - அது
உன்னை தூக்கி நிறுத்திடும் நல்லபடி
இன்பமுடன் அவை யாவையுமே - தோழா
ஏற்று விட்டால் நீ உயர்ச்சி கொள்வாய். (வலிகள் நிறைந்த)

**சரணம்**

வேதனை நம்மைக் கண்டவுடன்
வெட்கத்தில் நாணும் நாளும் வரும் - தோழா
வேதனை யாவும் எங்களுக்கு
சேவகம் செய்யும் நேரம் வரும் - தோழா. (வலிகள் நிறைந்த )

சாதனைப் பயணம் தொடருமென்றால்
சாத்தியமாகும் இவை யாவும் - நல்
போதனை யாவும் கேட்டுணர்ந்து- தோழா
பேதமை அகற்றிடு உன் வாழ்வில். ( வலிகள் நிறைந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார விழிப்புணர்வு ஆற்றுகை நிகழ்வு — 2023, 2024



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் மாண்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அஞ்ஞான வானில் விடிவெள்ளியாய் துலங்கிய குருமணி

## (அருட்பணி பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி)

**திரு. பாக்கிய நாதர் - டிகால் M.A**
ஆசிரியர்
யா/ தம்பாட்டி அ.த.க வித்தியாலயம்
ஊர்காவற்றுறை.

### அறிமுகம்

சமயப்பணி, சமூகப்பணி, பொதுப்பணி என பல்வேறுபட்ட துறைகளில் மக்களுக்காக, மண்ணுக்காக, தங்களை அர்ப்பணித்து இறுதிவரை தியாகம் செய்து அமரத்தவம் அடைந்தவர்கள் எண்ணிலடங்காதவர்களே. இருப்பினும் ஊருக்குழைத்திடல் யோகம் பிறர் நலம் ஓங்க தனை வருத்துதல் யாகம் எனும் பாரதியின் கவிதை வரிகளுக்கேற்ப தன்னையே மெழுகாக உருக்கி ஆன்மீக ஒளி தந்து அதேவேளை பகுத்தறிவையும் பட்டறிவையும் புகுத்தி புரட்சிகர சிந்தனை மாற்றங்களை இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் மற்றும் பெரியோர்கள் மனதில் விதைத்து இறுதிவரை இறைபணியையும், மக்கட் பணியையும் தனது உயிர் மூச்சாகக் கொண்டு அமரத்துவம் அடைந்தவரும் பூநகரிப் பிரதேசத்தின் பெரும்பாலான கத்தோலிக்க பகுதிகளில் அருட்பணியாற்றியவருமான அருட் பணியாளர் பற்றிக் ஞானப்பிரகாசம் (அ.ம.தி) அடிகளாரது தனித்துவம் மிக்க, சிறப்பு மிக்க பணியினையும் மாண்பினையும் ஆவணப்படுத்தும் நோக்கில் இக் கட்டுரை பதிவிடப்படுகின்றது.



### வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் நெடுந்தீவுப் பங்கில் தீயோகு பற்றிக், சுவக்கின் சவினம் என்பவர்களுக்கு ஐந்து ஆண்பிள்ளைகளுள் ஒருவராக 1945ம் ஆண்டு அக்டோபர் 16ம் திகதி பற்றிக் - ஞானப்பிரகாசம் அடிகளார் பிறந்தார். ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு புனித யோவான் றோ.க. தமிழ் பாடசாலையிலும், உயர் கல்வியை கொட்டாஞ்சேனை புனித பெனடிற் கல்லூரியிலும் கற்றார். குழந்தைப் பருவத்திலிருந்தே நெடுந்தீவிலுள்ள திருச்சபை குருக்களின் பணிவாழ்வின்பால் ஈர்க்கப்பட்டதோடு அருட்பணி லூயிஸ் யோசப் அ.ம.தி அவர்களின் வழிகாட்டலுக்கு உட்பட்டு 1961 இல் ஆரம்ப சிறிய குருமடம் கொகுவல - நுகேகொடையில் சேர்ந்தார். பின்பு 1964 - 1965 காலப்பகுதியில் நவசன்னியாசத்தை களுத்துறை, மவுண்ட் ஈடின் இல் மேற்கொண்டு 1965 - 1972 வரையான காலப்பகுதியில் கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல் மற்றும் இறையியல் படிப்பினை நிறைவு செய்து 26.04.1972ம் ஆண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மறைமாவட்ட துணை ஆயரான எல்.ஆர். அன்ரனி ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

### இறை அழைத்தலின் பின்

1972 - 1973 இல் அனுராதபுரத்தில் உதவிப்பங்குத் தந்தையாக பணிபுரிந்தார். மேலும் 1973 - 1975 காலப்பகுதியில் கொழும்புத்துறை அமல உற்பவத்தில் மறையுரைஞராக பணிபுரிந்து அளப்பரிய சேவைகள் புரிந்தார். மேலும் 1975 - 1976 வரையான காலங்களில் விவிலிய ஆய்வுக்காக இந்தியாவில் பெங்களூர் தர்மபுரம் கல்லூரியில் ஆய்வினை மேற்கொண்டார். மீண்டும் இலங்கையில் 1976 - 1978 இல் மறையுரைஞராக கொழும்புத்துறை அமல உற்பவத்தில் பணிபுரிந்தார். பின்பு 1979 - 1982 வரையான காலப்பகுதியில் நீர்கொழும்பு புனித மரியாள் ஆலயத்தில் உதவிப்பங்குத்தந்தையாக பணிபுரிந்தார். மீண்டும் 1982 - 1985 ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பில் பணிபுரிந்ததோடு 1985 - 1988 வரையான காலப்பகுதியில் வலைப்பாடு இரணைதீவு பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தார்.

### பூநகரிப் பிரதேசத்தில் இறைபணி

இக்காலப்பகுதியில் பூநகரி, வலைப்பாடு பிரதேசங்கள் அருட்பணி பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி அவர்களின் பணியினைப் பெற்ற பிரதேசம் என்ற வகையிலும், அடிகளார் இறைபதம் அடைந்து பதினைந்து வருடங்களாகிவிட்ட போதும் இவ்விடங்களில் ஆற்றிய மறைபணிகளுக்கு அப்பால் அவர் என் வாழ்நாளில் நான் சாதிப்பதெல்லாம் இறைவனின் அருட்பணிகளில் ஒரு சிறு துளியே எனக் கூறி தன் பணியை மேற்கொண்டார். அடிகளார் தனது வாழ்விலும் போதனையிலும் தத்துவமேதை சோக்கிரட்டீஸ் இன் கூற்றினை மேற்கோள் காட்டி கண்கள் இரண்டும் காதுகள் இரண்டும் படைத்த இறைவன் நாவை மட்டும் ஒன்றாய்ப் படைத்தான். ஏனெனில் காண்பவற்றை கேட்பவற்றை இருமடங்காக இருக்கவேண்டுமென்பதற்காகவும் பேசுவது பாதியாக இருக்க வேண்டுமென்பதற்காகவுமே. அதன் மூலம் பாவங்களும் குற்றங்களும் சச்சரவுகளும் மிகவும் அரிதாகி விடும் எனவும் தம்மைச் சார்ந்தவர்களுக்கு எடுத்துக் கூறுவது அவரது இயல்பாக விளங்கியது.

### விவிலிய ஆய்வும் ஜெருசலேமும்

1988 - 1989 விவிலிய ஆய்வுக்காக ஜெருசலேம் சென்றபோது இயேசுவின் பிறந்த ஊர், வாழ்ந்த இடங்கள், பாடுகள் பட்ட பிரதேசங்கள் யாவற்றையும் தரிசித்தபோது தனது மனதும் மிகவும் வருந்தியதாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் குருத்துவ பட்டம் பெற்றபோது தனது சொந்தப் பங்கான நெடுந்தீவு புனித யாகப்பர் ஆலயத்தின் தேவ அழைத்தல் பெற்ற முதற்குருவாக - திருப்பணி நிறைவேற்றிய வேளையில், தான் , தனது தந்தையாரின் செம்மறி ஆட்டு மந்தைகளை மாலை நேரங்களிலும் பாடசாலை விடுமுறை தினங்களிலும் மேய்ச்சல் தரவைகட்குக் கொண்டுபோய் மேய்த்துவிட்டு களைத்து வீடு திரும்பும் போது வெகு தொலைவுக்கு கால்நடையாகவே சென்று வருவதால் இறைவன் தனக்கு ஒரு சைக்கிளை வானிலிருந்து கீழே கட்டி இறக்கி விடமாட்டானா எனத் தான் ஏங்கி கவலையுடன் அங்கலாய்ப்பதாகவும் அப்போது அதனைச் செவிமடுத்த இறைவன் இன்று நெடுந்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யாப்பர் ஆலய பங்கு மக்கள் மூலமாக தனது முதல் திருப்பலியை நிறைவேற்றும் இத்தருணத்தில், தனக்குத் தன் வேண்டுதல்படி சைக்கிளைப் பரிசாக வழங்கி தனது வேண்டுதலை இறைவன் நிறைவேற்றியிருப்பதாகவும் எனவே இறைவன் நம்பியோர் எவரையும் கைவிடுவது இல்லை என்பதையும் தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

**இறைபணிக்கோட்பாடும் படைப்பிலக்கியங்களும்**

நமது பணிகள் நிறைவைச் சந்தித்துத் தான் ஆகவேண்டும் என்பதில்லை. இறையாட்சி என்பது என்றுமே நம் இலட்சியக் கனவுகளைக் கடந்ததாகவே இருக்கும். அதேபோல் அவ் ஆட்சி என்றுமே நம்மால் இயன்றவைகளையும் கடந்ததாகவே இருக்கும் எனும் கோட்பாட்டைப் பின்பற்றி தமது மறைப்பணிகளுக்கு அப்பால் மக்களின் சிந்தனைகளைத் தூண்டும் நிலைக்கு நூல்களையும் படைத்துள்ளார். அவற்றில் **1972**ம் ஆண்டு வெளிவந்த "சிந்தனைத் திரட்டு" எனும் படைப்பின் மூலமாக மனிதனை வாட்டி வதைக்கும் கொடிய நோய்கள், அமைதியற்ற உள்ளம், நிம்மதியற்ற வாழ்க்கை, நிம்மதியற்ற மனம், இலட்சியமில்லாத வாழ்வு என்னும் நோய்களை இனம்காட்டி இவை குணமாக்கும் வழிகளையும் அந்நூலில் குறிப்பிடுகின்றார்.

அடிகளாரின் **1977**ம் ஆண்டு வெளிவந்த 'அமைதித்துளி' எனும் நூல் பல்வேறு வழிகளிலும் மனம் புண்பட்டு அமைதியிழந்து தளர்வுற்று வருந்துபவர்களுக்கு புத்துயிரும் ஊக்கமும் நம்பிக்கையும் அளிக்கும் பாணியில் அமைந்துள்ளமை சிறப்பானது.

**1979** ம் ஆண்டு வெளிவந்த "ஆழ்கடலின் முத்துக்கள்" எனும் அடிகளாரின் பெரும் படைப்பான நூலானது பரந்த சமுத்திரத்தில் மறைந்துள்ள முத்துக்களைத் தேடிக் கண்டெடுத்து பட்டை தீட்டி வைப்பது போல 'தீபஞானம்' எனும் இவ்வாசிரியர், திருவிவிலியத்தில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களைத் தன் எளிமையான சொற்களால் அழகுபடுத்திச் சுருக்கமாக வெளியிட்டுள்ளார். மன்னிப்பு, தன்னலம் தேடாமை (சுயநலமின்மை), செபத்தின் மாண்பு, நீதி, உண்மை, போன்ற விலை மதிப்பற்ற முத்துக்களைக் காண அழைப்பு விடுக்கின்றார் ஆழ்கடலின் முத்துக்கள் மூலம். இவ் அடிகளாரின் இறுதி நூலாகிய **1996**ம் ஆண்டு வெளிவந்த 'இறைஞான ஈர்ப்புக்கள்' அவரது அனுபவ இரசனையையும் முதிர்ச்சியையும் காட்டுகின்றது. இறைஞானத்தின் மீது கொண்ட ஈர்ப்புத் தன்மையையும் இது எடுத்துரைக்கின்றது. இவ்வண்ணம் தனது எண்ணங்களை தனது நூல்களின் வடிவிலும் மறைஞான பிரசசாரங்கள் மூலமாகவும் இம்மண்ணுக்கும் மனிதருக்கும் வழங்கியிருக்கின்றார்.

**ஆயர் ஆஸ்கார் றொமேறோவின் வழியில் ....**

அடிகளார் எப்போதும் ஆஸ்கார் றொமேறோ எனும் ஆயர் அவர்களை மேற்கோள் காட்டி அவர் கூறுவதையே பின்வருமாறு கூறுகிறார். 'எதுவும் எம் சிந்தனைப்படியல்ல' எனும் பொருளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நமது எந்தவொரு செபமும் இறைவன் மீதான பற்றுறுதியை முழுமையாகப் பறைசாற்றுவதில்லை.
- எந்தவொரு அறிக்கையிடலும் எல்லாவற்றையும் சொல்வதில்லை.
- எந்தவொரு திருயாத்திரையும் எமக்கு நிறை மனமகிழ்வைக் கொண்டு வருவதில்லை.

நம்வாழ்வும் வரலாறும் இப்படியே: என்றும் வித்திடுவோம்: ஓர் நாள் அது வளர்வதற்காக நீர் இறைப்போம்: ஓர் நாள் அது கனிதரவில்லையெனினும் அவை எதிர்காலத்து உத்தரவாதங்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றதனால் அடிக்கல் நாட்டுகின்றோம்: மென்மேலும் வளர்ச்சிபெற புளிகாரம் இடுவோம்: நம் முனைப்புக்களைக் கடந்த பலன்களைப் பெற அனைத்தையும் செய்ய இயலாது நம்மால். எனினும் இதுவே நமக்குத் தரும் ஒரு விடுதலை உணர்வை. ஆகவே செய்வோம் செய்ய வேண்டியதை. மிக அருமையாகச் செய்வது நிறைவற்றதாக இருக்கலாம். ஆனால் நமது இலக்கின் பாதையில் அது முதல் முயற்சியாக அமையட்டும்.

இறையருள் மற்றவற்றைத் தொடர்ந்து செய்யட்டும்: இறுதி முடிவுகளை நாம் காண வாய்ப்பில்லை. ஆயினும் அதுவே தலைவருக்கும் - தொழிலாளருக்கும் உள்ள வேற்றுமை. பணியாளர்கள் நாம்; பகவான்கள் அல்ல, பட்டாளிகள் நாம்; முதலானவரல்ல. நாளைய தினங்களுக்கான இன்றைய இறைவாக்கினர் நான் அந்நாளைய தினங்களும் கூட நமதல்ல என்பது போல அடிகளார் தன் பகட்டு இல்லாத வாழ்வினால் பகிரங்கப்படுத்தப்படாது தீப ஞானமாகவே வாழ்ந்தார்.

**1990** முதல் **1993** வரை நாவாந்துறை பங்குத்தந்தையாகப் பணிபுரிந்ததுடன் மேலும் **1993 - 1997** வரையான காலப்பகுதியில் சாவகச்சேரி பங்குத்தந்தையாகவும் பணிபுரிந்தார். **1998 - 1999** விவிலிய ஆய்வுக்காக மணிலா, பிலிப்பைன்ஸ் சென்று ஆய்வை மேற்கொண்டார். மீண்டும் இலங்கை திரும்பி **1999 - 2009**ம் ஆண்டு காலப்பகுதியில் இடைநேர மறையுரைஞராக கொழும்புத்துறை அமல உற்பவ நிலையத்தில் பணிபுரிந்தார்.

**திருமுக ஆண்டவர் வழிபாடும் தூய இராயப்பர் ஆலயம் தோற்றம் பெறலும்**

அருட்பணியாளர் பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி அடிகளார் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த போது இரட்சகராம் இயேசுக்கிறிஸ்துவின் இறுதி நாளின் திருப்பாடுகளின் போது அவரது முகத்தில் வழிந்த மரண வியர்வையும் துயரும் துன்பமும் நிறைந்த தூய இரத்தம் தோய்ந்த முகமும் அடங்கிய முகவுருவப் படம் தூய வளனார் ஆலயத்தில் நிறுவப்பட்டு வழிபாடும் நடைபெற ஒழுங்கு செய்தார். அதனை வழிபட்டு வந்தவர்கள் தமது துன்பங்கள், துயரங்கள், பிணிகள் நீங்கி வருவதாக திடமாக நம்பி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே திருமுக ஆண்டவர் சிலை கொண்டுவரப்பட்டு மந்துவில் திருமுக ஆண்டவர் ஆலயம் அமைக்கப்பட்டு இன்று மக்கள் அவரது அருளும் ஆசியும் பெற்று வருகின்றனர் என்கிறார் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரி யசிந்தா யேசுதாசன் அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய இராயப்பர் ஆலயம் விசுவமடு இறெட்டபானா பகுதியில், முல்லைத்தீவு பரந்தன் வீதியில் பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரால் அமைக்கப்பட்டு இன்று வரை அவ்வாலயத்தில் வழிபாடுகளும் ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றதை அறிய முடிகின்றது. அதனை முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் ஓய்வு நிலை ஆசிரியையுமான திருமதி மேரி கமலா குணசீலன் அவர்களும் அவருடனான நேர்காணலின் போது உறுதி செய்திருக்கின்றார்.

**யாழ்ப்பாண இடப்பெயர்வும் அடிகளாரும்**

கடந்த கால யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது கச்சாய் பகுதியில் பங்குத் தந்தையாக இவ்வடிகள் இருந்த போது அவ்வாலயத்தினையும் அவ்வாலய வளாகத்தினையும் சமய சமூக பிரதேச வேறுபாடின்றி அனைத்து இடம்பெயர்ந்த மக்களையும் அரவணைத்து அவர்களுக்கு புகலிடமாக வழங்கி வாழ வழி சமைத்தார்.

**மரணம் வாழ்வின் முடிவல்ல..**

அடிகளார் யாழ் கண்டி வீதியில் நெடுங்குளம் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக சுமார் 100 மீற்றர் தொலைவில் சுமார் 6 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி ஒன்றினை அவரது மூத்த சகோதரரான பெஞ்சமின் அவர்களது பிள்ளைகளின் உதவியுடன் கொள்வனவு செய்தார். இன்றும் அப்பிரதேசத்தில் 'ஞானதீபம்' என்னும் பெயரில் முன்பள்ளி, சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் மற்றும் கத்தோலிக்க மதம் சார்ந்த பல துறை நிகழ்வுகள் கருத்தரங்குகள் மற்றும் தொழிற்பயிற்சிகள் என்பன நடைபெற்று வருவது முக்கிய விடயமாகும். இது அவர் மரணத்தின் பின்னும் தனது சேவையால் வாழ்ந்து வருவதனை இன்றும் குறித்து நிற்கின்றது. அடிகளாரின் மரணம் அது அவரின் வாழ்வின் முடிவல்ல.

அடிகளார் இறுதிவரை தனது சொந்தப் பங்கான நெடுந்தீவு புனித யாகப்பர் ஆலய வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றிய ஒரு ஆன்மீகக் குருவாகத் திகழ்ந்ததுடன் ஆலயத்திற்கான ஒலிபெருக்கி சாதனங்கள், ஆர்மோனியம், ஜெனரேற்றர் (மின்பிறப்பாக்கி), முதியவர்களுக்கான நீள வாங்கு இருக்கைகள், பீட நற்கருணைப் பவனிக்கான ஆடைகள், பீடப் பணியாளருக்கான ஆடைகள் என்பவற்றை அன்பளிப்பு செய்ததுடன் புனித யாகப்பர் ஆலயத்தில் காணப்படும் முதல் குருமனை அறைவீட்டில் தனது இறுதிக்காலம் நிறைவுபெற வேண்டுமென விருப்பம் கொண்டிருந்தார்.

**கச்சதீவு பற்றி ....**

அடிகளாரின் கச்சதீவு பற்றி "கச்சதீவு அன்றும் இன்றும் (1700 - 2002) ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் எனும் 06 பக்கங்கள் கொண்ட சிறுபிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அதில் கச்சதீவு திருவிழாவை விவசாயப் பின்னணியில் யூத மக்களின் அறுவடைத் திருவிழாவையும் கூடாரத் திருவிழாவையும் ஒத்திருப்பதாக சுட்டிக் காட்டுகிறார்.

**மாயவாதம் மற்றும் தெய்வ அநுபூதி நிலை பற்றி**

அவரது இறுதி ஒய்வுக்காலத்தில் மாயா வாதம் பற்றியும் தெய்வ அனுபூதி நிலையில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ வழிமுறைகளில் ஒற்றுமையும் வேற்றுமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கருப்பொருளில் ஒப்புநோக்கு ஆய்வினை மேற்கொண்டு ஓர் ஆய்வு நூலை எழுதிக் கொண்டிருந்ததாகவும் ஆனால் அது முற்றுப்பெறவில்லை எனவும் எனவே அது இதுவரை வெளிவரவில்லை எனவும் அறியமுடிகின்றது.

அடிகளார் சிறந்த சமயப்பிரச்சாரகராகவும் சொற்பொழிவாளராகவும் விளங்கியதுடன் ஆலய நவநாள் கொடியேற்றம் மற்றும் திருவிழாக்களில் மக்கள் குடித்துவிட்டு சச்சரவுகளில் ஈடுபடுவதனை கருத்தில் கொண்டு நகைச்சுவையாகவும் அதேவேளை சிந்திக்கத்தூண்டுவதாகவும் அதன் பின்பு திருந்தி நடக்கும் பொருட்டு தமது பிரசங்க உத்திகளில் கொடி, குடி, அடி, தடி, மடி என எதுகை மோனைகளுடன் பிரசங்கம் செய்வது பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரின் உத்திகளில் ஒன்றென அவரது இறுதி அஞ்சலி உரையில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

**நிறைவாக...**

அருட்பணி பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் பணிகள், மறைஞானபோதகர், சிறந்தபேச்சாளர் சிந்தனையைச் சீர்தூக்கும் செம்மல், இவற்றிற்கு மேலாக இறைபணியை மனித நேயத்துடனும் கண்ணியமாக ஆற்றி 2009ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி இவ்வுலக வாழ்வில் இருந்து விடைபெற்றார். தீபஞானம் தன் பகட்டு இல்லாத வாழ்வினால் பகிரங்கப்படுத்தப்படாது அமைதியாக வாழ்ந்த அடிகளாரது பணியினை இலங்கை கத்தோலிக்க திருச்சபையும், கத்தோலிக்க மக்களும் என்றுமே மறப்பதிற்கில்லை.

**உசாத்துணைநூல்கள்:**


1. OUR TRIBUTE. A. SUPPLEMENT (1999 - 2009)
   (SR PRINTERS, 281, DEANS ROAD, COLOMBO - 10 17, FEBRUARY - 2010
2. அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரின் குருத்தவ வெள்ளிவிழா மலர், புனித கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். 1997
3. கச்சதீவு அன்றும் இன்றும் (ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் (1700 - 2002) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் - அ.ம.தி 2002
4. "சிந்தனைத்திரட்டு" , (1972) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி
5. "அமைதித்துளி" (1977) அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி
6. ஆழ்கடல் முத்துக்கள் (1979) அற்புத மரியநாயகி ஆலயம், பெரியதெரு, நீர்கொழும்பு, அருட்திரு தீபஞானம் அ.ம.தி
7. "இறைஞான ஈர்ப்புக்கள்" (1996) புனித வளன் கத்தோலிக்க அச்சகம் - யாழ்ப்பாணம் அருட்திருபற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி
8. சுயவிபரக்குறிப்பு (சுருக்க கையெழுத்துப்பிரதி 2009, அருட்திருபற்றிக்ஞானப்பிரகாசம் அ.ம.தி)


**நேர்காணல்:-**

**திருமதி. மேரி ஆன் டேவிட் தங்கராசா**

**இல. 18, மடம் வீதி, யாழ்ப்பாணம்.**

**திருமதி. மேரி யசிந்தா யேசுதாசன்**

**குழந்தை இயேசு வீதி, புதுக்குடியிருப்பு 08.**

**திருமதி. மேரி கமலா குணசீலன்**

**குழந்தை இயேசு வீதி, புதுக்குடியிருப்பு 08.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "அறிவுத் திருக்கோயிலில் ஓர் அகல்விளக்கு"

(அமரர்.திருமதி.இராக்கினியம்மா பாக்கியநாதன் நினைவாக)

**திருமதி.நிருபா காசிநாதன் M.A**

**கலாசார உத்தியோகத்தர்,**

**பூநகரி.**

**அறிமுகம்**



பூநகரிப் பிரதேசமானது தொன்மையான வரலாற்றைத் தன்னகத்தே கொண்டிருப்பதனைப் போலவே பண்டைக்காலம் தொட்டே கலை மரபுகளுக்கும் புகழ் வாய்ந்ததாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் பூநகரிப் பிரதேசத்தின் கலைஞர்களையும் அவர்களின் கலைப் பணிகளையும் ஆவணப்படுத்தும் நோக்கில், இக்கிராமத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, கல்விப் பணியுடன், கலைப்பணியும் மேற்கொண்டு சுமார் 37 வருடங்களுக்கும் மேலாகப் பின்தங்கிய கிராம மக்களுக்கும் அப்பகுதி மாணவர்கட்கும் தன்னால் முடிந்த வரை சேவையாற்றி, தனது உறவினர் அல்லது சமூகத்தினர் அக்கிராமத்தில் வாழ்ந்திராத போதிலும் தமக்கு ஓர் வசிப்பிடத்தைக்கூட அக்கிராமத்தில் சொந்தமாக்கிக் கொள்ளாது, ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் கல்வியை மேம்படுத்த வேண்டுமெனும் உயரிய குறிக்கோளுடன், பணியாற்றி அமரத்துவம் அடைந்த, நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி இராக்கினியம்மா பாக்கியநாதன் அவர்களை இனம்காணக்கூடியதாக இருந்தது. இவர் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றலாகிச் சென்றால் பணியிலும், பதவியிலும் பல வரப்பிரசாதங்களைப் பெற்று, தன்னையும் தனது பொருளாதார வசதிகளையும் மேம்படுத்த முடியும் என அறிந்திருந்தும்கூட, அவற்றைத் தவிர்த்து அம்மக்களுக்கே அரும்பணி ஆற்றியுள்ளார். 'மறப்போம் மன்னிப்போம்' எனும் உளவியல் பண்பாட்டுச் சூழமைவில் வளர்ந்து வரும் நாம் இத் தன்னலமற்ற பணியாளரையும் மறந்துவிடக்கூடாது எனக் கருதியும், அவரது தனித்துவமான பணியின் மகத்துவம் கருதியும் அறிவுத் திருக்கோயிலின் அகல்விளக்காகத் திகழ்ந்த அன்னாரது வாழ்வும் பணியும் குறித்த பதிவினை ஆவணப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வும் வரலாறும்**

திருமதி.பாக்கியநாதன் இராக்கினியம்மா அவர்கள் நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். இவர் சந்தியாகு தொம்மாசி தம்பதிகளின் இரண்டாவது குழந்தையாக 1933.01.10ம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யுவானியார் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்று வந்தபோது, இவரது தாயார் காலமானார். இதனால் இவரும் இவரது சகோதரர்களும் பெரிய தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தனர். இவ்வாறு தனது சிறுவயதில் தாயாரை இழந்த போதிலும் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து உயர்கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்றுத் தேர்ந்தார்.

**வலைப்பாடு கிராமம் பற்றி......**

பூநகரிப் பகுதியில் மிகவும் பின்தங்கிய ஓர் கிராமமாக அன்று வலைப்பாடு காணப்பட்டது. இங்கு அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னரும் சரி பின்னரும் சரி காலத்திற்குக் காலம் வெளி மாவட்டங்களில் இருந்தும், தூரப் பிரதேசங்களில் இருந்தும் பல கல்விப் பணியாளர்கள் இம்மாவட்டத்திற்கு சேவையாற்ற வந்து சென்றாலும், இக் கிராமத்தில் கல்விப் பணியாற்ற விருப்பம் இன்றியே இருந்தனர். அவ்வாறு நியமனம் கிடைத்தாலும் வேறு இடங்களுக்கு உடனடியாகவே இடமாற்றம் பெற்றுச் சென்று விடுவதே வரலாறாகவும் இருந்து வந்துள்ளது.

**நெடுந்தீவிலிருந்து வலைப்பாட்டுக்கு....**

மேற்குறிப்பிட்ட கஷ்டங்களையும், வசதியீனங்களையும் பொருட்படுத்தாது, துணிச்சலுடன் 01.08.1956ம் ஆண்டு வலைப்பாடு றோ.க.பாடசாலையில் முதலாவது பெண் ஆசிரியராக செல்வி இராக்கினியம்மா கடமை ஏற்றார். இவரது ஊரான நெடுந்தீவும், வலைப்பாடும் கடலால் பிரிக்கப்பட்டுள்ளதுடன் மிக நீண்ட தொலைவிலும் அமைந்துள்ளன. மேலும் அரச அல்லது தனியார் கடல்வழிப் போக்குவரத்தும் இங்கு இடம் பெறுவதில்லை. இந்நிலையில் இவரது தந்தை 'மரியபுரவி' என்னும் படகு (வத்தை) வைத்திருந்தார். அதனால் தந்தையுடன் கடல் மார்க்கமாக பாடசாலக்கு வரமுடிந்தது. இதனால் இவரது பாடசாலைக்கான போக்குவரத்து இலகுவாகியது. எனவே பாடசாலையின் வேலை நேரம் முழுவதும் தனது கடமையைச் செய்வதில் முழுக்கவனத்தைச் செலுத்தினார். ஏனைய பாடசாலைகளுக்கு வெளியிடத்திலிருந்து வரும் ஆசிரியர்கள், திங்கட்கிழமை காலை 10 மணிக்குப் பின்னர் பாடசாலைக்கு வருகைதந்து, வெள்ளிக்கிழமை மதியத்திற்குப் முன்னர் வீட்டிற்கு பயணமாகும் காலத்தில், இவரது சேவையானது பெறுமதி மிக்கதாகும்.

**ஆசிரியையாக தமது சேவையில்.....**

இவர் இங்கு கடமை ஏற்றபோது இப் பாடசாலையானது, சிறிய கட்டிடத்தில் சுமார் 57 மாணவர்களுடன் ஆரம்பப் பாடசாலையாக இருந்தது. இங்கு நெடுந்தீவைச் சேர்ந்த திரு.சி.ஜேம்ஸ் அவர்கள் அதிபராக கடமையில் இருந்தார். இவ்வேளையில் மாணவர்களிடம் கொப்பி, பென்சில், எழுது பலகை (சிலேற்) எதுவும் இருக்கவில்லை. இதனால் நிலத்தில் மணல் பரப்பி, மாணவர்களது கைவிரலைப் பிடித்து, எழுத்துப் பயிற்சி அளித்ததோடு, தனது கற்பித்தற் செயற்பாடுகளில் ஈடுபட்டார். (வலைப்பாடு கிராமத்தின் றோ.க பாடசாலையானது 1919 ம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டதாகும் என்பதுடன் கடந்த 2019 ம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவையும் நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.) இக்காலப் பகுதியில் புனித அன்னம்மாள் ஆலய பங்குத் தந்தையாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி மோறோ அடிகளார் இறைபணியாற்றினார். அப்போது புனித அன்னம்மாள் ஆலயம் சிறு கொட்டகையாக புளியமரத்தின் அருகாக இருந்தது. ஆலயமும் பாடசாலையும் அருகருகாக அமைந்திருந்தமையால் இப் பாடசாலைக்கான காலை இறை வணக்கத்தை ஆலயத்திலேயே நடாத்தியபின், மாணவர்களை வரிசைப்படுத்திப் பாடசாலைக்கு அழைத்துவந்து, கற்றற் செயற்பாடுகளைத் தொடர்வது இவரது வழமையான செயற்பாடாக இருந்தது.

#### விளையாட்டுடன் கற்பித்தல் சேவை

பாடசாலையின் இடை வேளையின் போது கிளித்தட்டு மறித்தல், வட்டத்தில் பிடித்தல், எண் சொல்லுதல், கண் பொத்துதல் போன்ற விளையாட்டுக்களைச் சிறுவர்களுடன் சேர்ந்து தானும் விளையாடி, பல விளையாட்டு நுட்பங்களையும், விழுமியங்களையும் மாணவர் கற்றுக்கொள்ள வழிப்படுத்தினார். இவ்வாறு செயற்பட்டு வரும்போது 1961 - 1963 வரை ஆசிரியர் பயிற்சி நெறியை கொழும்புத்துறை புனித சூசையப்பர் கல்லூரியில் அமரர் மேதகு வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் பயின்று, பயிற்சியை நிறைவு செய்தார்.

இவர் மீளவும் வலைப்பாடு றோ.க. பாடசாலையிலேயே கடமை ஏற்று பணியாற்றிக் கொண்டிருந்த போது, கனியூட் என்பவர் யாழ் அக்கடமி கல்லூரியில் நடன ஆசிரியராக கடமை ஆற்றினார். அவரை இங்கு வரவழைத்து மாணவர்களுக்கு நடனம், நாட்டிய நாடகம், பரத நாட்டியம் போன்ற கலைகளைப் பயிற்றுவித்தார். இதன் மூலம் இங்குள்ள மாணவர்களிடம் கலைகள் மீதான ஆர்வமும், எழுச்சியும் ஏற்பட்டது. அதன் தாக்கம் இன்றும் மக்களிடம் துலங்குவதை அவதானிக்க முடிகின்றது.

#### நடனக்கலைஞர் கனியுட் அவர்களும் நடனப் பயிற்சியும்

இவ்விடத்தில் நடனக் கலைஞர் திரு அடைக்கலம் கன்யூட் அவர்களைப்பற்றிப் பொருத்தம் கருதிப் பதிவிடுகின்றேன். இலங்கையில பிரபல்யம் வாய்ந்த கலைஞரின் ஆற்றுகையை, ஒரு குக்கிராமத்துச் சிறார்களுக்குக் கிடைக்க வழிவகுத்த இவரது செயற்பாடானது அக்காலத்தில் மிகவும் பெறுமதிவாய்ந்த செயலாகும். இவ் நடனக் கலைஞர், இராக்கினியம்மாவின் சகோதர உறவு முறையானவர். இவருடன் கலைஞர் வேலானந்தன், கந்தையா பராசக்தி ஆகியவர்களும் சக மாணவர்களாகக் கல்வி கற்றதுடன், இவரது நடனப் புலமை காரணமாக, இவருக்கு மட்டுமே தென்னிந்தியா சென்று நடனம் பயில சந்தர்ப்பமும் கிட்டியது. எனினும் இவரது குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக, வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். எனினும் தனது திறமையை வளர்த்து தேர்ந்த கலைஞரானார். பரத நாட்டியம், நாட்டிய நாடகம் என்பவற்றில் கனியூட், பராசக்தி ஆகியோரின் இணைக்கு நிகரில்லை என்ற வகையில், நடன ரசிகர்களாலும், நடன வித்தகர்களாலும் இவர்கள் பாராட்டப்பட்டு வந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயப் பணியில்...**

மேலும் இராக்கினியம்மா அவர்கள் ஆலயத் திருப்பலிகளின் போது செபவழிபாடு, நற்செய்தி வாசகம் வாசித்தல் ஆகியவற்றுக்குத் தம் மாணவர்களை நெறிப்படுத்தினார். ஆலயப் பணிக்களுக்காக 'மரியாளின் சேனை' என்னும் அமைப்பை உருவாக்கினார். இக் குழுவினரே பல்வேறு பங்குகளுக்கும் சென்று சமயப் பணியாற்றியது.

**இல்லறம் எனும் நல்லறத்தில்**

கொழும்பு தினபதி பத்திரிகையின் அச்சகத்தில் பணியாற்றிய, இளவாலையைச் சேர்ந்த செலஸ்ரீன் பாக்கியநாதன் என்பவரை, 1972.11.29ம் நாள் அன்று வட்டக்கச்சி புனித சூசையப்பர் தேவாலயத்தில் கரம்பிடித்து, இல்லற வாழ்வில் இணைந்தார். இவருக்கு ஜஸ்மின், ஜெயபாலன் ஆகிய இரு பிள்ளைகள் உள்ளனர்.

**பாடசாலை மண்டபம் அமைத்தல்**

1974ம் ஆண்டு பாடசாலைக்கு 80க்கு 20 அடி அளவைக் கொண்ட மேடையுடனான மண்டபம் இவரது அயரா முயற்சியால் அமைக்கப்பட்டது. இது அன்றைய கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திருவாளர் வீ.ஆனந்தசங்கரி அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலமே சாத்தியமாகியது.

**அதிபராக.....**

1983ல் கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 03 அதிபர் பரீட்சையில் சித்திபெற்று, இப்பாடசாலையின் அதிபராக கடமையேற்றார். 1988ல் கிளிநொச்சி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட 40 தொண்டராசிரியர்களில் 3 பேர் இப்பாடசாலைக்கு நியமனம் பெற்ற போதிலும், நன்னீர் இன்மை, போக்குவரத்து இன்மை, தங்குமிடவசதி இன்மை, பெண்களுக்கு பாதுகாப்பு இன்மை என்ற காரணங்களால் அந்த மூன்று பெண் ஆசிரியர்களும் வேறுபாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முயற்சித்தனர்.

இவ்வாறு கடமை ஏற்கத் தயங்கிய புனிதாம்பிகை, இராசேஸ்வரி, நகுலாம்பிகை ஆகிய மூவருடனும் அதிபர் என்ற முறையிலும் தானும் ஒரு பெண் என்ற வகையிலும் அவர்களை அணுகி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைத் தான் செய்து தருவதாக உறுதி அளித்து, பாடசாலையில் கடமையேற்கவைத்து, கற்பித்தல் கடமைகளில் ஈடுபடுத்திய ஆளுமைமிக்க அதிபராகவும் திகழ்ந்தார்.

இவர் மாணவர்களிடம் சுத்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சளைக்காது ஈடுபட்டுவந்தார். மாணவர்கள் கல்வியை ஆர்வமுடன் கற்பதற்குச் சூழல் மிக அவசியமானது என்பதால் மாணவர்கள் குளித்துச் சுத்தமான உடை அணிவதோடு, வகுப்பு அறையையும் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் விளங்கவைத்து, அவற்றை நடைமுறைப் படுத்துவதில் மிகக் கண்டிப்பாக இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் சாதனங்கள், வசதிகள் இல்லாத போதிலும் தனது திறமையையும் விடாமுயற்சியையும் நம்பித் தரமான கல்வியை மாணவர்களுக்கு நல்கியதோடு, இடைவிடாத கற்றலில் தானும் ஈடுபட்டு வந்துள்ளார். தமது பணிக்காலத்தில் இரண்டு முறை அதிபர் போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைவதற்குக் காரணமாகக் 'கற்றலுக்காகக் கற்றல், வாழ்வதற்காகக் கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்றல் ' எனும் நவீன கல்விக் கோட்பாட்டை இராக்கினியம்மா அன்றே கடைப்பிடித்தமையே காரணமாகும். இதற்கு அடித்தளம் கண்டவர்கள் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை ஆசான்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?.

அதிபர் தரம் 02 க்கான போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று, 1992ம் வருடம் பதவி உயர்வு பெற்றார். இப்பதவி உயர்வின் மூலம் நகரத்திலுள்ள பெரிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற சந்தர்ப்பம் இருந்த போதிலும், ஓய்வு பெறும்வரை இப்பாடசாலையிலேயே கடமையாற்றி 1993.01.10ம் திகதி ஓய்வுபெற்றார்.

**இவரிடம் கற்ற மாணவர்கள்**

இவரிடம் கற்ற மாணவர்கள் கத்தோலிக்க அருட் பணியாளர்களாக, அருட் சகோதரிகளாக, உப அதி அதிபராக, ஆசிரியர்களாக, அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் அலுவலர்களாக, பட்டதாரிகளாக, வர்த்தகர்களாக சேவையாற்றி வருகின்றனர்.

**இறுதிக்காலம்**

இவர் தனது 23 வயது முதல் ஓய்வு பெறும்வரை இப்பாடசாலையிலேயே கடமையாற்றியமையால் சிறியோர் முதல் பெரியோர்கள்வரை 'ரீச்சர் அக்கா' என அன்புடன் அழைத்துவந்தனர். மக்கள், பணிவுடனும் மதிப்புடனும் மரியாதை செலுத்தியதால், அங்கேயே மக்களுடன் இருக்கத் தீர்மானித்தார். தான் இறந்தபினர் தனது உடலை சொந்த இடமான நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லாது, இங்கேயே அடக்கம் செய்யுமாறு தனது பிள்ளைகளிடம் தனது இறுதி விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். இவர் 82 வது வயதில் 2015ம் ஆண்டு 02ம் மாதம் 11ம் திகதி விண்ணகம் சென்றார். இவரது விருப்புப்படி, இம்மண்ணிலேயே இவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரது இறுதி அஞ்சலி நிகழ்வில், இம்மண்ணின் மைந்தன் ஒருவரின் அஞாசலிக் கவிதையின், ஒரு சில வரிகள் பின்வருமாறு அமைந்திருந்தது.

"திறந்த மனம் நிறைந்த குணம்
தெளிந்த மொழி சிறந்த நடை
ஒழுக்க நெறி நிறைந்த நீதான்
இறந்தனை என்று உணர்ந்திலம் எனினும்
உன்சோகம் எம்முள்ளே நிறைந்ததம்மா!
மறந்தெங்கண் ஆற்றிடுவோம் - நின் பிரிவை இராக்கினி அம்மா! - நாமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்திடுவோம் உன் பணியை
நின் நினைவாக..............." இப்படி நீண்டு செல்கின்றது.
இது புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையின் கவிதையை அடியொற்றியதாகக் காணப்படுகின்றது.

நிறைவாக - வலைப்பாடு றோ.க பாடசாலையானது ஆரம்பித்து 37வது வருடத்தில் சேவையாற்ற வந்த இராக்கினியம்மா அவர்கள் தொடர்ந்து 37 வருடங்கள் அப்பாடசாலையில் சேவையாற்றியிருந்தார். இவ்வாறாக கல்விப் பணியால் சிறந்த ஆசிரியராக, அதிபராக, சமய ஒழுக்க விழுமியங்களையும், இறை பக்தியையும் தம் மாணவர் சமுதாயத்திற்கும் சுற்றியுள்ள மக்களுக்கும் விதைத்து, அதன் பயனை அடைய வழி காட்டியவராக, கலை உலகையும் கலை ஆர்வத்தையும் இப் பிரதேசத்தில் வளர்தெடுத்தவராக, பன்முக வகிபாகம் கொண்ட இவரின் நீண்ட காலப்பணிகளை வார்த்தைகளினால் பூரணப்படுதிவிட முடியாது.

பின்தங்கிய பிரதேச மாணவர்கள் கலை வளத்துடன் அறிவுசார் தேடல்களுடனும் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் எனச் சிந்தித்துச் செயற்பட்டு, தமது ஆயுள் முழுவதும் அயராது உழைத்த, அவரது சிந்தனைகளையும் பணிகளையும் தொடர்ந்து, நாமும் முன்னெடுப்பதே, நாம் அவருக்குச் செய்யும் உயர்ந்த அஞ்சலியும் மரியாதையுமாகும்.

**உசாத்துணை நூல்கள்:**


01. தூய அன்னாள் ஆலய திறப்புவிழா சிறப்பு மலர் வலைப்பாடு (26.07.2013)
2. திருமதி இராக்கினியம்மா பாக்கியநாதர் 31ம்நாள் நினைவு குறிப்பு.
3. நௌ - கிளி/ வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா சிறப்புமலர் (2015)
4. நௌ - 2 கிளி/ வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்புமலர் (1919 - 2019)


**நேர்காணல்கள்:**

1. திரு.செல்லப்பா குழந்தைவேலு - சமூக ஆர்வலர். வேரவில்.
2. திருமதி.தோமஸ் மரியகன்னி - கலைஞர், வலைப்பாடு.
3. திரு.அ. றெக்ஸ்குமார் - வர்த்தகர்,வேரவில்.
4. திரு.S.அந்தோனிப்பிள்ளை - ஓய்வுநிலை வர்த்தகர், கிராஞ்சி
5. திருமதி. மதுரநாயகம் கிளமன்ற்ரீனா - உப அதிபர், கிளி. வலைப்பாடு றோ.க.த. பாடசாலை
6. திருமதி. நிர்மல றொபின்சன் செபஸ்ரீனா - ஆசிரியர், கிளி. வேரவில் இந்து மகாவித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னி மண்ணின் புகழ்பாடும் கவிஞர் வன்னியூர்க்கவிராயர்

**பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
ஆங்கிலமொழிக்கற்பித்தல் துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

எஸ்.எல்.சவுந்தரநாயகம் என்னும் இயற்பெயர் கொண்ட வன்னியூர்க் கவிராயர் 29.01.1978 இல் இவ்வுலக வாழ்வை நீத்துச்சென்றார். கவிராயர் 24.01.1978 இல் கிளிநொச்சியில் நிகழ்ந்த பொங்கல் விழா கவியரங்குக்கு தலைமை தாங்கிப் பாடிய பாடல்களே இறுதி இலக்கிய நிகழ்வாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக 1973 இல் வவுனியா திறந்தவெளி அரங்கிலே நண்பர் முத்து சிவலிங்கம், பூநகர் மரியதாஸ், சரவணையூர் சுகந்தன் ஆகியோருடன் இணைந்து கவியரங்கு நிகழ்வுக்கு தலைமை தாங்கியமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வன்னியூர்க் கவிராயர் வவுனியா மாவட்டத்தின் வெங்கலசெட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயற்கைவளம் கூடிய இலுப்பைக்குளம் கிழக்கில் 04.04.1921 இல் பிறந்தவர். மன்னார் கூத்துப் பரம்பரையிலிருந்து சிறப்புப்பெற்ற இவரின் தந்தையார் சந்தியோகுப்பிள்ளை இலுப்பைக்கடவை நேரியகுளம் பிரதேசத்தில் மணமுடித்து வாழ்வை வரித்துக்கொண்டமையினால் வன்னியூர்க்கவிராயரின் பூர்வீகம் என இப்பிரதேசம் சிறப்புப் பெறுகிறது.

**இயற்கை வளப்புடன் கூடிய வாழ்வு**

குளங்களும் வயல்களும் நிறைந்த மருத நிலச்சூழல் ஒரு புறமும், அடர்ந்த காடுகள் சூழ்ந்த முல்லை நிலச்சூழல் மறுபுறமுமாக அமைந்த வன்னி நிலப்பரப்பு கடற்கரையோரங்களில் நெய்தல் நிலப்பரப்பாக பரந்து விரிந்த அழகிய இயற்கை வளப்போடு கூடிய பிரதேசம் ஆகும். இயற்கையோடு ஒட்டிய வாழ்வும், அதன் கஷ்ட நஷ்டங்களை எதிர்த்துப் போராடி வாழ்வை எதிர்கொள்ளும் மனோதிடமும் கொண்ட மனிதர்களைப் பெற்ற வன்னி மண்ணின் மனிதவளமும் மங்காப் புகழ்பெற்றவை.

பூர்வீகமாக வாழ்ந்து வரும் மக்களின் குடியிருப்புகளோடு தமிழ் நாட்டில் இருந்து வந்த படைகளின் வன்னிமைகளின் குடியேற்றத்துடன் வன்னி வள நாடு எனப் பெயர் பெற்ற இப்பூமி தேனும் பாலும், செந்நெல்லும், கிழங்கும் தானியங்களும் என வளம் பொருந்திய பிரதேசமாக பண்டாரவன்னியன் எனும் பெயர் பெற்ற வன்னி வளநாட்டின் பெருமையைக் கட்டிக்காத்த மறவனின் வீரத்துடன் வீரம் செறிந்த நிலமாக பல பெருமைகளை சிறப்புக்களை கொண்டதிந்தப்பூமி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி வளநாட்டின் இலக்கிய முன்னோடி**

காலனித்துவ ஆட்சிக்குப் பின் இலங்கை சுதந்திரமடைந்ததோடு புதிய குடியேற்றத்திட்டங்கள் வன்னிப் பிரதேசத்தை புதிய அபிவிருத்திப் போக்கில் இட்டுச் சென்றது. இம்மண்ணின் புகழ் பாடும் கவிஞர்களாக, எழுத்தாளர்களாக சிறப்புப் பெறுபவர்களில் முன்னோடியாக திகழ்பவர் அமரர் எஸ்.எல். சவுந்தரநாயகம். மற்றையவர்களில் 70 களில் பெயர் பெற்று விளங்கிய எழுத்தாளர்கள் பண்டார வன்னியன் நாடகத்தை எழுதி பெயர் பெற்ற முல்லைமணி எனும் வே. சுப்பிரமணியம். கிளிநொச்சி, பரந்தன், பிரதேச எழுத்தாளர் தாமரைச்செல்வி, பம்பைமடுவில் பிறந்து வன்னியின் புகழ் பாடும் கவிஞர் அகளங்கன் ஆகியோர் குறிப்பிட்டளவு பணியாற்றியுள்ளார்கள்.

1953 இல், எழுத்துலகில் பிரவேசித்த சவுந்தரநாயகம், வன்னியூர்நாயகம். மனோகரி, எஸ்.எல்.எஸ், பாவேந்தர், வன்னியூர்க்கவிராயர் எனப் பல புனை பெயர்களாலும் சிறுகதை, கவிதை, உருவகக்கதை, கட்டுரை என்பவற்றை எழுதிப்புகழ் பெற்றார். வவுனியா நகரில் இருந்து 30 - 50 கிலோமீற்றர் தூரத்தில் பிரதான பாதையிலிருந்தும் மாட்டுவண்டி மூலமே பயணம் பண்ணிய அந்த 50 - 70 காலங்களில் நாடளாவிய ரீதியில் வெளிவரும் பத்திரிகைகளில் எழுதியதோடு மட்டுமல்லாமல் பல்வேறு கவியரங்குகளிலும் மேடை ஏறிப் பாடியுள்ளார்.

**பரந்த உள்ளம் கொண்ட சிந்தனைகள்**

"தாய் வயிற்றில் தவ நிலையிலிருந்து துள்ளித்
தான் குதிக்க ஏந்தித் தாலாட்டும் மண்ணே
சேயாகிச் சிரித்து விளையாடித் தின்ற
அமுத மண்ணே இனித்த மண்ணே"
என தமது மண்ணை ஏற்றிப் போற்றுகிறார் இனிய கவிஞர்.

"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று
எல்லோரும் இன்றும் என்றும் வாழ்ந்திட
'நான்' - நாம் ஆகச் செய் சிந்தனையை
எனப் பரந்த உள்ளம் கொண்ட சிந்தனைகள் கவிஞரின் கவிதைகளில் எதிரொலித்தன. ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும் சமய சமரசம் கொள்வதில் சிறப்புக்கொண்ட கவிராயர் பாரதிபோல பலவற்றைக் கேட்டும் அவற்றில் உச்சநிலையாக தமிழன் வாழ்வு பற்றி கோரிக்கை விடுக்கின்றார்.

"என்கவிதை நீடுழி வாழவேண்டும்
எனது புகழ் மலைவிளக்காய் இலங்க வேண்டும்.
பொன்வேண்டும், பொருள்வேண்டும், பூமி வேண்டும்
பூவை தெய்வானை - வள்ளி சகிதம் நின்னை
கண்கள் சிந்தை பூரிக்கக் காணவேண்டும்
காயத்திற் பிணி மூப்புச் சாக்காடற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றாத எழிலிளமை வேண்டும் இந்தக்
குவலயத்தில் பிறப்புடனே முத்தி வேண்டும்
இன்னவைகள் கேட்கின்றேன், சம்பிரதாயம்
இவைகளை நீ தந்தாலும் தராவிட்டாலும்
உன்னிடத்தில் யான் கேட்பதொன்றேயொன்று
உடல் பொருள் ஆவி ஆத்மாவில் மேலாம் என்
அன்னைமொழி இனியமொழி தமிழ் ஈழத்தில்
அரியணையில் அனவரதம் வாழ வேண்டும்
நன்நயமார் இவ்வரத்தைத் தரத்தான் வேண்டும்
நானிலத்தோர் போற்று கதிர்காமக் கந்தா!"

எனப் பாடும் கவிஞர், பரம்பரைத் தொழிலான சித்த வைத்தியத்துறையில் நாட்டம் கொண்டதோடு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை கற்றுத் தேறினார். கவிஞர் யாப்பிலக்கணம் கற்றார். மன்னார் நல்லாயன் பாடசாலையில் பெற்றுக்கொண்ட தமிழ் அறிவும், கிறீஸ்தவ பண்பாட்டுச் சிறப்பும் நல்வழியில் கவிராயரை இட்டுச் சென்றன.

மரபுக்கவிதைகளை இயற்றி புகழ் பெற்ற கவிஞர் மிகவும் சிக்கலான கவிதை வடிவங்களான நாகபந்தம், சக்கரபந்தம், தேர்ப்பந்தம், நீரோட்டம் ஆகிய சித்திரக்கவிதைகளை அநாயாசமாக எழுதும் திறன் பெற்றவர். கவிதைகள் பல அறுபதுகளில் ஈழநாடு, சுதந்திரன், சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் கலைச்செல்வி, விவேகி ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன.

**ஈழத்து காவியதீபகம் சிறுகதைகளின் தொகுப்பு**

**1973** இல், தாம் எழுதிய **15** சிறுகதைகளை, "ஈழத்து காவியதீபகம்" எனும் பெயரில் தொகுத்து திருச்செல்வி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார். எழுத்தாளர் டானியல் மற்றும் திரு. பொ. நல்லையா ஆகியோரின் உதவி பெரிதும் கவிராயரால் பாராட்டப்பட்டது. கிளிநொச்சி இலக்கிய அன்பர் திரு. க. இரத்தினசிங்கம் அவர்கள் கவிராயரின் இலக்கியப்பணி பற்றி சிலாகித்துக் கூறுவார். இவர்களோடு முல்லைமணி வே. சுப்பிரமணியம், பூந்தோட்டம், மு. சிவலிங்கம் சுவடித் திணைக்கள அலுவலர் திரு. க. நவசோதி ஆகியோரும் கவிராஜரின் கவிதைகள் கதைகள் பற்றி விமர்சனக்கட்டுரைகள் எழுதியுள்ளார்கள்.

அது மட்டுமல்லாமல் 70 களில் பெயர் பெற்று விளங்கிய எழுத்தாளர்கள் பலருடனும் தொடர்புகளைப் பேணியுள்ளார். டானியல், செங்கை ஆழியான் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். இரசிகமணி கனகசெந்திநாதன் 1964 இல் கவிராயர் பற்றி பின்வருமாறு பதிவு செய்துள்ளார் வன்னியூர்க்கவிராயர். வன்னிநாட்டுக்குப் புகழ் தேடித் தந்த கவிஞராவர். அடங்காப்பற்றில் வாழ்ந்தாலும் பல கவியரங்குகளிலே அடக்கமான பாடல்களை அரங்கேற்றியுள்ளார். வன்னி நாட்டிலே இலக்கிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும் என்று உழைத்துவரும் அவர் ஒரு சுதேச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியராவர். எஸ். எல். சவுந்தரநாயகம் என்னும் தமது சொந்தப் பெயரில் சிறுகதைகளும் எழுதி வருகிறார்."

அவரது சிறுகதைகளில் தலைப்புக்களே கவித்துவமானவை. வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் என பரந்து விரிந்த களங்களில் அவ்வப் பிரதேச மொழி வழக்கில் சாதாரண வாழ்வின் ஏழ்மையும் வாழ்வின் ஏற்ற இறக்கங்கள், ஏக்கங்கள், இறுக்கங்கள் என பல்வகைத் தன்மையதான கருப்பொருட்களுடன் எழுதப்பட்டவை. 'வெள்ளிதிசை', 'பொங்கல் பரிசு', 'விளைநிலம்', 'கர்வத்தின்முடிவு', 'தகரவிளக்கு', 'ஒட்டப்பந்தயம்' என தலைப்புகள் அமைந்துள்ளன.

**'அமுதகங்கை' கவிதைகளின் தொகுப்பு**

கவிராஜரின் கவிதைகள் கொண்ட தொகுப்பு அவர் விரும்பிய தலைப்பான 'அமுதகங்கை' எனும் பெயரில் 2004ம் ஆண்டில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் வெளியிடப்பட்டது. சுவடித் திணைக்களத்துக்குச் சென்று பழைய பத்திரிகைகளைப் புரட்டித் தேடி எடுத்த 20 கவிதைகளும் ஈழத்து காவிய தீபகம் தந்த 15 சிறுகதைகளின் மறுபிரசுரம் மற்றும் திரு. நவசோதி, திரு. மு. சிவலிங்கம், திரு. முல்லைமணி ஆகியோர் எழுதிய விமர்சன கட்டுரைகளுடன் அந்த நூல் சிறப்புற எதிர்கால ஆய்வாளர்களுக்காக கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் தமிழ்மணி அகளங்கள் ஆகியோரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

**தலைமுறைகளைத் தாண்டி நிலைகொள்ளும் வன்னியூர்க்கவிராயரின் வாழ்வு**

2015 இல், நேரியகுளத்தில் கவிராயருக்கு அவர்தம் இலக்கிய வாரிசுகள், நண்பர்கள், ஊரவர்களால் சிலைவைக்கப்பட்ட வேளையில், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி நெலோமி குருஸ் அவர்கள் தொகுப்பில் வன்னியூர்க்கவிராயர் கவிதைகள் வெளியிடப்பட்டது. அத்தோடு ஈழத்துக்காவிய தீபம் மற்றும் சிலை திறப்புவிழா மலர் என்பன வெளியிடப்பட்டு சிலையும் திறந்து வைக்கப்பட்டு கவிஞர் அவர்கள் போற்றப்பட்டமை கவியுலகுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

1988இல், 'வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்' எனும் நூலை எழுதி வவுனியா முத்தமிழ் கலாமன்றம் சார்பில் வெளியிட்ட ஒ.கே. குணநாதன் கவிராயர் பற்றிக் கூறுவதாவது: "குன்றாத நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட கவிராயர் இலக்கியப் பணியோடு மாத்திரம் நின்று விடாமல் அரசியலிலும் குறிப்பிட்டளவு பணியாற்றியுள்ளார். சின்னச் செட்டிகுளம் கிழக்கு, இலுப்பைக்குளம் வேப்பங்குள வட்டார உறுப்பினராகவும் கிராம சபையின் துணைத் தலைவராகவும் போட்டியின்றி 1966 இல் தெரிவு செய்யப்பட்டார்."

சர்வமத நோக்கும் சர்வதேசக் கண்ணோட்டமும் கொண்ட கவிஞர் காதற் கவிதை மட்டுமல்லாமல் அரசியல் கவிதைகளும் எழுதியுள்ளார். சிறுவர் இலக்கியப் படைப்பாக பத்திரிகைகளின் மாணவர் பகுதிக்கு எழுதிய 'குயில்', 'அறிவினைத்தேடு', 'தியாகியே' என்பன இயற்கை வனப்பை பாடுவதும் அறிவூட்டும் கருத்துக்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. பல தலைமுறைகளைத் தாண்டி நிலைகொள்ளும் வன்னியூர்க்கவிராயரின் வாழ்வு எமது தலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணிவிழா — 2023, 2024



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. 2022ம் ஆண்டு கலைநகரி விருது பெற்றவர்களின் விபரம்

1. திரு பெஞ்சமின் பொலிக்காப்பியர் - நாட்டுக்கூத்து - வலைப்பாடு
2. திரு குருசுமுத்து தேவதாசன் - இசைத்துறை - தெளிகரை

## II. 2022 ம் ஆண்டு இளங்கலைஞர் விருது பெற்றவர்களின் விபரம்

1. திரு நற்குணம் தயான் - இலக்கியம்இ சிறுகதை - செம்பன்குளம்
2. திரு தாவீது நிர்மல கென்றிசன் - நடனம்இ இசை - குமுழமுனை

## III. 2023 ம் ஆண்டு கலைநகரி விருது பெற்றவர்களின் விபரம்

1. திரு இராமையா இராஜரட்ணம் - இலக்கியம் - ஜெயபுரம் வடக்கு
2. திரு காசிப்பிள்ளை குலசேகரம் - இலக்கியம் - நெற்புலவு
3. திரு ஆறுமுகம் முத்துத்தம்பி - சிந்துநடைகூத்து - முக்கொம்பன்
4. திரு. தம்பிராசா இரவீந்திரன் - இசை - ஜெயபுரம் தெற்கு
5. திருமதி தோமஸ் மரியகன்னி - இசை - வலைப்பாடு
6. திரு. அருளானந்தம் ஞானசீலன் - நாடகம் - குமுழமுனை

## IV. 2023 ம் ஆண்டு இளங்கலைஞர் விருது பெற்றவர்களின் விபரம்

1. திருமதி லிங்காஜினி ஜீவரூபன் - நடனம் - ஜெயபுரம் தெற்கு
2. திரு பாலசுப்பிரமணியம் பாலேந்திரன் - இசை - முழங்காவில்
3. திரு மணிதாஸ் சுகின் - புகைப்படக்கலை - 4ம் கட்டை, பூநகரி
4. திரு அன்ரன் தேவதாஸ் அன்ரனிபாலா - நடனம் - வலைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட விளக்கம்

பூநகரியானது வடஈழ தேச வரலாற்றில் தனக்கென சிறப்படைந்த பண்பாட்டு அம்சங்களையும் மரபுரிமைச் சின்னங்களையும், தொல்லியல் அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இந்நிலையில் பூநகரிப் பிரதேசத்தின் நெய்தல் நிலக் கிராமமான நாச்சிக்குடாவில் ஐரோப்பியரான போர்த்துகேயரால் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டதுடன் கிராமத்தின் மேற்கு கடற்கரையோரமாக அவர்களால் தூய யாகப்பர் ஆலயமும் உருவாக்கப்பட்டது. சுமார் 450 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ் ஆலயமானது இப்பகுதி மக்கள் ஒரு சில தசாப்தங்களுக்க முன் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், இடப்பெயர்வுகள், பொருளாதார மற்றும் உயிரிழப்புக்களின் மத்தியிலும் இன்று மீண்டும் தலைநிமிர்ந்து கொண்டிருப்பதனை குறியீடாகக் காட்டுவது போல், அத்தூயவரின் ஆலயமும் திருச்சிலுவையும் எம் மக்களின் துயர் தாங்கி நம்பிக்கை தருவதாக எழுந்துநிற்கின்றது.

அட்டைப்படத்தை அலங்கரிக்கும் நாச்சிக்குடா தூய யாகப்பர் ஆலயமும் எமது மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகவே நோக்க முடிகின்றது. இதே போன்று இவ்வட்டைப்படத்தில் காணப்படும் பழமை வாய்ந்த சிலுவை மரம், இயேசு நாதர் திருச்சிலுவைப்படம், நாடகமேடை, பழைய புளியமரம் என்பனவும் சிதைந்த நிலையில் காணப்படும் கலங்கரை விளக்கமும் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்ததான வரலாற்றை மௌனமாகப் பேசி நிற்கின்றன. சிதைந்த கலங்கரை விளக்கம் காணப்படும் இடத்திலேயே கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் வடபகுதியின் முதல் தமிழரசனாக அறியப்படும் வெடியரசனது காலத்தில் தகவல் பரிமாற்ற ஊடகமாக நெருப்புயர்த்திக் கோபுரம் காணப்பட்டதனையும் இங்கு நினைவு கொள்ள முடியும்.

எபிரேய மொழியில் "யாக்கோப்" என்பதே தமிழில் யாகப்பர் என அழைக்கப்படுவதுடன் பெரிய யாகப்பர், சந்தியோகுமாயோர், தீயோகு என்றும் இம்மொழியில் அழைக்கப்படுகின்றார்கள். ஆங்கிலத்தில் சென்ஜேம்ஸ் என்று அழைக்கப்படும் தூய யாகப்பர் இறைமகன் கிறிஸ்துவின் பன்னிரு [illegible]ர்களில் ஒருவரும் கிறிஸ்துவுக்காக மறை சாட்சியாக மரித்த முதலாவது [illegible]ஸ்தலருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சிக்குடா பிரதேச மக்களின் பாதுகாவலரும் [illegible]யாளரும் அருளாளருமான இவரது ஆலயமும் எம் மக்கள் போலவே ஒல்[illegible] ஆட்சிக்காலத்தில் பல இடர்பாடுகளையும் சந்தித்தது. இவ்வாலயம் [illegible] தடவைகள் உடைக்கப்பட்டதுடன் இப்பகுதி கத்தோலிக்க மக்களும் துன்புறுத்தப்பட்டனர். இலங்கையின் புனிதரான யோசப்வாஸ் அடிகளாலும் இந்த ஆலயம் தரிசிக்கப்பட்டதுடன் மறைபரப்புதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுபோன்ற பல சிறப்புகள் வாய்ந்த பழமை மிகு நாச்சிக்குடா புனித யாகப்பர் ஆலயத் தோற்றத்தினை பூந்துணர் சஞ்சிகையின் நறவம் 12 வது இதழானது, தனது முன் அட்டைப்படமாக தாங்கி வெளிவருவதில் பெருமையும் மகிழ்வும் கொள்கின்றது.


**மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

## படகு கட்டுமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Harikanan Printers